# நாட்டுப்புற ஓவியங்கள் - ஓரத்தநாடு வட்டாரம்

**பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்**
**முனைவர் (Ph.D) பட்டத்திற்காக**
**அளிக்கப்பெறும் ஆய்வேடு**


ஆய்வாளர்

**ந.கிருஷ்ணவேணி**

(பதிவு எண்:35005/ Ph.D.K8/Tamil/Part-Time/Re-Regn.&Extn./January 2012/Dt: 08.07.2019)

நெறியாளர்

**முனைவர் கு.சந்திரன்,** M.A., M.Phil., Ph.D.,
உதவிப் பேராசிரியர்,

தமிழ் உயராய்வு மையம்
**மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி)**
(தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவால் “A” தகுதி பெற்றது)
**தஞ்சாவூர் - 613 005**


**சனவரி - 2022**

முனைவர் கு.சந்திரன், MA., M.Phil., PhD.,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி),
தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவால் "A" தகுதி பெற்றது
தஞ்சாவூர் - 613 005.

# நெறியாளர் சான்றிதழ்

**நாட்டுப்புற ஓவியங்கள் - ஒரத்தநாடு வட்டாரம்** என்னும் தலைப்பில் அமைந்த ஆய்வேடு, பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் பட்டத்திற்காக ஆய்வாளர் **ந.கிருஷ்ணவேணி** (பதிவு எண்: 35005/Ph.D.K8/ Tamil/Part-Time/Re-Regn.&Extn./January 2012/Dt: 08.07.2019) அவர்கள், தஞ்சாவூர், மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறை உயராய்வு மையத்தில் என் மேற்பார்வையில் உருவாக்கியது என்றும், அவரது சொந்த முயற்சியால் எழுதப்பெற்றது என்றும், இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : தஞ்சாவூர்.
நாள் :

துறைத் தலைவர் கையொப்பம் நெறியாளர் கையொப்பம்

முதல்வர் கையொப்பம்

**முனைவர் கு.சந்திரன், MA., M.Phil., PhD.,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி),
தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவால் "A" தகுதி பெற்றது
தஞ்சாவூர் - 613 005.

## கருத்துக் களவின்மைச் சான்றிதழ்
## (Plagiarism-free Certificate)

**நாட்டுப்புற ஓவியங்கள் - ஒரத்தநாடு வட்டாரம்** என்னும் தலைப்பில் அமைந்த ஆய்வேடு, **ந.கிருஷ்ணவேணி** (பதிவு எண்: 35005/ Ph.D.K8/Tamil/Part-Time/Re-Regn.&Extn./January 2012/Dt: 08.07.2019) அவர்கள் தம் ஆய்வேட்டில் சான்றுகளுக்கு மட்டுமே அறிஞர்கள், வல்லுநர்கள் போன்றோர் கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார். அச்சான்றுகள் மிக இன்றியமையா இடங்களில் மட்டும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழக விதிமுறை 10.3இன்படி Urkund (Analysis Result) மென்பொருள் சோதனைக்குட்படுத்தப்பட்டுப் பெறப்பட்ட அறிக்கை D640253191 இத்துடன் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

இடம் : தஞ்சாவூர்.
நாள் :

நெறியாளர் கையொப்பம்

**ந.கிருஷ்ணவேணி,** M.A., M.Phil.,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 35005/Ph.D.K8/Tamil/Part-Time/Re-Regn.&Extn./January 2012/Dt: 08.07.2019,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி),
தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவால் "A" தகுதி பெற்றது
தஞ்சாவூர் - 613 005.

# ஆய்வாளர் உறுதிமொழி

**நாட்டுப்புற ஓவியங்கள் - ஒரத்தநாடு வட்டாரம்** என்னும் தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்யப்பட்ட இவ்ஆய்வேடு என்னுடைய சொந்த முயற்சியினால் உருவாக்கப்பெற்றது என்றும் இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : தஞ்சாவூர்.
நாள் :

ஆய்வாளர் கையொப்பம்

நெறியாளர் கையொப்பம்

# நன்றியுரை

**நாட்டுப்புற ஓவியங்கள் - ஒரத்தநாடு வட்டாரம்** என்னும் தலைப்பில் 20---20- - - ஆம் கல்வியாண்டில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கும் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி தமிழ்த் துறைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட சேர்க்கைக்கு அனுமதி வழங்கி அலுவலகம் சார்ந்த அனைத்து உதவிகளையும் காலந்தாழ்த்தாமல் வழங்கி உதவிய தஞ்சாவூர், மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி) முதல்வர் முனைவர் வெ.செந்தமிழ்ச்செல்வி எம்.எஸ்சி.,எம்.ஃ.பில்.,பிஎச.டி., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுப் பணி தொடர்பான ஐயங்களை களைந்து ஆய்வு செம்மையுற உதவிய தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆர்.வரதராஜா எம்.ஏ(த),எம்.ஏ (எம்.சி.ஜே),எம்.ஃ.பில்.,பிஎச்.டி., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வெடு சிறப்புற அமைய ஆய்வு எண்ணத்தையும், ஆய்விற்கான விளக்கங்களையும் எனக்குக் கற்றுக் கொடுத்து, ஆய்வு வழிமுறைகளை எளிதாக எடுத்துக்கூறி, இவ்வாய்விற்கு நெறியாளராக இருந்து பாசத்துடன் வழிகாட்டி, எனக்குப் பேருதவி புரிந்துவரும் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.கு.சந்திரன் அவர்களுக்கு என்றும் என் நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வுக் கோட்பாடுகளையும், ஆய்வு தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி ஆய்வு சிறக்க பேருதவியாக அமைந்த ஆய்வுக் குழு உறுப்பினர்கள் முனைவர் மாதவி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(ஓய்வு) திருப்பனந்தாள் அரசு கல்லூரி அவர்களுக்கும், முனைவர் தமிழரசி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மன்னார்குடி அரசு கல்லூரி அவர்களுக்கும், முனைவர் வெ. சத்திய நாரயணன் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மன்னர் சரபோசி அரசு கல்லூரி தஞ்சாவூர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வு செம்மையுடன் அமைய அவ்வப்போது பல்வெறு கருத்துக்கள் வழங்கி ஊக்கமளித்த தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈன்று இவ்வுலகில் நற்சான்று வாங்கித் தந்த என் தாய் திருமதி ந.தாமரைச்செல்வி அவர்களுக்கும், முனைவர் பட்ட படிப்பினை வரைக்கும் எனக்கு ஊக்கம் கொடுத்து என்னை படிக்க வைத்த என் தந்தை திரு கு.நடராஜன் அவர்களுக்கும், ஆய்வு காலங்களில் எனக்குப் பலவகையில் ஊக்கமளித்த என் தங்கைகள் திருமதி கலைவாணி யோகேஸ்வரன், திருமதி காயத்ரி சண்முகப்பிரியன்

அவர்களுக்கும், எனது சகோதரன் ந.கார்த்தி அவர்களுக்கும், எனது ஆய்வு காலங்களில் பேருதவியாக இருந்த எனது மாமனார் திரு கா.சுப்பிரமணி மற்றும் எனது மாமியார் திருமதி சு.வடிவழகி அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

என் ஆய்வுப் பணி சிறக்க அல்லும் பகலும் பாராது என்னுடனே பயணித்து, எனக்கு உற்ற துணையாக இருந்து உதவிய என் கணவர் முனைவர் சு.மீனாட்சிசுந்தரம் (உதவிப்பேராசிரியர் - ஜெய்ராம்ஸ் கல்லூரி)அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் ஒவ்வொரு தேடலிலும் உடனிருந்து உற்சாகமூட்டி ஆய்வுப் பணிக்கு பல உதவிகள் நல்கிய அனைத்து தோழிகளுக்கும் நண்பர்களுக்கும் சகோதரர்களுக்கும், என்னுடன் பணி புரியும் சக ஆசிரியர்களுக்கும், ஆய்வுக் காலங்களில் என்னுடன் பாசத்துடன் பழகி தரவுகள் வழங்கிய அத்தனை தகவலாளர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

ஆய்வுக் காலங்களில் எனக்காக நேரம் ஒதுக்கிப் பல அரிய தகவல்களை வழங்கிய மதிப்புமிக்க அனைத்து நூலகர்களுக்கும், ஆய்வு நிகழ்வின்போது கருத்துப் புதையலாக அமைந்து, பேருதவி புரிந்த பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேட்டினை பாங்குற கணினி அச்சு செய்த தஞ்சாவூர், நாகு கம்ப்யூட்டர்ஸ் நிறுவனர் திரு மு.நாகராசன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ந.கிருஷ்ணவேணி

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| உ.ஆ. | - | உரையாசிரியர் |
| குறள். | - | திருக்குறள் |
| தொ.ஆ. | - | தொகுப்பாசிரியர் |
| நூ. | - | நூற்பா |
| ப. | - | பக்கம் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| பக். | - | பக்கங்கள் |
| பா. | - | பாடல் |
| மேலது. | - | மேலே குறிப்பிட்ட நூல் |
| வ. | - | வரி |
| வரி. | - | வரிகள் |
| p. | - | Page |
| vol. | - | volume |

# பொருளடக்கம்


| இயல் எண் | விபரம் | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 – 6 |
| ஒன்று | களமும் பணியும் | 7 – 42 |
| இரண்டு | ஓவியத்தின் தோற்றம் வளர்ச்சி வரலாறு | 43 – 112 |
| மூன்று | நாட்டுப்புற ஓவியங்கள் | 113 – 180 |
| நான்கு | ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும் | 181 – 207 |
| | முடிவுரை | 208 – 215 |
| | துணைநூற்பட்டியல் | 216 – 222 |
| | பின்னிணைப்புகள் | |
| | அ. வினாநிரல் பட்டியல் | |
| | ஆ. தகவலாளர் பட்டியல் | |
| | இ. புகைப்படங்கள் | |

# முன்னுரை

கலை என்பது மனிதனின் வாழ்வியலில் பிரிக்கமுடியாத ஒரு அங்கம். சமூக வாழ்வில் ஒருவன் கலை உணர்வு இல்லாமல் இருந்தால் அவனை சமூகம் சடமாகத்தான் பார்க்கிறது. எண்ணில்லா கலைகளை உருவாக்கிய சமூகம் நம் தமிழ்ச் சமூகம். கலை என்பது தொழிற் சார்ந்த அனுபவத்தின் முதிர்ச்சி, அந்த அனுபவ முதிர்ச்சியின் விழிம்பில் விழைந்தது தான் பல்வகை கலைகள் என்பர்.

நாட்டுப்புற கலை வடிவம் தான் இன்றைய அனைத்து கலை இலக்கியங்களுக்கும் முன்னோடி. ஏட்டில் எழுதாத கவிதை என்று இதை சுட்டினாலும் தமிழன் தன் பல்வகை உணர்வுகளை ஓவியம் வழி தான் முதன் முதலாக எழுதினான் எனலாம். இன்று நாட்டுப்புற கலைகளில் முக்கியமான இடத்தை ஓவியம் பெற்றுள்ளது. வாழ்வியல் சடங்குகள், நம்பிக்கைகள், தொழில்கள், பொழுதுப்போக்குகள் என தமிழரின் வாழ்வில் இரண்டறக் கலந்த ஓவியக்கலையை இன்றைய நிலையில் ஆய்வது அவசியமாகிறது.

## 0.1 ஆய்வுத் தலைப்பு

உலகில் தொன்மையான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. இத்தமிழ் மொழி பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் கலை மரபினையுடையது. கலைகளின் உச்சம் தொட்ட தமிழ் மண்ணில் காலம் காலமாக ஓவியக்கலைகளுக்கென தனித்துவமான இடமிருந்திருக்கிறது. இன்றளவும் வாழும் வாழ்வின் அங்கமாக நாட்டுப்புற ஓவியக்கலை திகழ்கின்றது. கலை வாழ்விற்கான அடையாளமாக நாட்டுப்புற ஓவியக்கலை திகழ்வதோடு மட்டுமல்லாமல் நம் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. ஓவியக்கலை பண்பாட்டுக் கலாச்சாரத்தைக் காலங்காலமாக பறைசாற்றுகிறது. அத்தகைய நாட்டுப்புற ஓவியக்கலை பின்னணியை ஒரத்தநாடு வட்டாரத்தின் வழி வெளிக்கொணர **“நாட்டுப்புற ஓவியங்கள் ஒரத்தநாடு வட்டாரம்”** என்னும் இவ்வாய்வு தலைப்பு தேர்ந்துகொள்ளப்பெற்றது.

## 0.2 ஆய்வு நோக்கம்

நம் பழந்தமிழர்கள் கையாண்ட பல கலைகளின் நுட்பத்தை நம்மால் இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய கலைகளில் ஓவியக்கலை முக்கியமான இடத்தைப் பெறுகிறது. வாழ்வின் பல நிகழ்வுகளில் மரபுத் தொடர்ச்சியாக ஓவியம் பயன்பட்டு வருகிறது. ஓவியக்கலை தனிப்பட்ட கலைஞர்களின் தொழில் ரீதியான கலை என்பதைத் தாண்டி மக்களின் இயல்பான கலை என்பதை உணர்த்த ஓவியக்கலைஞர்கள் மற்றும் நுகர்வோர்கள் ஆகியோர் வாழ்வியலை நுணுகி ஆராய்தல் அவசியமாகும். இப்பொருண்மையை நிலைநிறுத்தித் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டார மக்களின் வாழ்வியல் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு

இப்பகுதியில் நிலவும் நாட்டுப்புற ஓவியக்கலையை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 0.3 முன்னாய்வுகள்

நாட்டுப்புற ஓவியக்கலை குறித்து டாக்டர் இராசு பவுன்துரை படைத்த "தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்" என்ற நூல் இவ்வாய்வுப் பொருண்மையில் அமைந்த குறிப்பிடத்தக்க முன்னாய்வு நூலாகும். இந்நூல் தவிரப் பின்வரும் நூல்களும் இவ்வாய்விற்கான முன்னாய்வுகளாகக் கொள்ளத்தக்கன.

| | |
|---|---|
| இராசு பவுன்துரை | - தமிழகப் பாறை ஓவியங்கள் |
| அரவக்கோன் | - இந்திய ஓவியம் - ஓர் அறிமுகம் |
| பி.கோதண்டராமன் | - இந்திய கலைகள் |
| இரத்தின புகழேந்தி | - தமிழர் ஓவியம் (கட்டுரை தொகுப்பு) |
| மயிலை.சீனி.வேங்கடசாமி | - நுண்கலைகள் |

## 0.4 ஆய்வு ஆதாரங்கள்

இவ்வாய்விற்கு உசாத்துணையாக அமைந்த ஆதாரங்கள் முதன்மை, துணைமை ஆதாரங்கள் என்ற வகையில் பின்வருமாறு அமைந்துள்ளன.

### 0.4.1 முதன்மை ஆதாரங்கள்

நாட்டுப்புற ஓவியக்கலை தொடர்பான செய்திகள் அனைத்தும் களப்பணியின் மூலம் பெறப்பட்டு ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்களப்பணித் தரவுகளே இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

### 0.4.2 துணைமை ஆதாரங்கள்

நாட்டுப்புற ஓவியங்கள் தொடர்பான ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைத் தொகுதிகள், ஆய்வுக் கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள், இணைய வலைத்தள பக்கங்கள் ஆகியவை இவ்வாய்வின் துணைமை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

## 0.5 ஆய்வின் எல்லை

நாட்டுப்புற ஓவியங்கள் தொடர்பான இவ்வாய்வின் எல்லையாகத் தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு வட்டாரம் தேர்ந்துகொள்ளப்பெற்றது. ஆய்வின் நீட்சிக் கருதி ஒரத்தநாடு வட்டார பகுதிகளான வடக்கூர், ஈச்சங்கோட்டை, செல்லம்பட்டி, சோழபுரம்,

நாட்டரசன் கோட்டை, ஆழியவாய்க்கால், கருக்காடிப்பட்டி, குலாலர் தெரு ஆகிய எட்டு ஊர்கள் மட்டும் களப்பணி ஊர்களாக தேர்ந்துகொள்ளப்பெற்றது.

## 0.6 கருதுகோள்

கலைகள் மனித நாகரிகத்தின் பல்வேறு அடையாளங்களை பிரதிபலிப்பது. கலைகளில் முக்கிய இடத்தைப் பெறும் ஓவியக்கலையின் வழி மனித நாகரிகத்தின் பல்வேறு நிகழ்வுகளை உணர்வுகளை காட்சிப்படுத்த முடியும். காட்சிபடுத்துதலில் அனைவருக்கும் பொதுவான கலையாக ஓவியக்கலை திகழ்கிறது. ஆகவே பழம் பண்பாட்டு அடையாளங்களை நாட்டுப்புற ஓவியக்கலையின் வழி இனங்காண முடியும் என்றும், மரபுத்தொடர்ச்சியாகப் பல பண்பாடுகள் இன்றளவும் நாட்டுப்புற ஓவியக் கலையில் பயன்படுத்தப்படும் என்ற கருதுகோளின் அடிப்படையிலும் இயல்பாகவே ஓவிய வரலாற்று பின்னணியைக் கொண்ட தஞ்சை ஒரத்தநாடு பகுதி மக்களின் வாழ்க்கை முறைக்குள் பழம் பண்பாட்டு அடையாளங்களை இனங்காண முடியும் என்ற கருதுகோளின் அடிப்படையிலும் இவ்வாய்வு நடை பயின்றுள்ளது.

## 0.7 ஆய்வு அணுகுமுறை

**நாட்டுப்புற ஓவியங்கள் - ஒரத்தநாடு வட்டாரம்** என்னும் இவ்வாய்வுத் தலைப்புப் பற்றிய தகவல்கள் அனைத்தும் களப்பணியின் மூலம் சேகரிக்கப்பட்டு விளக்கவியல் ஆய்வு முறையிலும், வரலாற்று ஆய்வு முறையிலும் ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

## 0.8 ஆய்வேட்டின் அமைப்பு

நாட்டுப்புற ஓவியக்கலையை வெளிப்படுத்தும் நோக்கில் உசாவும் இந்த ஆய்வின் பொருண்மை, முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தொகுப்புரை இடம் பெற்றுள்ளது.அவ்வியல்கள் பின்வரமாறு அமைந்துள்ளது.

1. **களமும் பணியும்**
2. **ஓவியத்தின் தோற்றம் வளர்ச்சி வரலாறு**
3. **நாட்டுப்புற ஓவியங்கள்**
4. **ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும்**

ஆய்வு அறிமுகமாக அமையும் முன்னுரையில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு ஆதாரங்கள், முன்னாய்வுகள், கருதுகோள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வேட்டின் அமைப்பு ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

0.8.1 **“களமும் பணியும்”** என்னும் முதல் இயலில் ஆய்வுக் களம், தமிழ் நாட்டின் சிறப்பு, சோழ நாடு, சோழ தேசத்தை ஆண்ட மன்னர்கள், சோழ தேசக் குறிப்புகள், தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் பெயர்க்காரணம், மக்கள் தொகை, தஞ்சாவூர் மாவட்ட

எல்லைகள், தஞ்சாவூர் மாவட்ட புள்ளி விவரங்கள், தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிகள், வருவாய் கோட்டமும் நகராட்சிகளும், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நீர்வளம், வேளாண்மைத் தொழில், பிற தொழில் வளங்கள், தஞ்சை மாவட்ட சிறப்புகள், சுற்றுலாத் தலங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், வழிபாட்டிடங்களும் திருவிழாக்களும், ஒரத்தநாடு வட்டாரம், ஒரத்தநாடு பெயர்க்காரணம், காரணங்கள், மக்கள் தொகை, சமயம், ஒரத்தநாடு பேரூராட்சி, ஊராட்சி மன்றங்கள், வருவாய் கிராமங்கள், தொழில், களப்பணி ஊர்கள், வடக்கூர், ஈச்சங்கோட்டை, செல்லம்பட்டி, சோழபுரம், நாட்டரசன் கோட்டை, ஆழியவாய்க்கால், கருக்காடிப்பட்டி, குலாலர் தெரு ஆய்வுக்களம் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம், களப்பணி, களப்பணி முன்னேற்பாடுகள், தகவலாளர் தேர்வு, தரவுகள் சேகரித்தல், சூழல், களப்பணியில் தோன்றிய சிக்கல்களும் தீர்வுகளும் ஆகிய கருத்துக்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

0.8.2 **“ஓவியத்தின் தோற்றம் வளர்ச்சி வரலாறு”** என்னும் இரண்டாம் இயலில் இலக்கியங்களில் கலை பற்றிய குறிப்புகள், கலை - விளக்கம், கலைகளின் தோற்றம், கலைகளின் வகைகள், நுண்கலைகள் - விளக்கம், ஓவியக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும், ஓவியம் தோற்றம், ஓவியக் கலையின் பயன்கள், ஓவியச் சிறப்பும் - நுட்பமும், ஓவியம் - தோற்றக் கூறுகள், ஓவியம் - சொல் விளக்கம், இலக்கியங்களில் ஓவியம் - சொல்லும் பொருளும், தொல்காப்பியத்தில் ஓவியம், சங்க இலக்கியங்களில் ஓவியம், காப்பியங்களில் ஓவியம், சூளாமணியில் ஓவியம், பெருங்கதையில் ஓவியம், பக்தி இலக்கியங்களில் ஓவியம், கம்ப ராமாயணத்தில் ஓவியம், நாச்சியார் திருமொழியில் ஓவியம், ஓவியம் குறித்த கல்வெட்டுச் சான்றுகள், காலப் படிநிலைகளில் ஓவியங்களின் வளர்ச்சி, வரலாற்றுக்கு முன் ஓவியப் படிநிலை, வரலாற்றுக்குப் பின் ஓவியப் படிநிலை, சாதவாகனர் - கால ஓவியங்கள், குப்தர் கால ஓவியங்கள், பாண்டியர் கால ஓவியங்கள், சேரர் கால ஓவியங்கள், சோழர்கால ஓவியம், தமிழக ஓவியம், ஓவியர், ஓவியர் சொல் பொருள் விளக்கம், இலக்கியங்களில் ஓவியர் குறித்த பதிவுகள், ஓவியக் கருவிகள், முதன்மைக் கருவிகள், ஓவியக் கூடங்கள், ஓவியக் கூடங்களின் வகைகள், இன்றைய ஓவியக் கூடங்கள், ஓவியத்தின் வகைகள், நாட்டுப்புற ஓவியங்கள் ஆகிய கருத்துக்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

0.8.3 **“நாட்டுப்புற ஓவியங்கள்”** என்னும் மூன்றாம் இயலில் கோலம், கோலமிட பயன்படும் பொருள்கள், கோலமிடும் இடங்கள், கோலம் போடும் நாளும் பொழுதும், கோலமிடும் விதிமுறைகள், கோலமிடும் முறைகள், கோலம் இடுவதால் ஏற்படும் உடல் பயன், கோலம் பற்றிய கருத்தும் காரணமும், கோலங்களின் வகைகள், தமிழர்களின் வாழ்வில் கோலம், கிராமியக் கலைகளில் கோலம், ஓரத்தநாடு மக்களின் கோலம் தொடர்பான நம்பிக்கைகள், சிக்குக் கோலம், புள்ளிக் கோலம், சுடுமண் உருவ ஓவியங்கள், மண் பானை ஓவியங்கள், மண் பானை, மட்பாண்டம் செய்யப் பயன்படும்

மூலப்பொருள், மண்பானை தயாரிப்பு, மட்பாண்டம் செய்யும் முறை, பானை வகைகள், ஒரத்தநாடு பகுதியில் மண்பானை ஓவியங்கள், பொங்கல் பானை ஓவியம், முகூர்த்த பானை ஓவியம், அக்னிச் சட்டி ஓவியம், மண் குதிரை ஓவியங்கள், புரவி-சொல் விளக்கம், மண் குதிரை செய்யும் முறை, மண் குதிரை ஓவியம் வரையப் பயன்படும் வண்ணங்கள், ஒரத்தநாடு பகுதிகளில் மண்குதிரை ஓவியம், சிவப்பு நிறக் குதிரை, வெண்மை நிறக் குதிரை, மூன்று வண்ணம் கொண்ட குதிரை, பல வண்ணம் கொண்ட குதிரைகள், குயவர் இனத்தவரின் பொருளாதார நிலை, பச்சைக் குத்தல், பச்சை குத்தல் - சொல் விளக்கம், பச்சை குத்தல் - வளர்ச்சியும் வடிவமும், மேனிப்புனைவின் வகைகள், உடலுக்கு வண்ணம் தீட்டும் மரபு, மேனி ஒப்பனை புனைதல், மேனிப்புனைவின் மூலக்கூறுகளும் வடிவங்களும், பச்சை குத்தல் வளர்ச்சி நிலை, பச்சை குத்தும் முறைகள், பச்சை குத்தல்-கதையும் - காரணமும், பச்சை குத்துதலின் வடிவங்கள், பச்சை குத்தப் பயன்படும் மூலப்பொருட்கள், பச்சை குத்தும் பொழுது ஏற்படும் மாற்றங்கள், பச்சை குத்தப்படும் உடல் பகுதிகள், ஒரத்தநாடு வட்டாரத்தில் பச்சை குத்தல், நரிகுறவர் இன மக்களின் பொருளாதார சூழல், மருதாணி, மெஹந்தி, சுவரோவியங்கள், கோட்டோவியங்கள், பாய் ஓவியம், பாய் பின்னும் கலை, பாய் தயாரிக்கும் முறை, மூலப்பொருட்கள் சேகரித்தல், கோரைகளின் தரம் பிரிக்கும் முறை, வண்ணக் கலவை தயாரிக்கும் முறை, கற்றாழை நார், சரடு முறுக்கும் பணி, பாய் தறி இழுத்துக் கட்டுதல், பாயை வடிவமைத்தல், பாயின் வகைகள், தடுக்குப்பாய், ஒற்றைப்பாய், இரட்டைப்பாய், பாய்களை தரம் பிரித்தல், பட்டுப்பாய், ஓவியப் பாய், ஒரத்தநாடு வட்டாரத்தில் பாய் தொடர்பான நம்பிக்கைகள், பாய் பின்னும் தொழிலாளர்களின் பொருளாதார சூழல் ஆகிய கருத்துக்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

0.8.4 **“ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும்”** என்னும் நான்காம் இயலில் கலைஞர்கள், கலைகள், நுண்கலைகள், சிற்பக்கலை, கட்டிடக்கலை, ஓவியக்கலை, ஓவியங்களில் ஐவினை கலைஞர்களின் பங்கு, கொல்லர், ஓவியத்தில் கொல்லர்களின் பங்கு, தச்சர், ஓவியத்தில் தச்சர் இனத்தவரின் பங்கு, பலகை ஓவியம், கண்ணார், சிற்பி, கல் சிற்பி, ஸ்தபதி, உலோக சிற்பி, பத்தர், ஓவியத்தில் பத்தர் இனத்தவரின் பங்கு, ஐவினை கலைஞர்களின் பொருளாதார சூழல், கொல்லர், தச்சர், கண்ணார், சிற்பி, பத்தர், கலைகளின் இன்றைய நிலை, கலைகளின் மரபுத் தொடர்ச்சிகள், கலைகளில் நவீன நுட்பங்கள், மரபு கலைகள் அழிவதற்கான காரணங்கள், மரபு கலையை மீட்டெடுக்கும் வழிமுறைகள், நாட்டுப்புறக் கலைகளின் முக்கியத்துவம் ஆகிய கருத்துக்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

இவற்றையடுத்து முடிவுரை என்ற பகுதியில் இயல்தோறும் கண்டுணரப்பட்ட ஆய்வு முடிவுகள் அனைத்தும் தொகுத்துக் கூறப்படுகின்றன. மேலும் இவ்வாய்வின் அடிப்படையில் கண்டுணர்ந்த மேலாய்வுக்கான களங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## 0.9 துணை நூற்பட்டியல்

ஆய்வுப் பொருண்மையின் இறுதியாக ஆய்வுக்கு துணைநின்ற நூல்களை துணை நூற்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் அகர வரிசையில் அமைத்து பட்டியலாக இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் இவ்வாய்விற்கு உறுதுணையாக அமைந்த இலக்கண, இலக்கியங்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இதழ்கள், அகராதிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன. இப்பட்டியலில் ஆசிரியர் பெயர், நூற்பெயர், பதிப்பகம், ஊர், ஆண்டு ஆகியன குறிக்கப்பெற்றுள்ளன.

## 10 பின்னிணைப்புகள்

இவ்வாய்வின் பின்னிணைப்பாகக் களப்பணியில் பயன்படுத்தப்பட்ட வினாநிரல் பட்டியல் மற்றும் தகவலாளர் பட்டியல் தரப்பட்டுள்ளது, மேலும் ஓவியங்கள் தொடர்பான புகைப்படங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

## 11 ஆய்வின் பயன்

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டாரம் போல நம் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் விரவிக்கிடக்கின்ற நாட்டுப்புற ஓவியக் கலையையும் பண்பாடுகளையும் ஆவணப்படுத்தலின் வழி ஓவியக்கலையில் மரபுத்தொடர்ச்சி போக்கை உருவாக்க இயலும். வருங்கால தலைமுறைக்கான பண்பாட்டுச் சொத்தாக இந்த மரபுத்தொடர்ச்சி அமையும். இத்தகைய ஆவணப்படுத்தலும் அதன் பின் நிகழும் மரபுத்தொடர்ச்சியும் ஆய்வின் பயனாகும்.

# இயல் - 1

# களமும் பணியும்

## 1 ஆய்வுக் களம்

நாட்டுப்புறவியல் ஆய்வானது கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்டது. நாட்டுப்புற மக்களையும், வழக்காறுகளையும் உள்ளடக்கியப் பகுதியே களமாகும். நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகளான பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், கலைகள், திருவிழாக்கள் போன்றவற்றைச் சேகரித்து பகுத்து ஆய்வு செய்வதே நாட்டுப்புற ஆய்வாளரின் நோக்கமாகும். இதில் களம் கருவாகவும், உயிர் நாடியாகவும் திகழ்கின்றது.

'களமும் பணியும்' என்னும் இவ்வியலில் சோழநாடு பற்றியும், அங்கு அமைந்துள்ள தஞ்சை மாவட்டம் பற்றியும், அம்மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு வட்டாரத்தில் வசிக்கும் மக்களின் வாழ்வியல் பற்றியச் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. ஒரத்தநாடு ஊரின் இயற்கையமைப்பு, சமூக அமைப்பு, கல்விச்சூழல் போன்ற பொது விவரங்கள் பற்றியும் மேலும் ஆய்வுக் களம் தேர்ந்தமைக்கான காரணங்கள், களப்பணி முன்னேற்பாடுகள், தகவலாளர் தேர்வு, தகவல் சேகரித்தல், தகவல் சேகரித்த சூழல், ஆய்வுக்களத்தில் தோன்றிய சிக்கல்களும் தீர்வுகளும் முதலான செய்திகளும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இதனால் எதிர்வரும் காலத்தில் களப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு உறுதுணையாக அமையும்.

## 1.1 தமிழ் நாட்டின் சிறப்பு

தமிழ் நாட்டினைப் பழம்பெரும் நாடாக அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். மக்களினம் தோன்றி நாகரிகமாக வாழ்ந்து வளர்ச்சியடைந்த நாடு தமிழ்நாடு என்று உரைப்பதையும் அறிய முடிகின்றது. இதனைப் பற்றி தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்கள் குறிப்பிடுகையில், "பழங்காலந்தொட்டு தமிழ்மொழிப் பேசி வந்த மாந்தரினம் பிறந்து வளர்ந்து ஆண்ட இடமே தமிழ்நாடு எனப்பட்டது. இதற்கு ஆதாரமாக 'சம்புத்தீவினுள் தமிழக மருங்கில்' என மணிமேகலையிலும், 'இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க' என பதிற்றுப்பத்திலும் செவ்வனே விளங்கக் குறிப்பிடுவதால், இத்தமிழ் தேசமானது தமிழகம் எனப் பழைய காலத்தே வழங்கி வந்தது"[1] என்கிறார். இவரின் இக்கூற்று வாயிலாகப் பழங்காலந் தொட்டே இத்தேசம் தமிழகம் என வழங்கப்பட்டதை அறிய முடிகின்றது. தமிழகத்தின் எல்லை குறித்துத் தொல்காப்பியத்திலும் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

"வடவேங்கடம் தென்குமரி

ஆயிடைத்

தமிழ்கூறும் நல்உலகத்து"[2]

மேற்கண்ட தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தின் வழி தமிழ் கூறும் நல்லுலகத்தின் வட எல்லையாக வேங்கடமும் தென் எல்லையாகக் குமரியும் இருந்துள்ளது புலனாகிறது. ஆதிகாலத்தில் தமிழகத்தின் எல்லை தென்கடலுக்கு அப்பாலும் தொலைதூரம் நீண்டு பரவியிருந்ததனைப் சிலப்பதிகார பதிவுகளின் வழி அறிய முடிகின்றது.

"நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்

தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு"[3]

"இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய"[4]

மேற்கண்ட சிலப்பதிகாரப் பாடலடிகள் தமிழகத்தின் எல்லை தென்கடலுக்குப் அப்பாலும் பரவியிருந்தன என்பதனை தெளிவாக உணர்த்துகின்றன.

தமிழகத்தின் இத்தகைய எல்லைகள் குறித்த கருத்துக்களைப் பற்றி கே.கே.பிள்ளை அவர்கள் குறிப்பிடுகையில் "ஒரு நாட்டுக்கு அகப்பாட்டு எல்லை என்றும், புறப்பாட்டு எல்லை என்றும் இருவேறு எல்லைகள் உண்டு. அகப்பாட்டு எல்லை நாட்டின் வரம்புக்கு உட்பட்டதாகவும் புறப்பாட்டு எல்லை அவ்வரம்புக்கு அப்பாற்பட்டதாகவும் குறிப்பிடுவர். பனம்பாரனார் கூறும் எல்லைகளான வட வேங்கடமும் தென் குமரியாறும் அகப்பாட்டெல்லைகள் என்பது இளம்பூரணரின் கருத்து ஆகவே வேங்கடத்திற்கு வடக்கும் குமரிக்குத் தெற்கும் சில நிலப்பரப்புகள் அமைந்திருந்தன எனக் கருதவும் இடமேற்படுகிறது."[5] என்கிறார். இவரின் இக்கூற்று எண்ணத்தக்கதாகும்.

அகன்று விரிந்திருந்த தமிழ்நாட்டின் நிலப்பகுதிகள் பின்னாளில் கடல்கோளுக்கு ஆட்பட்டு கடலுள் மூழ்கிப் போயின. அதில் பஃறுளி என்ற ஆறும் 'குமரிக்கோடு' என்ற மலையும் அடங்கியிருந்தன என்பதனை சிலப்பதிகாரப் பதிவுகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

"பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"[6]

மேற்கண்ட சிலப்பதிகாரப் பாடல் வரிகளின் மூலம் கடல்கோளுக்கு ஆட்பட்ட நம் நிலப்பகுதிகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு கடல்கோளுக்கு ஆட்பட்டு மூழ்கிப்போன நம் நிலப்பகுதியை ஆய்வாளர்கள் இலெமூரியாக் கண்டம் என்று அழைப்பர். முற்காலத்தில் இப்படி ஒரு நிலப்பகுதி இருந்ததை மேலை நாட்டு ஆய்வாளர்கள் ஸ்காட் எலியட், பேராசிரியர் ஹெக்கல் போன்ற ஆய்வாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1.2 சோழ நாடு

சோழ மன்னர்களால் மிகவும் சிறப்பாக ஆளப்பட்ட நாடு சோழ நாடாகும். சேர நாடு மற்றும் பாண்டிய நாடுகளைப் போல சோழ நாடும் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. சோழ மன்னர்கள் ஆண்ட காலம் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. இது திராவிட தேசத்திற்குத் தெற்கிலும், பாண்டிய தேசத்திற்கு வடக்கிலும் பரவியிருந்த நாடாகும். சோழநாட்டின் தலைநகரமாக ஆரம்ப காலத்தில் உறையூர் விளங்கியது. பிற்காலத்தில் ஆண்ட சோழ மன்னர்கள் தஞ்சாவூரை தலைநகராக மாற்றினர். பிறகு 11ஆம் நூற்றாண்டில் ஆண்ட இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராக மாற்றியமைத்ததாக வரலாறு கூறுகின்றது.

### 1.2.1 சோழ தேசத்தை ஆண்ட மன்னர்கள்

சோழ தேசத்தை சோழ வம்சத்தைச் சார்ந்த பல மன்னர்கள் ஆட்சிப்புரிந்து வந்துள்ளனர் என்பதை நமது இலக்கியங்கள் வாயிலாகவும் கல்வெட்டு செப்பேடு போன்ற ஆவணங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. பல்வகை குறிப்புகளின் வழி வரலாற்று ஆய்வாளர்கள் கீழ்க்கண்டவாறு சோழ மன்னர்களை வரிசைப்படுத்துவார்கள்.

**சங்ககாலச் சோழர்கள்**

1. மனுநீதிச் சோழன்
2. சிபிச் சக்கரவர்த்தி
3. சேரமான் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சி
4. சோழன் இராசயேம் வேட்ட பெருநற்கிள்ளி
5. சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி
6. சோழன் உருவப்பறேர் இளஞ்சேட் சென்னி
7. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன்
8. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
9. சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி
10. சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான்
11. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி
12. சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி

13.சோழன் வேல்பறடக்கை பெருவிறர்கிள்ளி

14.தூங்கெயில் எறிந்த தொடி தோட் செம்பியன்

15.தித்தன்

## முற்காலச் சோழர்கள்

1. செம்பியன்
2. எல்லாளன்
3. இளஞ்சேட்சென்னி
4. கரிகால் சோழன்
5. நெடுங்கிள்ளி
6. நலங்கிள்ளி
7. கிள்ளி வளவன்
8. கோப்பெருஞ்சோழன்

9.கோச்செங்கண்ணான்

10.பெருநற்கிள்ளி

## பிற்காலச் சோழரசுகள் (விசயாலய சோழ வம்சம்)

1. விசயாலய சோழன் (கி.பி.848-871)
2. ஆதித்த சோழன் (கி.பி.871-907)
3. பராந்தக சோழன் (கி.பி.907-950)
4. கண்டராதித்தர் (கி.பி.949,50-957)
5. அரிஞ்சய சோழன் (கி.பி956-957)
6. சுந்தர சோழன் (கி.பி.957-973)
7. ஆதித்த சோழன் (கி.பி957-969)
8. உத்தம சோழன் (கி.பி.970-985)

9. இராசராச சோழன் (கி.பி.985-1014)

10.இராசேந்திர சோழன் (கி.பி.1012-1044)

11.இராசாதிராச சோழன் (கி.பி 1018-1054)

12.இராசேந்திர சோழன் (கி.பி.1051-1063)

13.வீரராசேந்திர சோழன் (கி.பி.1063-1070)

14.ஆதிராசேந்திர சோழன் (கி.பி.1067-1070)

## சாளுக்கிய சோழ வம்சம்

1. குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1120)

2. விக்கிரம சோழன் (கி.பி.1118-1135)

3. குலோத்துங்க சோழன் (கி.பி.1133-1150)

4. இராசராச சோழன் (கி.பி.1146-1163)

5. இராசாதிராச சோழன் (கி.பி.1163-1178)

6. குலோத்துங்க சோழன் (கி.பி.1178-1216)

7. இராசராச சோழன் (கி.பி.1216-1256)

8. இராசேந்திர சோழன் (கி.பி.1246-1279)

மேற்கண்ட அரசர்கள் வரலாற்று ஆய்வாளர்களால் சுட்டப்படும் சோழ தேசத்து வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்த அரசர்கள் ஆவர். சோழ தேசத்தின் வரலாறு பற்றிய தெளிவான ஆதாரங்கள் இலக்கியங்களின் வாயிலாகவும் கல்வெட்டு செப்பேடுகளின் வாயிலாகவும் கிடைக்கப் பெற்றுள்ளது.

கி.பி. 655 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. சுமார் 850 வரை முத்தரையர்கள் என்ற குறுநில மன்னர்கள் தஞ்சைப்பகுதியை ஆட்சிப் புரிந்துள்ளனர். கி.பி.850 இல் தஞ்சாவூரை முத்தரையரிடமிருந்து விஜயாலய சோழன் கைப்பற்றித் தஞ்சையில் சோழர் ஆட்சியைத் தோற்றுவித்தார். பிற்காலச் சோழர்களின் தலைநகராகத் தஞ்சாவூர் திகழ்ந்தது.

இராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் (985-1014) தஞ்சாவூர் நகர் மிக்க புகழ் எய்தியது. இராஜராஜசோழனின் மகனான இராசேந்திர சோழன் கி.பி. சுமார் 1025 இல்

தனது தலைநகரைத் தஞ்சாவூரிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மதுரை பாண்டிய மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின் தஞ்சாவூர் விஜயநகர அரசின் ஆட்சிக்குட்பட்டது. கி.பி.1532 இல் தஞ்சையில் நாயக்க மன்னர்களின் ஆட்சித் தொடங்கிற்று. திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிப்புரிந்த மதுரை நாயக்க மன்னர் சொக்கநாதர் கி.பி.1673 இல் தஞ்சாவூர் மீது படையெடுத்தார். இப்போரில் விஜயராகவன் தோல்வியுற்று போர்களத்தில் வீரமரணமடைந்தார். தஞ்சை அரசு மதுரை நாயக்க அரசுடன் இணைக்கப்பட்டது.

கி.பி.1676 இல் மராட்டிய சிவாஜியின் சகோதரர் வெங்கஜி தஞ்சையில் மராட்டியர் ஆட்சியை நிறுவினார். இரண்டாம் சரபோஜி (1798-1832) ஆங்கில கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபுவுடன் கி.பி.1799 இல் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின்படி தஞ்சையைத் தவிர மற்ற பகுதிகள் ஆங்கிலேயர் வசம் கொடுக்கப்பட்டன. இரண்டாம் சிவாஜி (1832-1855) மன்னனுக்குப் பிறகு ஆண்வாரிசு இல்லாமையினால் ஆங்கிலேயர் வசம் கி.பி.1856 இல் தஞ்சைக் கோட்டையும் வந்தது. தஞ்சாவூர் 1866 ஆம் ஆண்டு முதல் நகராட்சியாக இருந்து வருகிறது.

### 1.2.2 சோழ தேசக் குறிப்புகள்

சோழ தேசத்தை பற்றி பல்வேறு குறிப்புகள் இலக்கியங்கள் வாயிலாகவும் கல்வெட்டு, செப்பேடு போன்ற வரலாற்று ஆவணங்கள் மூலமாகவும் நமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அவைகளுள் சில.

| | |
|---|---|
| சோழ அரசி | - குந்தவை செம்பியன் மாதேவி |
| சோழர்களின் சின்னங்கள் | - புலிக்கொடி, ஆத்தி |
| சோழ அமைச்சர் | - அநிருத்தப் பிரம்மராயர் |
| சோழர் கலைகள் | - கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இலக்கியம் |
| சோழர் சமூகம் | - குடவோலை, சோழர் கால சிறப்பான ஆட்சி, சோழர் கால நீர் மேலாண்மை. |
| சோழ இராணுவம் | - சோழர் கடற்படை, சோழர் சீனத்தொடர்பு, |
| சோழர் போர்கள் | - குடல சங்கமப் போர், கொப்பம் போர், தக்கோலப்போர், தோனூர்ப் போர், நெட்டூர்ப்போர், விசயவாடாப்போர், |

சோழர் கால கோயில்கள் -அழியாத பெருவுடையார் கோயில், ஐராவதேஸ்வரர் கோயில், ஓமாம்புலியூர் துயர்தீர்த்தநாதர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை பட்டீச்சுரம் கோவில்.

சோழர் நகரங்கள் - உறையூர், கங்கை கொண்ட சோழபுரம், காவிரிப்பூம்பட்டினம், ,தஞ்சாவூர், தளிச்சேரி

மேற்கண்ட குறிப்புகளை தாண்டி பல்வகை குறிப்புகள் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் உள்ளன. அவை நம் பழஞ் சமூகத்தை கண் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

## 1.3 தஞ்சை மாவட்டம்

வரலாற்று சிறப்புமிக்க தஞ்சை மாவட்டத்திற்கென்று தனி சிறப்புகள் நிறைய உள்ளன. சோழ தேச மன்னர்களையும் அவர்தம் ஆட்சிச் சிறப்புகளையும் தாண்டி பல்வகை சிறப்புகள் தஞ்சைக்கு உள்ளது. அத்தகைய தஞ்சை மாவட்டத்தை பற்றிய பொதுவான செய்திகளைக் காண்போம்.

### 1.3.1 தஞ்சாவூர் பெயர்க்காரணம்

தஞ்சாவூர் என்பதற்கு பல்வேறு முறைகளில் பெயர்க்காரணம் கூறப்படுகிறது. தஞ்சை என்பதற்கு 'தண்+செய்' என்று பதம் பிரித்து குளிர்ந்த வயல்கள் நிறைந்த பகுதி என்று பொருள் கூறுவர். ஆதலால் இவ்வூருக்கு இப்பெயர் வந்ததாகக் கூறுவர்.

சோழநாடு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிச் செய்த பகுதியாகும். காவிரியாறு இப்பகுதியில் ஓடுவதால் வளமிக்க ஊராகத் திகழ்கின்றது. இவ்வூரைப் பற்றிய பழமையான குறிப்புகள் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின்(கி.பி.555-590) கல்வெட்டிலும்,திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்திலும் இடம் பெற்றுள்ளன.

தஞ்சைப் பெரியகோயில் கட்டப்படுவதற்கு முன் தஞ்சைத் தளிகுளத்தார் கோயில் என்றொரு சிவாலயம் இங்கு இருந்ததாகக் கூறுவர். தற்போது இக்கோயில் தஞ்சபுரீஸ்வரர் என்றழைக்கப்படுகிறது. இக்கோயிலின் பெயராலேயே இவ்வூர் 'தஞ்சாவூர்' என்றழைக்கப்பட்டதாக தலவரலாறு கூறுகின்றது. மேலும், தஞ்சாவூர் எட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நகரமாகும். அக்காலகட்டத்தில் இப்பகுதியினை தனஞ்சய முத்தரையர் என்ற அரசர் ஆண்டு வந்தார் எனவும், அவரின் பெயராலேயே தனஞ்சய ஊர் என்று அழைக்கப்பட்டு பின்னாளில் அது மருவி

தஞ்சாவூர் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுவர். தஞ்சாவூருக்கான பெயர்க்காரணம் இப்படி பலவாகக் கூறப்படுகின்றது.

### 1.3.2 மக்கள் தொகை

2015 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 2,22,619 மக்கள் இங்கு வசிக்கிறார்கள். இவர்களில் 1,09,219 ஆண்கள், 1,13,328 பெண்கள் ஆவார்கள். தஞ்சாவூர் மக்களின் சராசரி கல்வியறிவு 91.48% ஆகும். இதில் ஆண்களின் கல்வியறிவு 94.97%, பெண்களின் கல்வியறிவு 88.14% ஆகும். தஞ்சாவூர் மக்கள் தொகையில் 18,584 பேர் ஆறு வயதுக்குட்பட்டோர் ஆவார்கள்.

### 1.3.3 தஞ்சாவூர் மாவட்ட எல்லைகள்

தஞ்சை மாவட்டத்தின் எல்லைகளாகக் கிழக்கே நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டமும் மேற்கே புதுக்கோட்டை மாவட்டமும் தென் மேற்கில் வங்காள விரிகுடாவும், வடக்கே திருச்சி மற்றும் கடலூர் மாவட்டமும் அமைந்துள்ளன.

### 1.3.4 தஞ்சாவூர் மாவட்ட புள்ளி விவர அட்டவணை

| வரிசை எண் | தகவல்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பரப்பு | 3,602,66 ச.கி.மீ |
| 2. | மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை | 2,22,619 |
| 3. | ஆண்கள் | 1,191,557 |
| 4. | பெண்கள் | 1,113,818 |
| 5. | மக்கள் நெருக்கம் சதுர கிலோ மீட்டருக்கு | 931 |
| 6. | நகராட்சிகள் | 04 |
| 7. | பேரூராட்சிகள் | 21 |
| 8. | ஊராட்சி ஒன்றியங்கள் | 14 |
| 9. | வட்டங்கள் | 08 |
| 10. | வருவாய் நிர்வாகக் கோட்டங்கள் | 03 |
| 11. | சட்டமன்ற தொகுதிகள் | 09 |
| 12. | எழுத்தறிவுப் பெற்றவர்கள் | 1,490,518 (76.07%) |
| 13. | விளைபொருள்கள் | நெல், வாழை, பருப்பு வகைகள், நிலக்கடலை, முந்திரி,கரும்பு |

### 1.3.5 தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிகள்

தஞ்சை மாவட்டம் ஒன்பது தொகுதிகளைக் கொண்டு ஒரு பாராளுமன்றத் தொகுதியாக சிறப்புப் பெற்று விளங்குகின்றது. அச்சட்டமன்றத் தொகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. ஒரத்தநாடு
2. திருவோணம்
3. தஞ்சாவூர்
4. திருவையாறு
5. பாபநாசம்
6. பேராவூரணி
7. பட்டுக்கோட்டை
8. கும்பகோணம்
9. திருவிடை மருதூர்

### 1.3.6 வருவாய் கோட்டமும் நகராட்சிகளும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று வருவாய் கோட்டங்கள் அமைந்துள்ளன. அவை,

1. தஞ்சாவூர்
2. கும்பகோணம்
3. பட்டுக்கோட்டை

ஆகியவை ஆகும். இம்மாவட்டத்தில் நான்கு நகராட்சிகள் உள்ளன. அவை,

1. தஞ்சாவூர்
2. கும்பகோணம்
3. பட்டுக்கோட்டை
4. ஒரத்தநாடு

ஆகியவை ஆகும்.

### 1.3.7 பேரூராட்சிகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 21 பேரூராட்சிகள் அமைந்துள்ளன. அவை,

1. அதிராம்பட்டினம்,
2. ஆடுதுறை,
3. அம்மாப்பேட்டை,
4. அய்யம்பேட்டை-(தஞ்சாவூர்),
5. மதுக்கூர்,
6. ஒரத்தநாடு,
7. பாபநாசம்,
8. திருக்காட்டுப்பள்ளி,
9. திருவையாறு,
10. வல்லம்,
11. தாராசுரம்,
12. மெலட்டூர்,
13. சுவாமிமலை,
14. திருநாகேஸ்வரம்,
15. திருப்பனந்தாள்,
16. திருபுவனம்,
17. திருவிடைமருதூர்,
18. சோழபுரம்,
19. மேலத்திருப்பந்துருத்தி,
20. பெருமகளூர்,
21. வேப்பத்தூர்.

ஆகியவை ஆகும்.

### 1.3.8 ஊராட்சி ஒன்றியங்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் பதினான்கு ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்துள்ளன. அவை கீழ்கண்டவாறு அமைந்துள்ளது.

1. தஞ்சாவூர்
2. கும்பகோணம்
3. பட்டுக்கோட்டை
4. திருப்பனத்தாள்
5. ஒரத்தநாடு
6. பாபநாசம்
7. பேராவூரணி
8. திருவையாறு
9. திருவிடைமருதூர்
10. திருவோணம்
11. அம்மாப்பேட்டை
12. பூதலூர்
13. மதுக்கூர்
14. சேதுபாவா சமுத்திரம்

### 1.3.9 நீர் வளம்

தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு நீர் ஆதாரமாக நான்கு நதிகள் விளங்குகின்றன. அவை, அரசலாறு, குடமுருட்டி ஆறு, காவிரி ஆறு, கொள்ளிடம் ஆறு ஆகியவை ஆகும். இவை அல்லாமல் வாய்க்கால், குளங்கள், கிணறுகள் ஆழ்துளை கிணறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் விவசாயம் நடைபெறுகிறது. தஞ்சைத் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்வதற்கு இத்தகைய பல்வகை நீர் ஆதாரங்களே காரணமாக அமைந்துள்ளன.

### 1.3.10 வேளாண்மைத் தொழில்

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாகத் திகழ்கின்றது. வேளாண்மையைச் சார்ந்தே பிற தொழில்கள் வளர்ந்தன எனலாம். கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலமாகத் தஞ்சை மாவட்ட மக்கள் வேளாண்மையையே உயிர்த் தொழிலாகச் செய்து வந்தனர் என்பர். இன்றும் தஞ்சை தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக திகழ்வதைக் காணலாம். ‘சோழநாடு சோறுடைத்து’ என்ற கூற்று

இதனால் தான் உருவானது என்பர். கல்லணை இக்கூற்றுக்கு சான்றாக இன்றும் விளங்குகின்றது.

வேளாண்மையின் சாகுபடி பரப்பு 2,56,247 ஹெக்டேராகும். இதில் நெல் சாகுபடி மட்டும் 2,29,079 ஹெக்டேராக உள்ளது. நெல்லை சேமித்து வைக்க மிகப்பெரிய கிடங்குகள் அந்தந்தப் பகுதியில் உள்ளன. நெல் விதையின் தரம், நேர்த்தியினை ஆய்வு செய்யும் ஆய்வு நிறுவனங்களை ஆடுதுறை, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு முதலிய ஊர்களில் அரசு நிறுவியுள்ளது. மேலும் நெல்லைத் தவிர வாழை 4784 ஹெக்டேரிலும், பருத்தி 1585 ஹெக்டேரிலும், கரும்பு 9013 ஹெக்டேரிலும் விளைவிக்கப்படுகிறது.

### 1.3.11 பிற தொழில் வளங்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் முக்கியத் தொழில்களாக பட்டு நெசவு, மீன்பிடிப்பு, கயிறு தயாரித்தல், இசைக்கருவி செய்தல் போன்றவை விளங்குகின்றன. பட்டு நெசவு தாராசுரம், திருபுவனம், அம்மாப்பேட்டை, குடந்தை முதலிய இடங்களில் செய்யப்படுகிறது. இதில் குடந்தை தான் பட்டு உற்பத்தியில் புகழ்பெற்று விளங்குகின்றது. ஆண்டுக்கு ரூ.150 கோடி மதிப்புடைய 7.5 இலட்சம் பட்டுப் புடவைகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் 25,000 தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

அதிராம்பட்டினம், சாளுவநாயக்கன் பட்டினம், சேதுபாவா சமுத்திரம், அம்மினி சமுத்திரம் போன்ற ஊர்களில் மீன்பிடிப்பு தொழில் முக்கியத் தொழிலாக விளங்குகின்றது.

பட்டுக்கோட்டையைச் சுற்றிலும் தென்னந் தோப்புகள் நிறைந்து காணப்படுகிறது. ஆகையால் இங்கு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளும் தேங்காய் கொள்முதல் செய்யும் மண்டிகளும் நிறைய உள்ளன. மேலும் துணைத் தொழில்களாக கீற்று முடைவது, தேங்காய் எண்ணெய் ஆட்டுவது போன்ற தொழில்களும் பிரசித்துப் பெற்று விளங்குகின்றன. தஞ்சாவூர் பகுதிகளில் இசைக்கருவிகளான வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், பறை, நாயனம் போன்றவை செய்யப்படுகின்றன. மேலும் புகையிலை தொழிற்சாலை, உள்ளாடைத் தொழிற்சாலை, எவர்சில்வர் தொழிற்சாலை, உப்பு தயாரிக்கும் தொழில் போன்றவையும் இயங்கி வருகின்றது.

### 1.3.12 தஞ்சை மாவட்டச் சிறப்புகள்

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. சோழர்களின் தலைநகரமாய் விளங்கியது. மேலும் உலகப் புகழ் வாய்ந்த பெரிய கோவில் என அழைக்கப்படும் பெருவுடையார் கோவில் அமைந்துள்ள மாநகரம். உலகப் புகழ் பெற்ற சரசுவதி மகால் நூலகத்தைத் தன்னகத்தே கொண்டது. இந்நூலகத்தில்

காணக்கிடைக்காத மிக அரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் நூற்றுக்கணக்கில் திரட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உலகில் தமிழுக்கென்று அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் தஞ்சை 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' ஆகும்.

தஞ்சாவூர் ஓவியங்களும், கலைத் தட்டுகளும் உலகப் புகழ் பெற்றவை. மேலும், தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை, ஏலக்காய் மாலை, சந்தன மாலை போன்றவையும் மிகவும் புகழ் பெற்றது. கலை மற்றும் பண்பாட்டினை வளர்ப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் நடுவண் அரசால் அமைக்கப்பட்டுள்ள தென்னகப் பண்பாட்டு மையம் தஞ்சாவூரில் தான் உள்ளது. இது தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களை உள்ளடக்கிய தென்னிந்தியாவின் தலைமை மையமாகும்.

மெல்லிசை கருவிகளான வீணை, மிருதங்கம், தபேலா, தம்புரா போன்றவை இங்கு தான் செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் வீணை, புவிசார் குறியீடு பெற்றதாகும். இத்தகைய பல்வேறு சிறப்புகளை கொண்ட நகராக தஞ்சாவூர் திகழ்கின்றது.

### 1.3.13 சுற்றுலாத் தலங்கள்

- தஞ்சைப் பெரிய கோயில்
- முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்
- சரஸ்வதி மகால் நூலகம்
- அரண்மனை
- கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை
- பூண்டி மாதாக்கோவில்

### 1.3.14 பல்கலைக்கழகம்

- தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

  (தமிழக அரசால் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மொழி, இலக்கியம் பற்றிய ஆய்வுகள் செய்து அவற்றை வெளியிடுகிறது. கல்வெட்டு மற்றம் ஓலைச்சுவடிகள் அவற்றைப் புத்தகமாக வெளியிடுவது, கலைக் களஞ்சியம் தயாரிப்பது, தமிழ்ப் பண்பாட்டை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் ஆய்வு அருங்காட்சியகம் அமைத்தல், உலகத் தமிழர்களுடான உறவை அமைத்தல், அந்நிய நாட்டினர்க்கு தமிழ் கற்பித்தல் ஆகிய அரும் பணிகளை இப்பல்கலைக்கழகம் ஆற்றி வருகிறது. மிகப்பெரிய நூலகம் இங்கு அமைந்துள்ளது. 1996 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு இங்கு சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழ் என்ற சொல்லினை எடுத்துரைப்பது போல் 'ழ' வடிவ கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது.)

- சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
- பிரிஸ்ட் பல்கலைக்கழகம்
- பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்

### 1.3.15 கல்லூரிகள்

- சரபோஜி அரசுக் கலைக்கல்லூரி
- குந்தவைநாச்சியார் மகளிர் அரசுக் கலைக்கல்லூரி
- பாரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- ஆக்ஸிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- பூண்டி புஷ்பம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- தமிழவேள் உமாமகேசுவரனார் கல்லூரி (கரந்தை தமிழ்ச் சங்கம்) (தஞ்சையின் வடக்கே 2கி.மீ தொலைவில் கரந்தட்டாங்குடி இருக்கிறது. கரந்தை என்றும் அழைக்கப்படுகிறது. கோட்டையின் அகழியை அடுத்து வெளியில் உள்ள ஊர் இது. இங்கு 1911ஆம் ஆண்டு கரந்தை தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டது. தமிழ், தமிழர், தமிழ் இலக்கியம், இசை போன்றவற்றிற்கு இச்சங்கம் பல்வகையில் பணியாற்றியுள்ளது. இதன் வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாக இருந்தவர் வழக்கறிஞர் தமிழவேள் உமாமகேசுவரனார் ஆவார். பல காலமாக ‘தமிழ்ப் பொழில்’ என்ற செந்தமிழ் மாத இதழை இச்சங்கம் நடத்தி வருகிறது. புலவர் தேர்வு நடத்தி பல புலவர்களைச் சங்கம் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளது. இங்குப் பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கரந்தை கவியரசு வேங்கடாசலனார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், நீ.கந்தசாமி பிள்ளை, பேரா.பாலசுந்தரம், வரலாற்றறிஞர் சீ.கோவிந்தராசனார் முதலியோர் ஆவர். சங்கத்திற்கு வராத தமிழ் அறிஞர்களே கிடையாது எனலாம். கரந்தை செப்பேட்டைக் கண்டுபிடித்து சங்கமானது அதனைப் பாதுகாத்து வருகிறது. தமிழர் வரலாற்றில் சிறப்பான இடத்தைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது)
- பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி- ஒரத்தநாடு
- அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி- ஒரத்தநாடு

### 1.3.16 வழிபாட்டிடங்களும் திருவிழாக்களும்

தஞ்சாவூர் பெரியகோயில், குடந்தை, சுவாமிமலை, திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம், திருவிடைமருதூர், திருநாகேசுவரம், ஒப்பிலியப்பன் கோவில், பூண்டி மாதா கோவில், திருவையாறு ஐயாறப்பர் கோவில், புன்னை நல்லூர் மாரியம்மன் கோவில் ஆகியவை தஞ்சாவூர் மாவட்டத்தின் முக்கிய வழிப்பாட்டு தளங்களாகும். இம்மாவட்டத்தில் சிறப்புமிக்க பல விழாக்கள் நடைபெறுகின்றன. 12ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் மகாமகத் திருவிழா குடந்தையில் நடைபெறும். தஞ்சையில் இராசராசனின் சதயத் திருநாள் முத்துப் பல்லாக்கு, மாவட்டம் முழுவதும் ஆடிப்பெருக்கு, பொங்கல், கார்த்திகை, திருவையாரில் சப்தஸ்தானம், திருவையாறு தியாகராசர் ஆராதனை விழா, புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் திருவிழா, ஏகௌரியம்மன் கோயில் விழா ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

## 1.4 ஒரத்தநாடு வட்டாரம்

ஒரத்தநாடு வட்டம், 1954 முதல் தனி வட்டமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களில் ஒன்றாகும். இந்த வட்டத்தின் தலைமையகமாக ஒரத்தநாடு நகரம் உள்ளது. இந்த வட்டத்தின் கீழ் காவலிப்பட்டி, தொண்டராம்பட்டு, உளூர், ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, சில்லத்தூர், திருமங்கலக்கோட்டை, தெக்கூர் என 8 உள்வட்டங்களும், 125 வருவாய் கிராமங்களும் உள்ளன. இவ்வட்டத்தில் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருவோணம் ஊராட்சி ஒன்றியம் உள்ளது.

### 1.4.1 ஒரத்தநாடு பெயர்க்காரணம்

ஒரத்தநாடு என்னும் இவ்வூர் 1954 முதல் தனி வட்டமாக செயல்பட்டு வருகின்றது. மா.தவசு அவர்கள் தம் ‘ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரம் - வரலாறு’ என்னும் நூல் வாயிலாக ஒரத்தநாடு என்னும் பெயர் வர காரணமானவற்றை பற்றி குறிப்பிடுகையில், “மக்களின் நலன் காக்க வேண்டி மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் இருபது சத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சத்திரங்களில் மூன்று வேளையும் வழிச்செல்வோர், வறிஞர், உடல் ஊனமுற்றோர், அந்தணர் முதலியவர்களுக்கு உணவு வழங்கப்பட்டன. சத்திரங்களை ஒட்டி அமைந்த பள்ளிகளில் வேதக்கல்வி அளிக்கப்பட்டது. மேலும் மருத்துவ வசதியும், உலுப்பை மானியமும் கொடுக்கப் பெற்றன.

இரண்டாம் சரபோஜி மன்னர் தனது ஆருயிர்க் காதலி முத்தம்மாள் பெயரில் அழகிய சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய சத்திரத்தையும், குளத்தையும் (படிக்குளம்), இரண்டு மூலிகைத் தோட்டங்களையும் (கீழத் தோட்டம், மேலத்தோட்டம்), காசி

விசுவநாதர் சுவாமி கோயிலையும் இப்பகுதியில் அமைத்து அதற்கு முத்தம்மாள்புரச் சத்திரம் எனப் பெயரிட்டார். முத்தம்மாள்புரச் சத்திரம் என்று பெயரிடப்பட்ட இச்சத்திரம் காலப்போக்கில் சத்திரம் என அழைக்கப்பட்டு அதுவே ஒரத்தநாடு சத்திரம் என அழைக்கப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் செவிவழிச் செய்தியாக கூறப்படுகின்றன.

## காரணங்கள்

1. இரண்டாம் சரபோஜி மன்னர் முத்தம்மாள்புரச் சத்திரத்தைக் கட்டி முடித்ததும் அதற்காக உழைத்த அந்தப் பகுதி ஊர் மக்களை அழைத்து என்ன உதவி வேண்டும் உங்களுக்கு என்று கேட்டாராம். கண்ணந்தங்குடி மக்கள் சத்திரத்தை நிருவகிக்கும் பொறுப்பைக் கேட்டார்களாம். தென்னமநாட்டு மக்கள், கீழ்த்தோட்டம், மேலத்தோட்டம் (மூலிகைப் பண்ணைகள்) நிருவகிக்கும் பொறுப்பையும் அரண்மனைக் கடைத்தெருவில் குத்தகை வசூலிக்கும் பொறுப்பையும் கேட்டார்களாம். உறந்தைராயன் குடிக்காடு மக்கள் தங்கள் ஊர் பெயரை இந்தச் சத்திரம் உள்ள ஊருக்குப் பெயராக வைக்க வேண்டும் என்றார்களாம். உறந்தைநாடு என்பது உரத்தநாடு என மாறி உரத்தநாடு என்றும், பின் பேச்சு வழக்கில் ஒரத்தநாடு என மாறியதாகச் செவி வழிச்செய்தி ஒன்று உள்ளது.

2. முத்தம்மாள்புரச் சத்திரத்தில் உள்ள தானியங்கள் மற்றும் பொருள்களை மேற்குப் பகுதியிலிருந்து கொள்ளையிடுவோரைப் பிடிப்பதற்காகக் கண்ணந்தங்குடியின் தென்பகுதியில் உள்ள மூவரையர் என்னும் பட்டப்பெயர் உடையவர்களைச் சத்திரப்பகுதியில் இரண்டாம் சரபோஜி மன்னர் குடியமர்த்தினார்.

மேலும் இச்சத்திரம் கட்டப்பட்டுள்ள இடம் ஒரத்தூரில் இருந்து வந்து குடியேறிய மூவரையருக்கு உரிமை உடைய இடமாகும். இவ்விடத்தைச் சத்திரம் கட்ட விட்டுக் கொடுத்த மக்களின் விருப்பத்திற்கு இணங்க ஒரத்தூரைப் பூர்விகமாகக் கொண்ட மக்கள் விட்டுக் கொடுத்ததால் ஒரத்தநாடு என்னும் பெயர் வந்ததாகவும் செவிவழிச் செய்தி ஒன்று உள்ளது.

3. இரண்டாம் சரபோஜி மன்னர் பல்வேறு கலைகள் வளர்ப்பதில் ஆர்வம் உள்ளவராக இருந்ததைப் போன்று கஞ்சா மற்றும் மதுவகைகளைப் பயன்படுத்துவதிலும் பெரும் விருப்பம் உடையவராக இருந்தார். இதனால் வெறுப்புற்ற முத்தம்மாள் கஞ்சா இலைகளை அளவுக்கு அதிகமாகத் தின்று உயிரை விட்டாள். இதன் காரணமாக மன்னர் முத்தம்மாள்புரச் சத்திரத்தைக் கட்டினார். இது

ஒருத்திக்காக கட்டப்பெற்ற சத்திரம் என்பதால் ஒருத்தி நாடே ஒரத்தநாடு என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது என்ற செவிவழிச் செய்தியும் உள்ளது.

4. இரண்டாம் சரபோஜி மன்னர் தம் காதலியின் நினைவுச் சின்னமாக முத்தம்மாள் வேண்டுகோளை ஏற்று முத்தம்மாள்புரச் சத்திரத்தை அமைத்தார். இச்சத்திரத்தை நிருவகிக்க தொழில் சார்ந்த சாதியினருக்குத் தனித்தனியாகத் திட்டமிடப்பட்டு பல தெருக்களை அமைத்தார் எனவும் இது ஊர் அற்ற நாடு என்று அழைக்கப்பட்டு பிற்காலத்தில் ஊர் அற்ற நாடு – ஒரத்தநாடு என மாறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்றும் உள்ளது.

5. இராமேசுரம் முதல் காசி வரை பல சத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தஞ்சாவூர் கோட்டை சத்திரம் (சிரேஸ் சத்திரம்), சூரக்கோட்டையில் இராசகுமரபாய் சத்திரம், சூரக்கோட்டைக்கு அருகில் சைதாம்மாள்புரத்தில் சைதாம்மாள்புரசத்திரம், மடிகை அருகில் அண்ணா சத்திரம், ஒரத்தநாட்டில் முத்தம்மாள்புரச் சத்திரம், பட்டுக்கோட்டையில் காசாங்குளம் சத்திரம், மணமேல் குடியில் துரௌபதாம்மாள்புரச் சத்திரம், இராஜாமடத்தில் மோகனம்மாள்புரச் சத்திரம், தனுஷ்கோடியில் சேதுக்கரைச் சத்திரம் என இப்படி பல சத்திரங்கள் உள்ளன. இச்சத்திரங்களுக்குச் செல்லும் போது ஊர் பெயர் சொல்லி அழைக்கப் பெறுகிறது அல்லது ஊருக்கு அருகில் உள்ள சத்திரம் எனவும் அழைக்கப்பெறுகிறது. அப்படி எனில் முத்தம்மாள்புர சத்திரத்திற்கு முன் எந்த ஊர் பெயர் சொல்லி அழைத்தால் மக்களுக்குத் தெரியும்? இச்சத்திரத்தை ஒட்டி தொடர்ச்சியாக உறந்தை வளநாடு புதூர் கிராமம் இருப்பதால் புதூர் உறந்தை வளநாட்டின் தலைமை ஊர் என்பதனால் உறந்தைநாடு புதூர் என்பதாக அழைக்கப்பெற்று அதுவே காலப்போக்கில் உரத்தநாடு புதூர் என்று அழைத்து அதன் அருகே உள்ள இச்சத்திரத்திற்கு வருபவர்கள் (வழிப்போக்கர்கள்) உரத்தநாடு சத்திரம் என்று அழைத்ததால் பிறகு ஒரத்தநாடு எனக்கூறி சத்திரம் மறைந்து விட்டது என்கிற செய்தியும் உள்ளது."[7] என்கிறார். இவரின் இக்கூற்று வாயிலாக ஒரத்தநாட்டிற்கான பெயர்க்காரணத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது.

### 1.4.2 மக்கள் தொகை

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை பரவல் பின்வருமாறு உள்ளது.

| மக்கள் தொகை பரவல் (2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) | | |
|---|---|---|
| 1 | மக்கள்தொகை | 246,871 |
| 2 | ஆண்கள் | 120,073 |
| 3 | பெண்கள் | 126,798 |
| 4 | குடும்பங்கள் | 61,409 |
| 5 | கிராமப்புற மக்கள்தொகை சதவீதம் | 95.08 சதவீதம் |
| 6 | எழுத்தறிவு | 75.09 |
| 7 | பாலின விகிதம் | 1,000 ஆண்களுக்கு, 1,056 பெண்கள் |
| 8 | குழந்தைகள் பாலின விகிதம் | 1000 ஆண் குழந்தைகளுக்கு, 960 பெண் குழந்தைகள். |
| 9 | 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 24781 |
| 10 | பட்டியல் சமூகத்தினரும், பட்டியல் பழங்குடியினரும் | 42,326 மற்றும் 78 |

### 1.4.3 சமயம்

ஒரத்தநாடு வட்டத்தில் பல்வகை சமூகத்தினர் வாழ்கின்றனர். இந்துக்கள் 97.44 சதவீதத்திலும், இசுலாமியர்கள் 1.44 சதவீதத்திலும், பிறர் 0.08 சதவீதத்திலும் வாழ்கின்றனர். மதங்கள் பலவாக இருந்தாலும் ஒற்றுமையோடும் தோழமையுடனும் செயல்படும் மக்களாக இப்பகுதியினர் உள்ளனர் என்பது சிறப்பாகும். இப்பகுதியில் கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளனர். மேலும் தலித், கோனார், முத்தரையர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களும் கணிசமாக உள்ளனர்.

### 1.4.4 ஒரத்தநாடு பேரூராட்சி

தஞ்சை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரத்தநாடு பேரூராட்சி தஞ்சாவூர் மற்றும் பட்டுக்கோட்டை மாநில நெடுஞ்சாலையில் தஞ்சாவூரிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இப்பேரூராட்சியின் மொத்த பரப்பளவு 7.20 சதுர கிலோ மீட்டர் ஆகும். இப்பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளன. 14.96 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்படுகிறது. 10.60 கிலோ மீட்டர் வடிகால் பராமரிக்கப்படுகிறது.

ஒரத்தநாடு பேரூராட்சியின் தெரு குடிநீர் குழாய்கள் 14.90 கிலோ மீட்டருக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியின் சொத்துவரி விதிப்புகள் 3823-ம், குடிநீர் இணைப்புகள் 1913-ம், தொழில்வரி விதிப்புகள் 800 மற்றும் தொழில் உரிம கட்டணங்கள் 250 உள்ளன. இப்பேரூராட்சியில் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 10247 ஆகும். இப்பேரூராட்சியில் தமிழகத்தில் முதன் முதலில் அமைக்கப்பட்ட நிலஅளவைப் பயிற்சி கல்லூரியும், அரசு கல்வியியல் கல்லூரி , கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உள்ளது.

ஒரத்தநாடு பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பாரதிதாசன் மகளிர் கல்லூரி, அரசு பேருந்து பணிமனை, அரசு நூலகம், ஆதிதிராவிடர் விடுதி ஆகியவை உள்ளன. இப்பேரூராட்சிப் பகுதியில் தீயணைப்பு நிலையம், காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், 110 மின் நிலையம் ஆகியவை உள்ளது. மேலும், இப்பகுதியில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், குழந்தை வளர்ச்சி திட்டப்பணி அலுவலகம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மத்திய கூட்டுறவு வங்கி, பாண்டியன் கிராம வங்கி, கனரா வங்கி, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழக துணை கிளை அலுவலகம், நெடுஞ்சாலை துறை சுற்றுலா மாளிகை, அரசு மருத்துவமனை , ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், கிளை கருவூலகம் ஆகிய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் அலுவலகங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

### 1.4.5 ஊராட்சி மன்றங்கள்

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் ஐம்பத்து ஒன்பது ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அவை,

1. ஆதனக் கோட்டை
2. ஆழியவாய்க்கால்
3. அம்பலபட்டு வடக்கு
4. அம்பலபட்டு தெற்கு
5. அருமுலை
6. அவிதாநல்ல விஜயாபுரம்
7. ஆயன்குடி
8. சின்ன பொன்னப்பூர்
9. சோழபுரம்
10. ஈச்சங் கோட்டை
11. கக்காரை
12. கக்கார கோட்டை
13. கண்ணாதன்குடி கிழக்கு
14. கண்ணாதன்குடி மேற்கு
15. கன்னுகுடி கிழக்கு

16. கன்னுகுடி மேற்கு
17. கரைமெண்டார் கோட்டை
18. கருக்காடிபட்டி
19. காட்டு குறிச்சி
20. கவரபாட்டு
21. கீழ உளூர்
22. கீழவன்னிபட்டு
23. கோவிலூர்
24. குலமங்கலம்
25. மண்டல கோட்டை
26. மேல உளூர்
27. மூர்த்தியம்பாள் புரம்
28. முள்ளூர் பட்டி காடு
29. நடூர்
30. நெய்வாசல் தெற்கு
31. ஒக்கநாடு கீழையூர்
32. ஒக்கநாடு மேலையூர்
33. ஓரந்தராயன் குடிகாடு
34. பச்சியூர்
35. பாலம்புதூர்
36. பஞ்சனரிதி கோட்டை
37. பருத்தி கோட்டை
38. பேய்கரம்பன் கோட்டை
39. பொன்னப்பூர் கிழக்கு
40. பொன்னப்பூர் மேற்கு
41. பூவாத்தூர்
42. பொய்யுண்டார் கோட்டை
43. புதூர்
44. புலவன் காடு
45. இராகவாம்பாள் புரம்
46. சேதுராயன் குடிகாடு
47. தாழயமங்கலம்
48. தெக்கூர்
49. தெலுங்கன் குடிகாடு
50. தென்னம நாடு
51. திருமங்கல கோட்டை (கிழக்கு)
52. திருமங்கல கோட்டை (மேற்கு)
53. தொண்டாரம் பட்டு

54. வடக்கூர் வடக்கு
55. வடக்கூர் தெற்கு
56. வடசேரி
57. வாண்டயன் இருப்பு
58. வெள்ளூர்
59. சின்ன பருத்திக் கோட்டை

ஆகியவை ஆகும்.

## 1.4.6 வருவாய் கிராமங்கள்

ஒரத்தநாடு வட்டத்தின் கீழ் நூற்றி இருபத்தி ஐந்து வருவாய் கிராமங்கள் உள்ளன. அவை,

1. ஆம்பலாப்பட்டு கோபாலபுரம்
2. ஆம்பலாப்பட்டு வடக்கு
3. ஆம்பலாப்பட்டு ராமபுரம்
4. ஆழியவாய்க்கால் பகுதி
5. அக்கரை வட்டம்
6. ஆம்பலாப்பட்டு தெற்கு
7. அம்மன்குடி
8. அருமுலை
9. ஆதனக்கோட்டை
10. ஆவிட நல்ல விஜயபுரம்
11. ஆயங்குடி
12. சென்னிய விடுதி
13. சென்னிய விடுதி (கிருஷ்ணபுரம்)
14. சின்ன அம்மன்குடி
15. சோழகன் குடிக்காடு
16. சோழபுரம்
17. ஈச்சங்கோட்டை
18. இலுப்பை விடுதி
19. காவராப்பட்டு
20. காடுவெட்டி விடுதி
21. கக்கரை
22. கக்கரைக் கோட்டை
23. கண்ணந்தங்குடி கீழையூர்
24. கண்ணந்தங்குடி மேலையூர்
25. கண்ணந்தங்குடி கீழையூர் முதன்மை
26. கண்ணந்தங்குடி மேலையூர்

27. கண்ணுகுடி கீழ்ப் பாதி
28. கண்ணுகுடி மேல் பாதி பகுதி
29. கண்ணுகுடி மேல் பாதி தலைமை
30. கரைமீண்டார் கோட்டை
31. கருக்காக் கோட்டை
32. காட்டுக்குறிச்சி
33. காவாலிப் பட்டி
34. கீழ உளூர்
35. கீழவன்னிப் பட்டு
36. கீழ மங்கலம்
37. கோடியாளம்
38. கோவிலூர்
39. கிருஷ்ணாபுரம்
40. குலமங்களம்
41. மண்டலக் கோட்டை
42. மேடையக்கொல்லை
43. முள்ளூர்ப் பட்டிக்காடு
44. மூர்த்தியம்பாள்புரம்
45. மூர்த்தியம்பாள்புரம் பகுதி
46. முத்தம்பாள்புரம்
47. நடுவூர்
48. நெய்வாசல் தென்பாதி
49. நெய்வாசல் தென்பாதி
50. நெய்வேலி தென்பாதி
51. நெய்வேலி வடபாதி
52. நெம்மேலி திப்பியக்குடி
53. ஒக்கநாடு கீழையூர்
54. ஒக்கநாடு கீழையூர் கூடுதல்.
55. ஒக்கநாடு கீழையூர் தலைமை
56. ஒக்கநாடு மேலையூர்
57. ஒக்கநாடு மேலையூர்
58. பாச்சூர்
59. பாளம்புத்தூர்
60. பஞ்சநதிக் கோட்டை
61. பாண்டி பழமனைக் காடு
62. பணி கொண்டான் விடுதி
63. பரவத்தூர்
64. பருத்திக் கோட்டை

65. பருத்தியப்பர் கோயில்
66. பருத்தியப்பர் கோயில்
67. பேய்க்கரும்பன் கோட்டை
68. பெரிய அம்மன்குடி
69. பின்னையூர் கிழக்கு
70. பின்னையூர் மேற்கு
71. பொய்யுண்டார் கோட்டை
72. பொய்யுண்டார் கோட்டை பகுதி
73. பொய்யுண்டார் குடிக்காடு
74. பொன்னாப்பூர் கீழ்ப் பாதி
75. பொன்னாப்பூர் மேல்பாதி
76. பொன்னாப்பூர் மேல்பாதி
77. பூவத்தூர்
78. பூவத்தூர்
79. புது நகர்
80. புதூர்
81. புகழ் சில்லத்தூர்
82. புலவன் காடு
83. ராகவாம்பாள்புரம் பகுதி
84. ராகவாம்பாள்புரம்
85. சாமிப்பட்டி
86. சங்கரனார் குடிக்காடு
87. சில்லத்தூர் பகுதி
88. சூரியமூர்த்திபுரம்
89. தலைய மங்கலம்
90. தளிகைவிடுதி
91. தெக்கூர்
92. தெக்கூர் பகுதி
93. தெலுங்கன் குடிக்காடு
94. தென்னம நாடு வடக்கு
95. தென்னம நாடு தெற்கு
96. தெற்குக் கோட்டை
97. திருநல்லூர்
98. தொண்டராம்பட்டு கிழக்கு
99. தோப்புவிடுதி
100. வடக்குக்கோட்டை
101. வடக்கூர் தெற்கு சேர்த்தி
102. வடக்கூர் வடக்கு சேர்த்தி

103. வடசேரி வடக்கு
104. வடசேரி தெற்கு
105. வாண்டையார் இருப்பு
106. வேத விஜயபுரம்
107. வேதநாயகிபுரம்
108. வெள்ளூர்
109. வேங்கரை பகுதி
110. வேங்கரை பகுதி
111. வேங்கரை பகுதி
112. வெட்டுவாக்கோட்டை
113. வெட்டுவாக்கோட்டை பகுதி
114. யோகநாயகிபுரம்
115. சின்னபருத்திக்கோட்டை-கீழ்வேங்கைநாடு

ஆகியவை ஆகும்.

### 1.4.7 தொழில்

ஒரத்தநாடு வட்டத்தில் பல்வகைத் தொழில் இருப்பினும் உழவுத் தொழிலே இங்கு முதன்மையானது. இங்கு நெல், கரும்பு, வாழை, வேர்க்கடலை, உளுந்து, பலா, முந்திரி போன்றவை பெருமளவு சாகுபடி செய்யப்படுகின்றன. ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள ஊர்களின் இளைஞர்கள் பலர் தங்கள் பள்ளிப் படிப்பை முடித்து தொழிற்கல்வி கற்று, சிங்கப்பூர், மலேசிய தீபகற்ப நாடுகளிலும், அரபு நாடுகளிலும் பணிபுரிவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## 1.5 களப்பணி ஊர்கள்

ஒரத்தநாடு வட்டாரத்தில் இடம்பெற்றுள்ள ஊர்களான வடக்கூர், ஈச்சங்கோட்டை, செல்லம்பட்டி, சோழபுரம், நாட்டரசன் கோட்டை, ஆழியவாய்க்கால், கருக்காடிப்பட்டி, குலாலர் தெரு ஆகிய எட்டு ஊர்களே இந்த ஆய்விற்கான ஆய்வுக்களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

### 1.5.1 வடக்கூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒரத்தநாடு வட்டத்தில் தஞ்சாவூருக்கும் தெற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் வடக்கூர் என்னும் கிராமம் அமைந்துள்ளது. சுமார் 572.705 ஹெக்டேர் நிலப்பரப்பினைக் கொண்ட இக்கிராமத்தில் சுமார் 570 வீடுகள் உள்ளன. ஆண்கள் 1243 நபர்களும் பெண்கள் 1177 நபர்களும் ஆக மொத்தம் 2420

மக்கள் வாழ்கின்றனர். இங்கு ஐயர், கம்மாளர், பத்தர், கொல்லர், முஸ்லிம், அம்பலக்காரர், வண்ணார், பறையர், பரியாரி, கள்ளர், செட்டியார் ஆகிய இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வூரில் ஐந்து தெருக்கள் (கீழத் தெரு, மேலத் தெரு, தெற்குத் தெரு, வடக்குத் தெரு, ஆதிதிராவிடர் தெரு) உள்ளன. இதில் 55 குடும்பங்கள் மட்டும் மேல் தட்டுக்களாகவும், 280 குடும்பங்கள் அடித்தட்டு மக்களாகவும், மீதமுள்ள குடும்பங்கள் நடுத்தர குடும்பங்களாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். வடக்கூர் கிராமத்தில் இடம் பெற்றுள்ள வசதிகளாக,

1. ஊராட்சி மன்றம்
2. கிராம நிர்வாக அலுவலகம்
3. பள்ளிக்கூடம்
4. அரசு மருத்துவமனை
5. பாரத மாநில வங்கி
6. சத்துணவுக்கூடம்
7. நெல் கொள்முதல் நிலையம்
8. கூட்டுறவு பால் உற்பத்திச்சங்கம்
9. பொது நூலகம்
10. கலையரங்கம்

போன்றவை உள்ளது. இது இவ்வூர் மக்களின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

வடக்கூரில் உள்ள பிராமணர்கள் வாழும் வீடுகளில் திண்ணைப் பகுதியில் கோட்டோவியங்களாக காவி வண்ணம் மற்றும் வெள்ளை வண்ணத்தால் வரையப்பட்டிருக்கும் வீடுகள் இரண்டும் மேற்குத் திசையில் உள்ளன, மர வேலை செய்யும் தச்சர்கள் வாழும் பகுதி தச்சத் தெரு என்று அழைக்கப்படுகிறது. இவர்கள் வீடு வடக்குத் திசையில் உள்ளது மொத்தம் 8 வீடுகள் உள்ளன.

### 1.5.2 ஈச்சங்கோட்டை

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் தஞ்சாவூரிலிருந்து தெற்கே சுமார் 18 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. 700 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட

இக்கிராமத்தில் சுமார் 360 வீடுகள் உள்ளன. மக்கட் தொகை சுமார் 1956 ஆகும். இவ்வூரில் கள்ளர், பறையர், முஸ்லிம், தச்சர், அம்பலகாரர் போன்ற இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வூரில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ளது. அடுத்ததாக அரசுக் கால்நடைப் பராமரிப்பு பண்ணை, பால் பண்ணை, தற்போது அரசு வேளாண்மைக் கல்லூரியும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் மின்சார வாரியம் ஒன்றும் சுமைதாங்கி என்ற இடத்தின் அருகில் உள்ளது. இவ்வூரில் உள்ள அனுமன் கோவிலில் சுவர் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வூர் மக்களின் முதன்மைத் தொழில் விவசாயம் ஆகும். குறிப்பிட்ட சமூகத்தினர் பாய் பின்னும் தொழிலை முதன்மைத் தொழிலாக பரம்பரையாக செய்து வருகின்றனர்.

### 1.5.3 செல்லம்பட்டி

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் தஞ்சாவூரிலிருந்து தெற்கே 22 கி.மீ. தொலைவில் செல்லம்பட்டி என்ற கிராமம் உள்ளது. இவ்வூர் சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டது. இக்கிராமத்தில் சுமார் 600 வீடுகள் உள்ளன. மக்கட்தொகை 3400 ஆகும். இங்கு கள்ளர், தச்சர், கொல்லர், வண்ணார், பறையர், கோனார், கிறிஸ்தவர், முஸ்லிம், செட்டியார் போன்ற இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வூரில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, மருத்துவ வசதி, தனியார் பள்ளிக்கூடம், மருந்துக்கடை, தனியார் மருத்துவ ஆலோசனை நிலையமும் இருப்பது அனைத்து மக்களுக்கும் மிகவும் பயனுடையதாய் உள்ளது. இவ்வூரில் உள்ள அய்யனார் கோயிலில் குதிரைச் சிற்பங்களும் சுவர் ஓவியங்களும் காண்போரைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.5.4 சோழபுரம்

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் தஞ்சாவூரிலிருந்து தெற்கே 25 கி.மீ. தொலைவில் சோழபுரம் என்னும் கிராமம் உள்ளது. சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இக்கிராமத்தில் சுமார் 300 வீடுகள் உள்ளன. மக்கட்தொகை சுமார் 3566 ஆகும். இங்கு கள்ளர், தச்சர், கொல்லர், வண்ணார், பறையர், கோனார், கிறிஸ்தவர், முஸ்லிம், செட்டியார், முத்தரையர் போன்ற இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமம் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த நிலப்பரப்பு ஆகும். இக்கிராமத்தில் உள்ள தெருக்கள் காற்றோட்டம் உடையனவாக இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. கழிவு நீர் ஓடுவதற்குத் தனியாக வீடுகளின் முன்பாக

வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடுகள் தோறும் அழகான கோலங்கள் இட்டிருப்பது நமது தமிழரின் பண்பாட்டினைப் பிரதிபலிப்பனவாக உள்ளது.

இக்கிராமம் வழியாக இராஜாமடம் கால்வாய் என்னும் ஆறு செல்வதால் இவ்வூர் மக்கள் ஆற்றின் ஓரமாக விளையும் கோரைப்புற்கள் மூலம் பாய் பின்னும் தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

### 1.5.5 நாட்டரசன் கோட்டை

தஞ்சாவூருக்குத் தெற்கே 15 கி.மீ. தொலைவில் நாட்டரசன் கோட்டை அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சுமார் 350 வீடுகள் உள்ளன. மக்கட்தொகை சுமார் 2400 ஆகும். இங்கு கள்ளர், தச்சர், கொல்லர், வண்ணார், பறையர், கோனார், கிறிஸ்தவர், முஸ்லிம், செட்டியார், முதலியார் போன்ற இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் தச்சர்கள் தெருவில் ஐந்து வீடுகள் உள்ளன. நான்கு பேர் தச்சுத் தொழிலில் வீணை செய்யும் தொழிலையே முதன்மையாகக் கொண்டுள்ளனர். மற்றவர் கதவு ஓவியங்கள் எனப்படும் நிலைக்கதவுகள் செய்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

### 1.5.6 ஆழியவாய்க்கால்

தஞ்சாவூருக்குத் தெற்கே 18 கி.மீ. தொலைவில் ஆழியவாய்க்கால் என்னும் கிராமம் உள்ளது. இவ்வூரில் சுமார் 900 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இக்கிராமத்தில் சுமார் 620 வீடுகள் உள்ளன. மக்கட் தொகை சுமார் 2720 ஆகும். இவ்வூரில் கள்ளர், தச்சர், கொல்லர், செட்டியார், பறையர், நரிக்குறவர் போன்ற இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். நரிக்குறவர் வாழும் பகுதி தனியாகவும் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவும் உள்ளது. நரிக்குறவரின் தொழில் பச்சைக் குத்துதலாகும். இவர்கள் பல்வேறு ஊருகளுக்குச் சென்று பச்சைக் குத்தியும், பலர் இவர்களைத் தேடி வந்தும் பச்சைக் குத்திக் கொண்டு செல்கின்றனர். ஒரு சில குடும்பங்கள் மட்டும் மேல உளுர் என்னும் பகுதியில் இவ்வூருக்கு அருகிலேயே தங்கி பச்சைக் குத்தும் பணி செய்து வருகின்றனர்.

### 1.5.7 கருக்காடிப்பட்டி

தஞ்சாவூருக்குத் தெற்கே 20 கி.மீ. தொலைவில் கருக்காடிப்பட்டி என்னும் கிராமம் உள்ளது. இவ்வூரில் சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இக்கிராமத்தில் சுமார் 700 வீடுகள் உள்ளன. மக்கட் தொகை சுமார் 3200 ஆகும். இவ்வூரில் கள்ளர், தச்சர், கொல்லர், செட்டியார், பறையர், கோனார் போன்ற இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் உள்ள காளியம்மன் கோயிலில் சுவர்

ஓவியங்கள் வழியாக கோயிலின் தல வரலாற்றினை அனைவரும் அறிந்துக் கொள்ளப் பயன்படுகிறது.

### 1.5.8 குலாலர் தெரு

தஞ்சாவூருக்குத் தெற்கே 24 கி.மீ. தொலைவில் குலாலர் தெரு என்னும் கிராமம் உள்ளது. இவ்வூரில் சுமார் 700 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இக்கிராமத்தில் சுமார் 400 வீடுகள் உள்ளன. மக்கட் தொகை சுமார் 3200 ஆகும். இவ்வூரில் கள்ளர், தச்சர், கொல்லர், செட்டியார், பறையர், கோனார், குயவர் போன்ற இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். குயவர்கள் வாழும் பகுதியில் 5 வீடுகள் உள்ளன. இவர்களின் தொழில் மட்பாண்டங்கள் மற்றும் மண் குதிரைகள் செய்வதாகும்.

## 2.ஆய்வுக்களம் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம்

நாட்டுப்புறவியல் ஆய்வில் களம் என்பது மிக முக்கிய இடம் வகிக்கிறது. களமின்றி எந்த ஒரு ஆய்வும் முழுமை பெறாதென்பர். களத்தைப் பற்றி ச.பிலவேந்திரன் அவர்கள் கூறுகையில், "மக்கள் கூட்டத்தையும் அவர்களது வாழ்வியல் நடத்தைகளான வழக்காறுகளையும் இணைத்துக் கொண்ட ஒரு பருண்மையான இடப்பரப்பே களம் ஆகும். களம் என்பது ஆய்வுக்கான தரவுகளைக் கொண்டிருப்பது மட்டுமல்ல அது எந்நேரமும் உயிர்ப்புடன் இருக்கும் ஒரு மக்கள் குழு வாழ்ந்து வரும் இடப்பரப்பாகும். இந்த இடப்பரப்பு காலவெளியில் அதனுள் வாழ்ந்து, வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற சமுகம் பற்றிய பல உள்ளீடுகளைத் தமக்குள் பொதிந்து வைத்திருக்கும்"[8] என்கிறார். இவரின் இக்கூற்றின் வாயிலாக களத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி உணர்ந்துக் கொள்ள இயலும்.

நாட்டுப்புறவியல் ஆய்வில் களம் என்பது உயிர்நாடியாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. அத்தகைய களத்தைத் தேர்வு செய்தல் பற்றி பேராசிரியர் தே.லூர்து அவர்கள் குறிப்பிடுகையில், "களப்பணிக்கான களத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது ஒருவர் முதன் முதலில் தொகுக்கத் தொடங்குகின்ற பொழுது உறவினர்கள், நண்பர்கள் வாழ்கின்ற பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் நலம்"[9] என்கிறார். இவ்வாய்விற்கான களமும் இத்தகைய முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டது.

நாட்டுப்புறவியல் அறிஞர் பேராசிரியர் ஆறு.இராமநாதன்(1982:56) தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்கான களத்தைத் தேர்வு செய்தமைப் பற்றிக் குறிப்பிடுகையில் தென்னாற்காடு மாவட்டம் பாடல் சேகரிப்பிற்கான ஆய்வுக்களமாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டது. இம்மாவட்டம் ஆய்வாளரின் சொந்த மாவட்டம் என்பதால் பாடல்களைச் சேகரிப்பதும் அவற்றைப் பொருள் கொள்வதும் எளிது என்பதாலும் இம்மாவட்டம் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்விற்கான களத்தைப் புதியதாகத் தேர்வு செய்கின்ற பொழுது சில சிக்கல்களும் ஏற்பட வாய்ப்புண்டு. மக்கள் அறிமுகமற்றவர்களாக இருப்பதோடு அவர்களோடு பழகி நட்புறவை ஏற்படுத்திக் கொண்டு ஆய்வை மேற்கொள்ள காலதாமதமாகும். அப்படியே தரவுகளை சேகரித்தாலும் அது முழுமையாகக் கிடைக்குமா என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எனவே களத்தைப் பொறுத்த வரையில் தெரிந்த, அறிமுகமானதாக இருந்தால் எளிமையாக ஆய்வினை நிகழ்த்த முடியும் என்பது தெளிவாகிறது.

எனவே இந்த ஆய்வைப் பொறுத்தவரை ஆய்வுக்களமாக ஒரத்தநாடு வட்டாரம் ஆய்வாளரின் ஊருக்கு அருகில் அமைந்த பகுதி என்பதாலும் அப்பகுதியில் ஆய்வாளருக்கு நண்பர்கள், உறவினர்கள் இருப்பதாலும், ஆய்வாளருக்கு அழகுக்கலைகள் மேலுள்ள ஆர்வத்தினாலும், நாட்டுப்புற ஓவியங்கள் பற்றி முழுமையாக அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தாலும், மேலும் நாட்டுப்புற ஓவியங்களைப் பதிவு செய்து அவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தாலும் ஆய்வுக்களம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## 3 களப்பணி

களப்பணி என்பது ஆய்வாளர் தம் ஆய்விற்குத் தேர்ந்தெடுத்த களத்திற்குச் சென்று பொருண்மை அடிப்படையில் தரவுகளைத் திரட்டி பதிவு செய்வதாகும். இதில் களம் என்பது நாட்டுப்புறவியல் ஆய்விற்கு இன்றியமையாததாகவும், ஆணி வேறாகவும் அமைகின்றது. களப்பணிக்கு செல்கையில் எந்தப் பகுதியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொண்டு, அதன் பிறகு யாரையெல்லாம் சந்திக்க வேண்டும் என்று உறுதி செய்து அந்நபர்களிடம் சென்று உரையாடி தரவுகள் சேகரிக்கப்பட்டன. களப்பணியில் ஒரத்தநாடு வட்டாரத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் வசிக்கும் ஓவியக் கலைஞர்களின் வாயிலாக ஓவியக்கலைப் பற்றி மட்டுமல்லாது, அவர்களுடைய பழக்கவழக்கம், சமுதாயநிலை, அம்மக்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்குறித்தும் ஆய்வு செய்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### 3.1 களப்பணி முன்னேற்பாடுகள்

களப்பணிக்குத் தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்தப்பிறகு அங்குச் சென்று தரவுகள் சேகரிக்க சில முன்னேற்பாடுகள் செய்து கொள்ளப்பெற்றன. அதன் பிறகு களப்பகுதியில் அறிமுகமானவர்களின் உதவியோடும், நண்பர்களின் உதவியோடும்

ஆய்விற்கு சரியான தகவல்கள் தரக் கூடிய தகவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தகவலாளரில் பெரும்பாலானோர் கூலித் தொழில் செய்பவர்களாதலால் அவர்கள் வேலையை முடித்து மாலை வீடு திரும்பிய பிறகும், அவர்களின் ஓய்வு நாட்களைத் தெரிந்து கொண்ட பிறகும் தகவல்கள் சேகரிக்க முடிவு செய்யப்பட்டது. தகவலாளியிடம் ஆய்வின் நோக்கத்தைப் பற்றி விளக்கிக் கூறியும், அவர்களுக்குப் புரியும் வகையில் கேள்விகளைக் கேட்டும், தரவுகளைச் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வுக்களத்திற்குச் செல்லும் முன்பாக ஆய்வுக்கு வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கு முன்னேற்பாடாக வினாக்கள் எழுதப்பட்ட வினா நிரலையும் மற்றும் ஒலிப்பதிவுக்கருவி, புகைப்படக்கருவி ஆகியவை தயார் நிலையில் வைத்துக் கொண்டு எந்தப் பகுதியில் யாரைச் சந்திக்க வேண்டும் எனத் திட்டமிட்டுச் செயலாக்கம் பெற்றது.

## 3.2 தகவலாளர் தேர்வு

ஆய்வுக்குத் வேண்டிய தரவுகளைச் சேகரிக்க சரியானத் தகவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களிடம் நேரடியாகச் சென்று உரையாடி கேள்விகளைக் கேட்டு தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வுத் தொடர்பான தரவுகள் சேகரிக்க தகவலாளர்களை வயது அடிப்படையிலும், தகவல் அடிப்படையிலும் வேறுபடுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

கோல ஓவியங்கள் பற்றி முழுமையாகத் தெரிந்த பெரியவர்களிடமும், பச்சை குத்துதல் பற்றி நரிக்குறவர் இன மக்களிடத்தும், பானை ஓவியங்கள் பற்றி குயவர் இன மக்களிடத்தும், கதவோவியங்கள் பற்றி தச்சர்களிடத்தும், சுவரோவியங்கள் பற்றி அவ்வோவியங்கள் வரையும் கலைஞர்களிடத்தும், கோட்டோவியங்கள் பற்றி பிராமணர்களிடத்தும், பாய் ஓவியங்கள் பற்றி பாய் பின்னும் தொழிலாளர்களிடத்தும், புரவி ஓவியங்கள் பற்றி ஸ்தபஸ்தியாரிடத்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கல்வியறிவு பெற்றவர்களிடம் ஆய்வுத்தொடர்பான விளக்கங்களை கூறியும், கல்வியறிவு இல்லாதவர்களிடம் தெளிவான விளக்கங்களையும் ஆய்வு பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் எடுத்துக் கூறி தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

## 3.3 தரவுகள் சேகரித்தல்

ஆய்வு செய்யும் ஆய்வாளர் தமது வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்ப தகவல்களைச் சேகரிக்க சில பொருட்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சுவடிகள் கொண்டு எழுதி தரவுகளைப் பதிவு செய்யலாம். தகவலாளர் சொல்கின்ற தரவுகளை ஒலிப்பதிவுக்கருவி கொண்டும் பதிவு செய்யலாம். நிழற்படக்கருவி கொண்டு புகைப்படம் எடுத்தும் அதன் மூலம் தரவுகளை வைத்துக் கொண்டு அதன் அடிப்படையிலேயே ஆய்வு மேற்கொள்ள முடியும்.

தரவுகளின் தனித்துவத்தைப் பற்றி ச.பிலவேந்திரன் அவர்கள் குறிப்படுகையில், “தரவு எனும் போது மக்களுடைய நடத்தை ஒழுகலாறு சார்ந்த வழக்காறுகள் என மேலோட்டமாகக் கூறிவிட இயலாது. மக்களுடைய நடத்தை முறை ஒழுகலாறு என்பன ஒரு சமூகம், தமது தொழில், வாழ்க்கை முறை, வரலாறு, சிந்தனை முறை, சமூகத்தன்மை,மக்கள் வாழும் களத்தின் இயற்கை, பௌதீகத்தன்மை, போன்றவற்றிற்கேற்ப காலவெளியில் தகவமைத்துக் கொண்ட வாழ்க்கை முறையாகும்”[10] என்கிறார். இவரின் இக்கூற்று எண்ணத்தக்கது ஆகும்.

ஆய்வாளர் களப்பணியில் பல சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தாலும் தரவுகளைக் குறிப்பிட்ட வகைகளில் சேகரிக்க முடிந்தது. ஓரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த கிராமங்களான வடக்கூர், ஈச்சங்கோட்டை, நாட்டரசன் கோட்டை ஆகிய கிராமங்களில் கதவோவியங்கள் செய்பவர்களின் மரப்பட்டறைக்குச் சென்று மரத்தில் பூ ஓவியங்கள்கள் எவ்வாறு செய்கின்றீர்கள், எந்த மரத்தில் செய்கிறீர்கள், அதற்குரிய கருவிகள் முதலியவற்றையும், தொழில்கள் கற்றல் முறை பற்றியும், விற்பனை செய்கின்ற முறை பற்றியும், அவர்களின் வாழ்க்கை நிலை, பொருளாதாரப் பிரச்சனை பற்றியும் கேட்டு அவர்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பெற்றன.

ஆழியவாய்க்கால், மேல உளூர் மற்றும் தொம்மன் குடிசை பகுதியில் நரிக்குறவர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர் அதனை அறிந்து அவர்களை அணுகி அவர்களிடமிருந்து நேர்காணல் முறையிலும், பேட்டி முறையிலும் பச்சை குத்தப் பயன்படும் கருவிகள், தேவையானப் பொருட்கள் பற்றியும் அவர்களின் உணவு முறை, கல்வி நிலை, பொருளாதார நிலைக் குறித்தும் தரவுகள் சேகரிக்கப்பெற்றன. ஈச்சங்கோட்டை, சோழபுரம் பகுதியில் பாய் பின்னும் தொழிலை பெண்கள் மற்றும் ஆண்கள் இருபாலருமே செய்து வருகின்றனர் அவர்களிடம் பாய் பின்னுவதற்குரிய தேவையானப் பொருட்கள், அதில் வரையப்படும் ஓவியத்திற்கான வண்ணக்கலவைகள் குறித்தும் தரவுகள் சேகரிப்பெற்றன.

கருக்காடிப்பட்டி, பாச்சூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஐய்யனார் மற்றும் வீரனார் கோயில்களில் நேர்த்திக் கடனுக்காக மண் குதிரைகளை வைத்திருத்தலை பார்த்து அதற்குரிய காரணங்களை கோயில் பூசாரிகளிடமும் நேர்த்திக்கடன் செய்த மக்களிடத்தும் தரவுகள் சேகரிப்பெற்றன. குலாலர் தெரு பகுதியில் குயவர் இன மக்கள் வாழும் பகுதிகளில் மட்பாண்டம் செய்பவரிடத்து நேர்காணல் முறையில் மட்பாண்டத்திற்குரிய மூலப்பொருட்கள், செய்முறை அதில் வரையப்படும் ஓவியம் பற்றியும் தரவுகள் சேகரிக்கப்பெற்றன.

மங்கல நாட்களில் கோலங்களில் அழகாக ஓவியம் வரையும் பெண்களிடத்தும், கோலம் பற்றிய நம்பிக்கைகள் குறித்து வயதான பெண்களிடத்தும் அவர்கள் ஓய்வாக இருக்கும் நேரத்திலும், மாலை நேரத்திலும் சென்று தரவுகள் சேகரிக்கப்பெற்றன.

## 3.4 சூழல்

அறிஞர் மாலினோவ்ஸ்கி அவர்கள் முதன் முதலில் களம், தரவு ஆகியவற்றின் உயிர் நாடியாக விளங்கும் சூழல் மிக இன்றியமையாத ஒன்று என முன்மொழிந்தார். மேலும் சூழல் ஒன்றே ஒரு வழக்காறுக்கு உயிர்த்தன்மை தரக்கூடியது என்றார். ஆகவே சூழல் மிகவும் இன்றியமையாததாகும்.

களப்பணியில் சூழலின் முக்கியத்துவத்தைப் பற்றி தே.லூர்து அவர்கள் குறிப்பிடுகையில், "கள ஆய்வில் சூழல் இன்றியமையாதப் பங்கினை வகிக்கின்றது. சூழல் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்கிற போது கூடுதலாகப் பார்வையாளர்களின் பங்களிப்பு, மனநிலை, நம்பிக்கைகள் ஆகியவை முழுமையாகப் பல தகவல்களை ஆய்வாளர்களுக்கு நல்குகின்றன. இன்றைய சூழலில் நாட்டுப்புற ஆய்விற்குச் சூழல் அடிப்படையிலான ஆய்வு மிகவும் தேவைப்படுகிறது"[11] என்கிறார். இவரின் இக்கூற்று வாயிலாக சூழலின் முக்கியத்துவத்தைப் பற்றி உணர்ந்துக் கொள்ள முடிகின்றது.

ஓர் ஆய்வாளர் தன்னுடைய சேகரிப்புப் பணியில் எந்த வகையில் ஈடுபட முடிவு செய்தாலும் அவருடைய முக்கியப்பணி எத்தகைய சூழலில் தரவுகளைத் தொகுப்பது என்று முடிவு செய்வதாகும். நாட்டுப்புற ஆய்வின் சூழல்கள் பின்வருமாறு,

1. இயற்கைச் சூழல்
2. செயற்கைச் சூழல்
3. தூண்டப்பட்ட இயற்கைச் சூழல்

என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

நாட்டுப்புற ஓவியங்கள் குறித்து தரவுகளைச் சேகரிக்கும் போது, ஓவிய நுட்பங்களைக் குறித்து கூறுமாறு செயற்கைச் சூழலில் தான் தரவுகள் சேகரிக்க முடிந்தது. சில வேளைகளில் ஒரு பார்வையாளராக நேரில் கண்டும் உற்றுநோக்கல் முறையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும் சில வினாக்களைத் தகவலாளியிடம் கேட்டு தூண்டப்பட்ட இயற்கைச் சூழலிலும் தரவுகள் பெறப்பட்டு ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டன.

## 3.5 களப்பணியில் தோன்றிய சிக்கல்களும் தீர்வுகளும்

ஆய்வாளர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தலைப்பு நாட்டுப்புற ஓவியங்கள்(ஓரத்தநாடு வட்டாரம்) என்பதாகும். இதனடிப்படையில் தகவல்கள் சேகரிக்க களத்திற்குச் சென்ற பொழுது பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. பொதுவில் கலைசார் வரலாற்றுப் பின் புலங்களும் சமூகத்தின் பின்புலங்களும் அடங்கிய ஆய்வினில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. முதலில் ஆய்வு செய்யும் களத்தினைப் புரிந்து கொண்ட பிறகு தான் எப்படிப்பட்ட சிக்கல்கள் தோன்றும் என்பதை உணர முடியும்.

சமூகம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும்போது பலவிதமான சிக்கல்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. இத்தகைய ஆய்வில் பால் பாகுபாட்டுச்சிக்கல், இன ரீதியான சிக்கல், களம் ரீதியான சிக்கல், தொழில் ரீதியான சிக்கல் போன்ற பல்வேறுச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இத்தகைய சிக்கல்களை கடந்து ஒரு ஆய்வாளர் தனக்குத் தேவையான தரவுகளைப் பெறுகின்றனர். இதுபோன்ற சிக்கல்களுக்கு ஆளாகும் போது திறமையுடனும், சாமர்த்தியத்துடனும் அணுகும்போது தரவுகள் எளிமையாகக் கிடைக்கின்றன.

கள ஆய்வின் போது ஏற்படும் சிக்கல்களில் முதன்மையாகக் கருதப்படுவது பால்பாகுபாட்டுச் சிக்கல் ஆகும். பால்பாகுபாட்டுச் சிக்கல்கள் பல எதிர்கொள்ள இயலாத தன்மையாக இருப்பினும் இந்தச் சிக்கல்கள் பற்றி நாம் முன்னரே தெரிந்துக் கொள்வது இவற்றை எதிர் கொள்வதற்கோ அல்லது விலக்கிச் செல்வதற்கோ உதவும். இவ்வாய்விற்காக கள ஆய்விற்குச் சென்ற போது இது போன்ற பால் பாகுபாட்டுச் சிக்கல்கள் ஏற்பட்டன. இளம் வயதினரை விட்டு விட்டு முதியவரை அணுகிய போது இது போன்ற சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடிந்தது.

ஆய்வுக்களத்தில் தகவல் சேகரிக்க தகவலாளர்களை அணுகிய போது எதற்காக இதனைக் கேட்கின்றீர்கள்? இவ்வாய்வினால் எங்களுக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது. இதனைச் சேகரித்து என்ன செய்யப் போகீன்றீர்கள்? பணம் ஏதேனும் தருவார்களா? போன்ற பல வினாக்களைக் கேட்டனர். மேலும், ஓவியக்கலை சார்ந்த குறிப்புகளையும் அதன் நுணுக்கங்களையும் கூற மறுத்துவிட்டனர். சிலர் அத்தொழில் சார்ந்த செய்திகளைப் பற்றி பேசவே ஒப்புக்கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களுடைய தொழில் இதனால் பாதிக்கும் என எண்ணுகின்றனர். அவர்களுடைய வினாக்களைப் பொறுமையாக கேட்டு அவ்வினாக்களுக்குத்தகுந்த விளக்கங்களையும் ஆய்வுத்தொடர்பான பயனையும் தகவலாளர்களிடம் எடுத்துக் கூறி தரவுகள் சேகரிக்கப்பட்டன.

நாட்டுப்புற ஓவியக்கலை சார்ந்த செய்திகளையும் அம்மக்களின் வழக்காறுகளையும் பதிவு செய்யும் பொழுது அவற்றினால் தவறுகள் எதுவும்

ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் ஓவியக்கலை சார்ந்த குறிப்புகளையும், நுணுக்கங்களையும் தகவலாளர் பலரிடம் ஒரே கேள்வியைக் கேட்டு இறுதியாக அதற்கான விடை தெரிவு செய்யப்பட்டது. சுவரோவியங்கள் பற்றி கேட்ட போது தற்கால ஓவியங்கள் பற்றியே மிகுதியாக கூறினர். அவர்களிடமிருந்து பழங்கால சுவர் ஓவியங்கள் பற்றி முழுமையாக பதில் கிடைக்கவில்லை. எனவே பள்ளி சுவர், கோயில் சுவர்களில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்களை மட்டும் தரவுகளுக்கு எடுத்து கொள்ளப்பட்டது. தச்சுத்தொழில் செய்யும் ஆசாரிகள் பணி தினமும் நடைபெறுவதால் அவர்களின் ஓய்வு நேரம் கேட்டறிந்து அலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் சொல்லும் நாளில் நேரில் சென்றுப் பார்த்து அவர்களிடம் தரவுகள் சேகரிக்கப் பெற்றது.

# தொகுப்புரை

- ‘ஆய்வுக் களமும் களப்பணியும்’ என்னும் இவ்வியல் தமிழ்நாட்டின் வரலாற்று பின்னணி மற்றும் கலை இலக்கிய பின்னணி ஆகியவை பற்றி விவரித்துச் சொல்வது மட்டுமல்லாமல், நாட்டுப்புற ஓவியக் கலைகளின் மரபுத்தொடர்ச்சி போக்கைத் தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு களத்தின் வாயிலாக முன்னெடுத்துச் செல்ல முதலில் களம் பற்றியப் பொதுப் புரிதலை உருவாக்குகிறது.

- நாட்டுப்புற ஓவியக்கலைக்கு முக்கியமான இடமாகத் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டம் திகழ்கின்றது. தஞ்சை மாவட்டத்தின் வரலாற்று பின்னணியை உற்று நோக்கினால் சோழ தேசத்தில் கலைகளை உயிராகப் பேணிக் காத்த பல நிகழ்வுகளைக் காண இயலும். இத்தகையக் காரணங்களினால் தான் இம்மக்கள் இன்றளவும் கலையுணர்வோடுத் திகழ்கின்றனர் எனலாம்.

- தஞ்சையைப் பல வம்சங்களைச் சார்ந்தப் பெரும் மன்னர்கள் ஆட்சிப் புரிந்துள்ளனர். முத்தரையர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் எனப் பல வம்சா வழிகள் ஆட்சிப்புரிந்ததின் காரணமாக பல கலைகளின் முக்கிய நிகழ்விடமாகத் தஞ்சை திகழ்ந்துள்ளது. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை எனப் பல கலைகளில் புதிய மாற்றம் நிகழ இம்மண்ணின் ஆட்சி மாற்ற நிகழ்வு உறுதுணை செய்துள்ளது. இத்தகையக் கலைப் பின்னணியை உடைய தஞ்சை மாவட்டத்தில் நாட்டுப்புற மக்களின் இயல்பு கலையாக நாட்டுப்புற ஓவியக்கலை திகழும் போக்கைக் காண முடிகிறது.

- ஆய்வுக் களமாக உள்ள ஒரத்தநாடு ஊரின் இயற்கையமைப்பு, சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, கல்விச்சூழல், தொழில்கள் ஆகியவற்றை உற்று நோக்கும் போது இயல்பாகவே இங்கு நாட்டுப்புற ஓவியக்கலைகள் வளர்வதற்கானப் பின்புலம் இருப்பது தெளிவாகிறது.

# அடிக்குறிப்புகள்

1. தி.அ.முத்துச்சாமிகோனார், கொங்கு நாடு, ப.3
2. தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், வரி.1-3
3. சிலப்பதிகாரம், வேனிற்காதை, வரி.1-2
4. மேலது, அரங்கேற்றுக்காதை, வ.37
5. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.22
6. சிலப்பதிகாரம், காடுகாண் காதை, வரி.19-20
7. மா.தவசு, ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரம் - வரலாறு, பக்.26-29
8. ச.பிலவேந்திரன், ஆய்வுக் களமும் தரவுகளும், ப.8
9. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு, ப.25
10. ச.பிலவேந்திரன், ஆய்வுக் களமும் தரவுகளும், ப.8
11. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு, ப.25

# இயல் - 2

## ஓவியத்தின் தோற்றம் வளர்ச்சி வரலாறு

கலையும், இலக்கியமும் மனிதனின் இரண்டு கண்களாகும். மனிதர்கள் காடுகளில் விலங்குகளோடு விலங்குகளாகச் சுற்றித் திரிந்தனர். பின்பு ஓரிடத்தில் தங்கள் குடிகளை நிலையமர்த்திக் கொண்டனர். உண்ண உணவு, இருக்க இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ முற்பட்டனர். நிலையான வாழ்வும், தொழிலும் நிலைபெறத் தொடங்கிய போது கலை மீது மனிதர்களுக்கு நாட்டம் செல்லத் தொடங்கியது. தம் உணர்வுகளின் நுட்பத்தினாலும் மதி நுட்பத்தினாலும் கலைகளை உருவாக்க முயன்றனர்.

வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய வழிகாட்டும் தொழில்கள் கலைகளாக மாற்றம் பெறலாயின. இதனை மயிலை சீனிவேங்கடசாமி கூற்று வழியே காணமுடிகின்றது.

“மனித வாழ்க்கைக்குப் பயன்படுகிற எல்லாத் தொழில்களும் கலைகளே. உழவு, வணிகம், நெசவு, மருத்துவம், உணவு சமைத்தல், தச்சுத் தொழில், மட்பாண்டம் செய்தல், கன்னாரத் தொழில், கருமான் தொழில், மீன்பிடித்தல், ஆடுமாடு வளர்த்தல், தையல் வேலை, சலவைத் தொழில், சவரத் தொழில் முதலான தொழில்கள் எல்லாம் கலைகளே. ஆனால் இந்தக் கலைகள் பொதுக் கலைகள்.”[1]

மேற்காணும் கூற்றில் கலைகள் உருவாகுவதற்கு முதல் படிநிலை தொழில்களே ஆகும் என்கிறார். பொருளாதாரத்திற்கும் வாழ்வியல் இயக்கத்திற்கும் வழிகாட்டும் தொழில்களை மனிதர்கள் நுட்பமாக மேற்கொண்டனர். இந்நுட்பத் தன்மையே கலைகள் உருவாகுவதற்கு வழிவகையாக அமைந்தது.

மனிதர்கள் நாகரீக வளர்ச்சி அடைந்ததை கலைகளே இனங்காட்டியுள்ளன, இதனை,

“வாழ்க்கைக்கு உதவுகிற பலவகைத் தொழில்களில் வளர்ச்சியும், தேர்ச்சியும் அடைந்து, உணவு, உடை, உறைவிடம், கல்வி, செல்வம் முதலியவற்றைப் பெற்று நாகரீகமாக வாழக் கற்றுக் கொண்ட மனிதன், உண்டு வகுத்து உறங்குவதோடு மட்டும் மனவமைதி பெறுவதில்லை. அவன் மனவமைதியை, நிறை மனத்தைப் பெறுவதற்கு வேறு கலைகளை விரும்புகிறான். நுண்கலைகள் மனிதனுக்கு நிறை மனத்தையளிக்கின்றன.”[2] மேற்கண்ட பகுதியில் மயிலை சீனிவேங்கடசாமி மனிதனின் மனநிறைவுக்கு கலைகள் வழிவகைப் புரிந்துள்ளதைக் காட்டுகின்றார். கலைகளின் தோற்றத்தில் மனிதர்களின் நாகரீகம் தொடக்கம் பெற்றதையும் விளக்கிக் காட்டுகின்றார். கலைகளே மனிதனை மனிதனாக மாற்றியத் திறத்தினைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், "மனிதன் மிகப் பழைய காலத்திலே காட்டுமிராண்டியாக வாழ்ந்தான். இருக்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் உண்டாக்கிக் கொள்ளத் தெரியாமல் அக்காலத்திலே மனிதன், விலங்கு போல அலைந்து திரிந்தான். பிறகு அவன் மெல்ல மெல்லச் சிறிது சிறிதாக நாகரீகம் அடைந்தான். வசிக்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் உண்டாக்கிக் கொள்ளத் தெரிந்து கொண்டான். இதனால் அவன் மிருக வாழ்க்கையிலிருந்து விலகி நாகரீக வாழ்க்கைப் பெற்றான். ஆனால் மனிதன் நாகரீக வாழ்க்கையடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன. மனிதன் நாகரீகம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தவை அவன் சிறிதுத் சிறிதாகக் கற்றுக் கொண்ட பல வகையான தொழில்களேயாகும். ஒவ்வொரு தொழிலையும் கற்றுத் தேர்வதற்கு அவனுக்குப் பல நூற்றாண்டுகள் கழிந்தன"[3] என்கிறார். மனிதன் நாகரீகம் அடைவதற்கு கலைகள் பேருதவியாக விளங்கியதை தெளிவாகக் காட்டியுள்ளார்.

கலைகள் மனிதர்களுக்கு மனமகிழ்வையும், மன நிறைவையும் தரும் வல்லமைக் கொண்டது என்பதற்குப் பின்வரும் பகுதிச் சான்றாக அமைகின்றது.

"பலவகையான தொழில்களில் வளர்ச்சியும், தேர்ச்சியும் அடைந்து, தனது வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள், கல்வி, செல்வம் முதலியவையும் பெற்று நாகரீகமாக வாழ்கிற மனிதன் இவற்றினால் மட்டும் மனவமைதி அடைவதில்லை. நாகரீகமாக வாழும் மக்கள் உண்டு, உடுத்து, உறங்குவதனோடு மட்டும் திருப்தியடைவதில்லை அவர்கள் மனம் வேறு இன்பத்தை அடைய விரும்புகிறது. அந்த இன்பத்தைத் தருவது எது? அழகுக் கலைகளே. நாகரீக மக்கள் நிறை மனம் - திருப்தி அடைவதற்குத் துணையாயிருப்பவை அழகுக் கலைகள் தாம்; அழகுக் கலைகள் மனிதனுடைய மனதிற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்கின்றன. அழகுக் கலைகளின் வாயிலாக மனிதன் நிறைமனம் திருப்தி அடைகின்றான்."[4] என்ற பகுதியில் அழகுக் கலைகளே மனிதர்களுக்கு அழகியல் உணர்வை ஊட்டியது என்பதனைத் தெளிவாகக் காணமுடிகிறது.

மனித மனதில் கற்பனையையும், அழகுணர்ச்சியையும் தூண்டவல்ல அழகுக் கலைகளின் தன்மையினைக் கீழ்க்காணும் நிலையில் மயிலை சீனி. வேங்கடசாமி எடுத்துரைக்கின்றார்.

"அழகுக் கலைக்கு இன்கலை என்றும், கவின்கலை என்றும், நற்கலை என்றும் வேறு பெயர்கள் உண்டு. மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியை எழுப்பி அழகையும், இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும், மனோபாவத்தினாலும் கற்பனையினாலும் அழகுக் கலைகளை அமைத்து, அவற்றின் மூலமாக உணர்ச்சியையும் அழகையும், இன்பத்தையும் காண்கிறான். அழகுக் கலைகள் மனத்திலே உணர்ச்சியை எழுப்பி அழகுக் காட்சியையும் இன்ப உணர்ச்சியையும் கொடுத்து மகிழ்விக்கிற படியினாலே, நாகரீகம்

படைத்த மக்கள் அழகுக் கலைகளைப் போற்றுகிறார்கள், போற்றி வளர்க்கிறார்கள், துய்த்து இன்புற்று மகிழ்கிறார்கள்."[5]

மனிதர்களின் மனதில் உள்ள உணர்வுகளுக்கும், கற்பனைகளுக்கும் வடிவம் கொடுக்கும் சிறப்பு கலைகளுக்கு உண்டு என்பதை மேற்காணும் கூற்று வழியே அறிய முடிகின்றது. கலைகள் மனிதனின் மனத்தில் உள்ள எண்ணங்களை வெளிப்படுத்தும் ஊடகமாக மட்டும் இல்லாது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டுத் திறனாக விளங்குகின்றது.

## 1 இலக்கியங்களில் கலை பற்றிய குறிப்புகள்

கலை எனும் சொல்லாட்சி சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடலில் 'கலை' எனும் சொல் இடம் பெற்றுள்ளமையைப் பின்வருமாறு காணலாம்.

"அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே."[6]

என்ற பாடலில் அருந்தலை என்பதற்கு மாறாக 'அருங்கலை' எனும் சொல் பயின்று வந்துள்ளதாக உ.வே.சாமிநாதையர் எடுத்துக் காட்டியுள்ளார். இச்சான்று சங்க காலத்தில் 'கலை' எனும் சொல் பயின்று வந்துள்ளமையைச் சுட்டுகிறது.

ஐம்பெருங்காப்பியத்தில் முதன்மைக் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தில் 'கலை' எனும் சொல் பயின்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

"எண்ணெண் கலையும் இசைந்துடன் போகப்
பண்ணும் திறனும் புறங்கூறு நாவில்
தளைவா யவழிந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை எழுதி"[7]

என்றும்,

"பண்ணும் கிளையும் பழித்த தீஞ்சொல்

எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்"[8]

என்றும்,

"எண்ணான் கிரட்டி இருங்கலை பயின்ற

பண்ணியன் மடந்தையர் பயங்கெழுவீதி"[9]

மேற்கண்ட பாடல்களில் 'கலையும்' கலையோர்' 'இருங்கலை' போன்ற சொற்களில் கலை என்ற சொல் பயின்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது. கலை எனும் சொல் முற்காலத்திலேயே இடம் பெற்றுள்ளமையைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

மக்கள் தங்களுடைய தேவைக்காகவும் வசதிக்காகவும் கலைகளை அமைத்துக் கொண்டனர். இவற்றுள் மனிதனுடைய உள்ளத்தில் உணர்ச்சியையெழுப்பி அழகின் வெளிப்பாடாக அமைகின்ற கலைகள் குறித்து சான்றுகள் மூலம் காணமுடிகின்றது.

## 2 கலை - விளக்கம்

" 'கலை' என்பதற்குக் 'கல்வி' "[10] என்று பொருள் கூறுகிறது சூடாமணி நிகண்டு.

"கலையானது விரும்பிய விளைவை உண்டாக்கும் திறம்"[11] என்கிறார் எல்.ஆபர்குரோம்பி.

"உணர்த்துதற்கு ஏற்ற சீரிய வடிவமே கலையாகும்"[12] என்று கூறுகின்றார் ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ்.

"கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடங்கி நிற்பது; அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது; உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது. கலையாற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம். சிற்பமாக உருக்கொள்ளலாம். கண்ணையும், கருத்தையும் தன்பால் ஈர்க்கும் அழகிய கட்டடமாக வெளிப்படலாம். பிறவாகவும் தோன்றிக் காட்சி அளிக்கலாம்"[13] என்று மா.இராசமாணிக்கனார் கலை குறித்து விளக்கம் தருகின்றார்.

கலை என்னும் சொல்லிற்கு பல்வேறு நிலையில் விளக்கம் கொள்ளலாம். கலை என்பதற்குத் தொல்காப்பியர் கீழ்க்காணும் நிலையில் விளக்கம் தருகின்றார்.

“கலை என்னும் சொல் கல் என்னும் ஏவற் பகுதியிலிருந்து தோன்றியதாகும். கல்வி என்னும் சொல்லுக்கு இதுவே முதனிலையாகும். கலை என்னும் சொல், மானின் ஒரு வகையினையும், ஆண் குரங்கினையும் குறிப்பதாகத் தொல்காப்பியம் காட்டுகின்றது”[14] எனும் பகுதி வழி கலை என்னும் சொல்லிற்கு பல்பொருள் இருப்பதைக் காணமுடிகின்றது.

கலை எனும் சொல் உருவாக்கம் பற்றி பின்வரும் பகுதித் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது.

“கல்லுதல் என்பதற்குத் தோண்டுதல், அகழ்தல் ஆகிய பொருள்களுண்டு. கலி என்பதற்கு ஆரவாரம் என்ற பொருளுண்டு. கலி என்பதற்கு கூப்பிடுதல், அழைத்தல் ஆகிய பொருள்கள் உண்டு என அறிஞர் தெரிவிக்கின்றனர். கலித்தொகையின் பல செய்யுட்கள் மகடூஉ முன்னிலையாக அமைந்திருத்தல் எண்ணற்குரியது. நம் பழைய கல்வி முறையில் ஆசிரியர் மாணவனை விளித்து வினா விடைப்பாங்கில் ஐயந் திரிபகற்றிய நிலையினைக் களவியலுரை தெளிவுறக் காட்டும், ஆழமாக எண்ணும் அறிவுநிலை, பிறர்க்கு எடுத்துரைக்கும், கற்பிக்கும் நிலை ஆகியவற்றின் அடிப்படையிலேயே ‘கலை’ என்ற சொல் உருவாகியிருக்கிறது.”[15]

மேற்கண்ட பகுதியில் கலை எனும் சொல் உருவான நிலைப் பற்றியும், அதன் பொருள் பற்றியும் கு.வெ.பாலசுப்பிரமணியன் விளக்கிக் காட்டுகின்றார்.

“மனிதனை மகிழ்விக்க உருவாக்கப் பெற்ற கலைகள் அறுபத்து நான்காகக் கருதுவர் இதனை, கலைகளை அறுபத்து நான்காக எண்ணும் மரபு இந்தியா முழுவதும் நிலவியிருக்கிறது. கலைகளை அறுபத்து நான்காக எண்ணுதல் ஓர் அறிவியல் நெறியிலான திட்ட வரையறைக்குட்பட்டதில்லை. அறுபத்து நான்கு முத்திரைகள், அறுபத்து நான்கு மாயைகள், அறுபத்து நான்கு யோகினிகள் என்பதைப் போலவே கலைகளும் அறுபத்து நான்கு என எண்ணப்பட்டன என்பது பொருந்துமென்பர்”[16] என்பதிலிருந்து கலைகள் அறுபத்து நான்கு வகைகள் உள்ளமையை அறிய முடிகின்றது.

“கலையென்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும்

களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்”[17]

என்கிறார் இராமலிங்கம்பிள்ளை.

“விரும்பத்தக்கதாக உள்ளது எதுவோ அதுவே கலை. நலமானதாக உள்ளது எதுவோ அதுவே கலை. உள்ளத்தை ஈர்ப்பதாக உள்ளது எதுவோ அதுவே கலை. காண்பார் உள்ளத்தை ஈர்க்கும் ஆற்றலே கலை ஆற்றல். ஒன்றினைக் காண்பார்

உள்ளத்தை ஒன்றினோடு ஈடுபாடு கொள்வார் உள்ளத்தை ஈர்க்கும் தன்மை எதுவோ அதுவே கலைத்தன்மை."[18] என்று கூறுகின்றார் ஏ.என்.பெருமாள்.

"கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரீகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி. மக்கள் வாழ, வளரச் சமுதாய நீதிகளையும் அறத் தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிட, கலையைப் போல் வேறு சாதனம் இல்லை"[19] என்கிறார் டி.வி.நாராயணசாமி.

கலையைப் பற்றி அறிஞர்கள் கூறியவற்றிலிருந்து பின்வரும் முடிவுக்கு வரமுடிகிறது. கலை என்பது, இயற்கை ஆன்மக் கண்ணாடியில் பட்டு எதிர்த் தோன்றும் சாயலாகும். மனித மனத்தின் ஆழத்திலிருந்து இக்கலை தோன்றுகிறது. கலைக்கு நிலைக்களமாக இயற்கை அமைகிறது. உணர்ச்சிக்கு விளக்கமாக அமைந்து அழகுத் தன்மையால் கண்டோரது உள்ளத்தைக் கவர வல்லது. மக்கள் வாழ்வோடுத் தொடர்புடையது. மக்களின் பண்பாடு நாகரீகத்தை எடுத்துக் காட்டும் திறனுடையது என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

## 3 கலைகளின் தோற்றம்

கலை தோன்றும் இடம் மனிதனின் ஆக்கும் சக்தியே ஆகும். கலைஞன் மனத்தில் மறைந்துக் கிடக்கும் இச்சக்தி வெளிப்படையாகத் தோன்றுகின்றபொழுதே கலை உண்டாகிறது. அக்கலையின் வடிவமும் உட்பொருளும் கலைஞன் மனத்தின் ஆழத்திலிருந்தே வெளிப்படுகின்றன. இயற்கையிலேயே கலையைத் தோற்றுவிக்கும் இன்றியமையாமை அவனிடம் அமைந்திருக்கிறது. இவ்வியற்கையே கலைக்கு நிலைக்களமாகும்.

"தன் விருப்பத்தைத் தானே வெளியிட வேண்டும் என்ற மனிதனின் விருப்பம். ஏனைய மக்களிடத்தும் அவர் தம் செயல்களிடத்தும் மனிதன் கொண்டிருக்கும் ஈடுபாடு. மனிதன் தான் வாழும் உண்மை உலகிலும் அவன்தன் கற்பனை உலகிலும் அவன் கொண்டிருக்கும் ஈடுபாடு, தன் அனுபவத்திற்குக் கலை வடிவம் கொடுக்க வேண்டும் என்ற மனிதனின் ஆர்வம் ஆகிய இவைகளே கலைகள் தோன்றுவதற்குரிய காரணங்கள்"[20] என்று வில்லியம் ஹென்றி ஹெட்சன் குறிப்பிடுகின்றார்.

"கலை எல்லா காலங்களிலும் இருந்து வந்துள்ளது. மறைந்துப் போன எந்த நாகரீகத்தைப் பற்றி அறிவதற்கும் அக்காலக் கலைகள் முதன்மையாகப் பயன்படுகின்றன. கலைகளின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள் பல உள்ளன. கலை அழகினால் தோற்றுவிக்கப்பட்டது"[21] என்று புதிய காக்ச்டன் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

## 4.கலைகளின் வகைகள்

புலனுணர்வுக்கு ஏற்றபடிக் கலைகளைப் பல வகைகளாகப் பிரித்து கூறுவதுண்டு. பொதுவாகக் கலைகளை அறுபத்து நான்காகப் பகுத்து கூறிவரும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆனால் மனிதச் சமுதாய முன்னேற்றத்தில் நாகரிகம், பண்பாடு போன்றவை நாளுக்கு நாள் வளர்ந்து வந்துள்ளதைப் போல வித விதமாகப் பல்வேறு புதிய கலைகளும் தோன்றியிருப்பதைக் காணமுடிகிறது. புதிது புதிதாகத் தோன்றுவதையெல்லாம் கலையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் எந்த ஒன்று மனிதனின் அழகுணர்ச்சியைத் தூண்டி மனதுக்கு மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகின்றதோ அதையே கலையாகக் கருதலாம். இப்படிப் பார்க்கின்றபொழுது அறுபத்து நான்கு கலைகள் என்பது பொருத்தமற்றதாக ஆகிவிடுவதைப் பார்க்க முடிகிறது.

மேலும் கலைகளைப் பல்வேறு நோக்கில் பலவாறாகப் பிரித்து அடக்குவதைக் காணமுடிகின்றன, எல்லா கலைகளும் உள்ளத்தில் எழும் உணர்வினைத் தட்டியெழுப்பத் தக்கனவாகவும் மனிதனின் உள்ளத்திற்கு உணர்வையும், உவகையையும், ஊட்டத்தக்கனவாகவும் அமைகின்றன. பொதுவாகக் கலைகளைப் ‘பயன்படு கலைகள்’ என்றும், ‘நுண்கலைகள்’ என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இவற்றுள் நுண்கலைகளில் ஒன்றாக விளங்கும் ஓவியக்கலை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## 5. நுண்கலைகள் - விளக்கம்

மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியைத் தட்டியெழுப்பி, அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு நுண்கலைகளுக்கே உண்டு. அழகுக் கலை, நற்கலை, இன்கலை, கவின்கலை என்று பல பெயர்களில் நுண்கலைகள் அழைக்கப்படுகின்றன.

நுண் கலையானது காட்சி, கேள்வி, நிகழ்வு எனும் மூன்று பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. ஓவியம், சிற்பம், கட்டிடம் ஆகியன கண்ணுக்கு மட்டும் சுவை அளிக்கின்றமையால் காட்சிக் கலைகள் என்றும் இசையும் கவிதை இலக்கியமும் காதுக்கு மட்டும் சுவை அளிக்கின்றமையால் கேள்விக் கலைகள் என்றும் நடனமும், நாடகமும், கண், காது ஆகிய புலன்களுக்குச் சுவை அளிக்கின்றமையால் நிகழ்வுக் கலைகள் என்றும் கூறப்படுகின்றன. இசை, நாடகம், நாட்டியம் ஆகிய மூன்றையும் நிகழ்வுக் கலைகளாகக் கூறுவதுமுண்டு இக்கலைகளைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.

**நுண்கலைகள்**

| காட்சிக் கலைகள் | கேள்விக் கலைகள் | நிகழ்வுக் கலைகள் |
|---|---|---|
| ஓவியம் | இசை | நடனம் |
| சிற்பம் | கவிதை | நாடகம் |
| கட்டிடம் | இலக்கியம் | |

ஓவியம், சிற்பம், கட்டிடச் சிற்பம், இசை, கவிதை, நாடகம், நடனம் ஆகிய ஏழு கலைகளை நுண்கலைகளாகக் கலைக்களஞ்சியங்கள் குறிப்பிடுகின்றன.

"ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம், நாடகம், நாட்டியம் ஆகிய ஆறு கலைகளே நுண்கலைகள் (Fine Arts) அல்லது கவின் கலைகள் (Aesthetic Arts)"[22] என்று மு.வரதராசன் குறிப்பிடுகின்றார்.

"ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, கவிதை ஆகிய ஐந்து கலைகளே நுண்கலைகள்"[23] என்று அ.ச.ஞானசம்பந்தன் கூறுகின்றார்.

அமெரிக்க கலைக்களஞ்சியம், "ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, கவிதை, வரைபடம் (drawing), படவரைவு (Graphics)"[24] ஆகியவற்றை நுண்கலைகளாகக் குறிப்பிடுகிறது.

"ஓவியம், சிற்பம், கட்டிடம், வரைபடம் (drawing), நிழற்படம் (Photography)"[25] ஆகியவற்றை நுண்கலைகளாகப் புது கொலம்பிய கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

ஆக்ஸ்போர்டு அகராதி "ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, கவிதை, பேச்சு (Eloquence)"[26] ஆகியவற்றை நுண் கலைகளாகக் குறிப்பிடுகிறது. பல்வேறு அறிஞர்கள் கூற்றுக்கேற்ப நுண்கலைகளாகக் கூறப்படுவன பின்வருமாறு.

1) ஓவியம் (Painting)
2) சிற்பம் (Sculpture)
3) இசை (Music)
4) நாடகம் (Drama)
5) நாட்டியம்/நடனம் (Dance)
6) கட்டிடம் (Architecutre)
7) கவிதை இலக்கியம் (Poetry)
8) வரைபடம் (Drawing)
9) படவரைவு (Graphic)

10) நிழற்படம் (Photography)

11) பேச்சு (Eloquence)

மேற்காணும் நிலைகளில் நுண்கலைகளை வகைப்படுத்துவர். கலைகளை அறுபத்து நான்காக வகைப்படுத்தியுள்ளனர். நுண்கலைகளில் ஓவியம் ஓர் ஒப்பற்ற கலையாகவும் முதல் வகை கலையாகவும் இடம் பெற்றுள்ளது. இதனை,

அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்பது வகையாகப் பிரித்து எண்ணுவர்.இவற்றுள்,

1) ஆடல்
2) பாடல்
3) இசைக் கருவிகள்
4) வீணை,மத்தளம்
5) ஓவியம்
6) கவிதை

ஆகிய ஆறும் முதலிடம் பெறுபவனவாகக் கருதுவர். மேற்காணும் பகுதியில் ஓவியக்கலை முதல் வகையில் கலைகளில் இடம் பெற்றுள்ளமையைக் காண முடிகின்றது.

## 6. ஓவியக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

நாடோடிகளாகச் சுற்றித் திரிந்த மானிடச் சமூகம் தங்கள் குடிகளை ஓரிடத்தில் நிலை நிறுத்துகின்ற தங்கள் வாழ்விற்குரிய அடிப்படைத் தேவைகளைத் தாங்களே தயார்படுத்திக் கொள்ளும் திறன்களைப் பெறத் தொடங்கினர். நிலையான வாழ்வினை வடிவமைத்துக் கொள்ள தலைப்பட்ட காலத்தில் மனிதர்கள் தங்கள் வாழ்வினைக் கலைகளோடு நகர்த்திச் செல்ல விரும்பினர். தங்கள் எண்ணங்களை கற்பனைகளைக் கலைகள் வாயிலாக வெளிப்படுத்தினர். மனிதர்களின் மனங்களை மகிழ்விக்கும் வல்லமை கலைகளுக்கு உண்டு என்பதை உணரத் தொடங்கினர். பொழுதுபோக்கிற்காகவும், மனமகிழ்விற்காகவும் உருவாக்கப்பட்ட கலைகள் பின்பு பயன்பாட்டிற்காகவும், கலைப்பண்பாட்டினைப் பிரதிபலித்துக் காட்டும் ஊடகமாக விளங்கியதை நாம் காணமுடிகின்றது.

தமிழர்கள் கலைகளை தங்கள் வாழ்வியலோடு சார்ந்த நிகழ்வுகளாகவே எண்ணினார்கள். கலைகள் வழியாக எண்ணற்ற பண்பாட்டுக் கருத்துக்களை எடுத்துக்காட்ட முனைந்தனர். அவ்வகையில் தோன்றிய கலைகள் பலவாகும். ஆடற்கலை, பாடற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை இன்னும் பலவகைக் கலைகள் நம் தமிழ்நாட்டில் உருவாக்கம் பெற்று வந்துள்ளன.

அவ்வகையில் ஓவியக்கலையின் வரலாற்றினையும், வளர்ச்சியினையும் எடுத்துக்காட்டும் வகையில் இவ்வியல் ஆராயப்படுகிறது.

ஓவியத்தின் தோற்றம் வளர்ச்சியைப் பின்வரும் நிலைப்பாட்டில் வகைப்படுத்தி ஆராயலாம்.

1) ஓவியம் தோற்றம்
2) ஓவியம் என்றால் என்ன?
3) ஓவியச் சிறப்பும் நுட்பமும்
4) ஓவியம் தோற்றக் கூறுகள்
5) ஓவியம் - சொல் விளக்கம்
6) இலக்கியங்களில் ஓவியம் - சொல்லும் பொருளும்
7) ஓவியம் குறித்து கல்வெட்டுச் சான்றுகள்
8) காலப் படிநிலைகளில் ஓவியங்களின் வளர்ச்சி
9) ஓவியர்
10) ஓவியக் கருவிகள்
11) ஓவியக் கூடங்கள்
12) ஓவியத்தின் வகைகள்
13) நாட்டுப்புற ஓவியங்கள்

எனும் பதிமூன்று களன்களின் வழி ஓவியத்தின் வளர்ச்சியினை ஆராயலாம்.

## 6.1 ஓவியம் தோற்றம்

ஒப்பற்ற ஓவியக்கலை ஓர் மகத்தான கலை எனலாம். எவன் ஒருவன் ஓவியக் கலையை முழுமையாகக் கற்றிருக்கிறானோ, அவன் ஓரளவு மற்றெல்லாக் கலைகளையும் அறிந்தவனாகிறான் அனைத்துக் கலைகளுக்கும் முன்னோடியாக ஓவியக் கலை உள்ளமையைக் காணமுடிகின்றது. ஆதி காலத்தில் காடுகளில் நாடோடிகளாகச் சுற்றித் திரிந்த மனித சமூகம் ஓரிடத்தில் தம் குடிகளை அமர்த்திப் பல்வேறு தொழில்களை உருவாக்கி நாகரீகத்தினை நிலைநிறுத்திக் கொண்டது. மனிதன் கண்டறிந்தத் தொழில்களே கலைகளாக உருவாக்கம் பெற்றன. மனிதன் கண்டறிந்த கலைகள் பல இருப்பினும் ஓவியக் கலையே மற்ற அனைத்துக் கலைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்கி வருகின்றது.

ஓவியம் தோற்றம் பெற்ற விதத்தினை மா.சா.அறிவுடை நம்பி பின்வருமாறு விளக்கிக் காட்டுகிறார்.

“மிகப் பழமையான நுண் கலைகளில் ‘ஓவியக்கலை’யும் ஒன்று. இக்கலையே எல்லாக் கலைகளுக்கும் அடிப்படையாக அமைந்திருக்கிறது. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய பழங்கால மக்கள், தாம் கண்ட பறவை, விலங்கு, மரம்,

செடி, கொடிகள் ஆகியவற்றின் உருவங்களைப் பாறைகளிலும், அவர்கள் வசித்து வந்த குகைகளிலும் வரைந்து மகிழ்ந்திருக்கின்றனர்."[27] என்ற கூற்று வழியே ஓவியக்கலையின் நிலைப்பாட்டினை அறிய முடிகிறது. ஓவியம் தோற்ற நிலைப் பற்றி கலைக் களஞ்சியம் கீழ்க்காணும் நிலையில் விளக்கிக் காட்டுகின்றது.

"பழைய கற்காலத்திலிருந்தே ஓவிய வரலாறு தோன்றி விடுகிறது. முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பனிக்கட்டிகளுடேனே வாழ்ந்த ஐரோப்பிய மனிதன் எலும்புகள் மீதும் தந்தங்களின் மீதும் விலங்குகளின் உருவங்களைச் செதுக்கினர். சிற்ப ஓவியக் கலைகள் ஒற்றுமையும் தொடர்பும் உடையன. கற்கால மனிதன் தான் வாழ்ந்த குகைகளில் காட்டெருமை, மான் ஆகிய வேட்டைக்குரிய விலங்குகளை வரைந்திருக்கிறான். பிரான்சு நாடடில் கற்கால மனிதன் தான் வாழ்ந்த குகைகளில் காட்டெருமை, மான் ஆகிய வேட்டைக்குரிய விலங்குகளை வரைந்திருக்கிறான். பிரான்சு நாட்டில் கற்கால மனிதர் வாழ்ந்த குகைகளில் இவ்வோவியங்கள் கண்டுபிடிக்கப் பெற்றன. ஸ்பெயின் நாட்டு பழைய குகைகளில் வண்ணந்தீட்டப் பெற்ற விலங்கு உருவங்கள் அறியப்படுகின்றன. மத்திய இந்தியாவின் குகைகளில் செம்மண் தீட்டப் பெற்ற வேட்டைவினை ஓவியங்கள் காணப்பட்டிருக்கின்றன. காண்டாமிருகம், ஒட்டகச் சிவிங்கி, கலைமான் ஆகியவற்றை வேட்டையாடும் காட்சிகளை இப்பழங்கால ஓவியங்கள் சலவைக் கற்களில் மனித உருவங்களோடுக் காட்டுகின்றன. இவை ஆரியர் வரவுக்கு முற்பட்ட திராவிடருடையவை."[28]

மேற்காணும் பகுதியில் ஓவியக் கலையின் தோற்றம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தமையை அறிய முடிகிறது.

ஓவியக் கலை நம் முன்னோர்கள் காலத்திலேயே தொடங்கியது எனலாம். மனித மனங்களில் கற்பனை ஊற்றுத் தலைப்பட்ட பொழுது ஓவியம் ஊற்றெடுக்க ஆரம்பித்தன. இவற்றைப் பின்வரும் பகுதித் தெளிவுப்படுத்துகின்றது.

"நாம் கண்ணில் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக் கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினான். பின்பு அறிவு வளர வளர தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான் படைப்பாற்றலில் சிறந்த புலவர் பெருமக்களுடைய கருத்துகளுக்கு உருவங்களை ஓவியங்களாக அமைத்தான். இவ்வாறு ஓவியக்கலையில் காணும் பொருளிலிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சிப் பெற்றது."[29] மேற்கண்டச் செய்திகளின் வழி ஓவியம் வரையும் வழக்கம் மனித இனம் தோன்றியக் காலத்திலேயே தோற்றம் பெற்று வந்துள்ளமையைக் கீழ்க்காணும் பகுதி வழியே உணர முடிகின்றது.

“ஓவியக்கலை வீடு கட்ட அறியாத மனிதன் குகைகளில் வாழ்ந்த போதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறு சிறு ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப்பெற்ற மட்பாண்டம் பலவாகும். தாயித்துக்கள் பலவாகும். இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புதை பொருள்களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே ஓவியம் வரையும் மனிதன் தனது தொடக்கத்திலிருந்தே ஓவியத்தினை வரைந்து வந்துள்ளான் என்று கூறுதல் பொருத்தமாகும்.”[30]

ஓவியம் வரையும் மரபும், வழக்கமும், மனித நாகரிகம் துவங்கிய காலத்திலேயே தோற்றம் பெற்றது என்பதை மேற்கண்ட கூற்று உறுதிப்பட கூறுகின்றது.

ஓவியங்களின் நிலைப்பாட்டினை ஸ்ரீ குமாரர் எழுதிய பதினாறாம் நூற்றாண்டு நூலான ‘சிற்ப ரத்தின’த்தில் கூறப்பட்டுள்ளது.

“ஓவியத்தைப் பற்றி ‘சித்ரலஷணம்’ என்னும் ஒரு பகுதி இருக்கிறது. சித்திரம், அர்த்தசித்திரம், சித்திரபாசம் என்னும் மூன்று வகைகளாக இந்நூல் சித்திரத்தைப் பாகுபடுத்துகிறது. சித்திரம் உருண்டை வடிவ உருவங்களையும், அர்த்தசித்திரம் புடைப்புருவங்களையும் சித்திராபாசம் ஓவியத்தையும் குறிக்கும். வெள்ளை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, நீலம் என்னும் ஐந்து ஆதார வண்ணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பல்வகை வர்த்திகை அல்லது தூரிகைகள், பல்வேறு நிலைகள், ஒளிநிழலின் விதங்கள் வண்ணங்களைக் கலப்பது பொன்னைப் பிரயோகிப்பது அதை மெருகிடுவது எல்லாம் விளக்கப்பட்டுள்ளன. ரசசித்திரம் எனவும் தூளி சித்திரம் எனவும் சித்திரங்களைப் பாகுபடுத்துகிறது.”[31] மேற்கண்ட கருத்துக்களின் வழி ஓவியங்களின் தோற்றம் பற்றியும் அதன் பாகுபாடு பற்றியும் அறிய முடிகிறது.

மனிதர்களின் எண்ணங்களும் கற்பனைகளும் கலைகளாக முகிழ்கின்றன. மேலும் வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகள் கலைகளாக உருவாக்கம் பெறுகின்றன. ஓவியக் கலையின் வளர்ச்சி படிநிலையினைக் கீழ்க்காணும் நிலையில் சி.சிவராமமூர்த்தி விளக்கிக்காட்டுகிறார்.

“மனிதன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையின் எழிலால் உந்தப்பட்டு, அதைத்தான் ஆக்கிய கலைப் பொருள்களில் பாராட்டியிருக்கிறான். இது அவன் நாகரிக முதிர்ச்சியடையாத நாளிலிருந்தே நடந்து வந்திருக்கிறது. அவன் மீது கலைக்கு ஒரு நயப்படுத்தும் செல்வாக்கு இருந்திருக்கிறது. மனிதனின் பண்பாடற்ற நிலையிலும் அவனது கூரிய பார்வையுடைய கண்ணுக்கும் பழகிய கைக்கும் உலகெங்கிலும் உள்ள குகைகளில் காணும் வரலாற்றுக்கு முந்திய காலத்தின்

மிகவும் முற்பட்ட ஓவியங்கள் சிறந்த சான்றுகளை நமக்கு அளிக்கின்றன. அவை அனைத்தும் ஆல்டமீராவில் உள்ள ஓவியங்களின் தரத்தை ஒத்தது அல்ல எனினும், தேர்ந்தெடுக்கப்பட்ட வண்ணங்களும், சித்தரிக்கப்பட்ட இயக்கங்களும், ஓவியங்களில் ததும்பும் உயிர் பண்பும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்தியாவின் வரலாற்றுக்கு முந்தைய காலத்துக் குகை ஓவியங்கள் முற்காலத்திய மனிதனின் பண்டைய நாட்களில் வாழ்ந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன."[32] மேற்கண்ட கருத்துக்களின் வழி ஓவியங்கள் தோன்றிய விதத்தினையும், ஓவியங்கள் உணர்த்தும் செய்தியினை அறிய முடிகின்றது.

மனிதர்களின் வளர்ச்சியினூடே வளர்ந்த அழகனுபவம் ஓவியக் கலையை அடிப்படையாகக் கொண்டே உருவாகிச் செழித்ததெனலாம். பழந்தமிழ் நாட்டில் ஓவியம் இருந்து வந்துள்ளமையை பி.கோதண்டராமன் பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றார்.

"பண்டைத் தமிழ்நாட்டில் ஓவியக் கலை மிக உயர்ந்த நிலையில் இருந்தது. ஓவியம் சம்பந்தமான பல நூல்களும் இருந்தன. ஓவியம் வரைவதில் வல்லவர் பலர் நிறைந்து இருந்தனர். மன்னர், செல்வர்களின் மாடங்களைப் பல வகையான ஓவியங்கள் ஒப்பனை செய்தன. மக்கள் உடுத்தின ஆடைகளிலும், இல்லங்களில் காணப்பட்ட திரைச் சீலைகளிலும் ஓவியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை யாவும் இன்னும் பல விஷயங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை போன்ற சங்க நூல்களிலிருந்தும் நமக்குத் தெரிய வருகின்றன. இடைக்காலத்திலும் ஓவியக் கலை மேம்பட்டு வந்தது. இவற்றைச் சித்தன்ன வாசல் குகைகளிலும், காஞ்சி கைலாசநாதர் கோயில்களிலும் தஞ்சை ராஜராஜேஸ்வரர் ஆலயத்திலும் இன்னும் காணலாம். ஓவிய அற்புதங்களே இதற்கு சான்று பகர்பவை."[33] என்று பி.கோதண்டராமன் விளக்குகின்றார். இதன் மூலம் ஆதிக்காலம் தொடங்கியே ஓவியம் தோற்றம் பெற்று வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுகின்றார். பண்டையக் காலத் தமிழர்கள் தம் வாழ்க்கையில் கலைகளை மையப்படுத்தி வாழ்ந்து வந்தனர். இதன் விளைவே ஓவியக் கலை தோற்றம் பெற்றுப் பல கலைகள் உருவாக வித்தாக அமைந்தது எனலாம்.

மனித இனம் தோற்றம் பெற்ற உடனே ஓவியம் தோன்றியது. இதனை, "மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலத்திலேயே ஓவியக்கலையும் பிறந்து ஆதிகால தொடக்கத்திலேயே தன் உள்ளத்தில் எழுந்த அழகுணர்ச்சியைப் புறத்தே உருவில் அமைக்க முயலானான். தன் உள்ளத்து உணர்ச்சிகளுக்குப் புறத்தில் உருவம் கொடுக்க வேண்டும் என்னும் தூண்டுதல் அவனுக்கு அநாதி காலமாக இருந்து வருகிறது. குகையில் வசித்து வந்த கற்கால மனிதனும் தான் வசித்து வந்த குகையின் கூரையிலோ, சுவரிலோ தான் கண்ட மிருகங்களையும், வேட்டைக்

காட்சிகளையும், தன்னுடன் வசித்த மக்களையும் தனக்கு அகப்பட்ட செம்மண்ணையோ கரியையோ குழைத்துக் சித்திரங்கள் வரைந்து தன் கலையார்வத்தைக் காட்டினான். அவற்றை அவ்விதம் வரைவதால் அவனுக்கு ஒரு தனி இன்பம் ஏற்பட்டது. மனிதனின் அழகுணர்ச்சியும் உள்ள நெகிழ்ச்சியுமே ஓவியக் கலையின் ஊற்றாகும்."[34] என்று பி.கோதண்டராமன் விளக்கிக் காட்டுகின்றார்.

ஓவியம் தோற்றம் குறித்து 'சிற்பரத்தினம்' 'விஷ்ணு தருமோத்தரம்' 'கிரேக்க கதைகள்' போன்ற பல கதைகள் இருப்பினும் ஓவியம் ஓர் அழகுக் கலை ஆகும். மனிதன் தோன்றிய போதே இக்கலை தோன்றியது. இது வாழ்க்கைக்கு அழகும், தூய்மையும் அளித்து மனிதனை மனிதனாக்குகிறது. மனிதர்களின் தனிப் பண்பை வெளியிடும் ஓவியக் கலை அனைவராலும் போற்றி வளர்க்கப்பட வேண்டும்.

## 6.2 ஓவியக் கலையின் பயன்கள்

மனித சமுதாயத்தின் அடித்தளமாக அமைந்திருப்பது அரசியல், பொருளாதாரம் என்றால் சமுதாயத்தின் மேல் கட்டுமானமாக அமைந்திருப்பது மதம், மொழி, இலக்கியம், கலை, அறிவியல், கல்வி போன்றவையாகும். மானுட நாகரீகத்தின் வளர்ச்சியில் கலையின் பங்கு மகத்தானதாகும். சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வழி காணுவதில் கலைகள் மிகப் பெரும் பங்கினை வகிக்கின்றது. சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நடனக் கலை என பல்நிலைகளில் கலை வடிவங்கள் பரிமாண வளர்ச்சியும், வடிவங்களும் பெற்று சமுதாயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

கலைகளால் மனிதன் பல பயன்களை அடையலாம். இதனை பின்வரும் நிலையில் ஆசிரியர் பி.கோதண்டராமன் அவர்கள் சுட்டுகிறார்.

"ரசஞானத்தை எழுப்புவது, அறிவைத் தூண்டிப் போதிப்பது"[35]

ஓவியக் கலையின் சிறப்பினை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். ஓவியக் கலையின் சிறப்பினையும், ஓவியர்களின் கலை அர்ப்பணிப்பையும் கண்டு மகாகவி பாரதியார் வியப்படைகின்றார் இதனைத் தம் பாடல்வழியே எடுத்தியம்புகின்றார்.

"அரம்பை ஊர்வசி போலுள்ள
அமராமல் வியவார் செல்வி
திறம்பட வகுத்த எம்மான்
------------------------------------------
மலரினில் நீல வானில்
மாதரார் முகத்தில் எல்லாம்

இலகிய அழகை ஈசன்
இயற்றினான் சீர்த்தி இந்த
உலகினில் எங்கும் வீசி
ஓங்கிய இரவிவர்மன் என”[36]

ஓவியர் இரவிவர்மாவின் ஓவியச் சிறப்புகள் கலை அர்ப்பணிப்புக் குறித்தும் தெளிவு படக் காட்டியுள்ளார் மகாகவி பாரதியார்.

## 6.3 ஓவியச் சிறப்பும் - நுட்பமும்

ஓவியம் பல்வகை சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது. நுட்பம் நிறைந்த இதன் கலைத்திறன் எல்லோரையும் கவர வல்லது. அத்தகைய ஓவியத்தின் சிறப்புகளையும் நுட்பங்களையும் இனி காண்போம்.

### 6.3.1 ஓவியச் சிறப்பு

நம் கண்ணில் காணும் கலையைச் சித்தரித்துத் தீட்டுவது ஓவியக் கலையாகும். பிற கலைகளைக் காட்டிலும் ஓவியக் கலை நுட்பமும், சிறப்பும் வாய்ந்தது. இயற்கை நிகழ்வுகளை சித்திரம் போல் அழகுபட காட்டியதால் ‘பெருஞ்சித்திரனார்’ என்ற பெயர் சிறப்பினைச் சங்க காலப் புலவர் பெற்றார்.

நால்வகைக் கவிகளில் ‘சித்திரகவி’ என்பதும் ஒன்றாகும். சிவபெருமான் உறையும் பல்வேறு தலங்களில் திருக்குற்றாலத்தில் இருக்கின்ற சபைக்குச் ‘சித்திரசபை’ என்று அழைப்பர். ஓவியச் சிறப்பினை காப்பியங்களும், சங்க இலக்கியங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. மிக அழகிய உருவத்தை எடுத்துக் கூறுகின்ற பொழுது, ‘ஓவியர் உட்கும் உருவம்’ என்று கொங்கு வேளிர் குறிப்பிடுகின்றார். சித்திரம் எழுதிய சிவிகையை ‘ஓவியத் தண்டிகை’ என்றும் பல நிறங்களை உடைய மலர்களாகிய மாலையைச் சித்திரமாலை என்றும் சித்திரங்களை உடைய வாயிலைச் ‘சித்திரப்பதிவு’ என்ற ஓவியத்தின் சிறப்புகளைப் பெருங்கதைக் காப்பியம் சிறப்புப்பட பேசுகின்றது.

### 6.3.2 ஓவிய நுட்பம்

எண்ணங்களால் தீட்டப்படும் ஓவியம் கருத்தாழம் மிக்கவை. தாம் உணர்த்த விரும்பிய கருத்தினை ஓவியம் வழியே நுட்பமாக எடுத்துக்காட்ட முயல்கின்றார். ஓவிய நுட்பத்தை அறிந்து கொள்ள பெருங்கதை காப்பியம் உறுதுணைப் புரிகின்றது. அரசனிடத்தில் அழகிய ஓவியம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுக்கின்றனர். ஓவியனால் பல நுணுக்கமான செய்திகளை உள்ளடக்கி அவ்வோவியம் தீட்டப் பெற்றிருக்கிறது. சிற்ப நூலாசிரியர் குறித்த அளவுடையதாகத் திகழும் அவ்

உதயணன் ஓவியத்தில் சில உறுப்புகள் மட்டும் வேறு விதமாகத் திகழ்கின்றன. நான்கு நண்பர்களைக் காட்டுவதற்காக நான்கு கண்களும் அவற்றுள் ஒளி மங்கியதாக மேல் கண்ட ஒன்றும் வரையப் பெற்றுள்ளன. இவ்வோவியத்தைக் கண்ட வேந்தன், நால்வரில் ஒருவரான 'யூகி' இறந்த செய்தியை அறிகிறான். ஓவியம் நுட்பம் குறித்து பின்வரும் பாடல் வழி அறிய முடிகிறது.

"கருத்துமெய் தெரிதல் காவலன் கடலெனத்

தேவியொ டிருந்த செவ்விக் கோட்டியுள்

ஓவியப் பாவை யுய்த்தவள் காட்ட

நுண்ணுணர் மன்னன் நன்னொப் பாகிய

கண்ணுளர் நுட்பத்தின் கருத்து நோக்கி"[37]

என்ற பாடலில் ஓவிய நுட்பத்தைப் புலப்படுத்துகின்றன. உதயணன் ஓவிய நுட்பத்தினை அறிந்தவனாக விளங்கினான். அதனை, 'நுண்ணுணர் மன்னன்' எனும் அடி தெளிவாக புலப்படுத்துகின்றது. ஓவிய நுட்பம் அக்கால மக்களிடையும், மன்னர்களிடையும் இருந்துள்ளன என்பதை மேற்கண்ட பாடல் வரிகள் புலப்படுத்தியுள்ளன.

## 6.4 ஓவியம் - தோற்றக் கூறுகள்

மனித வாழ்வில் எண்ணற்ற கலைகள் தோற்றம் பெற்ற போதிலும் சிறந்த கலையாக ஓவியக் கலையை எண்ணலாம். எண்ணில் கண்ட நிகழ்வுகளுக்கு உருவம் கொடுக்கும் ஆற்றல் ஓவியத்திற்கு உண்டு. இதனாலேயே கவின் கலைகளில் ஓவியக் கலையை முதல் நிலையில் சுட்டலாம். ஆதி மனித வாழ்வில் ஓவியம் நிலை கொண்டுள்ளமையை கீழ்க்காணும் பகுதி நன்கு புலப்படுத்துகின்றது.

பழைய கற்காலத்தில் குகை ஓவியங்களில் மனிதர்களை வரைவது மிகவும் அரிது. பெரும்பாலும் விலங்குகளே வரையப்பட்டன. உணவாகப் பயன்படக் கூடிய விலங்குகளை மட்டுமின்றிப் பலத்தைக் குறிக்கும் காண்டாமிருகம் போன்ற விலங்குகளும் இந்த ஓவியங்களில் காணப்படுகின்றன. புள்ளிகள் போன்ற குறிகளும் சில வேளைகளில் வரையப்பட்டுள்ளன. மிக அரிதான மனிதர் தொடர்பான உறுப்புகளை எடுத்துக்காட்டுகிறார். கை அடையாளங்கள், அரைவிலங்கு அதில் மனிதன் உருவங்கள் போன்றன அடங்குகின்றன. கி.மு.31000 ஆண்டளவில் வரையப்பட்ட சோவட் குகை ஓவியங்களே காக்கப்பட்ட நிலையில் உள்ள முக்கியமான பழைய கற்கால ஓவியங்கள். ஸ்பெயின் நாட்டிலுள்ள ஆல்டமிரா குகை ஓவியங்கள் கி.மு.14000 – 12000 ஆண்டுகள் காலப் பகுதியில் வரையப்பட்டவை.

இவற்றில் வேறு பலவற்றோடு பைசன் என்னும் விலங்கினமும் வரையப்பட்டுள்ளது. பிரான்சின் வாங்கோக்ஸ் டோா் டோக்னே என்னுமிடத்தில் உள்ள ஓவியங்கள் மிகவும் அறியப்பட்ட சுவா் ஓவியங்களுள் அடங்குவன. இவை கி.மு.15000 – கி.பி.10000 வரையான காலப்பகுதியைச் சோ்ந்தவை. உலகளாவிய பாா்வையில் ஓவியங்கள் தோற்றம் பெற்றதை மேற்காணும் பகுதி தெளிவுப்படுத்துகின்றது. ஆதிமனிதன் தான்கண்ட விலங்குகளையும் இயற்கை பொருள்களையும் தத்தம் பாா்வைக்கு ஏற்ற வகையில் ஓவியமாகத் தீட்டி வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

வட இந்தியாவில் ஓவியக்கலை அரசா்களால் போற்றப்பட்டிருக்கிறது. பிராகிருத மொழிக் கவிஞனுக்கும், நாட்டு மொழிக் கவிஞனுக்கும் அடுத்து, ஓவியன் அரசவைகளில் மதிக்கப் பெற்றதாக இராசசேகா் தமது காவிய மீமாம்சையிற் கூறுகின்றாா் என்பா். அரண்மனையிலும், பொதுவிடங்களிலும் ஓவியக் கூடங்கள் அமைந்திருக்கின்றன. அரசா், செல்வா் படுக்கை அறைகளில் ஓவியக் காட்சிகள் தீட்டப்பட்டிருந்தன. வண்டிகளில் சித்திரங்கள் காட்சிப் பொருளாக ஊா்ந்து சென்றன. சுவா், மேற்கூரை, திரைச்சீலை, பலகை எனப் பலவற்றில் ஓவியந்தீட்டும் வழக்கமிருந்தது. கி.மு.நூற்றாண்டுகளைச் சாா்ந்த சிற்பத் தன்மைகளை அஜந்தாவின் குகை ஓவியங்கள் காட்டுகின்றன. இவ்வோவியங்கள் புத்தக ஜாதகக் கதைகளைக் காட்டுகின்றன.

ஓவியத்தின் வரலாறு மனித வரலாற்றிலிருந்தே துவங்குகின்றது. ஓவியத்தின் வரலாறு வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதா்கள் உருவாக்கிய கலைப் பொருட்களில் இருந்தே தொடங்குவதுடன், எல்லா பண்பாடுகளையும் தழுவியுள்ளது. இவ்வரலாறு தொல்பழங்காலத்தில் இருந்தே தொடா்ந்து வரும் ஒரு கலை மரபைக் குறித்து நிற்கின்றது. பல பண்பாடுகளையும், கண்டங்களையும் காலப்பகுதிகளையும் இணைக்கும் இம்மரபு 21-ம் நூற்றாண்டிலும் தொடா்கின்றது. 20-ம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிகள் வரை ஓவியம், சமயத் தொடா்புகள் செந்நெறி கால அலங்காரங்களோடு கூடிய காட்சிகளை அப்படியே காட்டும் இயல்பினவாகவே இருந்தன. இதன் பின்னா் பண்பியல் மற்றும் கருத்துரு அணுகுமுறைகளில் ஓவியம் வரைவது விருப்பத்திற்கு உரியதாகிறது. ஓவியம் அன்று தொடங்கி இன்று வரையிலும் வளா்ச்சி எய்தியுள்ள நிலையினை மேற்காணும் பகுதி சுட்டுகின்றது. காலத்திற்கு ஏற்ப ஓவியங்கள் வடிவமும், கருத்தாழமும் மாற்றம் பெற்று வந்துள்ளமையை உணர முடிகின்றது. ஓவியம் வரையத் தொடங்கிய காலத்திலேயே அது கலையாக பாவிக்கப்பட்டுள்ளமையைத் தெளிவுப்பட நாம் அறியலாம்.

ஆதிகாலத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் விலங்குகளை முதன்மைப்படுத்தியும், அடுத்த நிலையில் வேட்டைக் காட்சிகளை பின்புலமாக்கியும் அமைந்துள்ளன. மேலும் ஓவியங்கள் வரையப்படும் முறைகளும் பொருள்களும் சுட்டப்பட்டுள்ளன.

சுவரோவியங்கள் சுவரழுகுக் கலையில் சீரிய அம்சம், மனிதன் பார்த்துப் பார்த்து மகிழ்வதற்கு விட்டுச் சென்ற அழகியற் கலை. இவைகளைத் தீட்டிய பௌத்தத் துறவிகளான ஓவியர்கள் ஒப்பற்றவர்கள். ஆக்கக் கலைஞர்கள், கலையால் காலத்தின் நிலையை விளக்கிக் காட்டிய திறமையாளர்கள். இவர்களது கலையின் நுண்ணியல்பும், மெய்பாடும் போற்றத்தக்கவை. சுருங்கக் கூறின் இவர்கள் புத்தக ஜாதகக் கதை நிகழ்ச்சிகளையே தீட்டியப் போதிலும் இவர்கள் தீட்டிய மனித உருவங்களும், பிறவும் உயிரோவியங்களாகவே திகழ்கின்றன.

புத்த பெருமானுடைய உருவத்தைத் தீட்டுவதற்காக அஜந்தாக் கலை எழுந்ததாயினும் அந்த ஓவியங்கள் தங்கள் ஓவியங்களை அழகுப்படுத்த பெண்களின் உருவங்களையே மிகுதியாகப் பயன்படுத்தின. ஆகையால் பெண்ணே அஜந்தாக் கலையின் சிறப்பியல்பாகும். பெண்ணின் பல்வேறு மனநிலைகளையும், எண்ணற்ற அழகிய தோற்றங்களையும் ஓவியங்களாகத் தீட்டியுள்ளனர். ஓவியங்களில் பெண்ணின் நீள்விழிகள், நுண்ணிடை, மெல்விரல்கள் முதலியவை சிறப்புற அமையப் பெற்றிருப்பது ஓவியர்களின் சிறந்த ஆற்றலுக்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். எனவே அஜந்தா ஓவியங்கள் இந்திய ஓவியங்களின் மிகச் சிறந்த அடிநிலையாக அமைந்துள்ளன.

மிகப் பழைய ஓவியங்கள் எனக் கருதப்படுபவை பிரான்சின் குரோட்டே சோவெட்டில் உள்ள ஓவியங்கள் ஆகும். சில ஆய்வாளர்கள் இவற்றை 32,000 ஆண்டுகள் வரை பழமையானவை என்கின்றனர். சிவப்பு நிறங்களில் கொண்டு வரையப்பட்டுள்ள அல்லது செதுக்கப்பட்டுள்ள இவ்வோவியங்களில் குதிரைகள், காண்டா மிருகங்கள், சிங்கங்கள்,எருமைகள், மனிதர்கள் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை வேட்டைக் காட்சிகளாகவே உள்ளன. குகை ஓவிய எடுத்துக்காட்டுக்கள் பிரான்ஸ், இந்தியா, ஸ்பெயின், போத்துக்கல், சீனா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் உட்பட உலகம் முழுவதிலும் காணப்படுகின்றன. பழைய ஓவியங்களில் இடம் பெற்றுள்ள உருவங்களையும், காட்சிகளையும் மேற்காணும் பகுதி படம் பிடித்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு ஓவியங்களும் காரண காரியத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தொல் பழங்கால மனிதர், விலங்குகளை இலகுவாக வேட்டையாடுவதற்காக அவற்றின் ஆவிகளைப் பிடிப்பதற்காக இவ்வோவியங்களை வரைந்து இருக்கலாம் என்றும், இயற்கையை விலங்குகள் வடிவில் கண்டு அவற்றிற்கு வணக்கம் செலுத்துவதற்காக இவை வரையப்பட்டிருக்கலாம் என்றும் மனிதர்களுக்கு இயல்பாக உள்ள உணர்வுகள் வெளிப்பாட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கானவை இவை என்றும் தகவல்களைப் பரிமாறுவதற்கான ஒருமுறையே இது என்றும் விளக்கங்கள் அமைந்துள்ளன.

ஓவியக்கலை உணர்வே மொழி எழுத்துத் தோன்றுதற்கும் காரணமாதல் வேண்டும். எகிப்து, மெசபடோமியா போன்ற இடங்களில் எழுத்துக்கும், ஓவியக் கலைக்கும் நெருக்கமாகத் தொடர்புள்ளமை புலப்படுகின்றது. இப்பகுதிகளிலிருந்தே ஓவியம் ஒரு கலையாக வளர்ந்து பிற பகுதிகளுக்குப் பரவியிருக்கக் கூடுமென அறிஞர் எண்ணுகின்றனர்.

ஓவியங்களில் இடம் பெறும் உருவங்கள் காட்சிகள் பல்நோக்கத்தின் அடிப்படையில் புனையப்பட்டுள்ளது. அதில் நுட்பமும், கருத்தாழமும் செய்திப் பரிமாற்றமும் ஆழமாக புதைந்துள்ளன. கருத்தினை புலப்படுத்துவதற்காக மனிதர்கள் கையாண்ட கலையாக ஓவியத்தை எண்ண முடிகிறது. தகவல் தொடர்பிற்காகவும், பண்பாட்டுக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் ஊடகமாகவும் ஓவியங்கள் விளங்குவதை அனுமானிக்க முடிகிறது.

உலகில் பல்வேறு இடங்களில் வரலாற்றுக் கால ஓவியங்கள் தென்படுகின்றன. குறிப்பாக தமிழகத்தில் கற்கால குகைகளிலே மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறு சில குறியீடுகளையும் காணமுடிகின்றது. சங்க காலத்திலேயே தமிழர்களிடையே ஓவியக் கலை வளர்ச்சி நிலையில் இருந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. தமிழர் சம்மந்தப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே, அதாவது சுவரில் எழுதப்பட்டு ஓவியங்கள் மிகச் சில மரப்பலகைகளிலும், கிழி (துணிச்சீலை)களிலும் வரையப்பட்டுள்ளன.

ஆண்டிப்பட்டி மலை இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி அருகே அமைந்துள்ளது. பழனிக்கு மேற்கே 30 கிலோ மீட்டர் தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. இந்த மலையில் 2013-ம் ஆண்டில் சங்க காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஓவியங்கள் சுமார் 3000 ஆண்டு பழமையான சங்க காலத் தமிழர்கள் வரைந்த ஓவியங்களாக இருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு 10-க்கும் மேற்பட்ட ஓவியங்கள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழர்கள் பழங்காலத்தில் ஓவியக்கலையில் சிறப்புப் பெற்று அமைந்துள்ளமையைக் காணலாம். ஓவியக் கலை பழந்தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளமையைப் பல சான்றுகள் வழியே அறிய முடிகின்றன.

## 6.5 ஓவியம் - சொல் விளக்கம்

ஓவியம் ஓர் கவின் கலை ஆகும். பண்டைய காலம் தொடங்கி இன்று வரையிலும் மனிதர்களின் வாழ்வில் கவின் கலைகள் ஊடுருவி வருகின்றன. கவின் கலைகளில் சிறந்ததாக ஓவியம் விளங்குகின்றது. ‘ஒவ்வு’ என்னும் வினையடியாகப்

பிறந்த ‘ஒவு’ ‘ஓவம்’ ‘ஓவியம்’ என்னும் இம்மூன்று சொற்களும் சித்திரத்தையே குறிக்கின்றன.

ஓவு, ஓவம் என்பன ஓவியம் என்ற பொருளுடையன. இச்சொற்கள் சங்க இலக்கியத்தில் பெருவழக்கின. ஒப்பு, உவமை என்ற அடிப்படையில் ஒன்றன் வடிவை அவ்வாறே வரைதல் பற்றிய பொருண்மையில் இச்சொற்கள் தோன்றின எனலாம். ஓவுறழ் நெடுஞ்சுவர் என்ற இடத்து ‘ஓ’ என்ற ஓரெழுத்து மொழியே ஓவியத்தைக் குறித்தது.

ஓவியம் என்னும் சொல்லிற்கு தமிழ் மொழியகராதி பின்வரும் நிலையில் விளக்கம் பகர்கின்றது.

ஓவியம் என்பதற்கு “‘சித்திரம்’ ‘பிரதமை’ ”[38] என்று விளக்கம் தருகின்றது.

‘க்ரியாவின் தற்காலத் தமிழகராதி ஓவியம் என்னும் சொல்லிற்கு கீழ்க்காணும் நிலையில் விளக்கம் சுட்டுகின்றது.

‘ஓவியம்’ என்பது “(பெரும்பாலும் தூரிகையால் வரையப்படும்)”[39] சித்திரம் என்று பொருள் தருகின்றது.

ஓவியம் என்னும் சொல்லிற்கு ம.சா.அறிவுடை நம்பி பின்வரும் நிலையில் விளக்கம் தருகிறார்.

“மிகவும் நுட்பமான மென்மையான கலையாகத் திகழும் சொல்லுக்கு ‘மிகுந்த அழகு’ என்று பொருள் கொள்ளலாம்”[40]

“ஓவியம் என்பதற்கு சித்திரம், அழகு, பிரதிமை, ஓவியத்தொழில், ஓவியக்குடி”[41] என்று கழகத் தமிழகராதி விளக்கம் பகர்கின்றது.

“ஓவியம் என்ற சொல்லுக்கு ஒப்புடை பெற இயன்றது”[42] என்பது பொருளாகும். இவ்வாறாக ஓவியங்கள் குறித்து பல்நிலைகளில் பொருள் கொள்ளலாம்.

## 6.6 இலக்கியங்களில் ஓவியம் - சொல்லும் பொருளும்

ஓவியம் என்பது உன்னத கலையாகும். மனித மனக்கண்ணில் தோன்றும் காட்சியும், வெளியுலகில் காணும் காட்சியும் ஓவியங்களாக உருமாறத் துவங்குகின்றன. பண்டைய காலம் தொடங்கியே ஓவியக்கலை மிளிர்ந்து கொண்டே வருகின்றது. ஓவியம் மிகுந்த கருத்தாடல்கள் இலக்கியங்களில் நிரம்பவே உள்ளன. இலக்கியங்களில் உள்ள ஓவியக் குறிப்புகளை பின்வரும் களன்களில் வரைப்படுத்தி ஆராயலாம்.

1) தொல்காப்பியத்தில் ஓவியம்
2) சங்க இலக்கியங்களில் ஓவியம்
3) காப்பியங்களில் ஓவியம்
4) பக்தி இலக்கியங்களில் ஓவியம்

எனும் நிலைகளில் பிரித்து ஆராயலாம்.

### 6.6.1 தொல்காப்பியத்தில் ஓவியம்

தமிழ் இலக்கியக் களத்தில் காலத்தால் முற்பட்ட நூலாக சிறப்பிக்கப்படும் தொல்காப்பியத்தில் ஓவியம் தோற்றத்திற்குரிய கூறு குறிப்பிடப்பட்டுள்ளது. போரில் விழுப்புண் பட்டு வீரர்கள் இறந்த இடத்தில் அல்லது அவர்களை புதைத்த இடத்தில் அல்லது அவர்களது உடற் சாம்பலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும். அக்கல்லில் இறந்த வீரனது உருவம் செதுக்கப்படும். பின்னர் அதற்குப் பூசை நடத்தப் பெறும். அதற்கு ‘நடுகல்’ என்பது பெயர். அது வீரராலும் இறந்தவன் மரபினராலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஓர் உருவம் செதுக்கப்படுவதற்கு முன் அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதலே வழக்கமாகும். அந்த ஓவியத்தின் உதவி கொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பது தெளிவாக புலனாகிறது.

மனிதனின் வாழ்வினைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியம் எனலாம். தமிழ்மொழி தோன்றிய காலந்தொடங்கியே இலக்கியங்களும் தோற்றம் பெறலாயின. மனித வாழ்வியல் தொடர்புடைய கலைகளின் சிறப்பினை இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. பழந்தமிழரின் வாழ்வில் ஓவியங்கள் நிலைக் கொண்டுள்ளதை இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சங்க இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து பிற இலக்கியங்களும் ‘ஓவியம்’ குறித்த பதிவுகளை எடுத்துக்காட்டியுள்ளன.

### 6.6.2 சங்க இலக்கியங்களில் ஓவியம்

சங்க காலம் பன்னூற்றாண்டுகளின் கலைவளர் நிலைகளைத் தெரிவிப்பது. விலங்கு, பறவை ஆகியவற்றின் உருத்தீட்டிய காலத்தின் பின் மனித உருத்தீட்டிய காலம் சமைந்தது. மனிதனின் பல்வேறு வினைகள், இயக்கங்கள் ஓவியமாயின. சங்க காலத்தும் 1) இயற்கையை ஓவியம் செய்தல், 2) புராணப் பழங்கதைகளை ஓவியம் செய்தல் என்றிரு வகையில் ஓவியக் கலை இயன்றிருக்கின்றது.

பண்டையத் தமிழர்களின் வாழ்வியலையும், பண்பாட்டினையும், கலாச்சாரத்தையும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் எடுத்துக்காட்டியுள்ளன. ஓவியக்

கலையின் மேன்மையினையும், சிறப்பையும் தெளிவுபட புலப்படுத்தியுள்ளன. மனிதனின் அகவாழ்வினை பிரதிபலித்துக் காட்டும் ‘அகநானூறு’ என்னும் நூலில் ‘ஓவியம்’ எனும் சொல்லின் ஊற்றுகண்ணையும், பொருளையும் உணரமுடிகிறது. ‘ஓவம்’ எனும் சொல் ஓவியத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பின்வரும் பாடல் அடிகள் வழியே அறிய முடிகின்றது.

“ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தொற்றி”[43]

“ஓவத்தன்ன கோபச் செந்நிலம்”[44]

“ஓவத் தன்ன வினைபுனை நல்லில்”[45]

மேற்கண்ட பாடல்களில் ‘ஓவியம்’ உவமைப் பொருளாகக் கையாண்டுள்ளமைக் காணமுடிகின்றது.

சங்க இலக்கியங்கள் ஓவியங்கள் குறித்துப் பேசுகின்றன. ‘ஓவியம்’ என்ற சொல்லுக்கு ‘ஒப்புமை’ பெற இயன்றது என பொருள் கொள்ளலாம். ‘ஓவியம்’ என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமையைப் பின்வரும் பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றது.

“நெடுமண் இஞ்சி நீள்நகர் வரைப்பின்
ஓவு ஊறழ் நெடுஞ்சுவர் நாள்பவ எழுதிச்
செவ்விரல் சிவந்த அவ்வரிக்குடைச் சூல்
அணங்கு எழில் அரிவையர் பிணிக்கும்”[46]

எனும் பதிற்றுப்பத்து பாடலில் ‘ஓவு’ எனும் சொல் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. ஓவியம் என்பதன் குறியீடாக ‘ஓவு’ எனும் சொல் இடம் பெற்றுள்ளமையை அறிய முடிகின்றது.

பாண்டிய நெடுஞ்செழியனை நக்கீரர் புகழ்ந்து பாடிய நூலான நெடுநல்வாடையில் ஓவியம் எனும் சொல் வெளிப்படையாக வந்துள்ளமையைக் காணலாம். தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையினைப் படம் பிடித்துக் காட்ட புலவர் பின்வரும் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளார்.

“பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்
அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு

புனையா ஓவியம் கடுப்ப புனைவு இல்”[47]

மேற்காணும் பாடலில் ‘ஓவியம்’ சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமையையும், ஓவியம் அன்றைய காலத்திலேயே இருந்து வந்துள்ள குறிப்பினையும் தெளிவுப்பட காண முடிகின்றது.

கணவன் பிரிவால் வாடும் கோப்பெருந்தேவி புனையா ஓவியம் போல் இருந்தாள் என்பதில் ‘புனையா ஓவியம்’ எப்பொருளைச் சுட்டுகின்றது எனில் காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவர் உருவத்தை ஓவியமாக வரைந்து கொண்டு மடல் ஏறுதல் வழக்கம் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப்பெறாது மேலோட்டமாக வரையப் பெற்ற ஓவியம் ‘புனையா ஓவியம்’ எனப்பட்டது. துணிகளில் ஓவியம் வரையும் வழக்கம் நம் தமிழர்களிடையே இருந்து வந்துள்ளமையை இலக்கியங்கள் வழியே உணர முடிகின்றது.

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோவிலில் மண்டபங்கள் பல இருந்தன. அவற்றில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சியளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர்திணை, அ∴றிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பெற்றிருந்தன என்று பரிபாடல் கூறுகின்றது. இக்காட்சியினைப் பின்வரும் பாடல்கள் வழி புலப்படுத்திக் காட்டுகின்றது.

“என்று ஊழ் உறவரும் இரு சுடர் நேமி
நன்றிய சுடர் நிலை உள்படுவோரும்
இரதி காமன் இவள் இவன் எனாசு
விரகியர் வினவ, வினா இறுப்போரும்
இந்திரன் பூசை, இவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன், சின்னுறக் கல்லுறு
ஒன்றிய படி இது என்று உரை செய்வோரும்
இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்
துன்னுயிர் சுட்டவும் சுட்டறி வுறுத்தவும்
நேர்வரை விர அறை வியல் இடத்து இழைக்கச்
சோபன நிலையது துணிபரங்குன்றத்து
மாஅன் மருமகன் மாடமருங்கு”[48]

எனும் பாடலில் சித்திர மண்டபங்களில் பற்பல இயற்கை காட்சியும், புராண கதைகளும், வாழ்வியல் நிகழ்வுகளும் ஓவியமாக வரையப்பட்டள்ளன என்பதைப் பரிபாடல் தெளிவுப்பட காட்டுகின்றது.

ஓவியம் என்பதைக் குறிக்க ‘ஓவம்’ எனும் சொல்லை முற்காலப் புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். பிற்காணும் சங்கப் பாடல்களில் ‘ஓவம்’ எனும் சொல் பயின்று வந்துள்ளமையை தெளிவாகக் காணமுடிகின்றது.

“ஓவந்து அன்ன உண்டுறை மருங்கில்”[49]

“ஓவத்து அன்ன இடனுடை வரைப்பில்”[50]

“ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்”[51]

“ஓவத்து எழுது எழில் போலும்”[52]

“ஓவச் செய்தியின் ஒன்று நினைத்து ஒற்றி”[53]

மேற்காணும் பாடல் அடிகளில் ‘ஓவியம்’ என்பதை குறிக்க ‘ஓவம்’ எனும் சொல்லைக் கையாண்டுள்ளமையைத் தெளிவாக உணர முடிகின்றது. ஓவியம் வரைதல் சங்க காலத்திலேயே இருந்துள்ளமையை அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் புலப்படுத்திக் காட்டுகின்றன. ஓவியம் காலத்தால் முற்பட்ட கலை என்பது மேற்காணும் பாடல்கள் உறுதிப்பட பிரதிபலித்துக் காட்டுகின்றது. ஓவியக்கலையில் சங்க காலத் தமிழ் மக்கள் முழுமுனைப்புடன் ஈடுபட்டு வந்துள்ளமையை சான்றுகள் வழியே அறிந்துக் கொள்ள முடிகின்றது.

இயற்கை துய்ப்பும் அதனை கலையுருப்படுத்தலும் தமிழருக்கு மட்டுமன்று, உலகில் எங்கும் வாழ்ந்த மனிதர்களின் இயல்பாகும். தமிழன் அதில் வேறு வகையினனாதல் இயலாது. செடியும், கொடியும், பறவையும், விலங்கும், ஆறும், கடலும் கதிர்த் தோற்றமும் மறைவும் எனக் கட்புலன் விருந்தானவற்றை இன்றைக்கும் கலையுருவாக்கி வீட்டில் அழகுக் கலைப் பொருளாக வைத்துக்கொள்ள காண்கிறோம். இந்நிலையில் சங்க கால வாழ்வியலில் முதல் நிலையில் இயற்கையின் பல கூறுகளே ஓவியப்பட்டன எனலாம்.

“வெள்ளி யன்ன விளக்குஞ் சுதையுரீஇ

மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்

செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்

உருவப் பல்பூ ஒருகொடி வளைஇக்

கருவொடு பெயரிய காண்பின் நல்லில்”[54]

எனும் பாடலில் சாந்துக் கொண்டு சமைத்துப் பூசிய இல்லத்துச் சுவர்களில் ‘வல்லி சாதியாகிய ஒப்பில்லாத கொடியை யெழுதி’ அழகுபடுத்தியமை அறியப்பெறும். நீர்நிலைகளை அழகோவியமாக வரைந்த நிலையைச் சிறுபாணாற்றுப்படை உரைக்கின்றது.

இந்திரகோபம் அனைய தாது உதிர்ந்து ஓவியம் போல் விளங்கும் நீருண் துறையினையுடைய பொய்கையினை இப்பனுவல் படம் பிடிக்கின்றது. மலரும் தாதும் உதிர்ந்த நீர்த்துறையின் அழகைக் கண்டு ஓவியமாக்கினா் என்னும் குறிப்பு ஈண்டு பெறப்படும். வெறியோடு களத்தைச் சமைப்பவன் ஓவிய உணர்ச்சி உடையனாதல் பற்றி வில்லோன் எனப் பாடலை மதுரைக்காஞ்சி காட்டுகின்றது. பல்வேறு வண்ணக் கலவைகள் விளையாடிய ஓவியக் கிழியென வெறிக்களம் தோற்றுதல் பற்றிக் கீழக்காணும் பாடல் குறிப்பிடுகின்றது.

“நீலத் தன்ன பைம்பயிா் மிசைதொறும்

வெள்ளி யன்ன ஒள்வீ யுதிர்ந்து

கரிழமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்

மணிமருள்செந்நெல் உறழக் காமர்

நுணிநீர் மெல்லவல் தொய்யிலொடு மலர

வல்லோன் தைஇய வெறிக்களங் கடுப்ப”[55]

மேற்காணும் பாடலில் காட்டின் காட்சி ஓவியப்பட்டதென்பதற்கு இவ்வருணனையே சான்றாகும்.

அரசரின் வளமனைகளில் உறங்கும் கட்டிலின் மேலிடத்தே புணர்ச்சி விருப்பிற்குரிய ஓவியம் புனைந்து வைத்தல் மரபென்பது நெடுநல்வாடையால் புலனாகின்றது.

“புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்

திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக

விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து

முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நிலைஇய

உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா"[56]

எனும் பாடலில் வருந்தினர் தேவியென்பர். மெழுகு வழித்த பரப்பின் மேல் மேடராசி முதலாகப் பன்னிரு இராசியிலும் சென்று பொருந்தும் திங்கள் செல்வன் உரோகிணி மீனோடு அகலாமை நினைந்து தன் நிலையோட ஒப்பித்து நெடிதுயிர்க்கும் நிலையில் அவள் இருக்கின்றாள். அவ்வோவியத்தில் திங்களும், உரோகிணியும் மானிட வடிவில் எழுதப் பெற்றிருக்க வேண்டும். புராணக் கருத்து தமிழகத்தில் புகுந்து மதிப்பு பெற்றமையினையும் இவ்வோவியச் செய்தி எடுத்துரைக்கின்றது.

நெடுநல்வாடை ஓவியம் குறித்த பல செய்திகளைத் தருகின்றது. புனையா ஓவியம் என்ற தொடர் ஓவியப் படிநிலையை விளக்குவதாக இப்பனுவலில் அமைகின்றது. நச்சினாற்கினியர் "வண்ணங்களைக் கொண்டெழுதாத கோட்டின் வடிவைச் சித்தரத்தையொப்ப" என உரையெழுதுவர். இப்பகுதியில் பெண்ணொருத்தியின் மேனிவடிவினையும் நிறத்தினையும் ஓவியக் கலைப்பாங்கில் விளக்குவது எண்ணுதற்குரியது.

"அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு

புனையா ஓவியங் கடுப்பப் புனைவில்

தளிரேர் மேனித் தாய சுணங்கின்"[57]

என்ற அடிகளில் மாசேறிய துகிலும், வண்ணமெழுதா ஓவியம் போலப் புனைவும், பூச்சும் பெறாத மேனியும், மாந்தளிர்ப் பண்பாகிய மாமையெனும் நிறனமைந்த நிலையும் கூறப்பெற்றன. வண்ணந்தீட்டுதலாலேயே ஓரோவியம் புனைவு பெறும் என்னும் கருத்து அக்காலத்திலேயே திகழ்ந்தமை கருதல் வேண்டும். வண்ணங்களைக் குறித்த தொழிலறிவு பண்டைத் தமிழகத்தில் தெளிவாக இருந்திருக்கிறது. அழலுரு, செவ்வேள், காயாம்பூவண்ணன், நீனிறநெடியோன், வால்வேளை புரையு மேனி எனத் தெய்வங்களை நிறத் தொடர்புக்காட்டி அறிவுறுத்தியமை எண்ணுதற்குரியது. சனிக்கோளைக் கரியவன் எனல், காளியைக் கரிய கண்டத்தவள் எனல் நினைக்கத்தக்கன. ஊட்டுதல் என்ற சொல் நிறமூட்டுதல் என்ற பொருண்மையில் நெடுநல்வாடைக்கண் பயின்றுள்ளது.

"தருமணல் தாழப் பெய்து இல் பூவல் ஊட்டி

எருமைப் பெடையோடு எமர் ஈங்கயரும்

பெருமணம்"[58]

என வீட்டிற்குச் செம்மண் பூசுதல் கூறப்பெறும். அரக்குருக்கன்ன செந்நிலன், ஆசிலங்கை அரக்குத் தோய்ந்தன்ன, என அரக்கை உருக்கி உள்ளிடங்களிற் பொருத்துதலும், மரவிணைப்பு, புலப்படாவகையிற் பூசலும் கூறப்படுகின்றன.

"உள்ளரக் கெறிந்த உருக்குறு போர்வை"[59]

"நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்"[60]

என்ற பாடலில் சாதிலிங்கமாகிய அரக்கை உருக்கி வழித்தல் பற்றி உரைக்கப்பெறும். சுதைகொண்டு சமைந்த வெள்ளிய கோயில் மாடங்களில் பல்வேறு பட்ட வினையால் அமைந்த ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்று பட்டினப்பாலை கூறும்.

'வேறுபட்ட வினையோவம்' என்னும் உருத்திரங்கண்ணனார் மொழி நினைத்தற்குரியது. எழுதல், அளவிடல், வண்ணந்தீட்டல், பரிமாணங்காட்டல் எனப் பல்வினையமையவும், கோட்டோவியம், வண்ண ஓவியம், சிற்ப ஓவியம், சுவரோவியம் எனப் பல வகையமையவும் சமைந்த தன்மையை இத்தொடர் உணர்த்துகின்றது.

"மதிசேர்ந்த மகவெண்மீன்

உருகெழுதிற லுயர்கோட்டத்து

முருகமர்பூ முரண்கிடக்கை

வரியணிசுடர் வான்பொய்கை

இருகாமத் திணையேரி"[61]

எனும் பாடலடியில் கூறப்பெறும் ஏரிக்காட்சி ஓவியப்பட்டிருக்க வேண்டும். வானக் காட்சியும் வையக் காட்சியுமென இயற்கை விரித்த கோலங்களைச் சுவரோவியமாகத் தீட்டினர் பண்டைக் காலத்தமிழ் ஓவியர் என்பது இவ்வருணனையாற் பெறப்படும்.

ஓவியம் அழகுக் கலை என்பதற்கேற்ப இல்லங்களிலும் மாடங்களிலும் அரண்மனைகளிலும், கோயில்களிலும் பூவும் கொடியும், பறவையும், விலங்கும், பாவையும், தெய்வமும் எழுதி அவ்விடங்களை அழகுறுத்தினர். சிறுவர் விளையாட்டுப் பொருள்களிலும் ஓவியம் இடம் பிடித்துக் கொண்டது.

"பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்

சிறுதோட் கோத்து செவ்வரிப் பறையின்

கண்ணகத் தெழுதிய குரீஇப் போலக்

கோல்கொண் டலைப்பப் படீஇயர் மாதோ”[62]

எனத் தலைவனைக் கொண்டு செல்லும் குதிரைகள் சிறுவர் தோட்கண் பிணித்த பறையின் கண் எழுதிய குருவி போல அடிபடும் என்று தோழி கூறுவதாக முதுகூற்றனார் மொழிவர்.

சுவரோவியம் பற்றிய குறிப்பினை நற்றிணையில் அம்மெய்யன் நாகனார் எடுத்துரைப்பார். தோழி தன் தலைமகளின் பழிதீர் காட்சிக் கொத்த பேரழகைச் சுவரோவியம் அனையது என்கிறாள்.

“வினையிடை விலங்கல் போலும் புனைசுவர்ப்

பாவை யன்ன பழிதீர் காட்சி”[63]

என உவமங் கூறுவர். சுவரோவியமாகப் பெண்ணின் உருவம் தீட்டப் பெற்றிருந்தமையை மேற்காணும் பாடல் அடி வழி அறியலாம்.

‘ஓவுக் கண்டன்ன இல்’ என்பது வெறிபாடிய காமக்கண்ணியார் இல்லத்தழகு உணர்த்த எடுத்த மொழியாகும்.

ஒரு நிறத்தோடு ஒப்பமைதல், நிறமூட்டல், நிறமிழத்தல் ஆகிய பண்டைப் புலவர்களால் அழகுறக் கூறப் பெற்றுள்ளன. குருதிப்பூ என்று கூறிய திப்புத் தோளார் செந்நிறமாக வையக்காட்சிகளை கண்டவர்.

“மடைமாண் செப்பில் தமிய வைகிய

பொய்யாப் பூவின் மெய்சா யினளே”[64]

என்று குறுந்தொகையில் கயமனார் கூறுவது வாடித் தகையழிந்தமை குறிக்க மட்டுமன்ற யாயாகியளே மாஅயாளே என்றமையின் மாமை விளர்த்த தன்மை கூட்டவும் ஆகும் என்பது விளங்கும். பசலை, சுணங்கு என மேனியுறுகின்ற நிறவேறுபாடுகளையும் உணர்ந்து அவற்றை ஓவிய நலனுறச் சித்தரிக்கும் பாங்கு பல பனுவல்களில் புலனாகிறது.

“ஊருண் கேணி உண்டுறைத் தொக்க

பாசி யற்றே பசலை”[65]

என வினை, உரு ஆகிய இரண்டும் அமைய உவமை தொடுப்பர். இவ்வாறு திறமையாகப் புனைந்த பல செய்திகள் ஓவிய உணர்வு காட்டுவனவாய்

அமைந்துள்ளன. கொல்லி மலையில் எழுதிய பாவை பற்றிய செய்தியைப் பரணர் குறுந்தொகையிற் கூறுகின்றார். இ∴து ஓவியமென்றும் சிற்பமென்றும் கூறுவர்.

அகநானூற்றில் வெறிபாடிய காமக்கண்ணியார், ஓவிய நிலைப்பாட்டினை பின்வரும் பாடலில் எடுத்துரைக்கின்றார்.

"ஓவத் தன்ன வினைபுனை நல்லில்

பாவை யன்ன பலராய் மாண்கவின்"[66]

எனக் கபிலர் பயன்படுத்தியவாறே ஈருவமைகளையும் பயன்படுத்துவர். இது தாயொருத்தியின் கூற்று. எனவே இவை அக்கால மக்களின் பேச்சு மொழித் தொடர் என்பது தெளிவுறுகின்றது. அ∴தென்ன பெரிய ஓவியமோ என்று கேட்கும் வழக்கு இக்காலத்துமுண்டு. விளக்கமும், மாட்சிமையும், கண்கவர் எழிலும் பெற்றமை குறித்து வளமனைகளை ஓவியம் போல விளங்கின என்று கூறினர் .

'கைபுனைந் தியாற்றாக் கவின் பெரு வனப்பு' என்பது இயற்கையழகு – மலையும், காடும், ஆறும், கடலுமென இயற்கை கோட்டொழுங்கின்றிப் பரந்து நிற்கும் தன்மை. அழகுடையதெனினும் அவற்றை ஓவியக் காட்சிப்படுத்துவோன் செயற்கை விதிகட்கு உட்படுத்தே வரைவான். அச்செயற்கை இயற்கையின் அழகைச் சிதையாது புலப்படுத்தும். இ∴தே ஓவியக் கலையின் பேராற்றல் பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்க்கிழார்.

"ஓவத் தன்ன உருகெழு நெடுநகர்"[67]

என ஓவியம் போன்றதாக அரண்மனை விளங்கிய தன்மையைக் குறிப்பர். இதனால் நகரமைப்பிற்கும், கட்டடக் கலைக்கும் ஓவியத்தோடிருந்த தொடர்பறியப் பெறும். ஓவிய அழகு தோன்றுமாறு இலை சமைக்கப்பட்டன என்பதை,

"நெடுமண் இஞ்சி நீணகர் வரைப்பின்

ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல எழுதி"[68]

என்று கபிலரும் சுவரோவியம் பற்றி குறிப்பிட்டுள்ளதை அறியலாம்.

பரிபாடலின் கண் நல்லச்சுதனார் ஓவியத்தின் ஆற்றலை எடுத்துரைக்கக் காணலாம். செவ்வேளின் திருப்பரங்குன்றத்தில் நிகழும் நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஓவியம் போல நெஞ்சிற் பதியும் தன்மையது என்பர்.

"பல்லூழ் இவையிவை நினைப்பின் வல்லோன்

ஓவத் தெழுதெழில் போலும் மாதடிந்து

அட்டோய்நின் குன்றின் மிசை"[69]

என்ற செய்யுள் பகுதிக்கண் ஓவியன் வல்லோன் எனப்பெற்றனன். வல்லோன் எழுதிய ஓவியக் காட்சி மனத்தகத்து என்றும் நிற்பது என்பதைப் புலவர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

ஓவிய வண்ணச் சேர்க்கைகள் இயற்கை மூலங்களிலிருந்தே பெறப்பட்டன. வண்ணம் ஒளி மிகத் தீட்டப் பெறுவதனை 'வண்ணம் தெளிர' எனப் பரிபாடல் கூறுகின்றது. மகளிர் செய்து கொள்ளும் ஒப்பனையில் ஓவியத் தன்மை மிகவுண்டென்பது பரிபாடல் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

"ஆயிடை, மாயிதழ் கொண்டோர் மடமாதர் நோக்கினாள்

வேயெழில் வென்ற வெறுத்ததோள் நோக்கிச்

சாயிழை பிண்டித் தளிர்காதிற் தையினாள்

குவளை குழைக்காதின் கோலச் செவியின்

இவள் செரீ நான்கு விழிப்படைத் தாளென்று

நெற்றி விழியா நிறைத்திலக மிட்டாளே

கொற்றவை கோலங் கொண்ட தோர்பெண்"[70]

என்று வேறு வேறு குறிப்புப் புலப்பட ஒப்பனையால் தம்மை அணி செய்து கொள்ளும் மகளிர் செயல் கூறப்பெறும்.

மகளிர் மார்பில் தொய்யில் எழுதுதலைக் கலித்தொகை குறிக்கின்றது. அகப்பாடல் பலவற்றில் இத்தொய்யில் எழுதும் பழக்கம் குறிப்பிடப்படுகின்றது. வண்ணப்பூச்சுகளால் உடலையும், முகத்தையும் பல்வேறு உருவகைத் தோன்ற சமைத்துக் கொண்டு ஆடிய கதகளி போன்ற ஆடல்களுக்கு இவ்வோவியப் புனைவு முன்னோடியாகலாம். இதனை பின்வரும் பாடல் வழியே காண முடிகின்றது.

"என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்

மைத்துடை மார்பில் சுணங்கும் நினைத்துக்காண்

தொய்யில் துறந்தா ரவரெனத் தம்வயின்

ஒய்யர் நுவலும் பழிநிற்ப,

கரும்பெழுது தொய்யிற்குச் செல்வ லீங்காக

தொய்யில் சிதைத்தானைத் தேர்கு”[71]

என்ற கலித்தொகை பகுதிகள் பல அரிய நுண்மைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. மேலும், தொய்யில் ஒரு நீர்க்கொடி யென்பதும் அதனையொப்பத் தோளிலும், மார்பிலும் எழுதிக் கொள்ளும் கோட்டோவிய ஒப்பனைக்குப் பெயராயிற்று என்பதும் அறியப்பெறும். பல்வகை மேனிக்கோல ஒப்பனையெல்லாம் பிற்காலத்தில் தொய்யில் என்றமை, தொய்யில் எழுதுவது ஓவியமாகக் கருதப்படுகிறது. இந்நிலைப்பாட்டினை கீழ்க்காணும் பாடல் நன்கு புலப்படுத்துகின்றது.

“கொழுது தேனிமிர் தொடையலங் கோனவனழகு

முழுதுங் காணிய தம்மெதிர் முன்னவெங் களிற்றுக்

கெழுது தொய்யிலைக் கரும்பிதோவென்று காட்டுவர் போற்

பழுதிலா மாணிக்கச் சுகநிற்பர்கள் பல்லார்”[72]

எனும் பாடல் அடிகளில் தொய்யிற் குழம்பு சந்தனம், தேவதாரம், அகில், குங்குமம் முதலியவற்றாற் செய்யப்படுவதாகும். கலித்தொகைக் கண் ஓவிய நுட்பம் ஒன்று உரைக்கப்பெறும். இதனைக் கீழ்க்கண்ட பாடல் அடிகளில் அறிய முடிகிறது.

“தாயுயிர் செய்த பாவை போல

நலனுடையார் மொழிக்கட் டாவார்”[73]

என்ற அடிகளுக்குச் “சித்திரமெழுகின்றவன் உயிர்ப்புக் கொடுத்த பாவைதான் அழியுமளவும் அக்குறிப்பு நிற்குமாறு போலத் தாங்கூறிய மொழியிடத்து உயிராகிய உண்மை கெடார் என்று உரை கூறுவர்.

ஓவியத்தின் மாறா ஒரு நிலையையும் பல்காலத்திற்கும் நின்று அவ்வோவியம் அக்காட்சியினைக் காண்பார் மனத்தில் நிறுத்தலும் இக்கூற்றான் உணரப்பெறும். இம்மாறா நிலையையே பிற்காலத்தில் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையெனக் குறித்தனர்.

அகநானூற்றில் பாலை பாடிய பெருங்கடுங்கோ ஓவியம் உணர்த்தும் செய்தி குறித்துக் கூறுவர். முகத்துறு மெய்ப்பாடு அகத்துறு நினைவைக் காட்டும்

ஆற்றலுடையது. ஓவியம் போல முகம் தெளிவுற அவ்வுணர்ச்சியை எடுத்துக்காட்டவல்லது.

"முன்னங் காட்டி முகத்தி னுரையா

ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தொற்றி"[74]

என்ற பாடல் அடிகளில் ஓவியம் தீட்டப்பெற்றிருப்பாரின் உளக்குறிப்பைத் தெளிவுபட அறிய முடிகின்றது. ஓவியம் அழகுணர்ச்சி மட்டும் கருதியதன்று. உளக்குறிப்பை உணர்த்துவதாக அமையும் என்பதை இச்செய்தி தெளிவுறக் காட்டுகின்றது. கார்காலத்தில் பரந்த நிலத்தின் கண் இந்திர கோபப் பூச்சிகள் வரித்துச் செல்லும் அழகினைப் பார்த்த புலவர், அக்காட்சியை ஓவியம் வரைந்து வண்ணந் தீட்டினாற் போன்ற இந்திர கோபம் பரந்த செந்நிலம் எனக் கூறக் காணலாம். இவ்வாறாக சங்க பாக்களில் ஓவியங்கள் குறித்த பதிவுகள், சொல்லாட்சிகள், நிகழ்வுகள் ஆகியவை நிரம்பவே இடம் பெற்றுள்ளமையைக் காண முடிகின்றது.

### 6.6.3 காப்பியங்களில் ஓவியம்

ஓவியங்கள் பற்றிய கூறுகளும், ஓவியக்கலை நம் தமிழர்களிடையே நிலவி வந்துள்ளமையையும் காப்பியங்கள் பதிவு செய்துள்ளன. ஐம்பெருங்காப்பியங்களில் முதல் காப்பியமாகவும், முதன்மைக் காப்பியமாகவும் விளங்கும் சிலப்பதிகாரத்தில் ஓவியங்களின் படிநிலைக் கூறுகளை இளங்கோவடிகள் தெளிவுபட படம் பிடித்துக் காட்டியுள்ளார். சங்க கால நடன மகளிர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர் அவற்றுள் ஓவியக் கலையும் ஒன்றாகும். இதனை

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த

ஓவியச் செந்நூல் உரை நூற் கிடக்கையும்

கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"[75]

மேற்காணும் பாடல் அடிகளை உற்று நோக்குங்கால் ஓவியக் கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்தில் இருந்தது என்பது தெளிவாகிறது. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் கண்கவர் ஓவியங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. அக்கூரை ஓவியவிதானம் எனப் பெயர் பெற்றது. உலோகங்களின் கேடயங்களில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன என்பதை சிலப்பதிகாரம் புலப்படுத்துகின்றது.

மகளிர் ஒப்பனை செய்கின்றபொழுது தம் மார்பு, தோள் ஆகிய இடங்களில் ‘தொய்யில்’ எழுதியும் சிறப்பாகத் தோளில் ‘வல்லி’யும் ‘கரும்பு’ம் எழுதியும் மகிழ்கின்ற காட்சியை இளங்கோவடிகள்,

“கரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்

கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி மனை”[76]

என்கிறார். உடலை ஒப்பனை செய்வதற்கு ஓவியங்களை அக்கால மகளிர் பயன்படுத்தியமை காணமுடிகின்றது.

மாதவி முன்கையில் அணிந்திருக்கின்ற வளையல்களின் முகப்பில் மாணிக்கம், வைரம் இவற்றுடன் சிறந்த சித்திர வேலைப்பாடும் கொண்டிருந்ததைச் ‘சித்திரச் சூடகம்’ என்கிறார். இதனைப் பின்வரும் பாடல் அடி உணர்த்துகின்றது.

“மத்தக மணியொடு வயிரம் கட்டிய

சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை

பரியகம் வால்வளை பவழப் பல்வளை

அரிமயிர் முன்கைக்கு அமைவுற மோதிரம்”[77]

எனும் பாடல் அடிகளில் ஓவியக்கலையை ‘சித்திரச் சூடகம்’ எனும் பெயரில் கையாளுகின்றார்.

கண்ணகி காலில் அணிந்திருக்கின்ற சிலம்பு சித்திர வேலைப்பாடு மிக்கதாயிருக்கிறது என்பதை சிலப்பதிகாரம் உணர்த்திக் காட்டுகின்றது.

“சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம்

பொய்த்தொழில் கொல்லன் புரிந்துடன் நோக்கி”[78]

என்ற பாடல் அடிகள் ஓவியங்கள் அன்றைய கால ஆபரணங்களில் இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. சிலப்பதிகாரம் ஓவிய நுட்பங்களையும், ஓவியங்களைப் பயன்படுத்தியுள்ள விதத்தினையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

சிலப்பதிகாரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள காப்பியம் மணிமேகலை ஆகும். மணிமேகலையில் ஓவியங்கள் குறித்த பதிவுகள் இடம் பெற்றுள்ளன. செல்வம் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும் மாடங்கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத் தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. இதனை கீழ்க்காணும் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்

சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறு

மையது படிவத்து வானவர் முதலா

எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி

வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய

கண்கவர் ஓவியம் கண்டுநிற் குறளும்"[79]

எனும் பாடலில், ஓவியங்களை அமைத்து ஆடை நெய்தல் சங்க காலத் தமிழகத்தில் வழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று அங்ஙனம் அமைத்தவர் மிகச் சிறந்த ஓவியத் திறனாளராக இருத்தல் வேண்டும். காவரிப்பூம்பட்டினத்தில் இருந்த உவவனம், சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப் பெற்ற ஆடை போலக் காட்சியத்தது என்பது மணிமேகலை ஓவியம் குறித்த செய்திகளை எடுத்தியம்புகின்றது.

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்

சித்திரச் செய்கைப்படாம் போர்த் ததுவே

ஒப்பத் தோன்றிய உவவனம்."[80]

இவ்வாறு சுவர்களிலும் மண்டபக் கூரைகளிலும், ஆடைகளிலும், கேடயங்கள் மீதும் கண்கவர் ஓவியங்கள் தீட்டும் வல்லவர்கள் இருந்து வந்துள்ளமையைச் சுட்டுகின்றார்.

மேலும் காவிரிப் பூம்பட்டினத்துச் சக்கரவாளக் கோட்டம் என்ற இடுகாட்டுத் தோட்டத்திற்கு நான்கு வாயில்கள் இருக்கின்றன. அதில் ஒரு வாயில் தேவர்கள் வரக் கூடியதாகக் கொடிகள் நிறைந்த விமானம் போன்ற அமைப்பில் இருக்கிறது. ஓவியத்தில் எழுதப்பட்ட ஊராத நல்ல தேரை அது ஒத்திருந்தது. மற்றொரு வாயிலில் நெல், கரும்பு, சோலைகள் எல்லாம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. மூன்றாவது பக்கம் வெளியாக உள்ளது. நான்காவது பக்கத்தில் பூதம் இருக்கிறது. சுடுகாட்டு வாயிலில் கூட ஓவியம் இருக்கிறது. இதனை பின்வரும் பாடல்கள் சான்று பகர்கின்றது.

"ஊரா – நல்தேர் ஓவியப்படுத்து

தேவர் புகுதரூஉம் செழுங்கொடி வாயிலும்

நெல்லும், கரும்பும், நீரும் சோலையும்

நல்வழி எழுதிய நலம்கிளர் வாயிலும்

வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்து”[81]

என்ற பாடல்கள் ஓவியங்கள் இருந்தமைக்கான தடங்களைச் சுட்டுகின்றது.

தமிழ் காப்பிய உலகில் சீவகசிந்தாமணி சுவையுள்ள காப்பியமாகத் திகழ்கின்றது. இயற்கை நிகழ்வுகளையும், பிற நிகழ்வுகளையும், இலக்கிய நயம்பட சுவையாக எடுத்துக்காட்டும் உன்னத காப்பியமாக சீவக சிந்தாமணி விளங்குகின்றது. இக்காப்பியத்தில் ஓவியம் குறித்த பதிவுகள் திறம்பட இடம் பெற்றுள்ளன. ஓவியம் தீட்டுகின்ற கலைஞன் ஓவியத்தை எவ்வாறு தீட்டுகின்றான் என்பதை பின்பாடல் சுட்டுகின்றது.

“கண்கூடா கடைபுடைத்துக்

கைவல்லான் எழுதியது போல்

பண்பார்ந்த கொரும் புருவம்”[82]

எனும் பாடல் அடியில் ஓவியத்தைத் தீட்டுகின்ற கலைஞன் வண்ணங்களை உரிய அளவு மட்டும் பூசுவான் தீட்டுகின்ற துகிலிகையை வண்ணத்தில் நனைத்து அதை உதறிவிட்டுப் பிறகு தீட்டுவான். மேலும் அப்பெண்ணினது புருவம் கைவல்லான் துகிலிகையை உதறி தமக்குரிய குணம் நிறைந்ததாக எழுதியது போல் திகழ்ந்தது என்று கூறுகிறார்.

சச்சந்தன் தன் காதலியின் உருவைப் படமாக வரைந்தான் மேலும் மனத்தாலேயே சித்திரம் வரையத் தொடங்கினான். இதனை,

“இவ்வுருவு நெஞ்சென்னுங் கிழியின் மேலிருந்திலக்கித்து

அவ்வுருவு நினைப்பென்னுந் துகவிகை யாவ் வருத்தித்துக்

சவ்விய தன் நோக்கினால் கண் விடுத்து”[83]

இப்பாடலில் ஓவியம் எவ்வாறு தீட்டப்பட்டது எனும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

சீவகன் குணமாலையின் உருவை வரைந்து அவ்வோவியத்தைத் திருத்த முற்பட்டதை கீழ்க்காணும் பாடல் புலப்படுத்துகின்றது.

"நெகிழ்ந்து சோர் பூந்துகில் நோக்கி நோக்கியே
மகிழ்ந்து வீழ்மணிக்குழன் மாலைகால்தொடும்
முகிழ்ந்து வீங்குஇளமுலை முத்தம் தைவளும்
புகழ்ந்து தன்தோள்களில் புல்லும் மெல்லவே"[84]

எனும் பாடல் குணமாலையின் உருவத்தை சீவகன் ஓவியமாகத் தீட்டப்பட்ட நிலையினை தெளிவுப்படக் காட்டுகின்றார். சீவகசிந்தாமணி கி.பி.9-ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பர். இந்நூலில் கூறப்பட்டுள்ள ஓவியக் கலை குறிப்புகளில் இருந்து 9-ம் நூற்றாண்டில் ஓவியக் கலை மிகவும் உன்னத நிலையில் இருந்தது என்பது உறுதிப்படுகிறது.

### 6.6.3.1 சூளாமணியில் ஓவியம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகச் சுட்டப்பெறும் சூளாமணியில் ஓவியங்கள் குறித்தப் பதிவுகள் இடம் பெற்றுள்ளன. சுயம்பரபை சுயம் வரத்துக்குச் செல்கிறார். நல்ல மலர் மாலையை, வினைகள் சிறந்த மாலையை எடுத்துச் செல்கிறாள். அம்மாலை நல்வகை தேர்ந்த ஓவியர்கள், தெய்வ உருவங்கள், விலங்குகள், பறவைகள், முத்துக்கோவை முதலியவற்றை வரைந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்ததாம் இதனைக் கீழ்க்காணும் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"பாவையும் விலங்கு சாதிப்
படிமமும் பறப்பை தாமும்
கோவையும் முகத்து மாக்கி
குலவிய விதழதாக
ஓவியர் புனைந்த போலும்
ஒளிமலர்ப் பிணைப்பில் மாலை
தேவியர் மருளச் செய்து
சிகழிகை சேர்த்து வாரும்"[85]

என்ற பாடல் தெளிவுப்படக் காட்டுகின்றனது. சூளாமணி காப்பியம் ஓவியம் குறித்த பதிவினை மேற்காணும் பாடல் வழியே சுட்டுகின்றது.

### 6.6.3.2 பெருங்கதையில் ஓவியம்

உதயனணின் வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டு இயங்கும் பெருங்கதை காப்பியத்தில் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. பெருங்கதையின் காப்பியத் தலைவன் உதயணன். சிறந்த ஓவியக் கலைஞனான இவன் ‘நுண்ணுணர் மன்னன்’ என்று அழைக்கப்படுகிறான். உதயணனின் ஓவியப் புலமையை பின்வரும் பாடல் நன்கு உணர்த்துகின்றது.

“உதயண நம்பி ஓவியத் தொழிலின்

வகையறி உபயொகமும் வல்லயாக”[86]

என்ற பாடல் உதயணின் ஓவியப் புலமையை உணர்த்திச் செல்கிறது.

பெருங்கதையின் காப்பியக் காலத்தில் ஓவிய நூல்களும், ஓவிய வல்லுநர்களும் சிறந்து விளங்கியுள்ளனர். வாசவதத்தை உதயணன் மீது காதல் கொண்டாள். அப்போது யாழ் வாசிக்கிறாள். இக்காட்சி ஓவிய நூலோர் வகுத்த முறைப்படி அவள் அமர்ந்திருப்பதை,

“ஒண்வினை ஓவியர் கண்ணிய விருத்தியுள்

தலையதன் உம்பர்த் தான் குறிக்கொண்ட

பாவை நோக்கத் தாரணங்கு எய்தி

முற்றான் கண்ட முகம் செய் காரிகை”[87]

என்ற பாடல் ஓவியர்கள் இருந்தமைக்குான சான்றிதழைப் பகர்கின்றது.

வாசவதத்தை ஓவியக் கலையில் சிறந்தவளாகத் திகழ்ந்தாள். நீர் விளையாட்டுக்குப் புறம்படும் முன்னர் வாசவதத்தை சோனாதிபதி மகளின் இளமுலை மீது பூங்கொடி எழுதினாள். அதில் அகில் கட்டையைக் கருக்கி அந்தக் கரியைக் கோடு வரையப் பயன்படுத்தினாள். துகிலிகையால் அக்கரியைக் கரைத்துச் சித்திரத்தொழில் செய்தாள். அவள் செய்த ஓவியச் செயலைப் பின்வரும் பாடல் சிறப்பாக படம் பிடித்துக் காட்டுகின்றது.

“சுட்டுருக்கி அகிலின் வட்டித்துக் கலந்த

வண்ண இலேகை நுண்ணிதின் வாங்கி

இடைமுலை எழுச்சித்தாகிப்படைமுலை

முத்திடைப் பரந்த சித்திரச் செய்கொடி

முதலின் முன்னங்காட்டி நுதலின்

சுட்டியில் தோன்றிய சுருளிற்றாகி

வித்தகத்து இயன்ற தன் கைத்தொழில் காட்டி

இன்னிசை வீணை அன்றியும் நின்வயின்

உதயண நம்பி ஓவியத் தொழிலின்

வகை அறி உபாயமும் வில்லை"[88]

என்று ஓவியத் தொழிலில் ஈடுபட்டுள்ள வாசவத்தத்தையின் செயல்பாடுகள் வழியெ ஓவியக் கலையின் சிறப்பினை அறிய முடிகின்றது.

வாசவத்தத்தையின் தேர் மிகவும் நுண்ணிய கலையழகு மிகுந்ததாக அமைந்துள்ளது. பலநாட்டுக் கைவினைஞர்கள் தேரினை வடிவமைத்து அழகுபடுத்தியுள்ளனர். கோசல நாட்டு ஓவியத் தொழிலரும், வத்ஸ நாட்டு வண்ணக் கம்மரும், ஓவியத்தாலும், வண்ணத்தாலும், பாங்குடன் அமைத்தனர். இதனை பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது.

"யவனத்தச்சரும் அவந்திக் கொல்வரும்

மகத்துவப் பிறந்த மணிவினைக் காரரும்

பாடலில் பிறந்த பசும்பொன் வினைகளும்

கோசலத்தியன்ற ஓவியத் தொழிலரும்

வத்த நாட்டு வண்ணக் கம்மரும்

தத்தம் கோன் மேற்றங்கை தொழில் தோன்ற"[89]

ஓவியத்தொழிலில் அக்கால நாட்டு கலைஞர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். உதயணன் நகர்வலம் வந்தபொழுது பெண்கள் ஓவியத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அப்பொழுது உதயணனைக் காண அப்பெண்கள் தாம் செய்து கொண்டிருந்த ஓவியத் தொழிலை அப்படியே விட்டுவிட்டு வந்துள்ளனர். இதனை,

"ஒன்பது விருத்தி நன்பத துனித்த

நவவினையாளர் பாவனை நிறீஇ

வட்டிகை வாக்கின் வண்ணக் கைவினைக்

கட்டளைப் பாவை கடுப்பத் தோன்றி

குறைவினை கோலங்கூடினர்”[90]

என்ற பாடல் சுட்டுகின்றது. மேலும் நகர மாந்தர் விழாத் தொடங்கினர். அவ்விழாவில் ஓவியங்கள் வரையப்பட்ட கொடிகள் தொங்கவிடப்பட்டுருந்ததைப் பின்வரும் பாடல் சுட்டுகிறது.

“கைவல் ஓவியர் மெய்பெற எழுதிய

உருவப் பூங்கொடி ஓசிய எடுத்து”[91]

என்ற பாடல் மூலம் ஓவியங்கள் நிறைந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

“ஓவிய எழினித்தூணோடு சேர்த்துக்

கொற்றவன் தன்னோடு கூத்தப் பள்ளியுள்”[92]

வாசவத்தத்தை சேர்ந்த நடனப் பள்ளியில் சுவரில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும் ஓவியங்கள் தீட்டப்பட்ட திரையைத் தாங்குகின்ற தூண்கள் நிறைந்துள்ளன. இதன் மூலம் காப்பியங்களில் ஓவியம் பற்றிய குறிப்புகளை அறிந்துக் கொள்ள முடிகிறது.

### 6.6.4 பக்தி இலக்கியங்களில் ஓவியம்

பக்தி இலக்கியங்களில் ஓவியம் பற்றிய செய்திகள் நிரம்பக் கிடைக்கின்றன. தமிழர்களின் கலை உணர்வாகிய ஓவியத்தைப் பற்றிய பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய கலைப் பொக்கிஷமாக பக்தி இலக்கியங்கள் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது.

#### 6.6.4.1 கம்ப இராமாயணத்தில் ஓவியம்

இராமனின் வாழ்வியல் சிறப்பினை எடுத்துக்காட்டும் உயரிய காப்பியமாகத் திகழும் கம்பராமாயணத்தில் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. ஓவியக்கூறுகளை கம்பன் தனது காப்பியத்தில் மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். மிதிலை மாநகரில் முதன்முதலில் சீதை ராமனைக் காண்கிறாள். இராமனைப் பார்க்கும்பொழுது கண்களை இமைக்காமல் அவனது அழகினைக் கண்களால் பருகி நிற்கிறாள். இக்காட்சி ஓவியத்திலே எழுதிய ஓர் எழில்மிகும் பாவை என எண்ணத் திகழ்கிறதாம். இதனை பின்வரும் பாடல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"அந்தம் இல்நோக்கு இமை அணைகிலாமையால்

பைந்தொடி ஓவியப்பாவை போன்றனள்"[93]

என்று எழிலை, ஓவியத்தே உள்ள பாவைக்கு ஒப்பாகக் கூறிய கம்பன் ராமனது உருவத்தை அதற்கு நேர் மாற்றமாகவும் படைத்துக் காட்டுகின்றார். மேற்காணும் பாடலில் ஓவியம் குறித்த பதிவுகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

வாலி இராமனை நோக்கி 'ஓவியத்து எழுத இயலாத உருக் கொண்டவனே என இராமனின் அழகை வருணிக்கிற வரிகளில் ஓவியம் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. இதனை கீழ்க்காணும் பாடல் சுட்டுகின்றது.

"கோ இயல் தருமம் உங்கள் ஊலத்துஉதித்தோர்கட்கு எல்லாம்

ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! உடைமை அன்றே!

ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த

தேவியை பிரிந்த பின்னை திகைத்தனை போலும் செய்கை"[94]

என்ற பாடலில் 'ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தாய்' எனும் தொடர் இடம் பெற்றமையைக் காணமுடிகின்றது.

இராமன் வில்லை எடுத்தவுடன் வானகத்தார் எல்லாம் ஓவியமாக உறைந்து நின்றனர் என்பதை கம்பர் பின்வருமாறு காட்டுகின்றார்.

"விண்ணோர் உயிருடை உடம்பும் எல்லாம்

ஓவியம் ஒப்ப நின்றார்."[95]

என்ற பாடலில் 'ஓவியம்' எனும் சொல்லாட்சி இடம்பெறுவதை காணமுடிகின்றது.

அசோகவனத்தில் இராமனை பிரிந்த சீதை துன்பத்தோடு அமர்ந்திருக்கிறாள். சீதையின் நிலையினை அனுமன் இராமனிடம் கூறுகிறான். தெய்வத்தன்மை மிக்க ஓவியம் எவ்வாறு இருக்கின்றதோ அதேபோல் சீதை இருந்தாள் என்று கூறுகிறான் இதனை,

"ஆவி அம் துகில் புனைவது ஒன்று அன்றி வேறு அறியாள்

துவி அன்னம் மென் புனலிமைத் தோய்கிலா மெய்யாள்

தேவுதென் கடல் அமிழ்து கொண்டு அணங்கேவேள் செய்த

ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்"[96]

என்ற பாடலில் தேவர்கள் பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய காமன் அழகுற வடித்த ஓவியம் புகையுண்டு மங்கியிருந்தால் எப்படி இருக்குமோ அப்படி சீதை இருந்தாள் என்று கூறுகிறான்.

சுதை பூசப்பட்ட சுவரில் எழில்மிகு ஓவியங்கள் திகழ்ந்தன. அவற்றின் மீது யானைகள், குதிரைகள் செல்வதால் தூசி படிந்துள்ளன இவற்றை ஓவியர்கள் நீக்குகின்றனர். இதனால் சுவரில் உள்ள ஓவியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இக்காட்சியை கம்பர் பின்வரும் பாடல் வழியே தெளிவுப்பட காட்டுகின்றார்.

"மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறுமெய்யை

சுதைக்கண் நுரையைப் பொருவு தூசு கொடுதூய்தா

உதிர்த்தனர் இளங்குமரர் ஓவியரின் ஓவம்

புதுக்கினர் என தருண மங்கையர் பொலிந்தார்"[97]

என்ற பாடல் வழி ஓவியங்கள் அக்காலத்தில் சிறந்து விளங்கியமையே காணமுடிகின்றது. கம்பராமாயணத்தில் ஓவியம் குறித்த செய்திகள் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. ஓவியக் கலை கம்பன் காலத்தில் மிளிர்ந்து வந்துள்ளமையை கம்பராமாயணப் பாடல்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

### 6.6.4.2 நாச்சியார் திருமொழியில் ஓவியம்

வைணவ சமய இலக்கியமாக விளங்கும் நாச்சியார் திருமொழியில் ஓவியம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இன் சொல் மாலை என்றும் சங்கத் தமிழ் மாலை என்றும், உலகம் உய்யப்பாடிய கோதையின் திருமொழியில் ஓவியம் குறித்த குறிப்பு தென்படுகின்றது. இதனைப் பின்வரும் பாடல் வழியே அறியலாம்.

"தைஒரு திங்களும் தரைவிளக்கி

வேயங்கடவற்கென்னை விதிக்கிள்ளியே

சுவரில் புராண நின் பேரெழுதி

----------------------------------

தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றேயே"[98]

மேற்காணும் பாடலில் தை மாதம் முழுவதும் பெண்கள் தரையை விளக்குவார்கள். மாசி மாத்திற்கு முன்பே புதுமணல் கொண்டு தெருவை ஒப்பனைச் செய்வார்கள். சுவரில் காமன் உருவம் எழுதி பெயர் எழுதி எனக்குரிய கணவனை கொடு என்று வேண்டி வழிபடுவார்கள். இந்த மாசி நோன்பில் சுவரில் ஓவியம் எழுதி வணங்கும் வழக்கம் உள்ளமையைக் கண் கூடக் காணமுடிகின்றது. இவ்வாறு ஓவியம் வரையும் வழக்கம் தமிழர்களிடையே தொடர்ந்து வந்துள்ளமையை இலக்கியச் சான்றுகள் வழியே அறிய முடிகின்றது.

## 6.7 ஓவியம் குறித்த கல்வெட்டுச் சான்றுகள்

கலை வளர்ச்சிக்கு அக்கால மன்னர்கள் பல்வேறு நிலையில் ஆதரவளித்து கலையை வளர்த்து வந்தனர். அவ்வகையில் ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு பல்லவர், பாண்டியர், சோழர், போசனர், விசயநகரர், நாயக்கர், மராத்தியர் போன்றவர்கள் ஆதரவு நல்கினர். இவர்களது கலை வளர்ச்சிக்குரிய செய்திகளைச் செப்பேடுகள் வழியாகவும், கல்வெட்டுகள் வழியாகவும் அறிய முடிகின்றது.

முதலாம் மகேந்திரவர்மனுக்கு பல விருதுகள் கிடைத்திருக்கிறது அவற்றுள் ‘சித்திரகாரப் புலி’ எனும் பட்டமும் உள்ளது. ‘தக்காணச் சித்திரம்’ என்னும் ஓவிய நூலுக்கு உரை வகுத்தப் பெருமை மகேந்திரவர்மனையே சாரும். காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் உள்ள முழுநிலவு மண்டபத் தூண்களிலும், பல்லவபுரத்திலுள்ள குடைவரையிலும் இவற்றிற்கான சான்றுகள் உண்டு.

“.... கல்பாத் ப்ரவிபஜ்ய ...... விருத்திம் ......
தஷிண சித்ராக்யம் (கார) யித்வா யதா விதிஹி
...... ஸ்ச விவிதைஹ் க்ருத்வரவ ர்ண சதுர்த்த”[99]

எனும் கல்வெட்டுச் சான்று உணர்த்துகின்றது.

பாண்டியர் காலக் கல்வெட்டுக்களில் ‘சித்திரகூடம்’ எனும் சொல்லாட்சி பயின்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

“ஸ்ரீ சுந்தரசோழ பாண்டியதேவர் மதுராந்தக
வளநாட்டு மாடக்குளக் கீழ் மதுரையின் வடபக்கத்துப்
பகலிருக்கை நந்தவனம் புத்தனில் சித்திரகூடத்துத்
திருவமிர்து செய்தருளி”[100]

மேற்கண்ட சான்றுகளில் ஓவியம் வரைவதற்கான கூடம் இருந்து வந்துள்ளமையைத் தெளிவாக அறிய முடிகின்றது. ஓவியக் கலையை வளர்த்தெடுப்பதற்கு அன்றைய கால மன்னர்கள் முழு முனைப்போடும், ஆர்வத்தோடும் செயல்பட்டமை தெளிவுப்பட புலனாகிறது.

## 6.8 காலப் படிநிலைகளில் ஓவியங்களின் வளர்ச்சி

மனித நாகரீகம் வளர்ச்சி நிலையை எட்டிய காலம் துவங்கி ஓவியங்கள் பல்நிலைப் பரிமாணங்களை எய்தியுள்ளன. காலத்திற்கு ஏற்றவாறு ஓவியங்களின் உருவங்களும், உணர்வுகளும், கருத்துப் புலப்பாட்டுத் திறனும் மாற்றம் அடைந்துள்ளன. வரலாற்றக்கு முற்பட்ட காலத்திலேயே ஓவியம் தழைத்தோங்கத் தொடங்கியது எனலாம். கி.மு.2-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஓவியங்கள் முழு வீச்சில் எழ ஆரம்பித்தன. ஓவிய வளர்ச்சி படிநிலைகளைப் பின்வரும் களன்களின் வழி வகைப்படுத்தி ஆராயலாம்.

1) வரலாற்றுக்கு முன் ஓவியப் படிநிலை
2) வரலாற்றுக் பின் ஓவியப் படிநிலை

எனும் இருநிலைகளில் ஆராயலாம்.

### 6.8.1 வரலாற்றுக்கு முன் ஓவியப் படிநிலை

ஓவியங்கள் மனித வரலாறு பதிவு செய்யும் முன்பாகவே தோன்றியிருக்க வேண்டும். முற்கால மனிதர்கள் தங்கள் வாழ்வில் கண்டுணர்ந்த காட்சிகளை ஓவியங்களாக வரைந்து வைத்துள்ளனர். குறிப்பாக விலங்குகளையும், வேட்டைக்காட்சிகளையும் விலங்குகள் சண்டையிட்டுக் கொள்ளும் காட்சிகளையும் சித்திரமாய் தீட்டியுள்ளனர். அவர்கள் பார்த்த ஓவியக் காட்சிகளைப் பாறைகளிலும், குகைகளிலும், மலைச் சரிவுகளிலும் தீட்டியுள்ளனர். இவற்றை உணர்த்தும் பொருண்மையில் கீழ்க்காணும் பகுதி சுட்டுகின்றது.

“வரலாற்றுக்கு முந்திய காலத்து மனிதன் கையாண்ட பல பொருள்கள் இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை இந்தக் குகைகளில் வாழ்ந்த மக்களின் காலத்தையும் கலையையும் ஊகிக்க உதவும் தடத்தைத் தருகின்றன. பக்குவமுறாத உத்தியால் தீட்டப்பெற்றிருப்பினும் ஓவியங்கள் உயிரோட்டம் வாய்ந்த வேட்டைக் காட்சிகளைச் சித்தரிக்கின்றன. சிவப்பு வண்ணப்பொருள் மிகுதியாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. உருவங்களில் சில அழிந்து போயிருக்கின்றன. நன்கு பேணப்பெற்ற காட்சி ஒன்றில் காட்டெருதும், கடமானும் வேட்டையாடப்படுவது தெரிகிறது. மனித உருவங்கள் மரபை ஒட்டி வரையப்பட்டுள்ளன.”[101] மேற்காணும்

பகுதியில் வரலாற்றுக்கு முந்தைய நிலையில் ஓவியங்களின் வடிவமும், பொருண்மையையும் அறிய முடிகிறது. மனிதர்கள் பின்பற்றிய கருவிகள், விலங்குகளின் வாழ்வியல் சித்தரிப்புகளே பெரும்பான்மை ஓவியங்களாகக் கொள்ளப்பட்டது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள பாறைகளிலும், குகைகளிலும் பலதரப்பட்ட ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகளை கீழ்க்காணும்பகுதியில் சி.சிவராமமூர்த்தி தெளிவுப்பட காட்டுகின்றார்.

“கைமூர் மலைத் தொடரில் உள்ள பாறைச் சரிவுகளில் வரலாற்றுக்கு முந்திய காலத்துச் சுவாரஸ்யம் மிக்க பல ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மிர்சாப்பூர் மாவட்டத்து பல் தூரியாவில் எறிபடைகளும் வேற்கம்புகளும் கையாளப்பட்ட மான்வேட்டைக் காட்சி ஒன்று காணப்படுகின்றது. லோரி குகைகளில் உள்ள ஓவியங்களில் ஒரு விலங்கைத் தாக்குவதில் எறிபடைகள் உபயோகப்படுத்தப் படுவதைக் காண்கிறோம். சோன் பள்ளத்தாக்கில் லிக்குனிய பாறைச் சரிவில் வேறொரு மான் வேட்டைக் கா்டசி சித்தரிக்கப்பட்டுள்ளது. காண்டாமிருக வேட்டைக் காட்சிகள் ஹரீன் ஹர்னா குகைகளிலும், ரூப்பிலும் வேறு இடங்களிலும் உள்ளன.”[102] வரலாற்றுக்கு முன்பு உள்ள ஓவியங்கள் குறிப்பாக விலங்குகளை, வேட்டையாடிய காட்சிகளைப் பிரதிபலித்த வண்ணமே உள்ளன. விந்தியப் பரப்பில் சர்ஹுத்திலும், குரியா குண்டிலும், கர்ப்படியாவிலும் சிவப்பு வண்ணத்தில் தீட்டப்பெற்ற வேட்டைக் காட்சிகள் காணப்படுகின்றன. தெற்கே பல்லாரி மாவட்டத்து கப்பகல்லுவில் யானைகள், பறவைகள் திமிரும் கொம்புள்ள காளைகள் இவற்றின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு முன்பு உள்ள காலத்தில் மனிதர்கள் பெருமளவில் விலங்குகளின் வாழ்வியலைச் சித்திரிக்கும் வண்ணம் ஓவியங்களை அமைத்திருந்தனர். சிறு அளவில் மனித உருவங்கள் ஆங்காங்கே சிற்சில இடங்களில் வரைந்துள்ளனர். வேட்டைத்தொழிலில் முழு முனைப்புடன் செயல்பட்டதன் விளைவாக வேட்டைக் காட்சிகளே ஓவியங்களாக்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

### 6.8.2 வரலாற்றுக்குப் பின் ஓவியப் படிநிலை

மனித வரலாறு பதிவு செய்யப்பட்ட பின்பு தோன்றிய ஓவியங்கள் வரலாற்றுக்குப் பின் வந்த ஓவியங்களாகச் சுட்டலாம். ஒவ்வொரு மன்னர்களின் காலகட்டங்களிலும் ஓவியக்கலை மிகப் பெரிய வளர்ச்சியை எட்டியது. வரலாற்று பின் வந்த ஓவியங்கள் கி.மு.2-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்க ஆரம்பித்தது. சாதவாகனர், குஷாணர்கள், குப்தர், வாகாடகர், முற்கால மேலைச்சாளுக்கியர், பஞ்சா, பல்லவர், பாண்டியர்கள் சேரர்கள், இராஷ்டிரகூடர், சோழர் ஹொய்சளர், நாயக்கர் முகலாயர்

போன்ற மன்னர்களின் காலத்தில் ஓவியங்கள் செழித்தோங்கத்துவங்கின. இவ்வோவியங்கள் வரலாற்றுக்கு பிந்தைய ஓவியங்களாகப் பிரிக்கலாம்.

### 6.8.2.1 சாதவாகனர் - கால ஓவியங்கள்

ஓவியங்களின் கால வரிசையில் காலத்தால் முற்பட்டவை சாதவாகனர் கால ஓவியங்கள் ஆகும். சாதவாகனர் கி.பி.2-ம் நூற்றாண்டு முதல் கி.மு.2-ம் நூற்றாண்டு வரையிலும் அரசாட்சிப் புரிந்து வந்துள்ளனர். இவர்களுடைய காலத்தில் பல இடங்களில் பௌத்த குகைகள் வெட்டப்பட்டன. இவர்களுடைய காலத்தில் ஓவியக்கலை மாபெரும் வளர்ச்சியை அடைந்தது எனலாம். இவற்றை பின்வரும் சான்றுகள் புலப்படுத்துகின்றது.

“கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதி சாதவாகனச் சிற்பங்களைப் போன்ற ஓவியத் தூரிகைகள் பேட்சா குகைகளில் பேராசிரியர் மூவோ துப்ராயரால் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கே உள்ள ஓர் இளநங்கையின் உருவம் அழகானது. ஒற்றை வட முத்துமாலை அணிந்து நேர்த்தியாக நெளிந்து நிற்கும் இந்த உருவம் அமராவதியிலும் கார்வாவிலும் உள்ளது போன்ற உருவங்களை நினைவுப்படுத்துகிறது. கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலேயே இந்தியக் கலைக் குறிக்கோள்கள் பரவ ஆரம்பித்துவிட்டது. சீனத் துருக்கியஸ்தானத்துத் தண்டன் ஒலிக்கில் உள்ள தாமரைக் குளத்துப் பெண்ணின் ஓவியத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாகும்.”[103]

சாதவாகனர்களின் காலத்தில் ஓவியங்கள் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. இவர்களின் கால ஓவியங்கள் இயற்கைக் காட்சிகளையும், மனித வாழ்வினைப் புலப்படுத்துவதாகவும், பௌத்த சமயக் காட்சிகளைப் பிரதிபலித்துக்காட்டுபவையாகவும் அமைந்துள்ளன.

### 6.8.2.2 குப்தர் கால ஓவியங்கள்

கி.பி.4-ம் நூற்றாண்டிலிருந்து 6-ம் நூற்றாண்டு வரையிலும் குப்தர்கள் அரசாட்சி புரிந்துள்ளனர். கலை, இலக்கியங்களில் ஆர்வம் மிக்கவர்களாகவும், பேராதரவாளர்களாகவும் விளங்கினர். இந்தியக் கலையின் பொற்காலம் குப்தர் காலம் என அழைக்கலாம். புத்தரின் படங்கள் இவர்களுடைய குகைகளில் ஓவியங்களாகப் புனையப்பட்டுள்ளன. அக்காலத்து மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும் பிரதிபலித்துக் காட்டும் பாங்கில் இவர்களுடைய ஓவியங்கள் திகழ்கின்றன. மலர் ஓவியங்கள், படை ஊர்வலம் போன்ற காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. சான்றாக,

“குதிரை வீரர்களும், கைகளில் வில்லும், அம்பும் தாங்கிய காலாட்படை வீரர்களும், இரு கம்பீர உருவங்களின் மீது நிழல்தரும் கவிதையும் ஆண்யானைகள் மீது இளவரசர்களும், பெண் யானைகள் மீது செல்விகளும் அமர்ந்திருக்க அரச வாயிலுக்கருகே ஒருவேளை அரண்மனைக்கு அண்மையிலேயே கூட ஒரு முக்கியமான அரச குடும்ப நிகழ்ச்சியையும் அது பற்றிய ஊர்வலத்தையும் இவ்வோவியம் குறிப்பிடுகின்றது.”[104] மேற்காணும் சான்றுகள் குப்தர் கால ஓவியங்களின் சிறப்புகளைச் சுட்டும் விதமாக அமைகின்றது.

இவர்களைத் தொடர்ந்து வந்த வாகடர்கள், புராண கதைகளை மையப்படுத்தும் பாங்கில் ஓவியங்களை அமைத்துள்ளனர். இவர்கள் ஓவியங்கள் வரைந்தமையை அஜந்தாவில் காணமுடிகின்றது. இவர்களை அடுத்து வந்த மேலைச் சாளுக்கியர்கள் பௌத்த, சமண சமயம் சார்ந்த ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். கியோஞ்சர் பகுதியை ஆண்ட பஞ்சா மன்னர்கள் இராமாயணத்தில் சீதை, லவன், குசன், இராவணன் போன்றவர்களை ஓவியங்களாகத் தீட்டியுள்ளமையை வரலாற்று ஆய்வு வழி காணமுடிகின்றது.

கி.பி.7 முதல் கி.பி. 9 நூற்றாண்டுகளில் ஆட்சிப் புரிந்த பல்லவர்கள் தென்னிந்தியாவை செம்மையாக ஆண்டனர். தமிழ்நாட்டில் முதன்முதலாகக் குடைவரைக் கோயிலின் கட்டிடக் கலையைத் தொடங்கி வைத்தனர். காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோவில் கலை நுட்பத்தோடு கட்டப்பட்டது. இக்கோவிலில் சிறப்புப் பெற்ற பல ஓவியங்கள் அமைந்துள்ளன. இவர்களின் காலத்தில் எழுந்த சோமாங்கந்த ஓவியச் சிறப்பினை கந்தபுராணம் சுட்டுகின்றது.

“ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குரவேள் நடுவுஉறும் பான்மை”[105]

என்ற பாடல் வழி பல்லவர்களின் ஓவியச் சிறப்பினை அறிய முடிகின்றது.

### 6.8.2.3 பாண்டியர் கால ஓவியங்கள்

மதுரையை மையமாகக் கொண்டு ஆட்சிப் புரிந்தவர்கள் பாண்டியர்கள் ஆவார். பாண்டியர்கள் சிற்பம், ஓவியம், கட்டிடக் கலைகளில் பல்லவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர்.

“பேராசிரியர் மூவோ துப்ராயால் கண்டுபிடிக்கப்பட்ட முந்திய பாண்டியர் காலத்து ஓவியக் கலையின் மாதிரிகளைக் காட்டும் ஓவியத் துணுக்குகள் திருமலைபுரம் குகைக் கோயிலில் உள்ளன.”[106] மேற்கண்ட சான்றுகள் பாண்டியர் காலத்தில் ஓவியங்கள் இருந்த குறிப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

### 6.8.2.4 சேரர் கால ஓவியங்கள்

சேர நாடும், சேர அரசில் அடங்கியிருந்த கொங்குப் பரப்பும் பல்லவ பாண்டிய நாடும் ஓவியக் கலையை திறம்பட வளர்த்து வந்தனர். கி.பி.8-ம் நூற்றாண்டு முதல் கி.பி.9-ம் நூற்றாண்டு வரையிலும் சேரர்களின் காலத்தைக் குறிப்பிடலாம். இவர்களுடைய காலக்கட்டத்தில் கவியூர் திருவல்லரை, மாமண்டூர், பல்லாவரம், சீயமங்கலம் போன்ற இடங்களில் உள்ள ஓவியங்களைப் போன்று இவர்களின் ஓவியங்கள் ஒத்திருந்தன. கி.பி.எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வெட்டப்பட்ட திரு நந்திக்கரை குகைக் கோயிலில் உள்ள ஓவியம் சேரர் ஓவியக் கலையின் ஆரம்பத்தினைச் சுட்டுகின்றது.

### 6.8.2.5 சோழர்கால ஓவியம்

சோழர்களின் ஆட்சிக் காலம் கி.பி.9-ம் நூற்றாண்டு முதல் கி.பி.13 நூற்றாண்டு வரையும் ஆகும். விஜயாலயன் தஞ்சாவூரில் தமது ஆட்சியை நிலை நிறுத்தினான். தஞ்சையில் உள்ள பெரியக் கோயில் சோழர்களின் கலைச் சின்னத்திற்கு சிறந்த சான்றாக அமைகின்றது. சோழர்களின் ஓவியக் கலையின் சிறப்பினைப் பின்வரும் பகுதி நிரூபணம் செய்கிறது.

"நார்த்தாமலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் மிகவும் முற்காலச் சோழ ஓவியச் சின்னங்கள் உள்ளன. எனினும், தஞ்சாவூரில் உள்ள பிருகதீசுவரர் கோயிலே முற்காலச் சோழ ஓவியனின் கலைக்கு மெய்யான மகத்தான களஞ்சியமாக விளங்குகின்றது. கோயில்களிலும், அரண்மனைகளிலும் உள்ள சித்திர மண்டபங்கள், சித்திர சாலைகள், ஓவிய நிலையங்கள் இவற்றைக் குறிப்பிட்டு அக்கால நூல்கள், தெற்கேயுள்ள ஓவியக் கலையின் புகழை விவரிக்கின்றன. முற்காலச் சோழர் தலைநகராக இருந்த காவிரிப்பூம்பட்டினக் கோயில் சுவர்களில் உள்ள ஓவியங்களைப் பரிபாடல் தெரிவிக்கிறது."[107] எனும் பகுதியில் சோழர் கால ஓவியங்கள் சிறந்து விளங்கியமையை அறியமுடிகின்றது.

சோழர் கலையின் மிகச் சிறந்த சாதனை பல்லவ மரபில் உள்ள 'ஆலீட' நிலையிலிருக்கும் இந்தத் திரிபுராந்தக உருவம் உட்கார்ந்திருக்கிறது. மேலும் பிருகதீசுவரர் கோயிலின் ஓவியங்கள் சோழர் ஓவியக் கலையின் நிலைக்கு மிகவும் மதிப்பு வாய்ந்த ஆதார மூலமாக அமைகின்றன. சித்தன்னவாசல், பனைமலை, காஞ்சிபுரத்தில் காணப்படும் முதல் தர ஓவியத்தின் நயம் இந்த அழகிய ஓவிய வரிசையில் தொடரப்பட்டிருக்கிறது.

சோழர்கால மக்களின் வாழ்க்கை, பண்பாடு, கலாச்சாரம் போன்ற உயரிய பண்புகளைப் பற்றிச் சோழர்கால ஓவியங்கள் புலப்படுத்துகின்றன. மேலும்

இராஜராஜனின் மதிநுட்பம் குறிக்கோள் போன்றவைகள் புனையப்பட்டுள்ளன. திரிபுராந்தகரின் மாபெரும் சிறந்த ஓவியத்தில் இராஜராஜனின் செயல்பாடுகள் நுட்பமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் வண்ணங்கள் மென்மையாகவும், இளகியும் கோடுகள் உறுதியாகவும் திண்மையாகவும் உள்ளன. ஓவியக் கலையின் சான்றுக்கு திரிபுராந்தகரின் ஓவியமே சான்றாக விளங்குகின்றது.

தஞ்சாவூர் பிருகதீசுவரர் கோயிலில் சோழர் கால ஓவியப் பூஞ்சை மூடியிருக்கும் மேற்பூச்சில் அநேக நாயக்கர் ஓவியங்கள் உள்ளன. அக்கால மக்களின் ஆடை, அணிகலன்கள், வாழ்க்கை முறைகள் போன்றவை தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால மன்னர்களும் தத்தம் ஈடுபாட்டின் காரணமாக ஓவியக்கலையை வளர்த்து வந்தனர். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஓவியக்கலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி ஓவியக்கலை வளர்ச்சிக்கு உறுதியாய் நின்றனர்.

### 6.8.2.6 தமிழக ஓவியம்

ஓவியம் ஒரு கவின் கலை. தமிழ்ச் சூழலில் தமிழர் மரபில் தமிழர்களால் ஆக்கப்படும் ஓவியங்களை தமிழர் ஓவியம் எனலாம். தமிழகத்தில் குகைகளிலே மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறுசில குறியீடுகளையும் தீட்டியுள்ளனர். பழந்தமிழரின் ஓவியக் கலைக்குப் பேர்சொல்லும் ஓவியங்கள் பனைமலை ஓவியத்தில், காஞ்சிக் கோயிலில், திருமலைப்புரக் கோயிலில், சித்தன்னவாசல் குகையில், தஞ்சைப் பெரிய கோயிலில், மதுரை நாயக்கர் கால மண்டபங்களில் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. தமிழர் ஓவியம் குறித்து வெங்கட்சாமிநாதன் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது.

“தமிழ்நாட்டில் தொடர்ந்து நம் கண் முன்னே கலை உணர்வூட்டும் வகையில் சிற்பங்கள்தான் கோயிலில் உள்ளன. ஓவியத்திற்கு அத்தகைய தொடர்ச்சி இல்லை. சற்று முந்தியது என்ற நாயக்கர் கால சுவரோவியங்கள் அதற்குமுன் மறைந்திருந்து வெளித் தெரிந்த தஞ்சைக் கோயில் ஓவியங்கள் அதற்கு முன் சித்தன்னவாசல் என்று பல நூற்றாண்டுகள் இடைவெளி கொண்ட ஒன்றைப் பார்க்கலாம்”[108] என்று தமிழக ஓவியங்கள் பற்றி குறிப்பிடுகின்றார் வெங்கட்சாமிநாதன் அவர்கள்.

தமிழகத்தின் தென்பகுதி திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் 2013-ம் ஆண்டில் சங்கக் காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஓவியங்கள் சுமார் 3000 ஆண்டு பழமையான சங்க காலத் தமிழர்கள் வரைந்த ஓவியங்களாக இருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு 10-க்கும் மேற்பட்ட ஓவியங்கள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் சித்தன்னவாசல், காஞ்சிபுரம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் உள்ள ஓவியங்கள் அடித்தளம் நன்கு உலர்ந்த பின் வரையப்பட்ட சுவரோவிய முறையைப் பின்பற்றி வந்துள்ளன. இதற்குச் சான்றாக சித்தன்னவாசல் குடைவரை கோவில் சமண ஓவியங்கள் திகழ்கின்றன. அஜந்தாவில் காணப்படும் வலிவும், ஒட்டுத் தன்மையும் குறைந்த அடித்தளத்திற்கு மாறாக வலிவும் ஒட்டுத் தன்மையும் மிக்க அடித்தளத்தினைச் சித்தன்ன வாசல் ஓவியம் கொண்டிருந்தது. சித்தன்ன வாசல் ஓவியங்களின் அடித்தளம் அஜந்தாவிலுள்ள களிமண், சுண்ணாம்புப் பூச்சுக் கொண்ட அடித்தளத்திற்கு மாறாக நன்கு தயாரிக்கப்பட்ட முழுவதும் சுண்ணாம்பால் ஆன உறுதியான அடித்தளமாக விளங்குகின்றது. இவ்வோவியம் மூன்றடுக்குகளையுடையது. இவ்வடுக்கு முறை 2.5 மீ/05 மி.மீ./0.4 மி.மீ கனம் உள்ளவையாக காணப்படுகின்றது. காஞ்சிபுரம், தஞ்சாவூர் ஓவியங்கள் சித்தன்னவாசல் ஓவியங்களையே பின்பற்றி உள்ளன.

## 6.9 ஓவியர்

ஓவியம் ஒரு கவின் கலை. தமிழ்ச் சூழலில் தமிழ் மரபில் தமிழர்களால் ஆக்கப்படும் ஓவியங்களை தமிழர் ஓவியம் எனலாம். ஓவியத்தை சித்திரம் என்று தமிழில் கூறுவர். ஓவியக்கலை என்பது வரைதல், கூட்டமைத்தல் மற்றும் பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி கடுதாசி, துணி, மரம், கண்ணாடி போன்றவற்றில் நிறப்பூச்சுகளைப் பயன்படுத்தி வரைபவரின் வெளிப்பாட்டு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் ஒரு கலையாகும். ஓவியக் கலை ஓவியர்களின் பல்வேறு ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு வழிமுறையாகும்.

ஓவியங்களை தீட்டுபவர் ஓவியர் ஆவார். ஓவியர்களின் திறனை பின்வரும் நிலையில் காணலாம்.

“சுவர்களிலும் மண்டபக் கூரைகளிலும் ஆடைகளிலும், கேடயங்கள் மீதும் கண்கவர் ஓவியங்களைத் தீட்ட வல்லவர் மிகச் சிறந்த ஓவியக்கரராக இருக்க வேண்டும். அக்கலைவாணரைக் ‘கண்ணுள் வினைஞர்’ என்பர். ‘கண்ணுள் வினைஞர் - நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர் ஆவார். அதாவது பார்ப்பவர் கண்ணையம் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பது பொருள்.”[109]

கண்ணில் காணும் பொருளையும் மனத்தில் காணும் பொருளையும் வண்ணமாகத் தீட்டுபவர்கள் ஓவியர்கள்.

ஓவியங்களைத் தீட்டும் வல்லமை கொண்டவர்கள் ஓவியர்கள் ஆவார். ஓவியர்கள் இல்லையேல் ஓவியங்கள் இல்லை. ஓவியர்களின் ஈடுபாடும் கலை ஆர்வமுமே ஓவியக் கலையை உயர்த்திச் செல்லும். ஓவியர்கள் குறித்த பதிவுகள் நம் இலக்கியங்களில் உள்ளன. ஓவியர்கள் குறித்த செய்திகளை கீழ்க்காணும் வகையில் பிரித்து ஆராயலாம்.

1) ஓவியர் - சொல் பொருள் விளக்கம்.
2) இலக்கியங்களில் ஓவியர் குறித்தப் பதிவுகள்

எனும் இருநிலைகளில் ஆராயலாம்.

## 6.9.1 ஓவியர் சொல் பொருள் விளக்கம்

ஓவியர் என்பதற்கு தமிழகராதி கீழ்க்காணும் நிலையில் விளக்கம் பகர்கின்றது. “ஓவியர் - கம்மாளர் சித்திரக்காரர்”[110] என்கிறது. ஓவியரைச் சித்திரக்காரர் என்று அழைக்கலாம். க்ரியாவின் தற்கால தமிழகராதி ஓவியர் என்பதற்கு ஓவியம் வரைபவர் “(Artist)”[111] என்கிறது. கழகத் தமிழகராதி ஓவியர் என்பதற்கு பின்வரும் நிலையில் விளக்கம் சுட்டுகின்றது. ஓவியர் என்னும் சொல்லின் ‘ஓவர்’ எனும் சொல்லாக கையாளப்பட்டுள்ளது. “ஓவர் - ஓவியர், சித்திரக்காரர், ஏத்தாளர், கம்மாளர், பாடற்கீழ் மக்கள்”[112] எனும் நிலையில் விளக்கம் பகர்கின்றது.

## 6.9.2 இலக்கியங்களில் ஓவியர் குறித்த பதிவுகள்

உலகில் திகழும் இயற்கையின் நுட்பத்தையும், தனக்கியல்பாக உள்ள அழகுணர்ச்சி, கற்பனைத்திறன் ஆகியவற்றை மனிதன் புதுமையுடன் எடுத்துக்காட்டுவதே கலை எனப்படும். அத்தகைய கலைகள் அறுபத்து நான்கு என்று பண்டைய நூல்கள் பகர்கின்றன. இவற்றுள் நுண்கலைகளாக சிற்பம், ஓவியம், காவியம், இசைக் கூத்து, போன்றவற்றை கருதலாம். ஓவியம் வரைபவரை ஓவியக் கலைஞன் என்பர். ஓவியக் கலைஞனின் நிலையையும் காவியக் கலைஞனின் நிலையைப் பற்றியும் சி.கோவிந்தராசன் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்புகின்றார்.

ஓவியக்கலைஞனும் காவியக் கலைஞனும் தராசின் இரு தட்டுக்களைப் போன்றவர்களே இயற்கையின் எழிலைக் கொண்டு அதன் சிறப்பை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் அங்கங்களைக் கொண்டு செவ்விதின் கவியோவியமாக நூல்வடிவில் வெளியிடுகிறான் காவியப் புலவன். இயற்கையின் வனப்பையும் எவ்வகை செய்திகளையும் உவமங்காட்டி செயற்கை வண்ணங்களைக் கொண்டு உயிரோவியமாக எழுதிக்காட்டுகிறான் ஓவியப் புலவன். “காவியப் புலவன் எழுதிய உருவத்தில் கருத்துச் செறிந்திருப்பதைக் கற்றறிந்தாரே காண்பர். ஆனால்

கண்ணுள் வினைஞனை ஓவியப் புலவன் எழுதிய உருவத்தை கற்றறிந்தோரன்றி மற்றவரும் கண்டு கருத்துக்களைக் கூறுதற்கு இயலுகிறான்"[113] என்று காவியப் புலவனுக்கும் ஓவியப் புலவனுக்கும் உள்ள சிறப்புகளையும், திறன்களையம் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஓவியக் கலைஞனின் சிறப்பினை கீழ்க்காணும் கூற்று வழியே இனங்காண முடிகின்றது.

"ஓவியம், சிற்பம் ஆகிய இரண்டு நுண்கலைகட்கும் இயல்பாகவே வாய்த்துள்ளது. வெளியுலகில் தான் காணும் அழகுப் பொருள்களையும், இயல்பையும் மனக்கண்ணால் கண்டு உள்ளத்தில் பதிவு செய்து கொண்டு உணர்ச்சித் தோற்றத்துடன் வண்ணங்களைக் குழைத்து வட்டிகை கொண்டு எண்ணமெலாம் எதிரே நிற்க எழுதுபவன் ஓவியப் புலவன். அதனாலே தான் அவனை 'கண்ணுள் வினைஞன்' என்று சங்க நூல் கழறியது போலும்"[114] என்று சி.கோவிந்தராசனார் ஓவியரின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறார். நுட்பமாவும், அழகியல் தன்மையோடும் இயங்குபவர்கள் ஓவியர்களே ஆவார் என்று உறுதிபட கூறுகின்றார்.

ஓவியர்களின் சிறப்புகளையும், ஓவியர்களுக்கு வழங்கப்படும் பிற பெயர்களையும் நம் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றது. அவற்றை பின்வரும் சான்றுகள் புலப்படுத்துகின்றது. சிறுபாணாற்றுப்படை ஓவியக் கலையில் திறமை பெற்றவர்கள் 'ஓவியர்' என்று கூறுகின்றது.

"நன்மா இலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்"[115]

என்ற பாடல் அடிகள் வழியே அறிய முடிகின்றது. நல்ல ஒழுக்கலாறுகளை கூறும் தன்மை கொண்ட நற்றிணை 'ஓவியரை' பின்வரும் பெயரில் சுட்டுகின்றது.

"அகன்றோர் மன்றநம் மறந்திசி னோர் என
இணர்உறுபு உடைவதன் தலையும் புணர்வினை
ஓவா மாக்கள் ஒள் அரங்கு ஊட்டிய
துகலிகை அன்ன, துய்த்தலைப் பாதிரி"[116]

ஓவியரை ‘ஓவா மக்கள்’ எனும் பெயரில் சங்க காலத்தில் அழைக்கப்பட்டமையைக் காண முடிகின்றது. மேலும் ஓவியரை ‘கிளவி வல்லோன்’ என்றும் சுட்டுகின்றது.

“அருளிக் கூடும் ஆர்வ மாக்கள்

நல்லேம் என்னும் கிளவி வல்லோன்”[117]

என்னும் பாடல் வழி அறிய முடிகிறது. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றாக விளங்கும் மதுரைக்காஞ்சியில் ‘ஓவியர்’ பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. ஓவியரை கண்ணுள் வினைஞர் எனும் சொல்லால் அழைக்கப் பட்டுள்ளமையைக் கண்கூடக் காணமுடிகின்றது.

“பூவும் புகையும் ஆயும் மாக்களும்

எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி

நுண்ணதின் உணா்ந்த நுழைந்த நோக்கின்

கண்ணுள் வினைஞரும், பிறரும் கூடித்”[118]

மேற்காணும் பாடலில் ‘கண்ணுள் வினைஞர்’ எனும் சொல் பயின்று வந்துள்ளது. காண்பவா் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க வகையில் ஓவியங்களைத் தீட்டியிருக்கின்றனா். ‘கண்ணுள் வினைஞர்’ என்ற தொடருக்கு ‘நோக்கினாா் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோா்’ என்று நச்சினாா்கினியா் உரை வரைந்துள்ளாா்.

‘திருக்கழுமல மும்மணிக்கோவை’ எனும் நூல் ஓவியரை “ஓவியப் புலவன்”[119] எனும் சொல்லால் சுட்டுகின்றது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக விளங்கும் மணிமேகலையில் ஓவியா்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளன. ஓவியா்கள் தமது உள்ளத்தில் நினைத்தவற்றை ஓவியங்களாக வடிக்கும் திறமை பெற்றவா்கள் என்பதும் அவ்வாறு அவா்கள் தீட்டும் ஓவியங்கள் அவா்களது கலைத் திறமையால் தெய்வத்தன்மை பெற்றுவிடும் என்பதை பல்நிலைப் பாடல்களில் எடுத்துக்காட்டுகின்றது.

“ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்”[120]

“தோலின் துன்னரும், துன்ன வினைஞரும்”[121]

"வெண்சுதை விளக்கத்தது, வித்தகர் இயற்றிய

கண்கவர் ஓவியம் கண்டு நிற் குநரும்"[122]

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்

சித்திரச் செய்கை படாம் போர்த் ததுவே"[123]

மேற்காணும் பாடல் அடிகளில் ஓவியர்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பளிக்கறையினுள் தோன்றிய மணிமேகலையின் உருவத்தை ஓவியம் என்ற உதயகுமாரன் எண்ணினான். அதை எழுத ஓவியன் தன் உள்ளத்தில் என்னவாறு கற்பனை செய்திருப்பானோ? என்றும் வரம் தரும் கடவுள் உருவங்களை எழுதவல்ல ஓவியங்களை திறமையான ஓவியர்கள் விளக்கமாகத் தீட்டியுள்ளனர். அந்தக் கண்கவர் ஓவியங்களைக் கண்டு வியந்து கண்ணிமையாது பலர் நின்றனர் என்றும் பொருள் கூறுகிறது. இதில் ஓவியர்கள் குறித்த செய்திகள் வெளிப்படையாக இடம் பெற்றுள்ளது. ஓவியர்கள் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பதையும் தெளிவுபட காட்டுகின்றது.

ஓவியர்களை 'கிளவி வல்லோன்' என்றும் அழைக்கப்படுகின்றனர். ஓவியத்தை உயிரோவியமாக வரைந்த காரணத்தினால் இச்சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டதனை நற்றிணை பாடல் மூலம் அறிய முடிகின்றது.

"நல்லே மென்னுங் கிளவி வல்லோன்

எழுதிய யன்ன காண்டகு வனப்பின்

ஐயள் மாயோள் ....."[124]

என்ற பாடல் ஓவியரின் சிறப்பினை எடுத்தியம்புகின்றது. சிறுபாணாற்றுப்படை இலங்கைக்குரிய அரசர் பலருள்ளும் ஓவியர் குடியில் பிறந்தவன் எனும் பொருளில் சுட்டுகிறது.

"உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்"[125]

எனும் பாடல் வழி காணமுடிகின்றது. பெருங்கதை எனும் காப்பியம் ஓவியர்கள் குறித்த செய்திகளை எடுத்துக் கூறுகின்றனது. பல நாட்டு கைவினைஞர்களால் அமைக்கப்பட்ட வாசவதத்தையின் தேர் மிகவும் நுண்ணிய கலை வேலைப்பாட்டுடன் மிளர்கிறது. இதனைக் கீழ்க்காணும் பாடல் புலப்படுத்துகின்றது.

"யவனத் தச்சரு மவந்திக் கொல்லரும்
மகதத்துப் பிறந்த மணிவினைக்காரரும்
பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞும்
கோசலத் தியன்ற வோவியத் தொழிலரும்
வத்த நாட்டு வண்ணக் கம்மரும்
தத்தங் கோண்மேற்றங் கைத்தொழி றோன்ற"[126]

என்ற பாடலில் கோசல நாட்டு ஓவியத் தொழில் வல்லுநரும், வத்த நாட்டு வண்ணக்கம்மரும் என்பது வண்ணம் தீட்டும் கலைஞர்களை குறிப்பதாய் உள்ளது தத்தமது கை வண்ணத்திறமையினால் பலவண்ண ஓவியங்களை அமைத்துள்ளனர் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

பிற்காலத்தில் ஓவியர்கள் இருந்து வந்துள்ளமையைப் பல்நிலைச் சான்றுகள் உணர்த்துகின்றன. இதனை அறிவுடை நம்பி கீழ்காணும் நிலையில் எடுத்துரைக்கின்றார்.

"செப்பேடுகளில் வரைகின்ற அல்லது செதுக்குகின்ற ஓவியர்கள் 'ஆசாரி' என்றும் 'ஸ்தபதி' என்றும் அழைக்கப் பெறுகின்றனர். அந்தந்தச் செப்பேடுகளில் பெரும்பாலும் இச்செப்பேட்டைச் செதுக்கியவர் 'இன்னார்' என்று பெயருடன் பொறித்திருப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இத்தகைய செப்பேடுகளில் ஓவியர் பெயரும் இடம் பெற்றிருப்பது இவண் குறிப்பிடத்தக்கது"[127] என்று கூறுகின்றார்.

மேலை நாட்டவர் வருகையினால் தமிழக ஓவியங்களில் மேலைநாட்டுத் தாக்கம் ஏற்பட்டுள்ளமை பின்வரும் நிலையில் எடுத்துக்காட்டுகின்றார்.

"கலையைக் கற்பிப்போரும், கலையைத் திறம்பட பயில்வோரும் தனக்குரிய இலக்கணப் பண்பினைக் கொண்டிருத்தல் வேண்டும். கண்ணுக்கு இன்பம் பயக்கும் ஓவியக் கலையைச் செய்வோர் பின்வரும் இலக்கணத்தினை பெற்றிருத்தல் மரபாகும்."[128] இதனை சி.கோவிந்தராசனார் பின்வரும் பாடல் வழியே பிரதிபலித்து காட்டுகின்றார்.

"காட்சியும் கருத்தும் கற்பனைத் திறமை
மாட்சியும் பெற்றொளிர் மாண்பும் மங்கிய
தோற்றம் யாவையும் தொகுத்து மனத்தே

படமா நிறுத்தும் பாங்கமைப் பயிற்சியும்

திட்பமும் நுட்பமும் தெளிந்தறிபுலமையும்

கற்றிடும் நூலறி கருத்தினை உருவா

ஆக்கும் அலகிலா ஆற்றலும், நுண்கலைத்

தோற்றமும், தெய்வக் கொள்கையும் தெளிவமை

ஓவியப் புலவனுக்குரியவை ஆகும்."[129]

எனும் பாடல் ஓவியனுக்குரிய இலக்கணத்தினை தெளிவுபடக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஓவியனும் மேற்காணும் இலக்கணத்தைப் பெற்றிருக்கும் பொழுதுதான் ஓவியப் புலவன் எனும் சிறப்பினை அடைகின்றனர் என்பது உறுதியாகும்.

"மேலை நாட்டார் இந்தியாவிற்குப் பல்வேறு காரணங்களின் பொருட்டு வந்துள்ளனர். இதனால் இந்தியாவில் பல மாறுதல்கள், தாக்கங்கள் ஏற்படலாயின. இவற்றின் விளைவு ஓவியக் கலையையும் பாதித்துள்ளது. இக்காலக்கட்டத்தில் வரையப்பட்ட ஓவியங்களில் மேலைத் தாக்கமும் கலந்திருப்பதைக் காண முடிகின்றது. மேலை நாட்டிலிருந்து இங்கு வந்த பல ஓவியக் கலைஞர்கள் இந்திய மண்ணுக்கேற்ற வகையில் தங்கள் கலைத்திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்"[130] எனும் கருத்திலிருந்து மேலைநாட்டு ஓவியக் கலைஞர்கள் நம் நாட்டில் இருந்து வந்துள்ளனர் என்பது உறுதிபட தெளிவாகிறது.

பிற நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு பல ஓவியர்கள் வருகை புரிந்து தங்கள் திறமைகளையம், ஓவியக் கலையையும் நிலை நிறுத்தியுள்ளனர். "தஞ்சை மராத்திய மன்னர் இரண்டாம் சரபோசி காலத்தில் (1798 – 1832 தஞ்சைக்கு மன்னர் அழைப்பின் பேரில் சில ஓவியர்கள் வந்துள்ளனர். இவர்கள் மன்னர் விருப்பத்திற்கிணங்கச் சில ஓவியங்களை வரைந்து கொடுத்துள்ளனர். மன்னர் ஆதரவில் இங்கேயே சில ஓவியர்கள் இருந்துள்ளனர். மோடி ஆவணங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஆவணங்களிலும், ஓவியர்கள் பற்றியும் அவ்வோவியர்களின் பெயர்களைப் பற்றியும் ஏராளமான குறிப்புகளைக் காண முடிகின்றன. ஓவியர்களுக்குத் திங்கள் தோறும் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது."[131] மேற்காணும் கருத்தின் வழி அரண்மனையில் நிரந்தரமாக தங்கிய அரசு ஓவியர்கள் இருந்து வந்துள்ளமையை மேற்காணும் பகுதி எடுத்துரைக்கின்றது.

முற்காலத்தில் ஆண் ஓவியர்கள் மட்டுமின்றி பெண் ஓவியர்களும் இருந்து வந்துள்ளனர். இதனை கே.எம்.வேங்கடராமையா தம் நூலில் சுட்டிக்காட்டுகின்றார்.

“தஞ்சை மராத்தியர் காலத்தில் அரண்மனையில் இருந்த பல ஓவியர்களில் பெண் ஓவியரும் இருந்துள்ளனர். இவர்கள் பெயரும், இவர்கள் பெற்று வந்த திங்கள் ஊதியமும் மோடி ஆவணங்களில் காணப்பெறுகின்றன.”[132] என்பதன் வழியே பெண் ஓவியர்கள் இருந்துள்ளனர் என்ற செய்தியை அறிய முடிகின்றது.

மன்னர்கள் ஓவியக் கலையை வளர்க்கும் நோக்கிலும் கலை மீது கொண்ட ஈடுபாடும் ஆர்வமிகுதியாலும் ஓவியர்களை அரண்மனையில் முழு நேரப் பணியாளர்களாக வைத்துள்ளனர். “இரண்டாம் சரபோசி மன்னர் காசிக்குத் தலப்பயணம் செல்லும் பொழுது தன்னுடன் மூவாயிரம் பேரையும் அழைத்து சென்றுள்ளார். இவர்களில் ‘சித்திரக்காரன்’ சின்னசாமி நாயக்கனும் உடன் சென்றுள்ளான். மன்னர் நேரில் கண்ட காட்சிகளை இவ்வோவியனைக் கொண்டு வரையச் செய்து அப்படங்களைத் தஞ்சை அரண்மனைக்கு அனுப்பியிருப்பதையும் ஆவணங்கள் உறுதிப்படுத்திகின்றன. இக்காலத்தில் சிறந்து விளங்கிய ஓவியர்கள் ‘சித்திரம்’ ‘சித்திரக்காரன்’ ‘சித்திரக்காரி’ என்ற பெயர்களில் அழைக்கப் பெற்றுள்ளனர்.”[133]

ஓவியர்கள் மன்னர்களுடனே இருந்து பற்பல காட்சிகளை வரைந்து ஓவியக்கலையை வளர்த்து வந்துள்ளனர்.

## 6.10 ஓவியக் கருவிகள்

கலை வெளிப்பாட்டிற்கு படைப்பாளனின் மனம் ஒரு நிலையில் காரணமாக அமைகின்றது. அக்கலையை வெளிப்படுத்துவதற்கு கருவிகள் மறுநிலையில் காரணமாகத் திகழ்கின்றது. ஓவியம் வரைவதற்கு பயன்படும் கருவிகள் ஓவியக் கருவிகள் ஆகும். ஓவியம் வரைவதற்குரிய கருவிகள், பொருள்கள் ஆகியவற்றை சிற்ப நூல்களிலிருந்தும் இலக்கிய நூல்களிலிருந்தும் காணமுடிகின்றது. அவைகளை பின்வருமாறு பட்டியலிட்டுக் காணலாம்.

1) தூரிகை அல்லது துகிலிகை
2) ஓவியப் பலகை
3) மஞ்சள் கிழங்கு
4) கரிக்கோல் அல்லது வண்ணத் தீட்டுக்கோல்
5) பல்வகை வண்ணங்கள்
6) வண்ணம் குழைக்கும் கிண்ணம்
7) வண்ணங்களை மயக்கும் கைப்பலகை
8) வரி வடிவம் போடுவதற்குரிய கட்டைகள்
9) தூரிகைகள் வைக்கப் பெறும் குடுக்கைகள் அல்லது பெட்டிகள்

10) அளவுடன் அமைந்த மரச்சட்டம்.

11) செங்கோணச் சட்டம்.

12) வெள்ளிய நூல்

போன்றவைகள் ஓவியம் வரைவதற்கான கருவிகளாகக் கொள்ளலாம்.

### 6.10.1 முதன்மைக் கருவிகள்

ஓவியம் வரைவதற்கு பல கருவிகள் தேவைப்பட்டாலும் முதன்மைக் கருவியாகத் தூரிகை விளங்குகின்றது. தூரிகை என்பதற்கு பின்வரும் நிலையில் மா.சா.அறிவுடை நம்பி விளக்கம் தருகின்றார்.

"தூரிகை என்பது ஓவியக் கலைஞனின் முக்கிய கருவியாகும். துகிலிகை எனவும் இது அழைக்கப்பெறுகிறது. கலைஞனுடைய உணர்வுகள் கருத்துக்கள் ஆகியவற்றை வண்ணத்தினாலும், கோட்டினாலும் வெளிப்படுத்துவது இத்தூரிகையேயாகும். தூலிகா (Tulika) இலேகனீ (Lekhani) கூர்ச்ச (Kurcha) என்ற சிற்ப நூல்கள் தூரிகையைப் பற்றி குறிப்பிடுகின்றன. தூரிகையின் தரத்தைப் பொறுத்தே இயற்கையில் ஓவியத்திலுள்ள வண்ணமும், கோடும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதனால் தூரிகையைச் சுத்தமாகவும், நல்ல நிலையிலும் வைத்திருப்பது தேவையாகிறது. ஒவ்வொரு வண்ணத்திற்கும் தனித்தனியாகத் தூரிகைகளை வைத்துப் பயன்படுத்துவது சிறந்த முறையாகும்"[134] என்று குறிப்பிடுகின்றார். தூரிகையே ஓவியத்தின் முதன்மைக் கருவியாகப் பயன்படுகின்றது.

ஓவியம் வரைவதற்கு முதன்மைக் கருவியாக விளங்கும் தூரிகைகள் தயாரிக்கும் முறைப் பற்றி பல சிற்ப நூல்கள் எடுத்தியம்பி உள்ளன. இதனைக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

"தூரிகைள் மரப்பட்டையின் தோல் அல்லது கழுதையின் முடி அல்லது காளையின் காதுமுடி ஆகியவற்றால் செய்யப்படுகிறது."[135]

தூரிகைகள் செய்யப்படுவதை சமராங்கன சரித்திரதாரம் எனும் நூல் குறிப்பிடுகின்றது. மேலும், "மெல்லிய நூலிழை (முடியாகவும் இருக்கலாம்)யினால் செய்யப்பெறும் தூரிகையே ஓவியம் வரைவதற்குச் சிறந்ததாகும்"[136] என்கிறது.

தூரிகையின் வடிவமைப்பினைப் பின்வருமாறு மா.சா.அறிவுடை நம்பி எடுத்துக்காட்டுகின்றார்.

"தூரிகைக்குரிய உறுப்பு கோல், சுரை, மயிர்க்குஞ்சிப்பு எனும் மூன்றாகும். மெல்லிய வலிய நேரான மரக்கொம்பு ஒன்றினை ஆக்கிக் கொண்ட சுரையின்

அடிப்புறம் பொருத்தும் அளவுடையதாகச் செப்பமாகக் கோல் தயாரிக்க வேண்டும். துத்தநாகம், பித்தளை ஆகிய உருவாகத் தகடுகளில் ஏதேனும் ஒன்றால் ஒருபுறம் குவிந்ததாகவும், மறுபுறம் கோலைப் பொருத்துவதற்கு அளவுடையதாகவும் செய்து அமைத்துக் கொள்ளும் சுரையின் தோற்றம் திரள் உருவாக அமையும். புதர்களில் வாழும் முக்கோட்டுடன் திகழும் அணில் வால் மயிர் காட்டுச் செங்கீரியின் மென்மையான மயிர் ஆகியவற்றைத் தூரிகையின் குஞ்சத்திரளாகக் கொள்ளுதல் சிறப்பாகும்”[137] என்று கூறுகின்றார்.

வண்ணம் குழைத்து ஓவியம் தீட்டப்படுவதையும் அதற்குத் தூரிகையைப் பயன்படுத்துவதையும் பாதிரி மலருக்கு உவமையாகவும், நற்றிணைப்பாடல் வழி அறியலாம்.

“ஓவ மாக்கள் ஒன்னரக் கூட்டிய

துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி”[138]

மென்மைத் தன்மை உடைய தூரிகையால் ஓவியம் வரையப்படுவதை பெருங்கடுங்கோ தமது பாடல் வழியே அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

ஓவியம் தீட்டப்படுவதற்கு இரண்டாம் நிலையில் பயன்படும் பொருளாக அமைவது வட்டிகைப் பலகை ஆகும். “ஓவியம் வரைவதற்குரிய வண்ணக் கலவைகளை வைப்பதற்கு பயன்படும் வட்ட வடிவமான தட்டு (Plate) அல்லது பாத்திரம் ‘வட்டிகைப் பலகை’ என்றழைக்கப்படுகிறது”[139] எனும் பகுதி வழி வட்டிகைப் பலகை குறித்து அறியலாம்.

சீவக சிந்தாமணியில் வட்டிகைப் பலகைப் பற்றியும் துகிலிகைப் பற்றியும் குறிப்புகள் இருந்து வந்துள்ளன.

“வட்டிகை மணிப்பலகை வண்ணநுண் டுகிலிகை

யிட்டிடை நுடங்கநொந் திரியலுற்ற மஞ்ஞையிற்

கட்டழ லுயிர்ப்பின்வெந்து கண்ணிதீந்து பொன்னுக

மட்டவிழ்ந்த கோதையர்கள் வந்துவாயில் பற்றினார்”[140]

என்ற பாடலில் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்த பெண்கள் சீவகனை அரசனிடத்து இழுத்துச் சென்ற காட்சியினைக் காண, கரைந்த வண்ணத்தையும் துகலிகையையும் வட்டிகைக் பலகையிலேயே போட்டு ஓடி வருவதை காட்டுகின்றார். இதிலிருந்து கரைத்த வண்ணத்தை வட்டிகைப் பலகையில் வைத்துக் கொண்டு

துகிலியால் பூசுப்படுவதைக் காண முடிகின்றது. ஓவியம் தீட்டப்பட்ட காலந்தொட்டு இன்று வரையிலும் ஓவியக் கருவிகள் ஓவியர்களால் நன்முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதை இச்சான்றுகள் வழியே அறிய முடிகிறது.

## 6.11 ஓவியக் கூடங்கள்

ஓவியம் தீட்டப்படுதற்கென்ற தனியாக வடிவமைக்கப்பட்ட கூடம் 'ஓவியக் கூடம்' எனப்படும். பண்டையக் காலத்தில் ஓவியங்களைக் கொண்ட கலைக் கூடங்கள் நிரம்ப இருந்துள்ளன. எழுதொழில் அம்பலம் 'எழுத்துநிலை மண்டபம்' சித்திர அம்பலம், சித்திரக் கூடம், சித்திரமாடம், சித்திர மண்டபம் என்று பல்நிலைப் பெயர்களில் ஓவியக் கூடங்களை அழைத்து வந்தனர்.

திருத்தக்க தேவர் தமது நூலில் ஓவியம் தீட்டப்படுவதற்கென்று ,'சித்திர கூடமும்' 'சித்திர மண்டபமும்' இருந்து வந்துள்ளமையைச் சுட்டுகின்றார். சீவகன் அரசாட்சி செய்த மண்டபம் சித்திரங்கள் நிறைந்து உள்ளது என்பதை சீவக சிந்தாமணி எடுத்துக்காட்டுகின்றது.

"பல்கதிர் மணியும் பொன்னும் பவழமுங் குயிற்றிச் செய்த

செல்வப்பொற் கிடுகு சூழ்ந்த சித்திர கூட மெங்கு"[141]

"செந்தா மரைமகளே யல்லதுபெண்

சாராத திருவின் மிக்க

சிந்தா மணியேய்ந்த சித்திரமா

மண்டபத்துச் செல்வன் புக்கான்"[142]

மேற்கண்ட பாடலடிகளின் மூலம் அக்காலத்தில் ஓவியம் தீட்டப்படுதற்கென்று தனியாக வடிவமைக்கப்பட்ட இடங்கள் இருந்துள்ளது என்பது தெளிவாகிறது.

### 6.11.1 ஓவியக் கூடங்களின் வகைகள்

ஓவியக் கூடங்களின் வகைகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். இதனை சங்க இலக்கியம், இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களிலும், நாட்டிய சாஸ்திரம், அக்கினி புராணம் போன்ற சிற்ப நூல்களிலும் காணமுடிகின்றது. அவையே,

1) அரண்மனைகள்
2) பொது கலைக் காட்சிக் கூடங்கள்
3) தனியார் இல்லங்கள்

போன்ற மூன்று வகைகளில் ஓவியக் கூடங்களைச் சுட்டலாம்.

சங்க காலத்தில் ஓவியக் கூடங்கள் எங்கெல்லாம் நிறைந்துள்ளன என்பதை பின்வரும் பகுதி வழியே அறிய முடிகின்றது.

“அரண்மனைகளிலும் பொது அறைகளிலும், இளவரசிகள் இருக்கின்ற அந்தப்புர அறைகளிலும் ஓவியக் கூடம் இருந்திருக்கிறது. இளவரசிகள் தங்கள் படுக்கை அறைகளையே ஓவியக் கூடமாகவும் சிலர் தங்கள் படுக்கை அறைகளுக்குப் பக்கத்தில் ஓவியக் கூடத்தையும் அமைத்திருக்கின்றனர். மங்கலப் பொருள் ஒன்றைத் துயில் எழுந்ததும் காண்பது நன்னிமித்தமாக கருதப்பட்டதுவே இவை தோன்றுவதற்குக் காரணமாகும்”[143] என்ற பகுதி மூலம் ஓவியக் கூடங்கள் அன்றைய காலத்தில் இடம் பெற்று வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

மேலும் கோயில்கள், பொது மன்றங்கள், நடன மன்றங்கள், மண்டபங்கள், மண்டபத் தூண்கள் ஆகியவை பொதுக் கலைக் காட்சிக் கூடங்களாகத் திகழ்கின்றன. செல்வந்தர்கள், பரத்தையர்கள் தத்தமது இல்லங்களிலும் ஓவியக் கூடங்களை அமைத்திருக்கின்றனர்.

### 6.11.2 இன்றைய ஓவியக் கூடங்கள்

இன்றளவு தமிழகத்தில் சில இடங்களில் ஓவியக் கூடங்கள் இருந்து வருகின்றன. அவை பின்வருமாறு.

1) தேசியக் கலைக்கூடம், அரசு அருங்காட்சியகம், சென்னை.
2) தமிழ்நாடு லலித்கலா அகாதெமி, சென்னை.
3) அருங்காட்சியகம், கோட்டை, சென்னை.
4) அரசு அருங்காட்சியகங்கள், புதுக்கோட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், ஈரோடு, கோயம்முத்தூர், கடலூர், உதகமண்டலம், கன்னியாகுமரி.
5) அபர்ணா ஓவியக்கூடம், சென்னை.
6) சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

போன்ற இடங்களில் இன்றளவும் ஓவியக் கூடங்கள் இருந்து வருவதை நாம் காணமுடிகின்றது.

## 6.12 ஓவியத்தின் வகைகள்

கண்ணையும், கருத்தையும் உள்ளத்தையும் கவர்ந்திருக்கக் கூடிய கலைகளுள் ஓவியக்கலையும் ஒன்று ஓவியக்கலையைப் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தலாம்.

1) சுவரோவியங்கள்.
2) துணி ஓவியங்கள்
3) ஓலைச்சுவடி ஓவியங்கள்
4) காகிதச்சுவடி ஓவியங்கள்
5) பலகை ஓவியங்கள்
6) சீட்டுக்கட்டு ஓவியங்கள்
7) செப்பேட்டு ஓவியங்கள்
8) கண்ணாடி ஓவியங்கள்
9) பாறை / குகை ஓவியங்கள்
10) உருவ ஓவியங்கள்
11) காக்காய்ப் பொன் ஓவியங்கள்
12) தந்த ஓவியங்கள்
13) கருத்துப்பட ஓவியங்கள்

போன்ற வகைகளில் ஓவியங்களை வகைப்படுத்தலாம். மேலும் தற்காலத்தில் தீட்டப்படும் ஓவியங்கள் தற்கால ஓவியங்கள் என்றும் அழைப்பர்.

## 6.13 நாட்டுப்புற ஓவியங்கள்

நாட்டுப்புற மக்களின் வாழ்வு மண்ணோடும் மரபோடும் ஒட்டியவை. பண்பாட்டுக் கூறுகளை இனங்காட்டும் வாழ்வு நாட்டுப்புற மக்களிடையே நிலவி வருகின்றது. கலையோடும் கலை நயத்தோடு வாழ்வை இயக்கும் நாட்டுப்புற மக்கள் கலை வளர்ப்பில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்துக் கலைகள் கைவினைக் கலைகள் என்றும் வகைப்படுத்துவர். நிகழ்த்துக் கலைகள் இசை, பாட்டு, ஆட்டம், கூத்து எனவும் கைவினைக் கலைகள் மண், மரம், கல், உலோகம் எனவும் பகுத்து வளர்த்தனர்.

கலை ஆர்வம் மிகுதியால் நாட்டுப்புற மக்கள் தம் வாழ்வோடு ஒன்றாகவே கலையைக் கருதி வந்தனர். அவ்வகையில் ‘சமூகக் கலைகள்’ என்றும் ‘சமயக் கலைகள்’ என்றும் இருவகையாகப் பகுத்துக் கொண்டனர். தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நாட்டுப்புறக் கலைகள் உயிர்ப்புத் தன்மையோடு இயங்கி வருகின்றது. இவற்றில் பெரும்பாலும் இசையோடும் பாடலோடும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டுப்புற கலைகளாவன, ஒயிலாட்டம், ஆலியாட்டம், கோலாட்டம், கரகாட்டம், காவடி ஆட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, பாவைக் கூத்து, கனியான் ஆட்டம், வர்மம், சிலம்பாட்டம், களரி, தேவராட்டம், சக்கையாட்டம், பொய்க்கால்

குதிரை ஆட்டம், மயிலாட்டம், உறியடி ஆட்டம், மயிலாட்டம், தப்பாட்டம், உடுக்கடிப் பாட்டு, இலாவணி, கைச்சிலம்பாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், துடும்பாட்டம், புலி ஆட்டம், பொம்மைக்கலைகள், மண்பாண்டக்கலை, கோலக்கலை போன்ற கலைகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வில் இடம் பெறுவன.

இவற்றில் கைவினைக் கலைகளைச் சிற்பம், ஓவியம் என்று பகுக்கலாம். சிற்பக் கலைகளுள்,

1) மண் - உருவம், சுடுமண் பொம்மை, காங்கிரீட்டு உருவம்
2) மரம் - சப்பரம், தெப்பம், தேர், வாகனம்
3) கல் - தெய்வங்கள், பயன்படு பொருட்கள்
4) உலோகம் - தெய்வங்கள், பயன்படு பொருட்கள்
5) கோரை - பாய்
6) ஓலை - பனை ஓலைப் பொருட்கள்
7) மூங்கில் - பெட்டி, கூடை, இருக்கைகள்

போன்றவை சிற்பமும், ஓவியமும் கலந்தவையாக உள்ளது.

நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்வில் ஓவியங்களைப் பயன்படுத்தி வந்தனர். குறிப்பாகத் தாங்கள் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஓவியங்கள் வரைந்தனர். மட்பாண்டங்கள், கோரைப்பாயில் வரையும் பாய் ஓவியங்கள், கோலமிடல், தங்கள் உடம்பில் பச்சைக் குத்துதல், பனை ஓலை பெட்டிகளில் ஓவியங்களை வரைதல் போன்ற பலதரப்பட்ட நிலைகளில் ஓவியங்களை வரைந்து வளர்ச்சிக்கு உறுதுணைப் புரிந்துள்ளனர் நம் முன்னோர்கள்.

# தொகுப்புரை

- மானிடர்கள் தங்களுடைய தேவைக்காகவும் வசதிக்காகவும் கலைகளை அமைத்துக் கொண்டார்கள். கலை வாயிலாக உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தி மகிழ்ச்சியடையத் துவங்கினார்கள். மனித வாழ்வையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் எடுத்துக்காட்டவும் பிற்கால மனிதர்கள் உணர்ந்து கொள்ளவும். பல்வேறு கலைகளை உருவாக்கியுள்ளனர். பல கலைகள் இருப்பினும நுண் கலைகளாகப் போற்றப்படுவது சிற்பம், ஓவியம் ஆகும். ஓவியக்கலை கண்டு மகிழ்வதற்குரிய ஒப்பற்ற கலையாகப் போற்றப்படும்.

- ஓவியக் கலையே அனைத்து கலைகளுக்கும் அடிப்படையாக விளங்கி வருகின்றது. ஓவியக்கலை கற்பவர்கள் அனைத்துக் கலையும் அறிந்தவர்களாகின்றனர் என்பதை உறுதிப்பட அறிய முடிகின்றது. மனிதர்களின் நாகரிக வளர்ச்சியினை அறிந்து கொள்ளுவதற்கு ஓவியக் கலையே உறுதுணையாக விளங்குகின்றது. அக உணர்ச்சியையும், புற உலக உணர்ச்சியையும் அழகுபட உணர்ந்து கொள்ளுவதற்கு ஓவியமே வழிகாட்டுகின்றது என்பதை இவ்வியல் வழியே உணர முடிகின்றது.

- ஓவியம் கலையறிவை உண்டாக்குவது, எழுப்புவது, அறிவைத் தூண்டி போதிப்பது ஒப்பற்ற பயனை விளைவிப்பது போன்ற பயன்பாடுகளைத் தரவல்லது என்பதை தெளிவுப்பட தெரிந்து கொள்ள முடிகின்றது.

- நம் மனக்கண்ணில் காணும் எண்ணங்களை காட்சிகளை சித்திரித்துக் காட்டும் வல்லமை ஓவியத்துக்கு உண்டு. இதனை உணர்ந்த பழங்கால மக்கள் தம் வாழ்ந்த பகுதிகளில் உள்ள குகைகளிலும், மலைச் சரிவுகளிலும், பாறைகளிலும் தத்தம் நிகழ்வுகளைப் பதிவு செய்து ஓவியம் தோற்றத்திற்கான ஊற்றுக் கண்ணாக விளங்கினர்.

- மனிதர்களின் தொடக்கக் கால ஓவியங்கள், விலங்குகளையும், வேட்டைக் காட்சிகளையும் முதல் நிலையில் மையப்படுத்தி அமைந்துள்ளன. அடுத்த நிலையில் மனித உருவங்கள், மரம், செடி, மலர்கள் போன்றவை தீட்டப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபட உணர முடிகின்றது.

- ஓவியங்களின் தன்மையும் சிறப்பையும் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை, நாச்சியார்திருமொழி போன்ற இலக்கியங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. பண்டைய தமிழர்கள் ஓவியங்கள் வழி அறிந்த

பயனையும் பண்பாட்டு சீர்திருத்தத்தையும் ஓவியக் குறிப்புகள் வழியாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

- ❖ ஓவியங்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் தனித் தன்மையும் இயல்பும் மாற்றம் பெற்று வந்துள்ளன. வரலாற்றுக்கு முன்பு உள்ள ஓவியங்கள் பெரும்பான்மை விலங்குகளின் சண்டைக் காட்சிகளும், வேட்டைக்காட்சிகளும் இடம் பெற்றிருப்பது தெளிவாகப் புலனாகிறது. வரலாற்றுக்கு பின்பு வந்த காலங்களில் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, மக்கள் பண்பாடு, பழக்கவழக்கம், போர் காட்சி போன்றவைகள் சித்தரிக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது.
- ❖ ஓவிய வரலாற்றில் குறிப்பாக தமிழகத்தில் சித்தன்னவாசல், தஞ்சாவூர், காஞ்சிபுரம், மாமண்டூர் போன்ற இடங்களில் ஓவியங்கள் சிறந்த முறையில் வளர்ச்சிப் பெற்று வந்துள்ளமையைக் காண முடிகின்றது.
- ❖ ஓவிய ஆர்வலராகவும், உறுதுணையாளரர்களாகவும் சேர, சோழர், பாண்டியர்கள் விளங்கினார்கள். குப்தர்கள், சாதவாகனர்கள், சாளுக்கியர்கள், பல்லவர்கள், சரபோசி போன்ற மன்னர்கள் ஓவியக் கலையை வளர்ப்பதில் முழு முனைப்போடு செயல்பட்டு வந்துள்ளர் என்பதை சான்றுகள் வழியே நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.
- ❖ ஓவியக் கலையின் உயிர் நாடியாக விளங்குபவர்கள் ஓவியர்கள் ஆவார். எனவே ஓவியர்கள் அக்காலத்தில் போற்றுதலுக்குரிய தகுதியைப் பெற்றிருந்தனர். மன்னர்கள் ஓவியர்களை தங்கள் அரண்மனைகளிலேயே வைத்து சிறப்பு செய்து வந்தனர். ஓவியர்கள் ஓவியக் கலையில் தம்மை முழுவதுமாக இணைத்துக் கொண்டு கலையை வளர்த்தனர்.
- ❖ ஓவியம் வரைவதற்குரிய கருவிகளை நம் முன்னோர்கள் இனங்கண்டிருந்தனர். தூரிகை, வண்ணங்கள், பட்டப்பலகை போன்றவற்றை முதன்மைக் கருவிகளாகக் கொண்டு ஓவியம் தீட்டினர் என்பதை இலக்கிய குறிப்புகளின் வழி தெளிவாகக் காண முடிகின்றது.
- ❖ ஓவியம் தீட்டப்படுவதற்கு என்று தனியாக சித்திரமாடங்கள், ஓவியக் கூடங்கள் அமைத்து நம் முன்னோர்கள் ஓவிய வளர்ச்சிக்கு வழிவகைப் புரிந்துள்ளனர். இன்றளவும் ஓவியக் கூடங்கள் சென்னை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், ஈரோடு போன்ற இடங்களில் அரசின் முழு முனைப்போடு ஓவியக் கூடம் செயல்படுவதை காண முடிகின்றது.
- ❖ கண்ணையும், கருத்தையும் கவரும் தன்மை கொண்ட ஓவியம் பதினைந்துக்கும் மேற்பட்ட வகைகளில் காணப்படுவதை அறிய முடிகின்றது.

- அன்று முதல் இன்று வரையிலும் ஓவியங்கள் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை இவ்வியல் வழி தெளிவாக அறியமுடிகிறது. நம் முன்னோர்கள் அரும்பாடுபட்டு வளர்த்து வந்த ஓவியக் கலையின் சிறப்பையும், பெருமையையும் நாம் பெருமளவில் உணர்ந்து கொண்டு ஓவியக் கலையை வளர்க்கவும், பாதுகாக்கவும் வேண்டும் என்னும் கருத்துரை இவ்வியல் வழி முடிவுகளாகக் கொள்ளலாம்.

# அடிக்குறிப்புகள்

1. மயிலை சீனி வேங்கட சாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். ப.3
2. மேலது. ப.4
3. மேலது. ப.21
4. மேலது. ப.22
5. மயிலை சீனி வேங்கட சாமி, அழகுக் கலைகள். ப.6
6. புறநானூறு. பா.235:10-15
7. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம். பா.14:166
8. மேலது. பா.14:166
9. மேலது. பா.8:64-67
10. ஆறுமுக நாவலர் (ப.ஆ), சூடாமணி நிகண்டு. ப.57
11. L.Abercrombie, Principles of Literary Criticism. P.23
12. L.A.Richards, Principles of Literary Criticism. P.17
13. மா.இராசமாணிக்கனார், தமிழகக் கலைகள். ப.1
14. தொல். நூ.111: 546-2, 590-1, 591-1, 601.
15. கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும்.ப.1
16. மேலது. ப.4
17. இராமலிங்கம் பிள்ளை (தொ.ஆ), நாமக்கல் கவிஞர் பாடல்கள். ப.46
18. ஏ.என்.பெருமாள், தமிழர் இசை. ப.2
19. டீ.வி.நாராயணசாமி, கலையும் மொழியும். ப.32
20. William Henry Huctson, An Introduction to the Study of Literature. P.63
21. The new Coxton Encyclopedia - Vol.2, P.375
22. மு.வரதராசரார், இலக்கியத்திறன். ப.31
23. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை. ப.285
24. The Encyclopedia American – Vol.II, P.213
25. The New Columbia Encyclopedia, P.156
26. Oxford Dictionary, p.229
27. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.1
28. மேலது. ப.20
29. ம.சா.அறிவுடை நம்பி, ஓவியக் கலை. ப.21
30. மேலது. ப.20
31. சி.சிவராமமூர்த்தி (மொ.பெ.ஆ), இந்திய ஓவியம். ப.9
32. மேலது. ப.1
33. பி.கோதண்டராமன், இந்தியக் கலைகள். ப.42

34. மேலது. ப.44
35. மேலது. ப.iii (முன்னுரையில் எடுக்கப்பட்டது)
36. பாரதியார், பாரதியார் கவிதைகள். ப.46
37. கொங்கு வேளிர், பெருங்கதை. பா.245
38. தமிழ் மொழியகராதி. ப.850
39. அகராதி குழு, க்ரியாவின் தற்காலத் தமிழகராதி. ப.390
40. ம.சா. அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.2
41. கழகத் தமிழகராதி. ப.249
42. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.2
43. அகநானூறு. பா.5-20
44. மேலது. பா.54-4
45. மேலது. பா.98-11
46. பதிற்றுப்பத்து. பா.68:17
47. நக்கீரர், நெடுநல்வாடை. பா.145-147
48. பரிபாடல். பா.19-46-55
49. சிறுபாணாற்றுப்படை. பா.70
50. புறநானூறு. பா.251
51. பதிற்றுப்பத்து. பா.61:3
52. பரிபாடல். பா.21:28
53. அகநானூறு. பா.5:20
54. நெடுநல்வாடை. பா.110-15
55. மதுரைக்காஞ்சி. பா.279-84
56. நெடுநல்வாடை. பா.147-49
57. மேலது. பா.147:49
58. கலித்தொகை. பா.114:12-14
59. பொருநராற்றுப்படை. பா.43
60. சிறுபாணாற்றுப்படை. பா.74
61. பட்டினப்பாலை. பா.35-39
62. நற்றிணை. பா.58:1-4
63. மேலது. பா.252:6-7
64. குறுந்தொகை. பா.9:2-3
65. மேலது. பா.13:1-2
66. அகநானூறு. பா.98:11-12
67. பதிற்றுப்பத்து. பா.88:28
68. மேலது. பா.68:16-17
69. பரிபாடல். பா.21:27-28

70. மேலது. பா.11:93-100
71. கலித்தொகை. பா.18:3-4, 24:15-16, 63:8, 142:4
72. மேலது. பா.142:8
73. காஞ்சி புராணம்-நகரேற்று, பா.219
74. அகநானூறு. பா.5:20-21
75. மணிமேகலை பா.2 – வரி-30-32
76. சிலப்பதிகாரம். மங்கல வாழ்த்துப் பாடல், வரி.28-29
77. சிலப்பதிகாரம், கடலாடு காதை, வரி.91-94
78. சிலப்பதிகாரம், கொலைக்களக் காதை, வரி.119-120
79. மணிமேகலை, 3:126-131
80. மேலது, 3:167-169
81. மேலது, 6:39-43
82. திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி. பா.166
83. மேலது. பா.180
84. மேலது. பா.1004
85. தோலாமொழித்தேவர், சூளாமணி, பா.1634
86. கொங்கு வேளிர், பெருங்கதை. பா.198-199
87. மேலது. பா.35-38
88. மேலது. பா.1-38,-190-9.
89. மேலது. பா.1-58,-40-5
90. மேலது. பா.267:40-44
91. மேலது. பா.3:5, 40-43
92. மேலது. பா.4:14, 3-4.
93. கம்பர், கம்பராமாயணம். பா.1
94. மேலது. பா.4020
95. மேலது. பா.789
96. மேலது. பா.5079
97. மேலது. பா.16
98. ஆண்டாள், நாச்சியார் திருமொழி. பா.507
99. South Inscriptions V:XIV.
100. மேலது.ப.20

101. சி.சிவராமமூர்த்தி, இந்திய ஓவியம். ப.28
102. மேலது. ப.29
103. மேலது. ப.35
104. மேலது. ப.41
105. கச்சியப்ப சிவாச்சாரியார், கந்தபுராணம். பா.8
106. சி.சிவமூர்த்தி, இந்திய ஓவியம். ப.68
107. மேலது. ப.76
108. சி.கோவிந்தராஜன், வளரும் கலைகள். ப.23
109. ம.சா.அறிவுடை நம்பி, ஓவியக் கலை. ப.23
110. அகராதிக்குழு, தமிழகராதி. ப.435
111. அகராதிக்குழு, க்ரியாவின் தற்காலத் தமிழகராதி. ப.309
112. அகராதிக்குழு, கழகத் தமிழகராதி. ப.249
113. சி.கோவிந்தராஜன், வளரும் கலைகள். ப.49
114. மேலது. ப.49
115. சிறுபாணாற்றுப்படை. பா.122
116. நற்றிணை. பா.118:7
117. மேலது. பா.146:8
118. மதுரைக்காஞ்சி. அடி.518
119. திருக்கழுமல மும்மணிக்கோவை. பா.10
120. மணிமேகலை, மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை, வரி.7
121. சிலப்பதிகாரம், 5:28-34
122. மணிமேகலை, 3:126-131
123. மேலது, 3:167-169
124. நற்றிணை. பா.146:8-10
125. சிறுபாணாற்றுப்படை. பா.122
126. கொங்கு வேளிர், பெருங்கதை. பா.112
127. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.12
128. சி.கோவிந்தராஜன், வளரும் கலைகள். ப.7
129. மேலது. ப.7
130. மேலது. ப.12
131. மேலது. ப.13
132. கே.எம்.வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் ,பக்.419-420
133. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.13

134. மேலது. ப.15
135. மேலது. ப.15
136. மேலது. ப.15
137. மேலது. ப.16
138. நற்றிணை. பா.
139. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.6
140. சீவகசிந்தாமணி. பா.1107
141. மேலுது. பா.2139
142. மேலது. பா.2370
143. ம.சா.அறிவுடை நம்பி, உள்ளங்கவர் ஓவியம். ப.18

## இயல் - 3

# நாட்டுப்புற ஓவியங்கள்

தமிழர்களின் தனித்துவமான நாட்டுப்புறக் கலைகளில் முக்கியமான இடத்தை வகிப்பது நாட்டுப்புற ஓவியங்கள் ஆகும். தமிழர்களின் தனித்துவமான கலையுணர்வை நாட்டுப்புற ஓவியங்கள் வெளிப்படுத்துகிறது. தமிழர்களின் கலையுணர்வு அவர்களின் வாழ்வியலோடு பிண்ணிப்பிணைந்து அவர்தம் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் வெளிப்படுகிறது. தமிழர்களின் கோலங்கள், சுடுமண் ஓவியங்கள், பச்சைக்குத்துதல் மரபு, பாய் பின்னும் கலை ஆகியவை அவர்தம் ஓவியக்கலை பிண்ணணியை வெளிப்படுத்துகிறது.

## 1 கோலம்

நாட்டுப்புறக் கலைகளில் கட்புலன் கலையாக விளங்குவது கோலம் ஆகும். தமிழ்நாட்டு மக்களின் பண்பாட்டு மரபாகக் கோலம் திகழ்கின்றது. கோலம் என்பது வீட்டு வாசலில் அல்லது வாயில்களில் அரிசிமாவு அல்லது வேறு பொடிகளைப் பயன்படுத்தி வரையப்படும் வடிவங்கள் ஆகும். கோலம் என்பது பொதுவாக அனைத்து அலங்காரக் கலைகளையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஒரு புள்ளியிலிருந்து உருவாகுவதே கோலம் எனலாம்.

கோலம் என்பதற்கு விக்கிபீடியா கீழ்க்காணும் நிலையில் விளக்கம் தருகின்றது. “Kolam (கோலம்) is a form of Drawing that is drawn by using rice flower/chalk/chalk powder/white rock powder often using naturally synthetically coloured powders in Tamil Nadu”[1] எனும் பகுதி வழியே கோலம் வெள்ளைப் பொடிகளாலும் வரையப்படும் கலையாகக் கருத முடிகிறது.

வரைவு வழி வடிவங்களாக இருந்த குறியீடுகளை அழகு, வடிவம், ஒப்பனை செய்தல் என்ற பொருளில் கோலம் என்று வழங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் சங்க கால இலக்கிய பாடல்களின் வழி நிறுவுகின்றன.

“கோல் அமை விழுத்தொடி விளங்க கைவீசி”[2]

மேற்கண்ட அடியில் அழகு என்ற பொருளில் ‘கோல்’ என்ற சொல்லாட்சி கையாளப்பட்டுள்ளது. ‘கோல்’ என்ற சொல்லாட்சியே கோலம் (கோல்+அம்) என்ற சொல்லாட்சி உருப்பெற காரணமாக அமைந்திருக்கலாம். வளைந்த வளையலுக்கு அடைமொழியாக வந்த கோல் என்ற சொல்லாட்சி பின் வளைந்து நெளிந்து வட்ட வடிவமாக வரையப்படும் கோலத்திற்கும் ஆகியிருக்கலாம் என கருதுவதற்கான சூழலைத் தோற்றுவிக்கின்றன.

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி ‘கோலம்’ என்பதற்கு, “கோலம்-(பொடியாலோ மாவாலோ மாவுக்கரைசலாலோ) தரையில் புள்ளிகள் வைத்து கோடுகள் இழுத்து, அவற்றை இணைத்து உருவாக்கும் அலங்கார வடிவம். Aecorative designs drawn on floor”[3] என்று குறிப்பிடுகின்றது. பொதுவாக கோலம் என்னும் சொல் அலங்கரித்தல் என்னும் பொருளில் பெரும்பான்மையாக வந்துள்ளமையைக் காணமுடிகிறது.

தமிழர்களின் வீட்டு வாசல்களில் தினம் தோறும் பூவாகப் பூக்கும் வகையில் கோலம் அமைந்துள்ளது. பழங்காலம் முதல் இன்று வரையிலும் தமிழர்களின் பண்பாட்டோடு தொடர்புடைய கலையாக கோலக்கலை விளங்குகின்றது. கோலம் என்பதற்கு அழகு எனப் பொருள் கொள்ளலாம். கோலக் கலையை சித்ரக்கலா எனவும் குறிப்பிடுவர்.

தமிழ்மொழி எழுத்து வடிவங்களைப் பெறுவதற்கு முன்பு கோலம் தோன்றியது. தொடக்க காலத்தில் கோலங்கள் கோடுகளாக தரைகளில் வரையப்பட்டுள்ளன. பின்பு பயிற்சிகளால் பல வடிவங்களில் புனையப்பட்டுள்ளன. அரசர்கள் போரில் வெற்றிப் பெற்று நாடு திரும்பி நகர்வலம் வரும்பொழுதும், உலா செல்லும் பொழுதும் பெண்கள் ஆரத்தி எடுத்து அந்நீரை வாசலில் உள்ள கோலத்திற்குக் கொண்டுச் சென்றுக் கொட்டும் பழக்கம் இருந்துள்ளது. இதனைப் போன்று மகாபாரதம், இராமாயணம் போன்ற புராண நூல்களிலும் கோலம் இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகின்றது.

கோலமிடுதல் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு விதமான பரிணாம வளர்ச்சியினைப் பெற்று வளர்ந்துள்ளன என்பதனை ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளின் வழி பெற முடிகின்றன. புள்ளிகள் இட்டு வரையும் முறையின் துவக்கத்தினை, “தமிழர்களின் குறியீடுகளாகப் பயன்படுத்திய ஓவியங்களில் புள்ளியிட்டுக் கொள்ளுதல் என்பது கற்கால மனிதன் தொட்டு காணப்படும் முறையெனலாம்”[4] என பவுன்துரை இராசு குறிப்பிடுவதிலிருந்து புள்ளியிட்டு வரைந்த முறை பழந்தமிழர்களிடம் பழங்காலம் தொட்டு இருந்து வந்துள்ளமை புலனாகிறது.

## 1.1 கோலமிட பயன்படும் பொருள்கள்

நம் முன்னோர்கள் கோலமிடுவதற்கு இயற்கையானப் பொருள்களையே பயன்படுத்தினர். பெரும்பாலும் தானியங்களும் பருப்பு வகைகளும் கோலமிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக அரிசி, உளுந்து, பயறு, மசூர் பருப்பு போன்றவைகள் பெரும்பான்மையாகக் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனோடு ரவை, மரத்தூள், தேங்காய்த் துருவல், உப்பு, காய்கறிகள், பப்பாளி பழம் போன்றவைகளும் பயன்படுத்தியுள்ளனர்.

கோலம் வண்ணமயமாக மிளிர்வதற்கு மஞ்சள் தூள், குங்குமம், பல வண்ணப்பொடி, செங்கற்பொடி, சுண்ணப்பொடி, கற்பொடி போன்றவைகளை வண்ண மூட்டிகளாகப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் பல்வேறு நிறத்தில் உள்ள இலைகள்,

பூக்களின் இதழ்கள் போன்றவை இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் வெண்கல்மாவு, வண்ணப்பொடிகள், காய வைத்த காப்பித்தூள், கரித்தூள், சவ்வரிசி, உப்பு, மிளகு, இலைகள், சந்தனப்பொடி, பப்பாளி பழம் போன்ற பொருள்கள் கோலம் போடுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கோலமிடும் பொருள்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்து வந்துள்ளன இதனை கு.சேதுராமன் பின்வரும் நிலையில் சுட்டுகின்றார். "சமயத் தொடர்பான, மக்கள் வாழ்வுத் தொடர்பான இக்கோலங்கள் கோலப்பொடிக்கல் எனப்படும் வெண்மையான கல்லிருந்து கிடைக்கும் மாவினையும், பச்சரிசி மாவினையும் வேறு சில வண்ணப் பொடிகளையும் கொண்டு போடப்படுகின்றன. பொதுவான வண்ணப் பொடிகள் பிற்காலத்தில் புகுத்தப்பட்டவையேயாகும். ஏனெனில் தூய்மையைக் குறிக்கும் வெண்மையே தொன்று தொட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது"[5] என்று கோலமிட பயன்படுத்தப்படும் பொருள்களின் நிலையினை எடுத்துக்காட்டுகின்றார். கோலமிடும் கோலப்பொடி வெண்மையாக இருப்பது தூய்மையின் குறியீடாகக் கொள்ளப்பட்டுள்ளது. பிற்காலத்தில் வண்ணமயமான பொடிகள் பயன்படுத்தப்பட்டு காண்பவரின் கண்களுக்கும் மனதிற்கும் மகிழ்ச்சியைத் தருவதாக அமைகின்றது.

## 1.2 கோலமிடும் இடங்கள்

கோலமிடும் இடங்களை நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர். முதல் நிலையில் வீட்டுவாசல், அடுத்ததாக பூசைஅறை, சமையல் அறை, துளசி மாடம், மாட்டுத்தொழுவம் போன்ற இடங்களில் அன்றாடம் கோலம் இட வேண்டும். அவ்வாறு கோலமிட்டால் இவ்விடங்கள் தூய்மை அடையும், செல்வம் பெருகும் அதையும் தாண்டி இறைவனின் வரவும், அருளும் கிடைக்கும், மகிழ்ச்சியும் பெருகும் மேலும் கோயில்களின் வாசல்கள், மங்கலச்சடங்குகள் நடைபெறும் இடங்கள் குறிப்பாக மணவறை போன்ற இடங்களில் கோலம் போடப்படுகிறது. இன்றளவு பணிபுரியும் இடங்களின் வாசல்களிலும் கல்லூரி, பள்ளி விழாக்களின் போதும் கோலம் போடப்படுகின்றது.

## 1.3 கோலம் போடும் நாளும் பொழுதும்

வீட்டிற்குச் செல்வத்தினை பெருக வைக்கும் சக்தி கோலத்திற்கு உண்டு. அவ்வகைக் கோலங்களை பெண்கள் விருப்பத்தோடு வீட்டு வாசலில் இட வேண்டும். சூரியன் உதிக்கும் முன் எழுந்து வாசலில் பசுஞ் சாணம் அல்லது மஞ்சள் கலந்த நீரினைத் தெளித்தப் பின்பு கோலமிட வேண்டும். புது தண்ணீரை மட்டுமே பயன்படுத்துதல் நலம் பயக்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையாகக் கோலமிட்டால் செல்வ வளம் பெருகும்.

ஞாயிறு - செந்தாமரைக் கோலம்

திங்கள் - அல்லி மலர் கோலம்

| | | |
|---|---|---|
| செவ்வாய் | - | வில்வ இலைக் கோலம் |
| புதன் | - | மாவிலைக் கோலம் |
| வியாழன் | - | துளசி மாடக் கோலம் |
| வெள்ளி | - | தாமரைக்கோலம் |
| சனி | - | பவள மல்லிக் கோலம் |

இந்நாட்களில் இது போன்ற கோலமிட்டால் நன்மைகள் பெருகும் என்றும் பௌர்ணமி நாளன்று தாமரைப்பூ கோலமிட்டால் நலம் பயக்கும் என்றும் நம்புகின்றனர்.

## 1.4 கோலமிடும் விதிமுறைகள்

கோலமிடும் பொழுது சில வகையான விதிமுறைகளை கைக்கொளல் வேண்டும்.

- ❖ சூரியன் உதிக்கும் முன் கோலமிட வேண்டும்.
- ❖ இடக்கையால் கோலமிடக் கூடாது. வலது கையால் மட்டுமே கோலமிட வேண்டும்.
- ❖ கோலத்தில் தவறுகள் ஏற்பட்டால் காலால் அழிக்கக் கூடாது, கையால் மட்டுமே அழிக்க வேண்டும்.
- ❖ அமர்ந்து கோலமிடல் கூடாது, குனிந்து நிமிர்ந்து கோலமிட வேண்டும்.
- ❖ அமாவாசை, திதி நாள் அன்று கோலமிடக் கூடாது.
- ❖ வேலையாட்களை கொண்டு கோலமிடக் கூடாது. அவ்வாறு கோலமிட்டால் பலன் அனைத்தும் அவரையேச் சாரும்.
- ❖ மங்கல நிகழ்வுகளுக்கு ஒற்றைக் கோடு கோலம் போடக் கூடாது. அமங்கல நிகழ்வுகளுக்கு இரட்டைக் கோடு கோலம் போடக் கூடாது.
- ❖ கைம் பெண்கள் கோலமிடக் கூடாது.
- ❖ கரிக் கட்டையால் கோலமிடக் கூடாது. மீறினால் கடன் பெருகும்.
- ❖ வாசலில் தெய்வ உருவங்களை கோலமிடக் கூடாது. ஏனென்றால் காலால் மிதிபட கூடாது என்பதால், பூஜை அறையில் மட்டுமே இட வேண்டும்.

போன்ற பல வகையான நம்பிக்கைகள் தமிழர்களிடம் கோலத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன.

## 1.5 கோலமிடும் முறைகள்

கோலமிடும் முறை தமிழகத்தில் குறிப்பாக கிராமங்களில் சிறப்பாகவே கையாளப்படுகின்றது. கோலமிடுவதற்கு முன்பு, வாசலை தூய்மைச் செய்து நீர் மற்றும்

பசுஞ்சாணம் இட்டு மெழுகி, புழுதியினை அடக்கி தரைப்பகுதியினை பக்குவப்படுத்துவார்கள். பின்பு பெருவிரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் சிறிதளவு கோலப்பொடியை எடுத்து விரல்கள் நிலத்தில் படாமல் நிலத்திற்கு அரையங்குல உயரத்திலிருந்து ஏற்கனவே எண்ணியபடியான வடிவம் கிடைக்கும் வகையில் பொடியைத்தூவி அழகான கோலத்தினை வடிவமைப்பார்கள்.

வாசலை விடுத்து இறுக்கமான தரையில் கோலம் போடுவதில் மற்றொரு முறையைக் கையாளுகின்றனர். அரிசியை நீர் விட்டு பசை போல் அரைத்துப் பின்னர் வேண்டிய அளவு நீர் விட்டுக் கரைத்து, அதை ஒரு துணியில் தோய்த்துக் கொண்டு விரல்களுக்கிடையே மெதுவாக வைத்து அழுத்த விரல்களில் வடியும் மாக்கரைசலினால் வரைவர். இக்கோலம் வெண்மை நிறத்தில் அழகுபட காட்சியளிக்கும். பொடிகளில் வரையும் கோலம் அடுத்த அடுத்த நாளில் அழிந்து விடும். ஆனால் இம்மாக்கோலம் நீண்ட நாட்கள் நிலைத்து நிற்கும்.

வீட்டின் முன் வெள்ளை அல்லது பல நிறமாவினால் புள்ளிகள் வைத்து அவற்றை இணைத்து வரையப்படும் அலங்கார வடிவம் வண்ணக்கோலம் ஆகும். பச்சரிசி மாவில் புள்ளி வைத்து இழை இழையாக நாம் போடும் கோலம் தமிழ் கலாச்சார பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகும். இருள் பிரியாத முன்பனிக்காலையில் எழுந்து வெள்ளை மற்றும் வண்ணப் பொடிகளில் வாசலில் வடிவமைக்கும் அலங்கார கலையே கோலம் ஆகும். தினந்தோறும் வாசலில் கோலம் போடுவது வீட்டிற்கு நல்லதொரு மங்கலத்தினையும் அழகினையும் தருகின்றது. மேலும் வேண்டாத எண்ணங்களை நீக்கி மனதை ஒருமுகப்படுத்தும் சக்தியும் கோலத்துக்கு இருப்பதாக நம்பப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் கோலம் கலையாகவும் பயன்பாட்டு களமாகவும் விளங்கியது. வாசலில் பசுவின் சாண நீரை தெளித்து அரிசி மாவினால் கோலங்களை தீட்டியுள்ளனர் நமது முன்னோர்கள். இதற்கு காரணம் என்னவென்றால் மண்ணில் ஊரும் உயிரினங்களுக்கு கோலமாவு உணவாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியதன் விளைவே இதற்கு காரணமாகும்.

## 1.6 கோலம் இடுவதால் ஏற்படும் உடல் பயன்

கோலம் போடுவது ஓர் கலையாக இருப்பினும் இக்கலை உடலுக்கு சிறந்த உடல் பயிற்சியாக விளங்குகின்றது. பெண்கள் காலை மற்றும் மாலை நேரங்களில் வாசலை சுத்தம் செய்து கோலமிடுவது நல்லதொரு உடல் பயிற்சியாகும். நீண்ட நேரம் குனிந்தும் நிமிர்ந்தும் விரல்களைப் பயன்படுத்தியும் கோலம் தீட்டுவது சுவாசப் பயிற்சியாகவும், எலும்புகளுக்கு வலுவூட்டும் வண்ணமாகவும் அமைகிறது.

கோலமிடுதலின் தொடக்கமே நன்மை பயக்கும் வண்ணமாகவே உள்ளது. கோலமிடுதல் முன்பு நாம் வீட்டுவாசலைத் தூய்மைப்படுத்துவதில் சில மருத்துவ பயன்கள் உண்டு. அதிகாலையில் துயில் எழுவது உடலிற்கும் உள்ளத்திற்கும் முதல்

நிலையில் நன்மை தரும். காலையில் எழுந்து வாசலில் நீர் தெளித்து சாணம் இடுவது, மெழுகுவது தூசி பறக்கும் மண்ணைத் திடமாக்குவதோடு கோலம் கலையாமல் இருக்க உதவுகிறது. ஆனால் இதில் மருத்துவப் பயன் நிறைந்திருக்கின்றது. சாணம் ஒரு கிருமி நாசினி. இது வீட்டு வாசலில் உள்ள கிருமிகளைப் போக்கித் தூய்மையையும், சுகாதாரத்தையும் ஏற்படுத்துகிறது.

கோலத்தின் பயன்பாட்டினை அடுத்த நிலையில் நோக்கும் பொழுது பெரும் வியப்பினை அளிக்கின்றது. காலையில் குனிந்து நிமிர்ந்து கோலம் போடுவது உடலில் இருக்கும் இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது.

நம் நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் விளக்கும் கலைகளில் கோலக்கலையும் ஒன்று. பெண்களின் தனிப்பெருமையை அடையாளமிட்டுக் காட்டும் உன்னதக் கலையாக கோலம் விளங்குகின்றது.

‘கோலம்’ என்றால் அழகு என்பது பொருளாகும். கோலம் என்ற சொல்லினை நாம் அழகுக்கோலம், சுமங்கலிக்கோலம், திருக்கோலம், இளமைக்கோலம், துறவுக்கோலம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் காணப்பட்டாலும் ஆண்டாள் காலத்தில் தான் வாசலில் இடப்படும் கோலம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. இதனை,

“வெள்ளை நுண்மணல் கொண்டுசிற்றில்

விசித்திரப்பட வீதிவாய்த்

தெள்ளி நாங்க ளிழைத்த கோலம்”[6]

என்ற பாடலடிகள் நிறுவுகின்றன.

இந்நிலையில் சூரியன் தட்சிணாயணத்திலிருந்து உத்தராயணத்திற்கு நகர்கிறது. இந்த சக்தி மாற்றத்தின் போது தேவையான அறிவு, ஞானம் இருந்தால், அப்போது ஏற்படும் சக்தி சூழ்நிலையை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே மார்கழி மாதம் கோலமிடுவது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

பொழுது புலர்வதற்கு முன்பு கோலமிடுவதால் பின்வரும் நிலைப் பயன்கள் ஏற்படுகின்றன,

- ❖ “வீட்டைத் தூய்மையாகப் பாதுகாப்பதோடு எப்போதும் திருமகள் உறைந்திருப்பாள் என்ற நம்பிக்கை.
- ❖ வீடுகளிலிருந்த தீயசக்தியை அகற்றி நமக்குச் சகல மங்கலம் உண்டாக,
- ❖ குடும்பத்தில் கொண்டாடும் பண்டிகைகளையும், சுபதினங்களையும் மற்றவற்குத் தெரிவிக்க,
- ❖ நம் கலாச்சாரப் பண்பாட்டினை வெளிப்படுத்த,

- ❖ கோலம் போடுவதன் மூலம் கற்பனைச் சக்தியையும் மேம்படுத்த,
- ❖ கோலம் போடுவதன் மூலம் ஞாபகச் சக்தியையும் அதிகப்படுத்த,
- ❖ கோலக் கலை மூலம் அறப் பண்புகளை வளர்க்க”[7]

போன்றவைகளின் காரணமாக பெண்கள் வாசலில் கோலம் போடுகின்றனர்.

கோலம் ஒருவகை யந்திரமாக கருதப்படுகின்றது. அதானலேயே இவை வீட்டின் வாசல் பகுதியில் வரையப்படுகின்றது. இதனை, “கோலம் தேவ பிதுர்க்கள் விஷமாய் நாடோறும் அரிசிமாவால் வீட்டின் முற்றத்தில் பல வகை யந்திரவுருக்களால் போடப்படுவதாம். இது யந்திர வடிவாய்ப் பல தேவ மந்திர எழுத்துக்கள் அடைக்க இடமுள்ளதாயும், எண்கோணம், அறுகோணம், முக்கோண வடிவங்களாவும் இடப்படுவது. இவ்யந்திர வுருவமைந்த கோலங்களைப் பிதுர்க்கள் கண்டு அஞ்சி வீட்டுள் புகாது.”[8] என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகிறது.

மார்கழி மாதத்தில் பூமத்திய ரேகையில் பல மாற்றங்கள் நிகழ்வதாகக் கூறுகின்றனர். டிசம்பர் முதல் மே வரை சூரியன் தெற்கிலிருந்து வடக்கிற்கும், ஜுன் முதல் நவம்பர் வரை வடக்கிலிருந்து தெற்கிற்கும் சூரியன் ஓட்டம் மாறுகின்றது. மார்கழி மாதம் பூமியின் சக்தி நிலையில் பல மாற்றங்கள் நிலவுகிறது. மேலும், கோலமிடல் ஒரு வகை யோகாசனமும் ஆகும். இடுப்பை வளைத்து, கால்களை நேராக்கி, தலையைக் குனிந்துக் கோலமிடுதல் யோகாசனமாகும். உடலை ஆரோக்கியமாக வைக்கக் கோலமிடுதல் பயன்படுகின்றது.

கோலமிடுதல் உடலை மட்டும் நலமுடன் வைக்காது உள்ளத்தினையும் நலமுடன் வைக்க வழிவகைப் புரிகின்றது. தெளிந்த சிந்தனையாளராகவும், கூர்மையான சிந்தனைத் திறனையும் கோலமிடுதல் தூண்டுகின்றது. கோலத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை, ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளி என கோடுகளால் இணைக்கும் கோலம் சிந்தனையை ஒரு நிலைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சிந்தனைச் சிதறல்களை குறைக்கும் ஒரு பயிற்சியாக உள்ளது. தினந்தோறும் கோலமிடுவதால் தெளிந்த சிந்தனையாளராக உருவாக்கம் பெற கோலம் வழிகாட்டுகின்றது எனலாம்.

புள்ளிக் கோலம் போடுவது கூர்ந்த கண் பார்வைக்குப் பயிற்சியாக உள்ளது. புள்ளியைக் கூர்ந்து கவனிப்பதால் கண்பார்வை அதிகரிக்கின்றது. உடல், மனம், சிந்தனை இவற்றிற்குப் பயனுள்ள வகையில் கோலமிடுதல் அமைவதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். கோலம் என்பது மனிதனின் உடலுக்கு நன்மை அளிக்கும் வேளையில் பறவையினங்களுக்கும் உணவாகவும் பயன்படும் விதமாகவும் அமைகின்றது.

தமிழர்களின் தொன்மையினையும் கலாச்சாரத்தின் பெருமையையும், எடுத்துக்காட்டுவதோடு கோலமிடுதல் நிற்பதில்லை, மாறாக மகிழ்ச்சியைப் பரிமாறும்

சின்னமாகக் கோலம் திகழ்கின்றது. மேலும் எதிர்காலச் சந்ததியினர்க்கு பல்திறனை வளர்க்கும் பாங்கில் கோலம் வழிகாட்டுகின்றது. சிறு வயதில் பிள்ளைகளுக்கு எழுத்துகளின் வளைவு நெளிவுகளை கற்றுக் கொடுப்பதற்காகப் புள்ளிகளை இணைக்கச் சொல்லி பயிற்சிக் கொடுப்பது தான் கோலம் போட கற்றுக்கொள்வதற்கான முதற்படி. எழுத கற்றுக் கொடுப்பதோடு கோலம் போடவும் பிள்ளைகளுக்குப் படிப்படியாக கற்றுக் கொடுத்து அவற்றுக்கு வண்ணப் பொடிகளைப் பயன்படுத்தி அழகுப்படுத்தவும் அவர்களை ஊக்கப்படுத்தினால், வீட்டு வாசலில் கோலம் போடும் நமது பாரம்பாரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்லுவது மிகவும் எளிதாக இருக்கும்.

## 1.7 கோலம் பற்றிய கருத்தும் காரணமும்

காலங்காலமாகத் தொடர்ந்து வரும் கோலமிடல் கலை கருத்தும், காரணமும், தத்துவார்த்தமுமாக இருப்பதை அறிய முடிகின்றது. கோலம் என்பது கண்டு ரசிக்கக் கூடிய கோடுகள் அல்ல. ஒவ்வொரு கோலத்திற்கும் பல அர்த்தங்கள் நிறைந்துள்ளன. மனிதன் உயர்ந்த வாழ்வினை அடைய ஒழுக்கத்தினை உயிராகக் கொள்ள வேண்டும். இதனை வள்ளுவர்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.”[9]

என்ற குறட்பாவில் ஒழுக்கத்தினை உயிர்போல் காட்டுகிறார்.

ஒழுக்கம் என்பது எப்படி ஒரு மனிதனின் வாழ்க்கையைத் தர்ம வாழ்க்கையாக மாற்றுகிறதோ அதுபோலத்தான் கோலங்களுக்கான புள்ளிகளும் கோலத்தினை ஒழுக்கமுடையதாக மாற்றுகின்றது. கோலத்தில் உள்ள புள்ளிகள் ஒழுக்கத்தின் மறுவடிவமாகக் கொள்ளப்படுகின்றது.

அரிசிமாவு கோலம் உயிரினங்களுக்கு தானம் செய்யும் நோக்கில் பின்பற்றப்படுகின்றது. அரிசியைத் தவிர்த்து மண்ணால் போடுகின்ற கோலத்திற்குக் கூட தத்துவம் இருக்கிறது. வாசனை திரவியங்களாலும், பாலும், பருப்பும், நெய்யும் உண்டு வளர்த்த உடம்பு இறந்த பின் மண்ணாக மாற்றம் பெறும் என்பதை உணர்த்தும் பொருட்டு மண் கோலம் அமைகிறது. வாழ்வியல் தத்துவங்களைப் போதிக்கும் கலையாகக் கோலமிடல் விளங்குவதைக் காணமுடிகிறது.

அதிகாலையில் பெண்கள் துயில் எழுந்து கோலம் இட்டால் வீட்டில் சுப நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும். அவர்களின் இல்லந்தோறும் நன்மைகள் தேடி வரும். குறிப்பாக மார்கழி மாதம் கோலமிடுவது உடலுக்கு நன்மை பயக்கும். இதனை இன்றுள்ள மருத்துவ உலகம் ஏற்றுக் கொள்கின்றது.

மார்கழி மாதப் பனிக்காற்று உடம்பெல்லாம் குளிர்ந்தாலும் உடலுக்கு நலன் விளைவிக்கும் காற்றாகும். மார்கழி அதிகாலையில் வளிமண்டலத்தில் பூமியை ஒட்டிய காற்று மண்டலத்தில் $0^2$ , $0^3$ என்று விஞ்ஞானிகள் குறிப்பிடும் ஓசோன் வாயு எனப்படும் தூய ஆக்ஸிஜன் நிரம்பிய காற்றை சுவாசிக்க முடிகிறது. தூய ஆக்ஸிஜனை சுவாசிப்பதன் பயன் உடல் முழுவதும் நலம் அளிக்கும். இதனால் கோயில்களில் மார்கழி மாதம் அதிகாலையில் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. வீடுகளைத் தூய்மை செய்து கோலமிட்டால் லட்சுமி கடாட்சம் அவ்வீட்டுக்குத் தானே வந்து சேரும்.

மார்கழியை அடுத்து வருகிற தை மாதம் அந்தக் குடும்பத்தில் மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும், அப்படி சுப நிகழ்ச்சிகள் போது தடைகள் ஏற்படாமல் இருக்க ஸ்ரீமகாலட்சுமி அருள் புரிவாள் என்பது நம்பிக்கையாகக் கொள்ளப்படுகிறது.

வீட்டு வாசலில் கோலமிடுவதால் மும்மூர்த்திகள் அருள் கிடைக்கும். நாள்தோறும் கோலமிடும் பொழுது அவ்வீட்டிற்கு மும்மூர்த்திகளின் அருள் கிட்டும். கோலமாவின் நிறம் வெண்மை. இந்நிறம் மும்மூர்த்திகளின் ஒருவரான பிரம்மாவைக் குறிக்கும். எனவே வெண்மை நிறப் பொடியால் கோலமிடுவது பிரம்மாவை வீட்டிற்கு அழைப்பதாகும். கோலம் இட்ட பிறகு அந்தக் கோலத்தைச்சுற்றி காவி நிறமான செம்மை நிறத்தை வரையும் போது சிவபெருமானை அழைப்பதாகிறது. பின்பு கோலமிட்டு அழகு சேர்த்து பசுஞ்சாணத்தையும், அச்சாணத்தின் மீது மஞ்சள் நிற பூசணிப் பூவை வைப்பது ஸ்ரீமகாலட்சுமியையும், ஸ்ரீமகாவிஷ்ணுவையும் அழைப்பதாகவும் அமைகிறது. இவ்வாறாக வாசல் தெளித்து கோலமிடுவது சிவன், திருமால், பிரமன் என்ற மும்மூர்த்திகளை வீட்டிற்கு அழைப்பதாகிறது. இதனால் மும்மூர்த்திகளின் அருளும் ஆசியும் கோலமிடும் வீட்டினருக்கு கிடைக்கப்படுகிறது.

கோலம் இடும் பொழுது இரட்டைக் கோடுகள் உடையதாகப் போட வேண்டும். ஒரு கோடு மட்டும் வரைந்து கோலமிடுவது அசுபகாரியங்களாக அமைந்து விடும். தெற்குத் திசை பார்த்தபடி கோலத்தை தொடங்குதலும் கூடாது, கோலத்தை நிறைவு செய்தலும் கூடாது.

தெய்வங்களின் சின்னங்களை வாசலில் கோலமிடுதல் கூடாது. ஏனெனில் அக்கோலங்களை மிதிப்பவர்க்கு பாவம் வந்து சேரும். அதனால் தெய்வக் குறியீட்டுக் கோலங்களை பூஜை அறையில் மட்டும் இட வேண்டும். நாள்தோறும் கோலம் போட்டால் நன்மை கிடைக்கும். வெள்ளிக்கிழமைகளிலும், பௌர்ணமி நாளிலும் தாமரைப் பூ கோலம் போட்டால் லட்சுமிதேவியின் அருள் கிடைக்கும்.

குழந்தைப் பேறு கிடைக்காதவர்கள் வீட்டின் வாசலில் தினந்தோறும் கோலம் போட வேண்டும். அவ்வாறு செய்தால் அக்கோலத்தை களைத்து விளையாட ஒரு

மழலை பிறக்கும் என்பது முன்னோர் வாக்கு. எனவே கோலம் மனிதர் வாழ்வியலுடன் தொடர்புடையதாகவே இடம்பெறுகின்றது.

## 1.8 கோலங்களின் வகைகள்

வீட்டிற்கு அழகையும், காண்பவரின் கண்களுக்கு அழகியலை ஊட்டும் கோலங்கள் பல வகைகளில் இடப்படுகின்றன. அவையே,

- கம்பிக் கோலம்
- புள்ளிக் கோலம்

இவை இரண்டும் வரையப்படும் முறையை வைத்துப் பிரிக்கப்படுகின்றன.

தினந்தோறும் இல்லங்களின் முகப்பை அலங்கரிக்கும் கோலங்கள் பெண்களின் கற்பனைத் திறனையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளன. அவற்றில் மேலும் சில வகைகளும் காணப்படுகின்றன.

- நெளி கோலம்
- கோட்டுக்கோலம்
- இழைக்கோலம்
- ரங்கோலி
- சிக்குக்கோலங்கள்

போன்ற வகைக் கோலங்களை இன்றளவும் காணமுடிகின்றது. தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றும் வகையில் இக்கோலங்கள் இடம்பெறுகின்றன. கோலங்களில் பலபல வகைகள் இருக்கின்றன.

- பாகல் இலைக் கோலம்
- நேர் விளிம்பு கோலம்

போன்றவைகளைக் காண முடிகின்றது.

கோலங்களில் பல வகைப்பாடுகள் உண்டு. இவற்றையெல்லாம் நம் தமிழர்கள் மார்கழி மாதத்திலும், குடும்ப விழா மற்றும் கோவில் திருவிழா, பொங்கல், தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ், தமிழ், ஆங்கிலப் புத்தாண்டுகள் இன்னபிற சிறப்பு பெற்ற நாட்களில் பல வகையில் கோலங்களை இட்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

கோலத்தின் வகையினை கு.சேதுராமன் அவர்கள் வகைப்படுத்துகையில்,

- “புள்ளிக் கோலங்கள்
- வரிக் கோலங்கள்

- இசைக் கோலங்கள்
- பூக் கோலங்கள்
- பாய் வடிவக் கோலங்கள்
- சர்ப்பக் கோலங்கள்”[10]

என்று வகைப்படுத்துகின்றார்.

நம் தமிழக பெண்கள் பெருமளவில் இரு வகைக் கோலங்களையே அதிக அளவில் பயன்படுத்தி வந்துள்ளனர். அவை

- கம்பிக்கோலம்
- புள்ளிக்கோலம்

கம்பிக் கோலம் எளிமையாக வரையப்படும் கோலமாகும். இக்கோலம் பல நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பாம்புக் கம்பிக்கோலம்
- தாமரைக்கோலம்

போன்ற வகைகளில் பெருமையாக வரையப்படுகின்றன.

அடுத்த வகையில் உள்ள புள்ளிக் கோலங்கள் பல வகைகளில் வரையப்படுகின்றது.

- புள்ளிகளை இணைத்தல்
    - தொட்டில் கோலம்
- புள்ளிகளிடையே வரைதல்
    - தேர்க்கோலம்
    - துளசிமாடம்
    - குத்துவிளக்குக் கோலம்
- ஊடு புள்ளிக் கோலங்கள்
    - புள்ளிகளை இணைத்தல்
    - வில்வ இலைக்கோலம்
    - பாகல் இலைக்கோலம்
    - புள்ளிகளிடையே வரைதல்

போன்ற பல நிலைகளில் கோலங்களின் வகைகள் விரிந்துச் செல்கின்றன.

### 1.8.1 ரங்கோலி

கோலம் என்பது நம்முடைய பாரம்பரியம். அரிசி கோலம், மாவு கோலம், பூக்கோலம் இதனைத் தொடர்ந்து இன்றளவு ரங்கோலி கோலம் பெருமளவில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இன்றைய பெண்களிடம் பெருமளவில் ரங்கோலி கோலம் நிலைக் கொண்டுள்ளது. ரங்கோலி கோலங்கள் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தொடங்கி மெல்ல இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் பரவ தொடங்கியுள்ளது. வண்ணமயமான பொடிகளைக் கொண்டு அழகியல் தன்மைப்பட வரைந்து காட்ட ரங்கோலி கோலத்தை வரைகின்றனர். இன்றுள்ள பெண்கள் விழாக்காலங்களில் பெருமளவில் ரங்கோலி கோலங்களையே விரும்புகின்றனர். இவற்றில் பல வகைகள் இருக்கின்றன.

- மலர் ரங்கோலி
- அடுக்குப் பூ ரங்கோலி
- மயில் கோலம்
- நட்சத்திரக்கோலம்

போன்ற வடிவங்களிலும் பல வண்ணங்களிலும் ரங்கோலி கோலம் இடம் பெறுகின்றன.

கோலங்கள் புள்ளிக்கோலங்கள், வரிக்கோலங்கள் மற்றும் இசைக்கோலங்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

கோலங்களின் வகையும் வடிவமும் காரண காரியத்தோடு அமைந்துள்ளதை கு.சேதுராமன் எடுத்துரைக்கையில் "புள்ளிக்கோலம் என்பது வரிசையாகப் புள்ளிகள் வைத்து அவற்றைக் கோடுகள் மூலம் அடைப்பதாகும் இக்கோடுகள் வளைவுகளாகவும் நேர் கோடுகளாகவும் அமைக்கப்படும். வரிக்கோலம் என்பது பல விதமான குறியீடுகளைக் கொண்டிருக்கும். இசைக்கோலம் என்பது இசைச்தொடர்பான குறியீடுகளை உடுக்கை, வீணை போன்றவை கொண்டிருக்கும். இவை தவிர பூக்களைக் குறிக்கும் பூக்கோலங்களும் பாய் வடிவக் கோலங்களும் சர்ப்பக் கோலங்களும் போடப்படுகின்றன. பொதுவாக இரண்டு சர்ப்பங்கள் ஒன்றோடொன்று பிணைத்திருப்பது போன்றும் போடப்படும். இம்மாதிரிச் சிற்பங்களும் கோயில்களில் காணக்கிடக்கின்றன. சர்ப்பக்கோலங்கள் பொதுவாக நாகபஞ்சமி விழாவின் போதும் அம்மன் திருவிழாக்களின் போதும் போடுவது மரபாக இருந்து வருகின்றது. சிலநேரங்களில் நாக தோஷத்திலிருந்து விலக்கு பெறுவதற்கு இக்கோலம் போடலாம். ஒன்றோடொன்று பிணைந்துள்ள சர்ப்பக்கோலம் வளமையைக் (fertility) குறிக்கும் குறியீடாகும்"[11] என்கிறார். மேற்காணும் தரவுகளின் வழியே கோலங்களின் வகைகளையும் அதற்குரிய காரணம் மற்றும் நம்பிக்கைகளையும் அறிந்துணர முடிகின்றது. ஒவ்வொரு கோலங்களும், காரணகாரியத்தோடும், நம்பிக்கையின் அடிப்படையிலும் போடப்படுகின்றது.

## 1.9 தமிழர்களின் வாழ்வில் கோலம்

தமிழர்களின் வாழ்வில் கோலம் தவிர்க்க இயலாத கலைக்கூறாகும். நம்பிக்கைகளின் அடிப்படையிலும் சடங்குகளின் நிலைப்பாட்டிலும் கோலம் வரையப்படுகின்றன. கோலம் வரைவதின் காரணங்களையும் நோக்கங்களையும் உற்று நோக்கும் பொழுது அவை வாழ்வியல் தொடர்பாகவே இடம்பெறுகின்றன.

மக்கள் வாழ்வில் கோலம் முக்கியத்துவம் வாய்ந்ததை கு.சேதுராமன் கூற்று வழியே தெள்ளத் தெளிவாகக் காணமுடிகின்றது. "வீட்டு வாசலின் முன்பு விடியற்காலையில் போடப்படும் அலங்கார வடிவங்களையும் முக்கிய சடங்குத் தருணங்களில் வீட்டினுள்ளும் பூஜை அறைகளிலும் போடப்படும் உருவ வடிவங்களையும் சுவர்களில் வரையப்படும் வரைகோட்டு வடிவங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. அடிப்படையிலேயே கோலம் என்பது ஒரு புனிதவெளியைக் (space) குறிக்கும் ஒரு மண்டலமாகும். பொதுவாகக் கோலங்கள் தீய சக்திகளை வீடுகளுக்குள் அல்லது ஆலயங்களுக்குள் வரவிடாது தடுக்கின்றது. ஆன்ம பலத்தினைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகின்றது. யந்திரங்களும் தீய ஆவிகள் நம்மைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து வெளியேற்றுவதற்காகவே இக்காலத்தில் பெரும்பான்மையான வீடுகளில் வைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது"[12] இதன் வாயிலாக கோலங்களை வீட்டின் வாசலில் இடுவது நன்மை பயக்கும் என்பதை உணர முடிகின்றது. கோலம் புனிதத்தன்மை வாய்ந்தது என்பதையும் இங்குச் சுட்டப்பட்டுள்ளது. நம்பிக்கைகள் சடங்குகளோடு கோலம் இணைத்துக் காணப்படுவதை அறிய முடிகின்றது.

வழிபாடு என்பது நம் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகும். அவ்வகைத் தன்மைக் கொண்ட வழிபாட்டில் கோலம் தவிர்க்க இயலாத இடத்தினைப் பெறுகின்றது. தூய்மையின் அடையாளமாகவும் மனத்தில் ஒளியை ஏற்படுத்தும் சின்னமாகவும் கோலம் விளங்குகின்றது. வழிபாடு நடத்தும் பொழுது கோலம் முதன்மை இடம் பெறுகின்றது.

முக்கிய திருவிழாக்களின் போதும் சடங்குகளின் போதும் தரையில் கோலமிட்டு அதன் மீது விளக்கினை வைப்பது தமிழகத்தில் வழக்கமாக இருந்து வருகின்றது. இங்கே கோலம் மனதில் ஒளி கொடுக்கக்கூடிய ஒரு யந்திரமாக நினைத்து பயன்படுத்தபட்டிருக்கக் கூடும் எனக் கருதவும் வாய்ப்பளிக்கிறது.

பொங்கல் பொங்கும் போது கூட கோலத்தின் மீது அடுப்பு வைத்துப் பொங்கல் பானை வைப்பதைக் காணலாம். இங்கு கோலம் புனிதம் அல்லது தூய்மையான வெளியைக் குறிப்பதெனக் கொள்ளலாம். பூஜை அறைகளில் கோலம் போட்டு அவ்விடத்தைப் புனிதமாக்கி அதன் மீது பூஜைக்குரிய பொருட்களை வைத்து வழிபடும் முறையை இன்று நாம் காணலாம். விழாக்களிலும், வழிபாட்டிலும் கோலம் இடம் பெறுவதைத் தெளிவாகக் காணமுடிகிறது.

கோலம் ஒரு வீட்டின் மகிழ்ச்சியின் முகவரியாகும். பிறப்பு முதல் இறப்பு வரையும் நடைப்பெறும் அனைத்து இன்ப ,துன்ப நிகழ்வுகளிலும் கோலம் இடம்பெறுகின்றன. அதிக அளவில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் கோலம் விளங்குகின்றது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது போல ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சியை அவர் தம் வீட்டு வாசலில் இடம் பெற்றுள்ள கோலத்தினை வைத்து அறிந்துணரலாம். கோலம் மகாலட்சுமியின் (செல்வம்) குறியீடாகக் கொள்ளப்படுகின்றது.

கோலம் மக்களுக்கு அவர் தம் வீடுகளுக்கு தீய ஆவிகளிடமிருந்து பாதுகாப்புத் தருவதாக மக்கள் நம்புகின்றனர். ஒரு குடையானது எவ்வாறு கொடுமையான வெயிலைத் தானே தாங்கிக் கொண்டு தன்னைப் பயன்படுத்தும் மனிதனுக்கு நிழலைத் தருகின்றதோ அது போன்றே கோலமானது தீய ஆவிகளின் கண்களைத் கவர்ந்து அவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டு வீட்டிற்குள் செல்லவிடாமல் அவ்வீட்டாரைக் காக்கின்றது என்று நம்பபடுகிறது.

ஒரு வீட்டின் முன் போடப்படும் கோலம் மங்கலச் சின்னமாகவும் கிராமங்களில் கருதப்படுகின்றது. சான்றாக ஒரு குறிப்பிட்ட வீட்டில் உள்ளோர் இயல்பாகவும், மகிழ்ச்சியாகவும் தங்களது அன்றாடப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதைக் குறிக்கும் குறியீடாக அவ்வீட்டின் முன் உள்ள கோலம் விளங்குகின்றது. அவ்வீட்டின் முன் கோலம் இல்லையெனில் அவ்வீட்டில் ஏதோ ஒரு துக்க நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படுகின்றது. இதன் வழி கோலம் மனிதர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் மங்கலச் சின்னமாக விளங்கும் என்பதை அறிந்துணர முடிகின்றது. குடும்ப மகிழ்வினை அடையாளப்படுத்தும் தன்மை கோலத்திற்கு உண்டு என்பதினை உய்த்துணர முடிகிறது. தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்திலும், கேரளத்திலும் கோலம் மகாலட்சுமியின் குறியீடாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

கோலம் மீதுள்ள நம்பிக்கையும் சிந்தனையும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. மங்கல நிகழ்விலும் அமங்கல நிகழ்விலும் இடம்பெறும் கோலம் தனித்துவம் வாய்ந்ததாகும். மனிதர்களின் வாழ்வியல் சடங்குகளில் இடம்பெறும் கோலம் காரணக் காரியத்தோடு கையாளப்படுகின்றது.

கோலம் ஒரு புனிதமாக அல்லது தூய்மையான வெளியை அல்லது மண்டலத்தைக் குறிப்பதாகும். நாட்டியம் ஆடுபவர்கள் கூட கோலமிட்டு கோலத்தின் மீது விளக்கிட்டு கோலத்தின் மீது நடனம் ஆடுவதைக் காணும் போது புனிதமான மண்டல வெளியே நமக்கு நினைவூட்டுகின்றது. நடன மேடையில் வைக்கப்படுகின்ற எண்ணெய் விளக்கில் பொதுவாக வைக்கப்படும் பெரிய மற்றும் சிறிய திரிகள் மண்டல வெளியிலுள்ள சூரியனையும் சந்திரனையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

## 1.10 கிராமியக் கலைகளில் கோலம்

நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்வினை கலைகளோடு இயக்கிச் செல்கின்றனர். இவர்களின் வாழ்வில் கலைகள் நீங்கா இடம்பெற்றுள்ளன. திருவிழாக் காலங்கள், பண்டிகைக்காலங்கள் போன்றவற்றில் நிகழ்த்துக்கலைகளை நிகழ்த்தி மகிழ்ந்திருந்தனர். பிற காலங்களில் நிகழ்த்தாக் கலைகளை கையாண்டு தங்கள் வாழ்வினைக் கலைத் தொடர்புடன் வாழ்ந்து வந்தனர். ஆடல் கலை, பாடல் கலை போன்றவற்றினை கலையாகவே கையாண்டனர்.

நாட்டுப்புற ஓவியங்களில் கண்ணைக் கவரும் கலையாகவும், மனதிற்கு மகிழ்வினை ஊட்டும் கலையாகவும் கோலத்தினை கூறலாம். நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்வில் தொடர்ந்து பயன்படுத்தும் கலையாகக் கோலம் இடுதலைக் கொண்டனர். தூய்மையான சூழலை வீட்டில் உருவாக்க கோலங்களையைப் பெரும்பான்மை பயன்படுத்தி வந்துள்ளனர். உடல் நலத்திற்கும், மன வளத்திற்கும், சுற்றுப்புற சூழலுக்கும் நன்மை பயக்கும் கோலத்தின் சிறப்பினை அன்றே அறிந்திருந்தனர்.

நாட்டுப்புற ஓவியமாக கோலம் விளங்குவதை கு.சேதுராமன் தெளிவாகக் புலப்படுத்துகின்றார். “கோலங்கள் ஒவ்வொரு நாளும் அழிக்கப்படுகின்றன. மீண்டும் மறுநாள் போடப்படுகின்றன. இதனை கிராமியக் கலைக்கூறுகளில் ஒன்றாக்கிக் கொள்ளலாம். ஏனெனில் கிராம தேவதைகளுக்காக ஆண்டுதோறும் நடக்கின்ற திருவிழாக்காலங்களில் அத்தேவதைகளின் உருவங்கள் சுடுமண்ணால் செய்யப்பட்டு வணங்கப்படுகின்றன. ஓரிரு தினங்களில் அத்திருவிழா முடிந்ததும் அச்சுடுமண் இறையுருவங்கள் அழிக்கப்படுகின்றன. அடுத்த திருவிழாவிற்கான உருவங்கள் மீண்டும் புதிதாகச் செய்யப்படுகின்றன. இம்முறையையே கோலத்திற்கும் பயன்படுத்தி வந்திருக்கக் கூடும். இக்கோலங்களின் மீது பசுமாட்டுச் சாணம் வைக்கப் பெறும். இச்சாணம் அறிவியல் முறைப்படி கிருமி நாசினியாகப் பயன்படுகின்றது. எனவே வீட்டில் உள்ளோர்க்கு நோய்த் தடுப்புச் சக்தியாகவும் பயன்படுகின்றது. சில இடங்களில் இச்சாணங்களில் மலர்கள் அல்லது இலைகள் வைக்கப்பட்டிருக்கும். இது ஒரு வளம் தரும் தோட்டத்தைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றன.”[13] என்பதிலிருந்து கோலம் கிராமியக் கலைக் கூறுகளில் ஒன்று என்பதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

கிராமிய மக்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு கலைகளும் வாழ்வியல் பயன்பாட்டிற்காகவும் இருந்துள்ளன. இயற்கை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் அனைத்துமே கலைகளோடு இரண்டறக் கலந்து இயக்கம் பெறுகின்றன. அதனால் கிராமிய மக்கள் கலைகளைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

## 1.11 ஒரத்தநாடு மக்களின் கோலம் தொடர்பான நம்பிக்கைகள்

ஒரத்தநாடு மக்கள் தங்கள் வீட்டின் முன் கோலம் இடுவதை விருப்பமுடனே செய்து வருகின்றனர். கோலம் இடுவது தனி நபர் நலனுக்கும், குடும்ப நலனுக்கும் வழிவகுக்கும் என நம்புகின்றனர். நம்பிக்கைகள் குறித்த நிகழ்வுகளே கிராமிய மக்களின் வாழ்வில் பெரும்பான்மை நடைப்பெற்று வருகின்றன. கலையும் நம்பிக்கையின் வழியாகவே பின்பற்றப்பட்டு வருகின்றன. அவ்வகையில் கோலம் நாட்டுப்புற கலைகளின் ஒன்றாகக் கருதலாம். கோலமிடுவதில் பல்வேறு வகையான நம்பிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஒரத்தநாடு பகுதி வாழ் மக்கள் கோலமிடுவதில் பல்வேறு நம்பிக்கைகள் கொண்டுள்ளனர். அவை பின்வருமாறு.

- ❖ கோலமிடுதல் குடும்ப மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்.
- ❖ காலை எழுந்து கோலமிடல் மகாலட்சுமியை வரவேற்பதற்கு வழிவகைப் புரியும்.
- ❖ பெண்கள் மார்கழி மாதம் அதிகாலை எழுந்து கோலமிட்டால் உடல்நலம் சிறப்பதோடு, கருப்பை தொடர்பான கோளாறுகள் நீங்கும்.
- ❖ வான தூதர்கள் கோலமிடும் பெண்களை ஆசிர்வதிப்பதாகவும், அவ்வீட்டில் மழலைச் செல்வம் தழைக்கவும், செல்வம் பெருகி நலமுடன் இருப்பர் என்று ஆசிர்வதிப்பதாகவும் நம்பிக்கை உண்டு.
- ❖ வீட்டை விட்டு காலையில் செல்லும் குடும்ப நபர்கள் வெறும் வாசலை பார்த்துச் சென்றால் நன்மை நடக்காது.
- ❖ வெறுங் காலோடு மட்டுமே கோலமிட வேண்டும். செருப்பு காலோடு கோலம் போடுதல் கூடாது. ஏனெனில் கோலம் செல்வக் கடவுள் மஹாலட்சுமியின் குறியீடாகக் கருதப்படுகிறது. செருப்பு காலோடு கோலம் போட்டால் செல்வ வளம் குறைந்து விடும்.
- ❖ வீட்டிற்கு வரும் உறவினர்கள் வெற்று வாசலைப் பார்த்து வருவது கூடாது. வண்ணக் கோலமிட்ட வாசலைப் பார்த்து வந்தால் மகிழ்ச்சி கூடும். வெறும் வாசலைத் தீய சகுனமாகக் கருதுகின்றனர்.
- ❖ விழாக்கள், பண்டிகைகள் போன்ற அனைத்து நாள்களிலும் கோலம் போடலாம். குடும்பத்தில் உள்ள முன்னோர்கள் இறந்தநாள், திதிநாள் அன்று கோலம் போடக் கூடாது.
- ❖ பிறப்பு, திருமணம், காதணி விழா, பூப்பெய்திய சடங்கு என பல தரப்பட்ட குடும்ப விழாக்களில் வாசல் தெளித்து கோலமிடுவது குடும்ப நலனுக்கு வழிவகைச் செய்யும்.
- ❖ அதிகாலை எழுந்து தலை குளித்து தூய்மையான ஆடை அணிந்து கோலமிட்டால் ஸ்ரீதேவி தம் வீட்டில் குடி கொள்ளும் இல்லையெனில் மூதேவி குடிகொள்ளும் என நம்பிக்கைக் கொண்டனர்.

இவைப் போன்ற பல்வேறு நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒரத்தநாடு பகுதி மக்கள் கோலமிட்டு வருகின்றனர். கோலமிடுவது மனதிற்கு மகிழ்வையும், குடும்ப மகிழ்வையும் நிலை நிறுத்தும் என நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.

### 1.11.1 சிக்குக் கோலம்

சிக்குக் கோலம் என்பது புள்ளி வைத்து அப்புள்ளிகளின் புறப்பகுதிகளில் நெளி நெளியாக வளைகோடுகள் அமைத்து சிக்கல் இருப்பது போன்று வடிவமைப்பது சிக்குக் கோலம் எனப்படும். சிக்குக் கோலம் தொடக்கமும் முடிவும் கண்டுபிடிக்க இயலாதது.

ஒரத்தநாடு மக்கள் பெரும்பான்மையினர் சிக்குக் கோலத்தினை வாசலில் இடுகின்றனர். இதற்கு அம்சவள்ளி என்பவர் கூறும் கருத்தினை பின்வரும் நிலையில் காணலாம்.

சிக்குக் கோலம் போடுவதற்கு எளிமையாக இருக்கும். இக்கோலம் போடுவதற்கு ஏதாவது ஒரு நிறப் பொடி இருந்தால் மட்டுமே போதும். குறைவான நேரத்தில் வாசல் முழுவதும் அலங்கரிப்பதற்கு இக்கோலம் பயன்படுகிறது. இக்கோலம் போட்டால் குடும்பத்தில் சிக்கல்கள் தீர்ந்து மகிழ்ச்சிப் பெருகும். வாழ்க்கை என்பது சிக்கல்கள் நிறைந்தது, இச்சிக்கல்களிலிருந்து விடுபட்டு வாழ்வை நடத்துவது மகிழ்ச்சி தரும் என்பதை இக்கோலம் உணர்த்துகின்றது என்று கூறுகிறார்.

சிக்குக் கோலம் வாசலில் போடுவதால் குடும்பத்தில் சிக்கல், குழப்பம் ஏற்படும் நிகழ்வுகளை ‘வசந்தா’ என்பவர் பின்வரும் நிலையில் கருத்துத் தெரிவிக்கின்றார்.

சிக்குக்கோலம் வாசலில் போடுவதால் குடும்பத்தில் சிக்கல், குழப்பம் ஏற்படும். கணவன், மனைவி இடையே சிறு சிறு சண்டைச் சச்சரவு ஏற்படும். அதனால் சிக்குக் கோலத்தினை பெரும்பாலும் போடமாட்டோம். என்று குறிப்பிடுகின்றார். சிக்குக் கோலம் போடுவது சிக்கலைத் தீர்க்கும் என்று ஒரு பகுதியினர் நம்பிக்கைக் கூறுகின்றனர். ஒரு சிலரே சிக்குக் கோலம் போடும் நாட்களில் மட்டும் குடும்பத்தில் சண்டைச் சச்சரவு ஏற்படும் என்கிறார்கள். கோலம் நாட்டுப்புற வரைகலைகளில் ஒன்றாக இருப்பினும் மக்களின் நம்பிக்கைகளும் பண்பாடும் அதனுள் பொதிந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

### 1.11.2 புள்ளிக் கோலம்

நம் கலாச்சாரத்தின் தொன்மையினைப் பகரும் கோலங்களின் வழியே நாம் மகிழ்ச்சியினைப் பரிமாறிக் கொள்கிறோம். வடநாட்டுப்பகுதியில் புள்ளியில்லாக் கோலங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் புள்ளிக் கோலங்களே பெரும்பான்மை இடம் பெறுகின்றன. புள்ளிக் கோலங்கள் போடுவதால்

பல பயன்பாடுகள் உள்ளன. ஒரத்தநாடு வட்டாரத்தில் புள்ளிக் கோலங்கள் சிறப்புப்பெற்றதாக விளங்குகின்றன. புள்ளிக்கோலம் போடுவது மனமும் உடலும் வலுப்பெறும் என்கின்றனர். இதனை ‘தாமரைச்செல்வி’ என்பவர் கூற்று வழியே அறிய முடிகிறது.

புள்ளிக் கோலம் போடுவது கணக்குப் பயிற்சியை அறிந்துகொள்ள முடிகிறது. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கூட எண்ணிக்கையைப் புள்ளி வைப்பதன் வாயிலாக அறிந்து கொள்கின்றனர். புள்ளிகளை இணைக்கும் பொழுது கோலம் முழுமையடைகின்றது. புள்ளிகள் சரியான முறையில் இணைப்பு இல்லாமல் தொக்கி நிற்கும் பொழுது புள்ளிகளின் எண்ணிக்கையில் தவறுகள் ஏற்படுகிறது. எனவே இக்கோலம் போடுவது எண்ணிக்கையை அறிந்துணர பயன்படுகிறது.

புள்ளிகளை இணைக்கும் பொழுது மனிதர்கள் ஒற்றுமையோடும் நலமுடனும் இருக்க முடியும் என்ற கருத்தாக்கத்தினை இக்கோலம் உணர்த்துவதாகத் தெரிகிறது என்று கூறுகின்றார். ‘செல்வி’ அவர்கள் கூறுவதாவது புள்ளிகளைச் சுற்றி வளைத்து அதனை முழுமையாக்குவது பெண்கள் தங்கள் குடும்ப நபர்களை அனுசரித்து வாழ்க்கையினையோட்டுவதினை உணர்த்துகின்றது என்கிறார். இவரின் கூற்றினை உற்று நோக்கும் பொழுது கோலம் அழகுக் கலை மட்டுமல்ல வாழ்க்கைக் குறித்த தத்துவங்களையும், வாழ்வியல் சார்ந்த நம்பிக்கைகளையும் ஊட்டுகின்றது.

தற்போது சல்லடை வடிவிலான தகடில் பல நுட்பமான வடிவமைப்புகள் அதனுள் இருக்கும் இதன் மேல் கோலப்பொடியைக் கொட்டி கைகளாலயே தடவி விட அழகிய கோலம் வந்துவிடுகிறது இதன் மூலம் நவின கோலங்களின் வளர்ச்சியை அறியலாகிறது.

## 2 சுடுமண் உருவ ஓவியங்கள்

சுடுமண் ஓவியங்கள் நாட்டுப்புற கலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. நிலத்தை இறையாக எண்ணி வாழும் கிராமிய மக்கள் அந்நிலத்தில் உள்ள மண்ணினால் இறை உருவங்களைச் செய்து வணங்கி வழிபட்டனர். மண்ணை குழைவு நிலையில் வைத்து தமக்குத் தேவையான உருவங்களைச் செய்து அதனை நெருப்பினால் சுட்டு வலுப்படுத்தி ஓர் உருவத்தினை அல்லது பொம்மை வடிவத்தினை வடிவமைப்பர். அதன் பிறகு அவ்வுருவத்திற்கு ஏற்ற முறையில் வண்ணங்களைத் தீட்டுவர். இவ்வுருவங்கள் மீது தீட்டப்படும், வரையப்படும் ஓவியம் சுடுமண் உருவ ஓவியங்கள் ஆகும்.

நம் நாட்டில் சுடுமண் சிலைகள், பொம்மைகள் உருவாக்கம் பற்றி கு.சேதுராமன் தெளிவுபட எடுத்துக்காட்டுகையில், “இந்திய மக்கள் தாம் வாழும்

நிலத்தையே தெய்வமாக வணங்கி வருவது தொன்றுத்தொட்டு பழக்கத்தில் இருந்து வரும் மரபாகும். இதனைக் குறிக்கும் வழக்கம் தான் தன் நிலத்து மண்ணிலேயே பொம்மைகள் செய்து வழிபாடு செய்வது ஆகும். மண்ணினால் பொம்மைகள் செய்து அதனைச் சுடுவது சுடுமண் பொம்மை (feroacotta) என்று அழைக்கப்படுகின்றது."[14] மேலும் சுடுமண் கலை நமது நாட்டில் தொன்மைக் காலத்தில் இருந்து வந்துள்ளது. இதனைப் பின்வரும் பகுதி வழியே அறியமுடிகிறது.

"இந்தியாவின் தொன்மையான சுடுமண் பொம்மைகள் சிந்துச் சமவெளி நாகரீகத்திற்கும் (சுமார் கி.மு.3500) முந்திய காலத்தைச் சேர்ந்த பலுசிஸ்தானத்து சுடுமண் பொம்மைகள் ஆகும். ஆனால் சுடுமண்ணால் செய்யப்பட்ட இறைவுருவங்கள் சற்று பிற்காலத்தில் தான் கிடைக்கின்றன. இது நாட்டுப்புற கலைகளில் ஒன்றாக விளங்குகின்றது."[15] மேற்காணும் தரவுகளின் படி சுடுமண் உருவக்கலைகள் பழங்காலத்தில் இருந்து மக்களிடம் வழக்கத்தில் இருந்துள்ளமையைக் அறியமுடிகிறது.

## 2.1 மண் பானை ஓவியங்கள்

சுடுமண் பானைகளில் ஓவியங்கள் வரைவது பானை ஓவியங்கள் எனப்படும். நாட்டுப்புற மக்களின் வாழ்வில் இக்கலை இன்றளவும் தொடர்ந்து வருகின்றது. சுடுமண் பானைகள் செய்வதும் அவற்றின் மேற்பரப்பில் ஓவிய அலங்கார வேலைப்பாடுகள் செய்வதும் தொன்மையான நாட்டுப்புறக்கலையாகும். இதன் துவக்கத்தைச் சிந்துச் சமவெளி நாகரீக காலத்திலிருந்தே காண முடிகின்றது. நாட்டுப்புற மக்களின் வாழ்வில் புழங்குப்பொருளாக மண்பானை பயன்படுகிறது. இப்பானைகளில் ஓவியங்கள் தீட்டி அலங்காரம் இட்டு தங்கள் வாழ்வில் நடைபெறும் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். திருமணச்சடங்குகளில் புதுப்பானைகளில் செழுமைத் தொடர்பான குறியீடுகள் வரையப்படுவதைக் காணலாம். குறிப்பாக பறவைகளின் உருவங்கள், செடி, கொடிகள், சக்கரங்கள், மாவிலை போன்றவை வரையப்பட்டுள்ளன. பானைகளின் கழுத்துப் பகுதியில் வெறுமனே விடாமல் பெருவிரல் நகத்தால் அலங்காரமான கீறல்கள் போட்டு அழகு செய்கின்றனர். மேலும் கயிறு புரிபோன்ற அலங்காரங்களும் போடப்படுகின்றன. ஒவ்வொரு விழாக்களுக்கு ஏற்ப பானைகளில் சடங்குகள் தொடர்பாகவும் ஓவியங்கள் வரையப்படுகின்றன.

ஓவியப் பானை என்பது ஓவியம் மற்றும் எழுத்துக்கள் வரையப்பெற்ற அல்லது வண்ணம் தீட்டப்பட்ட பானையாகும் என்கிறார் தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள். "சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் சாதாரண மக்களும் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு மண்பாண்டங்களில் கிடைக்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் சான்றாக விளங்குகின்றன"[16] மேற்கூறப்பட்டுள்ள தொல்லியல்

சான்றுகளின் அடிப்படையில் மட்கலங்களின் மீது ஓவியங்கள் மற்றும் எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன என்பது உறுதியாகிறது.

### 2.1.1 மண் பானை

மட்கலம் என்ற சொல் மண்ணால் உருவாக்கப்படும் பொருட்களைக் குறிக்கும். அவ்வாறு மண்ணால் பொருட்களை உருவாக்கும் இத்தொழில் மட்பாண்டத்தொழில் அல்லது மட்கலத்தொழில் என்றழைக்கப்படுகிறது. பழங்காலத்தில் இருந்தே மக்கள் மண்பாண்டத்தில் உணவுப்பொருட்களைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் பயன்படுத்தியுள்ளனர். மட்பாண்டங்கள் எளிதில் உடைந்து போகும் தன்மையுடையது. நாட்டுப்புற மக்களிடம் இன்றளவும் மட்பாண்டங்கள் பயன்பாட்டில் உள்ளன.

மண் பானை என்பது களிமண்ணிலிருந்து தயாரிக்கப்பட்டு நீர் மற்றும் பிற பொருட்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படும் கொள்கலன் (பாத்திரம்) ஆகும். பொதுவாக மண்பானையின் உட்புறம் வெறுமெனே உள்ள உருண்டை வடிவில் இதன் அடிப்பாகமும் சிறிய கழுத்துப் பகுதியும் இருக்கும். களிமண் தொகுதியை சுழலவிட்டு கைகளைக் கொண்டு இதன் வடிவத்தை வரையறுத்து பானையை உருவாக்குவர்.

பானை கொள்கலனாக மட்டுமின்றி அழகுப் பொருளாகவும் பயன்படுகின்றது. பானைகள் பல வண்ணங்களிலும், வடிவங்களிலும் உருவாக்கப்படுகின்றன இதனையே பானை ஓவியம் என்றும் ஓவியப் பானை என்றும் குறிப்பிடப்படுகிறது.

### 2.1.2 மட்பாண்டம் செய்யப் பயன்படும் மூலப்பொருள்

மட்பாண்டம் செய்யப் பல மூலப்பொருட்கள் பயன்படுகின்றன. களிமண்ணே முதன்மை மூலப்பொருளாகும். களிமண்ணில் காணப்படும் முதன்மை கனிமமானது வெண்களிமண் அல்லது காவோளினைட் (kaolinite) ஆகும். களிமண்ணில் 40 சதவீதம் அலுமினிய ஆக்சைடு, 46 சதவீதம் சிலிக்கான் ஆக்சைடு, மற்றும் 14 சதவீதம் நீர் இருப்பதால் மட்பாண்டம் செய்ய இம்மண் பெருமளவில் பொருத்தமாகவே காணப்படுகின்றது.

களிமண் இரண்டு நிலைகளில் தரம் பிரிக்கப்படுகின்றது. முதனிலைக் களிமண் பாறையின் இடத்தில் காணப்படும். கனமானதாகவும், அடர்த்தியாகவும் தூய்மையானதாகவும், எவ்வித கலப்படமும் இல்லாமலும் காணப்படும். இரண்டாம் நிலைக் களிமண் வண்டல் கலவையானது, நுண்ணியதாகவும், லேசாகவும் காணப்படும். இவ்விரு நிலைக் களிமண்களும் மட்பாண்டங்கள் செய்ய முதன்மை மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.

### 2.1.3 மண்பானை தயாரிப்பு

நாட்டுப்புற மக்கள் பயன்படுத்தும் புழங்குப் பொருட்களில் முதன்மை வாய்ந்தது மட்பாண்டம் ஆகும். மட்பாண்டம் என்பது பொதுவாக மண்ணால் செய்யப்படும் பொருட்களைக் குறிக்கிறது. பழங்காலத்திலேயே மட்பாண்டம் செய்யும் தொழில் நம் நாட்டில் பல இடங்களில் பழமை வாய்ந்த தொழிலாக நடைப்பெற்று வந்துள்ளது. இத்தொழிலினை தமிழர்கள் ‘குயத்தொழில்’ என்றும் மட்பாண்டம் செய்பவரைக் ‘குயவர்’ என்றும் அழைத்து வருகின்றனர்.

### 2.1.4 மட்பாண்டம் செய்யும் முறை

மட்பாண்டம் செய்வதற்கு முதன்மைப் பொருளாகவும், மூலப்பொருளாகவும் களிமண் விளங்குகின்றது. களிமண்ணை முதலில் நீருடன் சேர்த்து குழைக்க வேண்டும். இக்குழைத்த மண்ணினை வேண்டிய உருவத்தில் வடிவமைத்து அதனை சூளையிலிட்டு உயர்ந்த வெப்ப நிலைக்குச் சூடாக்கி உரிய உருவங்களைக் கொண்ட மட்பாண்டங்களைப் பெறுவர். குழைக்கப்பட்ட களிமண்ணை சூடாக்குவதன் மூலம் களிமண் இறுகி பலம் கூடி, உறுதியான வடிவங்கள் பெற்று மட்பாண்டமாக ஆகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பக்குவப்படுத்தப்பட்ட களிமண்ணை இரண்டு நாட்களுக்கு நீர் விட்டு காலால் பிசைந்து வைப்பர். மண் நல் முறையில் பதமாக வந்தவுடன் பானை செய்யும் சக்கரத்தின் மையப்பகுதியில் வைப்பர். பின் சக்கரத்தினை நிறுத்தாமல் சுற்றுவர். கைவிரல்களால் களிமண்ணை வைத்து பானை வடிவங்களைச் செய்வர்.

பானை செய்தவுடன் அப்பானையின் மீது செம்மண் கலந்த நீர் கரைசலை துணியில் நனைத்து பானையில் பூசுவர். பின்பு பானைகளை சம தரையில் முறையாக அடுக்கிய பின்பு அதன் மீது வைக்கோலைப் பரப்பி, மேலே வதி (சேர்) பூசி வைப்பர். பின் அவ்வைக்கோல் மீது நெருப்பிட்டு பானையை வேக வைப்பர். உரிய பதம் வந்தவுடன் பானையினை எடுப்பர்.

மட்கலங்களைச் சுடும்போது சூளையில் உள்ள சூட்டின் அடிப்படையில் நிறங்கள் அமைகின்றன. நல்ல சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு நிறம், பழுப்பு நிறம் கலந்த மஞ்சள், பழுப்பு நிறம் போன்ற நிறங்கள் சூட்டின் தன்மையால் காணப்படுகின்றன. தமிழகத்தில் மேற்கொண்ட அகழாய்வுகளில் கறுப்பு, சிவப்பு மட்கலங்கள் கிடைத்துள்ளன. இலக்கியங்களைப் பொறுத்தவரை மட்கலங்கள் சிவப்பு நிறத்தில் காணப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதனை,

“புதுக் கலத்தன்ன கனிய ஆலம்”[17]

“கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த”[18]

என்னும் பாடலடிகள் நிறுவுகின்றன. புது மட்கலத்திற்கு ஆலமரத்தின் பழங்களை ஒப்புமைப்படுத்துவதில் இருந்தும், கவி செந்தாழி என்றதன் வாயிலாகவும் மட்கலங்கள் இயல்பாகவே செந்நிறத்தில் (சிவப்பு) காணப்பட்டது என்பது புலனாகிறது.

## 2.1.5 பானை வகைகள்

கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு வகையான பானைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நம் தமிழகத்துள் வழங்கப் பெற்ற பானை வகையுள் சில:

1. அ.:.கப் பானை – தவசம் (தானியம்) சேர்த்து வைக்கப் பயன்பெறும் பானை (குதிர், குறுக்கை) அ.:.கம் – தவசம்
2. அ.:.குப் பானை – வாயகன்றும் அடிப்புறம் சுருங்கியும் தோன்றும் பானை.
3. அகட்டுப் பானை – நடுவிடம் பருத்த பானை.
4. அடிசில் பானை – சோறு ஆக்குவதற்குப் பயன்படும் பானை.
5. அடுக்குப் பானை – நிமிர்வு முறையில் அல்லது கவிழ்வு முறையிலாக ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப் பெறும் பானை வரிசை. திருமணச் சடங்கு மேடையில் அடுக்கப் பெறும் ஏழு பானை வரிசை.
6. அரசாணிப் பானை – திருமணச் சடங்கு மேடையில் நாட்டப்பெறும் அரசாணிக் காலுக்குப் பக்கத்தில் வைக்கப் பெறும் மங்கலப் பானை.
7. உசும்பிய பானை – உயரம் மிகுந்த பானை.
8. உறிப் பானை – உறியில் வைத்தற்கு ஏற்ற பானை.
9. எ.:.குப் பானை – இரும்பினை உருக்கி எடுக்க உதவும் பானை.
10. எழுத்துப் பானை – எழுத்துக்கள் வரையப் பெற்ற பானை.
11. எழுப்புப் பானை – உயரம் வாய்ந்த பானை.
12. ஒறுவாயப் பானை – விளிம்பு சிதைந்த பானை.
13. ஓதப் பானை – ஈரப் பானை.
14. ஓர்மப் பானை – திண்ணிய பானை, தட்டினால் நன்கு ஒலியெழுப்பும் பானை.
15. ஓரிப் பானை – தனிப்பானை, ஒல்லியான பானை.
16. ஓவியப் பானை – ஓவியம் வரையப் பெற்ற பானை, வண்ணம் தீட்டப்பட்ட பானை.
17. கஞ்சிப் பானை – கஞ்சியை வடித்தற்குப் பயன்பெறும் அகன்ற வாயுடைய பானை.
18. கட்டப் பானை – அடிப்பகுதி வனையப்படாத பானை.
19. கட்டுப் பானை – மிதவை அமைத்தற்கென அம்மிதவையின் ஓரத்தில் கட்டப் பெறும் பானை.

20. கதிர்ப் பானை – புதிய நெற்கதிர்களையும், நெல் மணிகளையும் வைத்தற்குப் பயன்பெறும் பானை.
21. கரகப் பானை – கரவப் பானை – நீர்க்கரகம்.
22. கரிப் பானை – கரிப் பிடித்த பானை.
23. கருப்புப் பானை – முழவதுமாகக் கருநிறம் வாய்ந்த பானை.
24. கருப்புசிவப்புப்பானை – உள்ளே கருநிறமும் வெளியே செந்நிறமும் வாய்ந்த பானை.
25. கலசப் பானை – கலயம், கலசம், கலம், நீர்க்கலம்.
26. கழுநீர்ப் பானை – அரிசி முதலிய கூலங்களைக் கழுவிய நீரை ஊற்றி வைத்தற்குப் பயன்படும் பானை (பேச்சு வழக்கில் கழுனிப்பானை எனப்படுகின்றது).
27. காடிப்பானை – கழுநீர்ப் பானை.
28. காதுப்பானை – விளிம்பில் பிடியமைத்து உருவாக்கப் பெறும் பானை.
29. குண்டுப்பானை – உருண்டை வடிவத்தில் தோன்றும் பானை.
30. குறைப் பானை – அடிப்பகுதியில்லாத பானை, அடியிலி (பேச்சு வழக்கில் குறுப்பானை என்றழைக்கப்படுகிறது)
31. கூடைப் பானை – கூடை வடிவில் உருவாக்கப்பெறும் பானை.
32. கூர்முனை பானை – அடிப்புறம் கூர்முனை அமையும் படியாக உருவாக்கப் பெற்ற பானை.
33. கூர்ப் பானை – கூர் முனைப் பானை.
34. கூழ்ப் பானை – கூழ் காய்ச்சுதற்கெனப் பயன்படுத்தப் பெறும் பானை.
35. கோளப் பானை – உருண்டு திரண்ட பானை.
36. சருவப் பானை – மேற்புறம் அகற்சியாகவும், கீழ்ப்புறம் சரிவாகவும் சுருங்கியும் ஆக உருவாக்கப் பெற்ற பானை.
37. சவப் பானை – சவம் இடுவதற்கேற்ப உருவாக்கப்பெற்ற பெரிய பானை, ஈமத்தாழி
38. சவலைப் பானை – நன்கு வேகாத பானை, மெல்லிய பானை.
39. சன்னப் பானை – மெல்லிய பானை, கனமில்லாத பானை.
40. சாம்பல் பானை – கையால் செய்யப் பெற்ற பானை.
41. சொண்டுப் பானை – கனத்த விளிம்புடைய பானை.
42. சோற்றுப் பானை – சோறாக்குவதற்குப் மட்டும் பயன்படுத்தும் பானை.
43. சில்லுப் பானை – மிகச்சிறிய பானை.
44. சின்ன பானை – சிறிய பானை.
45. தவலைப் பானை – சிறிய வகைப் பானை (நீர் சேமிக்க உதவுவது).
46. திடமப் பானை – பெரிய பானை (திடுமப் பானை).
47. திம்மப் பானை – பெரும் பானை (திம்மம்-பருமம்).

48. துந்திப் பானை – தொந்தியுறுப்புப் போன்று அடிப்பாகம் மிகவுருண்டு திரண்ட தோற்றத்துடன் அமைக்கப்படும் பானை.
49. தொண்ணைப் பானை – குழிவார்ந்த பானை.
50. தோரணப் பானை – கழுத்துப் பாகத்தை சுற்றிலும் தோரண வடிவில் உருவெட்டப்பெற்ற பானை.
51. தோள்பானை – தோளில் (சுவற்பகுதியில்) தொங்கவிட்டுப் பயன்படுத்துதற்கேற்றவாறு உருவமைந்த பானை.
52. நாற்காலி பானை – நான்கு கால் தாங்கிகளை உடன் கொண்டிருக்குமாறு அமைக்கப்பெற்ற பானை.
53. பச்சைப் பானை – சுடப் பெறாத பானை.
54. படரப் பானை – அகன்ற பெரிய பானை.
55. பிணப் பானை – சவப் பானை, ஈமத்தாழி.
56. பொள்ளாற் பானை – துளையுள் பானை (பொள்ளல் பானை).
57. பொங்கல் பானை – பொங்கல் விழாவிற்குரிய பானை.
58. மங்கலக்கூலப்பானை – திருமண விழா மன்றலில் தவசம் நிறைத்து வைக்கப்பெறும் பானை.
59. மடைக்கலப்பானை – திருமண வீட்டில் அல்லது மடங்கள் அல்லது கோயில்களில் சமையலுக்குப் பயன்படுத்துவதற்கு உருவாக்கப் பெற்ற பானை.
60. மிண்டப் பானை – பெரிய பானை.
61. மிறைப் பானை – வளைந்த உயர்ந்த பானை.
62. முகந்தெழு பானை – ஏற்றப் பானை.
63. முடலைப் பானை – உருண்டையுருவப் பானை.
64. முரகுப் பானை – பெரிய பானை (திரண்டு உருண்ட பானை).
65. மொங்கம் பானை – பெரும் பானை (மொங்கான் பானை).
66. மொட்டைப் பானை – கழுத்திலில்லாத பானை.
67. வடிநீர்ப் பானை – நீரை வடிகட்டித் தருதற்கேற்ப அமைக்கப் பெற்ற நீர்க்கலம்.
68. வழைப்பானை – வழவழப்பான புதுப்பானை.
69. வெள்ளாவிப் பானை – துணி அவித்தற்குப் பயன்பெறும் பானை.

நாட்டுப்புற மக்கள் அனைத்து வகையான பானைகளையும் தங்களுடைய வாழ்வில் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்பானைகள் வடிவத்தில் பல்நிலைகளிலிருந்தாலும் ஒவ்வொரு பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. விழாக்காலங்கள், சடங்கு காலங்கள் போன்ற காலங்கள் மட்டுமல்லாது ஏனைய நாட்களிலும் தங்கள் அடிப்படைக் கலமாக மண்பானைகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்பானைகளில் ஓவியங்கள் வரைந்து பயன்படுத்தி வந்துள்ளமையை நாம் காண முடிகிறது.

## 2.2 ஒரத்தநாடு பகுதியில் மண்பானை ஓவியங்கள்

ஒரத்தநாடு பகுதியில் உள்ள மக்கள் தங்கள் வாழ்வில் புழங்குப்பொருட்களாக மண்பானைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். விழாக்காலங்களில் பயன்படுத்தப்படும் பானைகளில் பல வண்ண ஓவியம் தீட்டி பானைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலும் பொங்கல் வைக்கும் பானைகளிலும் தீட்சட்டி (அக்னிச்சட்டி) எடுக்கும் பானைகளிலும் திருமண சடங்கின் போது வைக்கப்படும் பானைகளிலும் ஓவியம் தீட்டும் மரபினைக் கொண்டிருக்கின்றனர்.

### 2.2.1 பொங்கல் பானை ஓவியம்

வாழ்வில் புழங்கும் மண்பானைகள் பெருமளவில் இருப்பினும் பொங்கல் வைக்கும் பானைச் சிறப்பானது. பொங்கல் வைத்தல் இரு நிலைகளில் பிரிக்கப்படுகின்றது. ஒன்று தை மாதம் சூரியன் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் வைத்தலைக் குறிக்கும், மற்றொன்று காக்கும் தெய்வங்களுக்கு வைக்கும் பொங்கலாகும். இவ்விரு பொங்கல் வைக்கும் பானைகளிலும் ஓவியம் வரையப்படுகின்றது.

அறுவடைத் திருநாளாகக் கருதப்படும் தை மாதம் அன்று ஒவ்வொரு வீடுகளிலும் பொங்கல் வைப்பதை வழக்கமாக ஒரத்தநாடு பகுதி மக்கள் கொண்டிருக்கின்றனர். புதுப் பானை வாங்கி புத்தரிசி வைத்துப் பொங்கல் பானை மீது திருநீறு பட்டையிட்டு அதன் மீது மஞ்சள் கொத்தினைப் பானையின் விளிம்பில் கட்டி பொங்கல் வைப்பர். இப்பானைகளில் பெரும்பாலும் மூன்று விரல்களால் பட்டைத் தீட்டுவர்.

திருவிழா காலங்களில் தெய்வங்களுக்கு பொங்கல் வைத்து படையலிடும் பொழுது பொங்கல் பானையில் ஓவியம் தீட்டுவர். பானைகளில் மஞ்சள், பச்சை, சிவப்பு போன்ற நிறங்களில் இலைகள் வடிவில் ஓவியம் தீட்டிய பானைகளில் பொங்கல் வைத்து இறைவனுக்கு படையலிடுகின்றனர்.

### 2.2.2 முகூர்த்த பானை ஓவியம்

திருமணம் நடைபெறும் பொழுது மணவறையின் அருகில் முகூர்த்த கால் வைப்பர். பின்பு முகூர்த்த பானையினை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைப்பர். இப்பானைகளில் காவி மற்றும், வெள்ளை நிறத்தில் இலைகள் வடிவில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கும். இவை பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சி தரும்.

### 2.2.3 அக்னிச் சட்டி ஓவியம்

மனிதர்கள் தங்களுக்கு துன்பங்கள் நேரும் பொழுது இறைவனிடம் துன்பங்கள் தீர வேண்டுவர். அத்தருணத்தில் சில வேண்டுதல்களை வைப்பர். அதில் ஒன்று தீச்சட்டி ஏந்துதல் ஆகும். மண்பானையில் நெருப்பினைப் போட்டு அதை கையில் ஏந்தி கோவிலுக்கு வருவர். இவ்வகைப் பானைகளில் ஓவியம் தீட்டப்படுகின்றது. இதில் இறைவனின் முகம் பதிவு செய்யப்படுகின்றது. வெள்ளை மற்றும் காவி நிறத்தில் இவ்வோவியம் தீட்டப்படுவதைக் காண முடிகின்றது. ஒரத்தநாடு பகுதி வாழ் மக்கள் தாங்கள் புழங்கும் மண்பானைகளில் ஓவியம் தீட்டிய நிலையில் பயன்படுத்தி வருவதை இன்றளவும் காண முடிகிறன்றது.

### 2.2.4 மண் குதிரை ஓவியங்கள்

மனிதர்கள் தங்கள் பயணத்தை விலங்குகளின் வழியே பயணித்தனர். குதிரை மனிதர்களின் வாகனமாக பிற்காலத்தில் விளங்கியது. அரசர்களின் வாகனமாகவும் குதிரைகள் விளங்கியது. நாட்டைக் காக்கும் அரசர்களைப் போல் உலக உயிர்களைக் காக்கும் கடவுள்களும் விலங்கினங்களை வாகனமாகக் கொண்டிருப்பதை புராணங்களின் வழியாகவும், காவியங்களின் வழியாகவும் அறிய முடிகின்றது.

ஊர் எல்லையில் குடி கொண்டுள்ள காவல் தெய்வங்களான அய்யனார், கருப்பண்ணசாமி, மாரியம்மன், காளியம்மன் போன்ற காவல் தெய்வங்களுக்கு குதிரைகள் வாகனமாக இருப்பதைக் காண முடிகின்றது. ஊர் எல்லையில் உள்ள இக்காவல் தெய்வங்கள் ஊரைக் காக்கும் பொருட்டு இரவு நேரங்களில் குதிரையில் பயணித்து ஊரை வலம் வருவதாக நாட்டுப்புற மக்களால் நம்பப்படுகின்றது. நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கும் இக்காவல் தெய்வங்களுக்கு மண் குதிரை வழங்கும் வழக்கம் இன்றளவும் கிராமங்களில் நிலவி வருகின்றது. இதனைப் 'புரவி எடுப்பு விழா' என்று அழைப்பர்.

தமிழக நாட்டுப்புறச் சுடுமண் உருவங்களில் குறிப்பிடத்தக்கவை கிராம தேவதைகளின் உருவங்களும் குதிரை உருவங்களும் ஆகும். நாட்டுப்புற காவல் தெய்வங்களுக்கு மண் குதிரைகள் திருவிழா காலங்களில் செய்து வைப்பர். இதனை கு.சேதுராமன் பின்வரும் பகுதி வழியே விளக்கிக் காட்டுகின்றார்.

"புரவி எடுப்பு எனப்படும் குதிரைகள் பொதுவாக ஆண் கடவுளர்களுக்கும் அவர்களது தளபதிகளுக்கும் வாகனமாக வைக்கப் பெறும். கிராமங்களில் அக்காலத்தில் கிராமத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், மன்னர்கள் ஆகியோர் கிராமப் பாதுகாவலர்களாக இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் குதிரை மீதே கிராமங்களில் வலம் வந்துக் கொண்டிருந்தனர். இதனைப் போன்றே கிராமங்களையும் கிராம நீர்நிலைகளையும் காக்கின்ற தெய்வங்கள் எனக் கருதப்படும் அய்யனார்,

மதுரை வீரன் போன்ற கிராம தேவதைகளைப் பற்றிய உருவங்களிலும் குதிரைகளை வாகனமாகக் கொடுத்தனர். குதிரைகள் வீரத்திற்கும் அளவற்ற சக்திக்கும் உறைவிடமாகக் கருதப்பட்டு வந்தன. குதிரையின் திறனையும் சக்தியையும் அதன் உருவ அமைதியை வைத்தே கிராம மக்கள் வெளிப்படுத்தினர்"[19]

மேற்கண்ட பகுதியில் காவல் தெய்வங்களுக்கு மண் குதிரை வழங்கும் வழக்கம் கிராம மக்களிடையே இருந்து வந்துள்ளமையையும், இதனை விழாவாக மக்கள் கொண்டாடி வந்துள்ளமையையும் காண முடிகிறது.

### 2.2.4.1 புரவி-சொல் விளக்கம்

புரவி எனும் சொல்லிற்கு குதிரை எனும் பொருள்படும். நான்கு கால்களைக் கொண்ட வேகமாக ஓடக்கூடிய, சவாரி செய்ய பழக்கப்படுத்தக் கூடியதுமான பாலூட்டி இனத்தைச் சார்ந்த விலங்கு குதிரை ஆகும்.

மண் புரவி செய்யும் மூலப் பொருட்களில் முதன்மையானது கரைம்பை மண் ஆகும். மூன்று குளத்தில் உள்ள மண்ணை எடுத்து வந்து ஒன்றாகக் கலப்பர். பின்பு அம்மண்ணில் உள்ள சிறு சிறு கட்டிகளை உடைத்து நுண்ணிய துகள் மண்ணாய் மாற்றுவர். பிறகு இதனை உரிய பக்குவத்தோடு வெயிலில் காய வைப்பர். பின்பு பக்குவப்பட்ட மண்ணை உருட்டி ஒன்றாகச் சேர்த்து பின்பு அதன் நடுவில் குழிவெட்டி அதனில் தேவையான அளவு தண்ணீர் விட்டு அதை காலில் மிதித்து மண்ணை நன்கு புரட்டிப் பக்குவப்படுத்துவர். இம்மண்ணோடு நெல் உமியை கலந்து உருவங்களைச் செய்வர்.

### 2.2.4.2 மண் குதிரை செய்யும் முறை

கல்லால் உருவங்களை வடிப்பதற்கும் மண்ணால் உருவங்கள் செய்யப்படுவதற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. அதாவது கற்சிற்பங்கள் மேலிருந்து கீழ்நோக்கி உருவாக்கப்படும். ஆனால் மண் சிற்பங்கள் கீழிருந்து மேலாகச் செய்யப்படும். மேலும் கல் சிற்பங்களில் வண்ணங்களைத் தீட்ட இயலாது. மண் சிற்பங்களில் தேவையான வண்ணங்களைத் தீட்டி அழகுக்கு அழகு சேர்க்கலாம்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் காவல் தெய்வங்களாகவும் எல்லை தெய்வமாகவும் இருக்கக்கூடிய அய்யனார், கருப்பண்ணசாமி தெய்வங்களுக்கு ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நல்ல நாள் பார்த்து, சகுனம் பார்த்து அதன் பிறகு குதிரை (புரவி) விழாவிற்காக நாளினை குறிப்பர். ஊரின் மையப்பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலில் ஆரம்பித்து பிடி மண் கொடுத்து, அதன் பிறகு குதிரை செய்வதற்கு, உகந்த மண்ணைத் தேடிக் கொண்டு வந்து, அதனை நல்ல முறையில் தண்ணீர், தவிடு போன்ற பொருட்களை அதனுடன் கலந்து முறையாக பக்குவப்படுத்தி, அதனை வேளாளர் அல்லது குயவர் என்று சொல்லப்படுபவர் முறையாக அய்யனார் அல்லது கருப்பண்ணசாமி உருவத்தினை முதலில் செய்வார்.

அதன்பின் அரண்மனைக் குதிரை, சிறு தெய்வங்கள் (கன்னிமார், ஏழு பிள்ளைத்தாய்) போன்ற தெய்வங்களையும், குதிரை, பசு, காளை மாடுகள், மனித உருவங்கள், நாய், கோழி, பூனை போன்ற உருவங்களையும் அம்மண்ணினால் செய்து நிழலிலேயே காய வைத்து, நன்றாக காய்ந்தவுடன் அதனை இரண்டடி ஆழம் உள்ள உருவங்களுக்குத் தகுந்த அளவில் அகலம் வைத்து குழி வெட்டுவர். அக்குழியில் எல்லாம் வரிசையாக அடுக்கி அதன் மேல் பகுதியில் வைக்கோல் போட்டு அதனோடு தேவைக்கு ஏற்ப விறகுகளை இட்டு அதன்பின்னர் மேல் பகுதியில் நன்றாக குழைத்து வைத்தச் சேற்றை பூசி ஆங்காங்கே சிறு சிறு துளைகளைப் போட்டு சூளையில் வைத்து, நெருப்பில் வேக வைத்து பக்குவமாக எடுத்து, தேவையான வண்ணங்களைப் பயன்படுத்தி வர்ணங்களைப் பூசுவர்.

அதன்பின் அழகு மிகுந்த கோலத்தோடு புரவி எடுப்பு விழாவானது சிறப்பாக வான வேடிக்கையோடு நடந்துச் செல்லும் வழியில் ஓரிடத்தில் வைத்து தெய்வங்களுக்கும் குதிரைகளுக்கும், மற்ற உருவங்களுக்கும் கண் திறப்பு நடைபெற்று அதன்பின் அய்யனார், கருப்பண்ணசாமி கோயில் அமைந்த இடத்தில் (சவாரியின்) வலது, இடது புறங்களில் வரிசையாக வைத்து பெண்களின் குலைவைச் சத்தம், மேலும் அனைவரின் கைத்தட்டலோடு இறக்கி வைக்கப்பட்டு அர்ச்சனை, ஆராதனை முறைகளோடு விழா நிறைவடையும்.

### 2.2.4.3 மண் குதிரை ஓவியம் வரையப் பயன்படும் வண்ணங்கள்

மண் குதிரை பானை செய்யப் பயன்படும் மண்ணில் சற்று அடர்த்தி அதிகமாக உருவாக்கி சற்று குழைவுத் தன்மையுடன் பதப்படுத்தி குதிரை வடிவம் செய்வர். மண்ணில் செய்யப்பட்ட குதிரையை நெருப்பில் சுட்டுப் பக்குவப்படுத்துவர். பின்பு காய வைப்பர். இதன் பிறகு குதிரை மீது வண்ணங்களைத் தீட்டுவர்.

குதிரை ஓவியம் தீட்ட முதல் நிலையில் வெண்மை நிறம் பயன்படுகிறது. பிறகு, காவி நிறம், நீல நிறம், மஞ்சள் நிறம், கருப்பு நிறம், சிவப்பு நிறம் போன்றவற்றை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். குதிரையின் ஒவ்வொரு பாகத்திற்கும் சிறப்பாக எது அமைந்துள்ளதோ அந்நிறத்தினை உரிய முறையில் பயன்படுத்துவர்.

வெள்ளை நிறத்திற்குப் பெரும்பான்மை சுண்ணாம்பினைப் பயன்படுத்துவர். காவி நிறத்திற்கு காவி நிறக் கல்லினையும், மஞ்சள் காவி கல்லினையும் பயன்படுத்துகின்றனர். நீல நிறத்திற்கு நீல நிறக்கல் அல்லது பொடி அல்லது குழம்பினைப் பயன்படுத்தி வண்ணங்களைத் தீட்டுகின்றனர்.

மண் குதிரைகள் செய்யும் பணிகள் திருவிழாவிற்கு சில நாட்களுக்கு முன்னர் துவங்கி வைக்கப்படுகிறது. இந்நிகழ்வு பிடிமண் கொடுத்தல் என அழைக்கப்படுகிறது. புரவிகள் செய்யும் பொறுப்பு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு வழங்கப்படுகின்றது. மண் குதிரையை கோவிலுக்கு செய்து வைப்பதால் பல

நன்மைகள் சேரும். குறிப்பாக விவசாயம் நன்முறையில் நடைபெறும். பயிர் விளைச்சல்கள் வெகு சிறப்பாக விளையும். மேலும் கடன் சிக்கல்கள் தீரும், தீராத நோய் நொடிகள் விலகும். பில்லி, சூன்யம் போன்ற பிற தீய தொல்லைகள் விலகுவதாக நாட்டுப்புற மக்கள் கருதுகின்றனர்.

புரவி எடுப்பு விழா தொடங்கும் மூன்று மாதத்திற்கு முன்னதாக நேர்த்திக்கடன் செலுத்துபவர்கள் குதிரை செய்யும் பணியில் உள்ளவரிடம் முன்பதிவு செய்வர். தமக்குரிய பொருளாதார தகுதிக்கு ஏற்ற வகையில் குதிரைகளின் வடிவம், வண்ணம் போன்றவற்றினை எடுத்துரைப்பர். குதிரை செய்பவர், தூய்மையாகவும், பய பக்தியுடனும் குதிரை செய்வதில் தம்மை முழு முனைப்புடன் இணைத்துக் கொள்வர்.

## 2.2.4.4 ஒரத்தநாடு பகுதிகளில் மண்குதிரை ஓவியம்

ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள கிராமங்களில் புரவி எடுப்பு விழா நடைபெறுகின்றது. நாட்டுப்புற காவல் தெய்வங்களாக விளங்கும் அய்யனார், கருப்பண்ணசாமி, உப்பிலியப்பன் போன்ற தெய்வங்களுக்கு விழா எடுக்கும் பொழுது அவர்களின் வாகனமாக விளங்கும் குதிரைகளுக்கும் விழா எடுக்கப்படுகின்றது. குறிப்பாக இவ்விழா பங்குனி, சித்திரை போன்ற மாதங்களில் நடைபெறுகின்றது. செல்லம்பட்டி, சோழபுரம், ஆண்டிப்பட்டி, தென்னம்ம நாடு, ஆத்தங்கரைப்பட்டி போன்ற ஊர்களில் புரவி எடுப்பு விழா நடைப்பெறுகின்றது.

பருவமழை தங்கு தடையின்றி பொழியவும், விவசாயம் செழிக்க, கடன் சிக்கல் தீர, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ போன்ற நன்மைகள் விளைய இவ்விழா கொண்டாடப்படுவதாக காளியப்பன் என்பவர் கூறுகின்றார். அய்யனார் தெய்வத்திற்கு வெள்ளைக் குதிரை எடுப்பது வழக்கம் எனவும் கூறுகின்றனர்.

புரவி எடுப்பு விழா என்பது தமிழரின் வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் பிரிக்க முடியாத கூறாக பின்னிப்பிணைந்துள்ளது. சுடுமண் கலை வடிவங்களைத் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாக வாங்கி வைத்து வழிபடும் வழக்கம் நாட்டுப்புற மக்களிடம் நிலவுகின்றது. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நோய் குணமடைவதற்குத் தெய்வத்திடம் வேண்டிக் கொள்கின்றனர். நோய் குணமடைந்தவுடன் பாதிக்கப்பட்ட உடல் உறுப்பினைப் போன்று மண்ணால் செய்து அதனைத் தெய்வத்திற்குக் காணிக்கை ஆக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருவதை ஒரத்தநாடு பகுதியில் வாழும் மக்களிடமும் காண முடிகிறது.

## 2.2.4.5 சிவப்பு நிறக் குதிரை

குதிரை ஓவியம் நான்கு படிநிலைகளில் உள்ளது. ஒன்று இயல்பான நிலையில் உள்ள ஓவியம், மண்குதிரையை நெருப்பில் சுட்டவுடன் அதன் மீது செம்மண் கரைசலை கரைத்து சிவப்பு நிறத்தில் குதிரை முழுவதும் வண்ணம்

தீட்டுவர். இது சிவப்பு நிறக் குதிரையாக காட்சியளிக்கும். இக்குதிரையின் விலை சற்று குறைவாகக் காணப்படும்.

#### 2.2.4.6 வெண்மை நிறக் குதிரை

அடுத்ததாக வெண்மை நிறம் கொண்ட மண் குதிரை ஆகும். குதிரையை வடிவமைத்து பின்பு அதன் மீது சுண்ணாம்பினை முழுவதுமாக வண்ணம் தீட்டுவர். இக்குதிரையின் வடிவம் முழுவதும் வெண்மை நிறத்தில் காட்சியளிக்கும். இக்குதிரையானது பெரும்பாலும் இரவு நேரத்தில் தெளிவாகத் தெரியும்.

#### 2.2.4.7 மூன்று வண்ணம் கொண்ட குதிரை

வடிவத்தில் சிறிய குதிரைகள் பெரும்பாலும் மூன்று வண்ணங்களைக் கொண்டதாக அமையும். வெண்மை, நீலம், மஞ்சள் போன்ற நிறங்களில் ஓவியம் தீட்டுவர். முதல் நிலையில் குதிரை முழுவதும் வெண்மை நிறத்தினால் வண்ணம் தீட்டுவார் பின்பு, குதிரையின் முதுகு பகுதியில் நீல நிறத்தினால் கோடுகளைத் தீட்டுவர். குதிரையின் முகங்களில் மஞ்சள் நிறத்தினைத் தீட்டுவர். குதிரையின் கால்களில் மஞ்சள், காவி போன்ற நிறங்களில் வண்ணம் தீட்டுவர். இக்குதிரைகளே பெரும்பாலும் கோயில்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. ஒரத்தநாடு வட்டார மக்கள் பெரும்பான்மையோர் இக்குதிரைகளையே கோவில்களுக்கு வழங்குவதை இன்றளவும் காண முடிகின்றது.

#### 2.2.4.8 பல வண்ணம் கொண்ட குதிரைகள்

தனிநபர் வழங்கும் குதிரைகள் பெரும்பாலும், சிவப்பு, வெண்மை, மஞ்சள் ஆகிய மூன்று வண்ணம் கொண்டதாக அமையும். ஆனால் கோயில்களில் ஊர் மக்களின் சார்பாக வைக்கும் குதிரைகள் பல நிறம் கொண்ட குதிரையாக இருக்கும். இக்குதிரைகள் வடிவத்தில் 10 அடி உயரம் கொண்டதாக இருக்கும். இக்குதிரையில் உள்ள ஓவியங்கள் வண்ணங்கள் என்றும் அழியாத வகையில் பல வண்ணக் குழம்புகளால் ஓவியம் தீட்டுவார். இக்குதிரையில் சிவப்பு, மஞ்சள், ஊதா, வெண்மை, பச்சை, காவி, கருப்பு போன்ற பல் நிறங்களில் குதிரையின் ஒவ்வொரு பகுதிகளிலும் வண்ணங்களைத் தீட்டுவர். இக்குதிரைகள் ஒவ்வொரு ஊர் எல்லைத் தெய்வங்களின் கோயில்களில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

சிறு குதிரைகளில் பெரும்பான்மை மூன்று நிறங்களே தீட்டப்படுகின்றன. குதிரைகளின் காதுகளுக்கு வெண்மை, மஞ்சள், ஊதா போன்ற நிறங்களைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். பல நிறம் கொண்ட குதிரைகள் எண்ணிக்கைகளில் குறைவாகவும், சிறிய வடிவிலான குதிரைகள் பெருமளவிலும் வடக்கூர் கிராமத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றடி முதல் 10 அடி உயரம் கொண்ட குதிரைகள் வண்ணம் தீட்டப்பட்டு கோவிலூர், பாச்சூர், ஆண்டிப்பட்டி போன்ற ஊர்களில், ஊர் எல்லைகளில் உள்ள அய்யனார், கருப்பண்ணசாமி, முனியப்பன்

போன்ற கோயில்களில் இக்குதிரைகள் இடம் பெறுகின்றன. நாட்டுப்புற கலைகளில் புரவி ஓவியம் இன்றளவும் இடம் பெற்று வருகின்றது. நாகரீக உலகில் மக்கள் பயணித்தாலும் பண்பாட்டினைக் காக்கும் பொருட்டு புரவி ஓவியங்கள் இன்றளவும் ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த பகுதிகளில் உள்ளமையைத் தெரிந்துக்கொள்ள முடிகின்றது.

## 2.2.4.9 குயவர் இனத்தவரின் பொருளாதார நிலை

மிகவும் கவனத்துடனும் நுட்பத்துடனும் செய்யக்கூடிய தொழில் மண் பானை செய்தலாகும். மண் பானை செய்யும் குயவர்களின் வாழ்க்கையானது பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவே உள்ளனர். கால மாற்றத்திற்கேற்ப நெகிழியினால் தயாரிக்கப்படும் குடம் வருகைக்குப் பின் இத்தொழின் உற்பத்தியில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது போதிய வருமானம் இல்லை என்றே கூறுகின்றனர்.

பொங்கல் விழாக்களின் போது மட்டுமே மண் பானை மட்டுமில்லாமல் மண் சட்டியும் அதிகம் விற்பனையாகிறது என்கின்றனர். அந்நேரத்தில் மட்டுமே எங்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது மற்றும் ஒரு சில சமூகத்தினரின் திருமண சடங்கில் பயன்படுத்தப்படும் ‘அரசாணிப் பானை’ எனப்படும் வண்ணப் பானை மூலமும் அதிகம் லாபம் கிடைக்கிறது என்றனர். அவ்வகைப் பானைகள் இரண்டு வாங்கினால் 150 ரூபாய் முதல் விற்கப்படுகிறது என்றனர். பானையின் அளவுக்கேற்ப விலை அமையும் என்றனர்.

கோடை காலங்களில் சாதாரண பானை ஒன்று 80 ரூபாய் முதல் விற்பனையாகிறது என்றனர். இவ்வாறாக பானையின் அளவு மற்றும் தரம் பொருத்து விலை மாற்றம் இருக்கும் என்றனர். ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த ‘குலாலர் தெரு’ என்னும் பகுதியில் வசிக்கும் குயவர்கள் பரம்பரை பரம்பரையாக கைவிடாது இத்தொழிலைச் செய்து வருகின்றனர். அவர்களின் பிள்ளைகளுக்கும் இத்தொழிலைச் சொல்லிக் கொடுக்கின்றனர். அவர்கள் பள்ளி, கல்லூரி சென்று படித்து வந்தாலும் தங்களின் குலத்தொழிலை ஆர்வமுடன் கற்றுக்கொள்கின்றனர்.

## 3 பச்சைக் குத்தல்

மனிதர்களின் வாழ்வியல் தொடங்கியது முதலே கலைகள் உருவாக்கம் பெற்றன. அனைத்துக் கலைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்குவது நாட்டுப்புறக் கலைகளே ஆகும். இலக்கியங்களுக்கும் கலைகளுக்கும் அடிப்படை மூலக்கூறாக விளங்குவதும் நாட்டுப்புறக் கலைகளே ஆகும். நாட்டுப்புற மக்கள் மண் சார்ந்து தங்கள் வாழ்வை இயக்கி வந்தனர். அதனால் அவர்களுடைய கலைகளும் இலக்கியங்களும் உயிர்ப்பு தன்மையோடும், உணர்ச்சித் தன்மையோடும் இயங்கி வருகின்றன.

நாட்டுப்புறக்கலைகள் இறைக்குறியீடுகளோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சமயம் சார்ந்து விளங்குவதால் பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகள் கோயிற்கலையோடு பிணைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அடுத்த நிலையில் சடங்குகள், நம்பிக்கைகளின் வழியே இக்கலைகள் இயக்கம் பெற்று வருகின்றது.

நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சி வடிவங்களை கு.சேதுராமன் பின்வருமாறு தெளிவுபட எடுத்துக்காட்டுகின்றார். “இந்தியக் கலை சமயம் சார்ந்தது என்பது பெரும்பான்மையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொதுவான கருத்தாகும். இச்சமயம் சார்ந்த இந்தியக் கலைக்கு அடிப்படையாக அமைவது கிராமங்களில் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்த சமயக் குறியீடுகளே ஆகும்”[20]

கிராமங்களில் தோற்றம் பெற்ற நாட்டுப்புறக் கலைகள் சமயங்களோடு தொடர்பு உடையதால் பிற்காலக் கோயிற்கலைகளில் இணைக்கப்பட்டு இயங்கி வருகின்றது எனலாம். நாட்டுப்புற மக்கள் வாழ்வில் கையாண்ட கலைகளை இரு நிலைகளில் வகைப்படுத்துவர்.

1.கட்புலக்கலைகள் (visual arts)

2. நிகழ்த்துக்கலைகள் (performing arts)

மேற்கண்ட இரு வகைகளில் நம்முடைய நாட்டுப்புறக்கலைகள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவற்றை திருவிழாக்காலங்களிலும் மற்ற சடங்குகளிலும் காண முடிகின்றது.

கட்புலக்கலைகளில் பச்சை குத்துதல், கோலம், பானை ஓவியங்கள், பாய் ஓவியங்கள், சுவரோவியங்கள், சுடுமண் ஓவியங்கள் மற்றும் இன்னபிறவற்றை கூறலாம். நிகழ்த்துக்கலைகளில் காவடியாட்டம், கரகாட்டம், கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம், பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை, சிலம்பாட்டம், வில்லுப்பாட்டு, உடுக்கடிப்பாட்டு போன்றவைகளை நிகழ்த்து கலைகளாக கருதலாம். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பகுதி கட்புலக்கலைகளே ஆகும்.

மனிதனின் அழகியல் உணர்வு கலையாக மிளிர்கின்றது. மனிதன் நாகரீக வளர்ச்சியில் தம்மை இணைத்துக் கொண்ட பொழுதிலிருந்து கலையை உருவாக்க தொடங்கினான். ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, என பல்கலையில் தேர்ச்சி அடைந்த பிறகு தம் உடலினை அழகுபடுத்தும் புதிய கலைகளைக் கற்று தேர்ந்தனர். தம் உடல் பார்ப்பவர்களுக்கு அழகுபட இருக்க வேண்டும் என்ற நோக்குடன் உடல்களை அழகுபடுத்தும் பாங்கு அன்றைய காலந்தொட்டு இருந்து வருகின்றது.

'ஆள் பாதி ஆடை பாதி' என்பது பொன்மொழி அதுபோல அணிகலன்களும் மனிதனுக்கு அழகியலை ஊட்டும். இதற்கு அடுத்த நிலையில் உடல் மீது வண்ணங்களைப் பூசுவது, ஓவியங்களை வரைவது போன்ற கலைகள் உருவாக்கம் பெறத் துவங்கின. இக்கருத்தை பற்றி புலவர் கா.கோவிந்தன் அவர்கள் குறிப்பிடுகையில், "தொல் பழங்கால தமிழ் மகளிர் உடலில் பல்வேறு வகையான வண்ணங்களாலும், வண்ணப்பொடிகளாலும் அழகு செய்யப்பட்டது. தலையாய வண்ணக்குழம்பு மஞ்சளையும், குங்குமத்தையும் அரைத்து கொண்டது. பிறவாவன, 'சந்தனக்குழம்பு, 'தேய்வை', 'சாந்து', 'கொயில்', 'தொய்யில்', முதலாயின. இறுதியில் கூறப்பட்ட தொய்யில், மார்பு, பாலூட்டி மற்றும் அடிவயிறுகள் மீது தடவப்பெற்று, அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றன."[21] என்கிறார். இவரின் இக்கருத்தின் வழி உடல் மீது வண்ணங்களைப் பூசுவது பற்றித் தெளிவுபட அறிய முடிகின்றது.

உடலில் பொருள்களை அணிவது அணிகள் எனப்படும். ஆடைகள், நகைகள் அவ்வகையைச் சார்ந்தவை. அவ்வாறன்றிச் சந்தனம் முதலியவற்றை அப்புதல், வண்ணங்களைத் தடவுதல், வண்ணங்களால் வரைதல், மேனியை வடுப்படுத்துதல், தோலில் குத்தி வரைதல் போன்றவையும் கலைகளாகக் கருதப்பட்டன. ஆடை, அணிகலன் அணிவதற்கு அடுத்த கலையாக வண்ணம் பூசுதல், உடலில் வரைதல், பச்சை குத்தல் போன்றவைகள் கலையாக இருந்து வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.

உடலிற்கு வண்ணம் பூசும் கலை தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் வந்துள்ளன. உடலை வடுப்படுத்துதல், பச்சை குத்தல் நாட்டுப்புறக் கலைகளில் உள்ளடங்கியுள்ளது. நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுச் சாயலாக பச்சை குத்தல் கலை இருந்துள்ளன. பச்சை குத்தல் அனைத்து நாடுகளிலும் காணப்படும் மிகத் தொன்மையான கலையாகும். அனைத்துக் கிராமப்புற மக்களிடம் இன்றளவும் செல்வாக்கு மிகுந்த கலையாகப் பச்சை குத்தல் இருப்பதை நாம் அறிய முடிகிறது.

## 3.1 பச்சை குத்தல் - சொல் விளக்கம்

மேனி அலங்காரத்தில் நிலைத்த வகையாக பச்சை குத்தல் அமைகின்றது. இக்கலை ஆதிகாலம் தொட்டே வழங்கி வருகின்றது. பச்சை குத்தல் எனும் சொல்லிற்கு பல் நிலைகளில் விளக்கம் காணலாம்.

"**TATTOOIN** எனும் ஆங்கிலச் சொல்லிற்கு பச்சை குத்தல் எனும் சொல் நேரிடையாக அமைகின்றது. பச்சை குத்தலுக்கீடான ஆங்கீலச் சொல் **tattooing**. இது பாலினிசிய மொழி சொல் என்று ஆங்கில அகராதி விளக்கம் தருகின்றது"[22]

ஹம்ப்லி என்ற அறிஞர் பச்சை குத்தல் எனும் சொல்லிற்கு பின்வருமாறு விளக்கம் தருகின்றார்.

"ஸ்பானியக் கடலோடிகள் பச்சை குத்தல் என்ற சொல்லுக்கு **'paintado'** என்ற சொல்லைப் பயன்படுத்தினர். **'paintado'** என்ற சொல்லுக்கு வண்ணம் பூசிய அல்லது வண்ணம் தீட்டிய என்று பொருள் என்று கூறுகின்றார். மேலும் **'paintado'** எனும் பாலினீசிய சொல்லிருந்து **'Tattooin'** என்ற ஆங்கிலச் சொல் வந்ததாகக் கருதலாம்"[23]

ஆக்ஸ்.ஃ.போர்ட்டு ஆங்கில அகராதி பச்சை குத்தல் என்பதற்கு கீழ்க்காணும் நிலையில் விளக்கம் தருகின்றது.

"**Tattooin** (பச்சை குத்துதல்)**'An image made in the skin with ink (or) needle'"**[24] ஊசி அல்லது மையினால் தோளில் வரையப்படும் படம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரிகளின் வழி உடம்பில் வரையப்படும் ஓவியம் பச்சை குத்தல் என்பதனை அறிய முடிகின்றது.

பச்சை குத்தல் எனும் சொல்லிற்கு தமிழ் மொழியகராதி பின்வரும் நிலையில் பொருள் தருகிறது.

"பச்சை குத்தல் - பச்சை வண்ணம் பதித்தல்"[25]

'பச்சை' எனும் சொல்லிற்கு அபிதான சிந்தாமணி கூறும் விளக்கத்தினை கீழ்க்காணும் நிலையில் காணலாம்.

"பச்சை – தமிழ்ப் பறையர்களில் ஒரு வகுப்பு. இவர்கள் பச்சை மலையில் தங்கியிருந்தவர். பச்சை குத்திக் குறவர்க்கும் ஒரு பெயர்"[26]

மேற்கண்ட வரிகளின் வழி பச்சை குத்தல் எனும் சொல் பச்சைக்குத்துபவர்களை குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

## 3.2 பச்சை குத்தல் - வளர்ச்சியும் வடிவமும்

மனிதன் தம் உணர்வுகளை வெளிப்படுத்த கையாண்ட கருவிகள் மொழியும் கலையும் ஆகும். உள்ளத்து உணர்வுகளை பிறர் அறிந்துணரும் பொருட்டு பல கலைகளை உருவாக்கத் தலைப்பட்டான் மனிதன். ஓவியம், சிற்பம், கட்டட நுட்பம் போன்ற இன்ன பிற கலைகளில் தேர்ச்சிப் பெற்ற தமிழர்கள் தம்மை ஒப்பனை செய்யும் கலைகளிலும் வல்லுநர்களாக உருவாகி வந்தனர். இயற்கை மற்றும் செயற்கை வழிப் பெறப்பட்ட வண்ணக் கலவைகளை தம் மேனியில் பூசி மேனி

அழகினை மெருகேற்றிக் கொண்டனர். பண்பாட்டினையும் கலாச்சாரத்தையும் கையாளத் தொடங்கிய மனிதர்கள் தம் எண்ணங்களை மேனிப் புனைவில் குறியிட்டு வெளிப்படுத்தினார்கள்.

மேனிப்புனைவு என்பது முற்காலம் தொட்டே உள்ளது. ஆனால் எக்காலத்தில் தோன்றியது என்பதை அறுதியிட்டு கூற இயலாது. இதனைப் பின்வரும் கூற்று வழியே அறிய முடிகின்றது.

“மேனியை அழகுபடுத்தல், அல்லது மேனியில் குறியிடல் என்பது சடங்குகள், நம்பிக்கைகள், விலக்குகள் (Taboos) ஆகியவை பற்றிய முழுக்கதையைத் தரும். இவை இனப்பெருக்கச் சடங்குகளுடன் நெருங்கிய தொடர்புடையன. தொடக்க நிலைப் பண்பாட்டு வடிவின. சரியாக இவை என்று, எங்கு தோன்றின என்பது இன்னும் புதிராகவே உள்ளது”[27]

மேற்கண்ட கருத்துகளின் வழி ‘பச்சை குத்தல்’ என்பதின் மூல வடிவம் மேனிப்புனைவில் அல்லது மேனியில் குறியிடல் என்பதின் வழியே தோன்றியிருக்கக் கூடும் என்பதை ஓரளவு அறிய முடிகின்றது.

## 3.3 மேனிப்புனைவின் வகைகள்

மேனியை அழகுபடுத்துவதில் நம் முன்னோர்கள் பெருங்கவனம் கொண்டிருந்தனர். நேர்த்தியான கலை நுணுக்கங்களை உரிய முறையில் பின்பற்றினர். மேனிப்புனைவின் வளர்ச்சியையும் வகையையும் பற்றி கா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் கீழ்க்காணும் நிலையில் விளக்கம் பகிர்கின்றார்.

“மேனியை அழகுபடுத்தல், மேனியில் குறியிடல் ஆகியவற்றைத் தற்காலிகமானவை, நிலையானவை என இருபெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். வண்ணம் தீட்டல் முதற்பிரிவிலும், ஊசியால் துளைத்து பச்சை குத்தல், வடுப்படுத்தல், உறுப்புச் சிதைத்தல் ஆகியவை இரண்டாம் பிரிவிலும் அடங்கும். எப்பிரிவினவாயினும் இவை மனித வெளிப்பாட்டின் முக்கிய வாயில்களாம். இவற்றின் மூலம் ஒருவனுடைய சமூக மதிப்பு, பாலுணர்வு நிலை, ஆக்கிரமிப்பு தன்மை, அவன் சேர்ந்த குழு, மந்திரம், மருந்தின் தன்மைகள், விண்ணுலகில் இடம் பெற அவனுக்கிருந்த கவலை, ஒரு சமுதாய மதிப்பிலிருந்து இன்னொன்றுக்கு அவன் இடம் பெயர்ந்த போது செய்த ‘இடம் பெயர் சடங்கு’ தன்னுடைய வகுப்புப் பெருமையைத் தக்க வைத்தல், இனம் காணல் ஆகிய பண்புகள் வெளிப்படுகின்றன.”[28] மேற்கண்ட வரிகளின் வழி வண்ணம் தீட்டுதல் முதல் நிலையிலும் பச்சைகுத்தல் அடுத்த நிலையிலும் உருவாகியுள்ளதைக் காண முடிகின்றது.

## 3.4 உடலுக்கு வண்ணம் தீட்டும் மரபு

மேனியை ஒப்பனை செய்யும் பாங்கறிந்தவர்கள் நம் முன்னோர்கள் ஆவார். உடலில் உள்ள சில உறுப்புகளில் வண்ணம் பூசி அலங்கரித்து மகிழ்ந்துள்ளனர். வண்ணம் பூசும் மரபு பழங்காலம் தொடங்கி இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டே வருகின்றது. இதனைப் பற்றி கா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகையில், “வண்ணம் தீட்டல் முதலில் தோன்றியது ஆகும். பழங்கற்காலத்திலும் இது இருந்திருக்கிறது. காவிப்பொடி அன்று மிகுதியும் பயன்பட்ட பொருளாம். சிவப்புப் பொடி உயிர்தரும் வாயிலாய் இரத்தத்தின் அடையாளமாய்ப் பயன்படுத்தப்பட்டது. தெம்பூட்டும் பொருளாகவும் அது கருதப்பட்டது. என்ற கூற்றில் வண்ணம் தீட்டும் வழக்கம். பழங்காலத்திலிருந்து தோன்றி வந்துள்ளமையைக் காணமுடிகின்றது.”[29] இவரின் இக்கூற்று வழியாக வண்ணம் தீட்டும் மரபு பழங்காலத்திலிருந்தே இருக்கும் ஒரு நெடுமரபு என்பது புலனாகிறது.

பழங்கற்காலத்தில் மண்ணுருவங்களுக்கு வண்ணம் பூசும் நிலை உள்ளதை இ.ஓ.ஜேம்ஸ் என்பவரின் கூற்று வழியே காணமுடிகின்றது.

“வாழ்வு தரும் அப்பொம்மைகள் ஆற்றல் மேம்படுத்தும் வகையில், பெரும்பாலும் சிவப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளன. இது இன்றும் இந்திய மண்ணுருவங்களில் காணப்படுவது போன்றதாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பழங்கால எகிப்து, மெசப்டோமியா, மால்ட்டா ஆகிய இடங்களிலும் இத்தகைய பழக்கம் நிலவியது”[30]

உருவங்களுக்கு வண்ணம் பூசி மகிழ்ந்த மனிதர்கள் தம்முடைய மேனிக்கும் வண்ணம் பூசி மகிழ்ந்தனர். சங்க காலப் பெண்கள் சிவப்பு வண்ணம் தறித்த ஆடையை அணிந்து தாங்கள் இனப்பெருக்கத்திற்கு தகுதியான நிலையில் இருப்பதை குறியீடாக வெளிப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் தமது உரையில்,

“தலைவி, சேடியர் செய்யக் கோலம் கொண்டு பரத்தையர் மனைக்கட் சென்று தலைவர்க்குப் பூப்புணர்த்தலும் கொள்க. தோழி ‘செவ்வணி அணிந்து விட்டமை தலைவன் பாங்காயினார் கூறியது”[31] என்கிறார்.

மேற்காணும் உரையின் வழி செவ்வாடை அணிந்த மகளிர் இனப்பெருக்கத்திற்கு தயாராகவும், வளமை மிகுந்தவராகவும் இருப்பதைச் சிவப்பு வண்ணம் வழியே தத்தம் குறிப்புகளை வெளிப்படுத்தும் நிலை அன்றே இருந்துள்ளதைத் தெளிவுபட காண முடிகிறது.

## 3.5 மேனி ஒப்பனை புனைதல்

உடலில் வண்ணம் பூசிய நம் முன்னோர்கள் நாளடைவில் மேனியில் ஓவியங்கள் வரைய முற்பட்டனர். உடலில் ஓவிய ஒப்பனை செய்யும் முறைக்கு ‘தொய்யில்’ வரைதல் என்பர். மகளிர் தம் மார்பிலும், தோலிலும் தொய்யில் வரைந்துள்ளனர். இதனை,

"துணிநீர் மெல் அவல், தொய்யிலொடு மலர"[32]

என்னும் மதுரைக்காஞ்சி பாடலடிகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## 3.6 மேனிப்புனைவின் மூலக்கூறுகளும் வடிவங்களும்

ஊடலை ஒப்பனை செய்யும் வழக்கம் முற்காலத்தில் இருந்துள்ளது. உறுப்புச் சிதைத்தலுக்கு அடுத்த நிலையில் வண்ணப் பொருள்களைக் கொண்டு மேனியை ஒப்பனை செய்ய முற்பட்டனர். வண்ணம் தீட்டும் நிலையில் தொடங்கிய மேனி ஒப்பனை பல்வேறு வடிவங்களைப் பெறத்துவங்கியது. அவையே,

1. திலகம் (பொட்டு வைத்தல்)
2. கண்ணேறுபடுதல்
3. பொட்டு மை தயாரித்தல்
4. கண் மை தயாரித்தல்
5. தோல் பூச்சு
6. முடிப்பூச்சு
7. இதழ்பூச்சு
8. நகம், கை, கால் பூச்சு

போன்ற வடிவங்கள் மேனிப்புனைவில் இடம் பெற்றுள்ளன.

## 3.7 பச்சை குத்தல் வளர்ச்சி நிலை

ஆதி காலத்தில் துவங்கி இன்று வரையிலும் பல்நிலையில் வளர்ச்சிப் பெற்று வந்துள்ள பச்சை குத்தல் கலை பல்வேறு வடிவங்களையும் வளர்ச்சி நிலையையும் எட்டியுள்ளது. இக்கலையின் வரலாற்றுப் பின்புலத்தினைப் பின்வரும் பகுதி வழியே அறிய முடிகின்றது.

வரலாறு தொடங்கிய காலத்துக்கு முன்பிருந்தே ஊசியால் துளைத்துப் பச்சை குத்தும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இதனை கண்டுபிடித்த ஆதிமனிதன் ஒரு

பேரறிவாளன் என்றே சொல்லலாம். மந்திர சமயத் தொடர்பாக இந்த வண்ணமிடலை ஒரு நிலைத்த குறியீடாக அவனே தொடங்கினான். இதன் மூலம் ஒவ்வொரு தடவையும் அதைத் திரும்பத் திரும்ப வரைவது வண்ணமிடுவது ஆகிய கடினமான வேலையை நிறுத்தியவன் அவனே எனலாம். இக்கருத்தைப் பற்றி கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகையில், “வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வண்ணம் தீட்டல் பச்சை குத்தலுக்கு முந்தையதாய்த் தோன்றியது. ஆதலால் வண்ணம் தீட்டலில் காணப்பட்ட அழகியல் மந்திர மற்றும் சமூகஞ்சார்ந்த தன்மைகள் நிலைத்த தன்மையை அடிப்படையாகக் கொண்ட பச்சை குத்தலுக்கு மாற்றப்பட்டன. வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிமனிதனின் குகை ஓவியங்களை ஒரு வகையில் பாறையில் குத்திய பச்சை என்றே துணியலாம்”[33] என்கிறார்.

மேற்கண்ட கருத்துகளின் வழி மனித வரலாறு தொடங்கிய காலத்தில் பச்சை குத்தல் தோன்றியது என்பது புலனாகிறது. ஆதிமனிதன் வண்ணம் தீட்டுதலிலும் ஓவியம் வரைவதிலும் நாட்டம் உடையவனாகவே தென்பட்டான். பச்சை குத்துதலை மந்திரங்களின் காரணமாகவும் சடங்குகள், மருத்துவங்கள், நம்பிக்கைகள் சார்ந்த நிலைப்பாடுகளில் இக்கலை உருவாக்கம் பெற்றது என்று அறிந்து கொள்ள முடிகின்றது.

ஓவியங்களின் வளர்ச்சி நிலை பச்சை குத்தலுக்கு வழிகோலின எனலாம். முற்கால மனிதர்கள் மரங்களிலும், பாறைகளிலும், குகைகளிலும் தமக்குக்கிடைத்த மூலப்பொருட்களைக் கொண்டு வண்ணங்களையும் உருவங்களையும் தீட்டினர். பாறைகளில் தீட்டப்பட்ட ஓவியங்கள் பாறையில் குத்திய பச்சையாக மாறியது. இதனைப் பின்வரும் பகுதி வழியே தெரிந்துணரலாம். “ஓவியங்களில் கோட்டுருவங்கள் முதலில் வரையப்பட்டன. பின்னால் இயற்கைத்தந்த களிமண், தாதுப்பொருட்கள், கரி, தாவர வண்ணப்பொடிகள் ஆகிய இவற்றைக் கெட்டியான விலங்கு கொழுப்பில் கலந்த பசைப் பொருட்களால் வரைந்து கொண்டு அதன் இடைவெளியில் வண்ணம் பூசினர். பாறையின் சுவரில் இப்படிப் பூசிவிட்டால் சுண்ணாம்பு கற்கள் அவற்றை உறிஞ்சிக் கொண்டு அழியா நிலைபேற்றை அதற்குத்தர அது பாறையில் குத்திய பச்சை ஆனது.”[34] இவ்வாறு பாறையில் வரைந்த ஓவியம் பச்சையானது. இதன் மூலம் பச்சை என்பது அழியாத ஓவியம் என்பதை அறிய முடிகின்றது.

## 3.8 பச்சை குத்தும் முறைகள்

பச்சை குத்தும் முறைகள் ஒவ்வொரு நாட்டிற்கேற்ப மாறுபடுகின்றன. அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு நாட்டிலும் பச்சை குத்தும் மூலப்பொருள்களும், கருவிகளும் மாற்றம் அடைகின்றன. முற்காலத்தில் மனிதர்கள் தமக்குக் கிடைத்த கற்களைக் கருவியாக்கி பச்சைக் குத்தி வந்துள்ளனர். பழங்காலத்தில் சிறிய கூர்மையான கல் போன்ற கருவிகளை மேலும் கூர்மையாக்கித் தனித்தனி சிறு துளையிட்டு உடலில் பச்சை குத்தும் முறையினை கைக்கொண்டுள்ளனர். கூர்மையான

கற்களே முதலில் பச்சை குத்தும் கருவியாக இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

கற்கருவிகளைத் தொடர்ந்து மரக்கட்டைகள் பச்சைக் குத்தும் கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை சம்னர் எனும் அறிஞரின் கூற்று வழியே அறிந்து கொள்ள முடிகின்றது.

“தென் அமெரிக்கச் செவ்விந்தியர் ஒவ்வொரு பச்சை வடிவத்திற்கும் தனித்தனிக் கருவிகள் வைத்திருந்தனர். மரக்கட்டைகளில் இரு புறங்களிலும் புடைப்பு நிலையில் பச்சை வடிவங்கள் இருந்தன”[35] என்று எடுத்துக்காட்டுகின்றார். கற்களுக்கு அடுத்த நிலையில் மரம் பச்சைக் குத்தும் கருவியாக மாற்றம் அடைந்துள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

முற்காலம் கடந்து பிற்காலத்தில் பச்சைக் குத்தும் கருவி உலோகத்தால் உருவாக்கப்பட்டது. முற்களைப் பயன்படுத்திய நிலை மாறி முள் போன்ற கூர்மையான ஊசிகளைப் பயன்படுத்தினர். பின்னாளில் வளர்ந்த பச்சைக் குத்தும் முறைப் பற்றி ஹம்ப்லி பின்வருமாறு சுட்டுகின்றார்.

“தோலுக்குக் கீழ் நூலை இழுப்பதன் மூலமே சாறு இறக்கப்பட்டது”[36] மேற்காணும் பகுதியை உற்று நோக்கும் போது நூல் ஊசி போன்றவை பச்சை குத்தும் கருவியாக வளர்ந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. இன்றளவு ஊசிகளையே பச்சை குத்துவோர் பெருமளவு பயன்படுத்தி வருகின்றனர். பச்சை குத்தும் கருவிகள் கால நிலைக்கு ஏற்ப மாற்றம் அடைந்து வந்துள்ளதை அறிய முடிகின்றது. ஊசியால் தோலை துளையிடுவதற்கு முன்பு பச்சை வடிவங்களை அச்சாகக் கொண்டு தோலில் பதித்து அக்கோட்டுருவங்களின் மீது ஊசியால் பச்சை குத்துவர். பச்சை குத்துகின்றவர்களை பச்சைக் குத்திகள் என்றழைப்பர். குறவர் இன மக்கள் இதனை குலத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

## 3.9 பச்சை குத்தல் - கதையும் - காரணமும்

பச்சை குத்தல் தொடர்பாக சில கதைகள் உண்டு. பச்சை குத்தல் குறித்த கதையை டெய்லர் பின்வருமாறு விளக்கிக் காட்டுகின்றார்.

“பீஜித்தீவு மக்கள் பெண்களுக்கே பச்சை குத்துவர். அண்மைத் தீவான டோங்கா மக்கள் ஆடவருக்கே பச்சை குத்துவர். டோங்காவைச் சேர்ந்த ஒருவன் பீஜித்தீவுக்கு வந்து பச்சை குத்தும் சரியான வழக்கத்தைக் கற்ற பிறகு திரும்புகையில் வழியெல்லாம் மறவாமலிருக்க ‘பெண்களுக்கே பச்சை; ஆண்களுக்கல்ல என்று திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தான். வழியில் எதிர்பாராத வகையில் ஒரு மரத்தில் மோதித் தடுமாறி விழத் தன் சொற்களை மறந்து மாற்றிக்

கொண்டான். ‘ஆண்களுக்கே பச்சை; பெண்களுக்கல்ல’ என்று அவன் சொன்னது அரசக் கட்டளை போல ஆயிற்று”[37]

மேற்காணும் பகுதியின் வாயிலாக பச்சை குத்தலுக்குரிய கதையையும், காரணத்தினையும் அறிந்துணரலாம். தொடக்க காலத்தில் துவங்கிய இக்கலையானது காரண காரியத்தோடு இன்றளவும் நிலவி வருகின்றது.

ஒவ்வொரு இன மக்களும் பச்சை குத்துலை பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்தியுள்ளனர். இறையியல் சார்ந்த நம்பிக்கைகளும் மருத்துவம் சார்ந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலும் சடங்கு சார்ந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலும் இக்கலை பின்பற்றப்பட்டன. இதனை பின்வரும் பகுதி தெளிவுபட எடுத்துரைக்கின்றது.

“தொடக்க நிலைக் கருத்தாகப் பச்சை குத்துலை இனப்பெருக்கச் சடங்குடனும் தாய்த்தெய்வ வழிபாட்டுடனும் தொடர்புபடுத்துவதன்றியும் மேலும் சில கருத்துக்கள் கூறப்படுகின்றன. முன்னெச்சரிக்கையாகவும், பாதுகாப்பு உணர்வு காட்டுவதாகவும், மந்திர நோக்குடையதாகவும், வலி நீக்கும் வழியாகவும், நல்லூழ் வேண்டியும், காதலுணர்வு நோக்காகவும், இளமை நிலைக்கவும், பாலினக் கவர்ச்சிக்காகவும் பச்சை குத்தல் இடம் பெற்றிருந்தது”[38]

பச்சை குத்துவதற்கு மற்றொரு காரணத்தினையும் அறிஞர்கள் முன் வைக்கின்றனர். தீய சக்திகள் அணுகாமல் இருப்பதற்கும், தீய சக்திகளை விரட்டியடிக்கவும், பச்சை வடிவங்கள், பச்சை வண்ணங்கள் பயன்படுகின்றன. பச்சை குத்தல் தொடக்க காலத்தில் சடங்கு நிலையோடும், வழிபாட்டுடனும் தொடர்புடையதாக இருந்து வந்துள்ளமையை தெளிவுபடக் காண முடிகின்றது. மேலும் மந்திரம், ஊழ், உணர்வியல் மற்றும் மருத்துவ வழியாகவும் பச்சை குத்தல் தொடந்து கொண்டே வந்துள்ளது.

மருத்துவம் மற்றும் உடலியல் ரீதியான நன்மைக்காக பச்சை குத்தல் நிலவி வந்துள்ளமையை பற்றி பிரேசர் **(Frazer)** எனும் அறிஞர் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

“பழங்கால நம்பிக்கையும் சடங்குமாகிய ‘குருதி வெளிப்படச் செய்தல்’ தொடர்ந்து நிலவுவதற்குப் பச்சை குத்தல் சான்றாகும். இப்படி இரத்தத்தை வெளியேற்றுவது உடம்பை வலுவூட்டும் என்றும், நோய் தீர்க்க இதுவே சிறந்த மருந்தென்றும் மக்கள் நம்பினர். ‘இரத்தப் போக்கு மருத்துவமாய் அது பழங்காலத்தில் பரவலாயிருந்தது”[39] என்று கூறுகிறார். உடலை வலிமைப்படுத்தும் ஆற்றல் பச்சை குத்தலுக்கு உள்ளமையால் இதனைப் பின்பற்றலாயினர். உடல் வலிமையோடு இயக்கம் பெருவதோடு நில்லாது உடல் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு பச்சை

குத்தல் வழி வகுக்கும் என்பதை மேற்கண்ட கூற்று வழி தெரிந்துகொள்ள முடிகின்றது.

பச்சை குத்தவதற்கு மற்றொரு காரணத்தினையும் அறிஞர்கள் முன் வைக்கின்றனர். தீய சக்திகள் அணுகாமல் இருப்பதற்கும், தீய சக்திகளை விரட்டியடிக்கவும் பச்சை வடிவங்கள், வண்ணங்கள் பயன்படுகின்றன. இதனை பிரேசர் கீழ்க்காணும் நிலையில் சுட்டிக்காட்டுகின்றார்.

“ஹவாய்த் தீவுகளில் நோயுண்டாக்கும் தீய சக்திகளைத் துரத்த நோயாளியை ஊசியால் குத்துவதைக் வழக்கமாய் கொண்டிருந்தனர்”[40]

மேற்காணும் குறிப்பில் பச்சை குத்துதலின் மூல வடிவமாக ஊசியால் குத்தும் நிலையினை அறிந்துணர முடிகின்றது. தீயசக்திகள் நோயை உருவாக்கும் என்றும் அந்நோயிலிருந்து விடுபட பச்சை குத்தல் வழிவகைப்புரியும் என்ற நம்பிக்கையினையும் உணர முடிகிறது.

## 3.10 பச்சை குத்துதலின் வடிவங்கள்

பச்சை குத்துலில் நம் முன்னோர்கள் பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்தினார்கள். சமயக் குறியீடுகளையும், குல மரபுச் சின்னங்களையும் தமது உடலில் வரைந்தனர். ஆதிகால மனிதன் தமது உடலில் பல்வேறு பச்சை வடிவங்களைப் பதிவு செய்துள்ளான். பறவைகள், தேள், மீன், புலி, வேங்கை போன்றவைகள் பச்சை வடிவங்களாக இடம்பெற்றன. பின்பு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. பெயர், மலர், சக்கரம் தமக்குப் பிடித்த இறை உருவங்கள், கட்சிச் சின்னங்கள், கட்சித்தலைவர்களின் உருவங்கள் போன்றவை பிற்காலத்தில் தோன்றிய பச்சை வடிவங்களாக கொள்ளப்பட்டுள்ளன. இன்றையச் சூழலில் மொழி, இனம் போன்ற குறியீடுகள் பச்சை வடிவங்களில் இன்றளவும் இடம் பெற்று வருகின்றன.

## 3.11 பச்சை குத்தப் பயன்படும் மூலப்பொருட்கள்

பச்சைக்குத்துவதற்கு சில மூலப்பொருட்களைப் பயன்படுத்துவர். முதல் நிலைக் கருவியாக ஊசியைப் பயன்படுத்துவர். அடுத்த நிலையில் வண்ணப்பொடி, தேங்காய் ஓடு போன்றவை மூலப்பொருட்களாகக் கொள்ளலாம். வண்ணப்பொடிப் பச்சை நிறத்திலேயே காணப்படும். வண்ணப்பொடி தயாரிப்பதற்கு உரிய செய்முறைகளைப் பற்றி கா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகையில்,

“மஞ்சள், விளக்கெண்ணெய், நீர் கலக்காத கரியாந்தழைச்சாறு ஆகியவை மூலப்பொருள்களாகும். கரியாந்தழைச்சாற்றுடன் சிறிது மஞ்சள் பொடியைக் கலந்து பசைபோலாக்கிப் புதுமண் கலயத்தின் மீது பூசுவர். பிறகு இந்தச் சாற்றையும் விளக்கெண்ணெயையும் கலந்து அகல் விளக்கில் ஊற்றித் திரியை எரிய விடுவர். கலயத்தை விளக்கின் மீது அடர்ந்த புகை படியும் படி வைத்திருப்பர். இதைச் சுரண்டி

எடுத்துத் தனியாக சேமிப்பர். பயன்படுத்துவதற்குச் சற்று முன்பாக வேண்டிய அளவில் மட்டும் இதை எடுத்துத் தேங்காய்த் தொட்டி அல்லது சுரக் குடுவையில் தாய்ப்பாலுடன் சேர்த்துக் குழைப்பர்”[41] என்கிறார். இவரின் இக்கருத்தின் வழி வண்ணப்பொடித் தயாரிப்பதற்கு உரிய செய்முறைகளைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

வண்ணப்பொடித் தயாரிப்பதற்கு கரியாந்தழைச்சாறு, அகத்திச்சாறு, பாகற்காய் சாறு போன்றவற்றையும் பயன்படுத்துவர். மெல்லிய ஊசி மற்றும் எலுமிச்சைச் செடியின் முட்களையும் பயன்படுத்தி விரும்பியவர்களின் ஆசைக்கேற்ப வரைகின்றனர்.

## 3.12 பச்சை குத்தும் பொழுது ஏற்படும் மாற்றங்கள்

பச்சை குத்தும் தொழிலை மேற்கொள்பவர் கையில் மெல்லிய ஊசியையும் கரியாந்தழை சாற்றையும் எடுத்துச் செல்வர். இவர்கள் பச்சை குத்தும் பொழுது மருத்துவ ரீதியாக உடலில் உள்ள தோல்கள் மாற்றம் அடைகின்றன.

பச்சை சாற்றில் உள்ள குரோமியம் ஆக்சைடு பச்சை குத்தும் போது, அது தோலில் பரவி அழிக்க முடியா வகையில் குரோமியம் ஆக்சைடுக்கே உரிய பச்சை நிறத்தை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் மட்டுமே பச்சை நிறத்தில் பச்சை குத்தப்படுகின்றது. ஜப்பான், பர்மா போன்ற நாடுகளில் செங்குழம்பு நிறத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இன்றைய நவீன காலத்தில் பல வண்ணக் குழம்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

## 3.13 பச்சை குத்தப்படும் உடல் பகுதிகள்

அக்காலம் தொடங்கி இன்று வரையிலும் பச்சை குத்துவதற்குரிய இடங்களை தேர்வு செய்துள்ளனர். குறிப்பாக நெற்றி, விரல்கள், முன்கை, தோள்பட்டை, மார்பு, கால் போன்ற பகுதிகளில் பச்சை குத்துவர். உடல் பகுதிகளுக்கு ஏற்ற வகையில் பச்சையின் வடிவங்கள் அமைந்துள்ளன. சிலர் தோள் பட்டைத் தொடங்கி கணுக்கை வரையிலும் நீண்ட நிலையில் பச்சை குத்துவர். அடுத்த நிலையில் புறங்கை முழுவதும் பச்சை குத்தும் நிலையும் உண்டு. நெற்றி பகுதியில் பொட்டு வைத்தல் பெரும்பாலும் பச்சை வடிவமாகக் காணப்படுகின்றது. சமயக் குறீயிடுகளைப் புலப்படுத்தும் வகையில் திருநாமம், முப்பட்டை போன்றவை நெற்றியில் பச்சை வடிவங்களாகக் கொள்வர்.

## 3.14 ஒரத்தநாடு வட்டாரத்தில் பச்சை குத்தல்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டில் பச்சை குத்தும் கலை நிரம்பவே உள்ளன. அனைத்துத் தர மக்களும் பச்சைக் குத்தியுள்ளனர். இதற்கு இவர்கள் கூறும் பொதுவான கருத்து என்னவென்றால் இறந்த பிறகு நம் கூட ஒன்றும் வருவதில்லை அதற்கு மாறாக இப்பச்சை நம் கூடவே வருகின்றது என்கின்றனர்.

பச்சை குத்துவதை விரும்பியே ஏற்கின்றனர். பச்சை குத்துவது ஒரு கலையாக இருப்பினும் அக்கலையை வளர்த்தெடுப்பதற்கு இவ்வட்டார மக்கள் பெரிதும் முயன்று வருகின்றனர். குல மரபுப்படியும், நம்பிக்கை, சடங்குகளின் வழியும் பச்சை குத்துதலை வளர்த்தெடுத்து வருகின்றனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நிலைக்களன்களில் வகைப்படுத்தி ஆராயலாம்.

1. எழுத்துக்களை பதித்தல்
2. பெயர்களை எழுதுதல்
3. உருவங்களை வரைதல்
4. நம்பிக்கை, சடங்கு வழிப்படி பச்சை குத்தல்

### 3.14.1 எழுத்து வடிவங்களை பச்சை குத்தல்

பச்சை குத்துதலில் பெரும்பாலும் எழுத்து வடிவங்களே பதியப்பட்டுள்ளன. காதலன் காதலியின் பெயரையும், காதலி காதலன் பெயரையும், கணவன் மனைவியின் பெயரையும், மனைவி கணவனின் பெயரையும் பச்சையாகக் குத்திக் கொள்வர். அடுத்த நிலையில் தந்தை, தாயின் பெயரை மகன் அல்லது மகள் தங்களது உடலில் பச்சையாகக் குத்திக் கொள்வர். இவ்வெழுத்துக்களைப் பச்சை வடிவமாக குத்திக்கொள்வதற்கு முதன்மைக் காரணம் அன்பு மிகுதியே ஆகும். ஒருவர் மீது கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்தும் வகையில் இவ்வெழுத்து வடிவங்களை தமது உடலில் பச்சைக் குத்திக் கொள்வர். ஒரத்தநாடு மக்கள் இன்றளவு எழுத்துக்களைப் பச்சையாகக் பதிய வைத்துள்ளனர். இவற்றைக் கீழ்க்காணும் நிலையில் வகைப்படுத்தி ஆராயலாம்.

1.முன் எழுத்தைப் பச்சை குத்தல்

2.பெயரைப் பச்சை குத்தல்

### 3.14.2 முன் எழுத்தைப் பச்சை குத்தல்

பெயரின் எழுத்தையும் தன் தாய் தந்தையின் பெயரில் உள்ள முன்னெழுத்தையும் தங்களது கைகளில் பச்சையாகக் குத்திக் கொள்கின்றனர். அடுத்த நிலையில் முன்னெழுத்தையும், தனது பெயரின் முதல் எழுத்தையும் கைகளில், தோள்பட்டைகளில், மார்பில் ஆகியவற்றில் பச்சையாகக் கொள்கின்றனர்.

எழுத்துக்களை பச்சையாகக் குத்திக் கொள்ளும் வழக்கம் ஒரத்தநாடு மக்களிடையே பெரும்பாலும் நிலவி வருகின்றது. இந்நிலைப்பாட்டிற்கு பாப்பாத்தி என்பவர் பின்வரும் நிலையில் விளக்கம் பகிர்கின்றார்.

தாய் தந்தை மீதும், கணவன் மீதும் அன்பின் மிகுதியால் முன்னெழுத்துக்களைப் பச்சைக் குத்திக் கொள்கிறோம். என்று கூறுகின்றார். பெயர் எழுத்துக்கள் தங்கள் கைகளில் இருப்பது அவர்கள் இறந்த பிறகும் கூடவே வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வெழுத்துக்கள் பதியப்படுவதாகக் கூறுகின்றார். இவ்வெழுத்துக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளன.

முன்னெழுத்துப் பச்சையில் குறைந்தது இரண்டு எழுத்துக்கள் இடம் பெறுகின்றன. திருமணமான பெண்கள் தனது கணவரின் பெயர் முன்னெழுத்தையும் தம் பெயரின் முதல் எழுத்தையும் பச்சையாகக் குத்திக் கொள்கின்றனர். ஆண்கள் தம் பெயரின் முதல் எழுத்தையும் தம் மனைவி பெயரின் முதல் எழுத்தையும் பதிந்துள்ளனர். திருமணம் ஆகாத ஆண்கள் தங்களது தந்தை, தாய் இவர்களின் பெயரின் முதல் எழுத்தையும் தமது பெயரின் முன்னெழுத்தையும் பச்சையாகக் பதித்துக் கொள்கின்றனர். சில நேரங்களில் இரண்டு, மூன்று எழுத்துக்கள் பச்சையில் இடம் பெறுகின்றன.

### 3.14.3 பெயரைப் பச்சை குத்தல்

ஒரத்தநாடு வட்டாரத்தைச் சுற்றியுள்ள மக்களில் பெரும்பான்மையோர் தங்களின் முழு பெயரினையும் பச்சைக் குத்தியிருப்பதைப் பார்க்க முடிகிறது. ஒரு சில பெண்கள் தங்கள் பெயருடன் கணவரின் பெயரையும் சேர்த்து பச்சை குத்தியிருப்பதைப் பார்க்க முடிகிறது. அதற்கான காரணம் பற்றி கேட்ட போது வனசா என்பவர் நான் இறந்த பின் என் கணவர் என்னுடன் வராரோ இல்லையோ, அவர் பெயராவது என்னுடன் வரனும் என்பதற்காகத் தான் என்றார். ஒரு சில ஆண்கள் தங்களுக்கு பிடித்தமான திரைப்பட கதாநாயகர்களின் பெயரினையும் பச்சை குத்தி கொள்கின்றனர்.

### 3.14.4 உருவங்களைப் பச்சை குத்தல்

ஆழியவாய்க்கால் பகுதியில் வாழும் பச்சை குத்தல் தொழிலைச் செய்து வரும் முத்து என்பவர் தன்னுடைய முதுகில் சிங்கத்தின் உருவத்தை பச்சை குத்தியிருந்தார் இதற்கான காரணம் அவர் கூறியதாவது, காட்டுக்கு ராஜாவாகவும் பலத்தில் சிறந்ததாகவும் தோற்றமளிப்பது சிங்கம். ஆகவே சிங்க உருவத்தை நான் பச்சையாக குத்தியிருப்பதின் மூலம் மனதளவில் வலிமையும் தைரியமும் ஏற்படுகிறது என்றார். வடக்கூரைச் சார்ந்த கந்தவேல் என்பவரின் இரு கைகளின் தோள் பட்டையிலும் தேள் உருவத்தைப் பச்சை குத்தியிருந்தார் இதற்கான காரணம் பற்றி கேட்ட போது விஷத்தன்மை உள்ள தேளினைப் பச்சையாக குத்தியிருப்பதின் மூலம் இயல்பிலேயே தேள் பற்றிய பய உணர்வு போகிறது, அதனால் தான் அந்த உருவத்தைத் தேர்ந்தெடுத்து பச்சை குத்தியிருக்கிறேன் என்றார்.

### 3.14.5 நம்பிக்கை சடங்குப்படி பச்சை குத்தல்

ஒரு சில பெண்கள் நெற்றிப் பொட்டில் பொட்டு வடிவிலேயே வட்டமாக பச்சை குத்தியிருந்தனர். அது குறித்து கேட்ட போது பொட்டு என்பது மங்களகரத்தைக் குறிக்கும் ஒரு நம்பிக்கைச் சார்ந்த குறியீடு ஆகும். வெறும் நெற்றியுடன் இல்லாமல் எப்போதுமே பொட்டுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கில் பொட்டு வடிவ பச்சையினைக் குத்தியிருப்பதாக கூறினர்.

ஒரு சில பெண்கள் தங்களின் வலது கைக் கட்டை விரலில் மூன்று புள்ளியை மட்டும் பச்சை குத்தியிருந்தனர், இடது கைக் கட்டைவிரலில் வேல் வடிவத்தினை பச்சை குத்தியிருந்தனர் இது பற்றி அப்பெண்ணிடம் கேட்ட போது, முதலில் அழகுக்காக மட்டும் மூன்று புள்ளியை மட்டும் பச்சை குத்திக்கொண்டேன், அதனைப்பார்த்த பெரியவர்கள் மூன்று புள்ளியின் அமைப்பு அடுப்பினைக் குறிப்பதாக உள்ளது அவ்வாறு இருத்தல் கூடாது என்றனராம். பின் அவர்களே இடது கையில் வேல் வடிவினை பச்சை குத்திக்கொள் அது சக்தியின் வடிவம் என்றனராம் அதன்படியே உடனே அவரும் பச்சை குத்திக்கொண்டாராம். இவ்வாறாக பச்சை குத்துதலானது, மக்களிடையே நம்பிக்கைச் சார்ந்ததாகவும், அழகியல் நோக்கத்துடனும் இரண்டறக் கலந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 3.15.நரிகுறவர் இன மக்களின் பொருளாதார சூழல்

ஒரத்தநாடு வட்டாரத்தில் உள்ள ஆழியவாய்க்கால் என்னும் பகுதியில் பல ஆண்டு காலமாகவே நரிகுறவர் இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒரு சில குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து மேல உளூர், தொம்மன் குடிசைப் போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தொழில் முதன்மைத் தொழில் பச்சை குத்தலாகும். ஊசி, பாசி விற்பது போன்ற தொழிலையும் செய்து வருகின்றனர். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

தொழில் நடைபெறாத காலங்களில் வயலில் எலி கிட்டி வைத்து எலியைப் பிடிப்பது, அணில், முயல் போன்றவற்றை பிடிப்பது ஆகியவற்றை செய்கிறார்கள். இவர்களின் பிள்ளைகள் இப்போது தான் பள்ளிக்கூடம் சென்று படிக்க தொடங்கியிருக்கிறார்கள். இவர்களின் பொருளாதார நிலையும் பாதிப்புக்கு உள்ளதாக இருக்கிறது. அருகில் உள்ள ஊர்களில் எங்கெல்லாம் திருவிழா நடைபெருகிறதோ அங்கு சென்று கடை அமைத்து பச்சை குத்தி வருமானம் ஈட்டுகின்றனர். சிலர் இவ்விடம் பச்சை குத்தப்படும் என்று விளம்பர பதாகை அமைத்தும், சிலர் பச்சை குத்துவதற்கு அணுகவும் என்றவாறு தங்களின் அலைபேசி எண்ணையும் அச்சிட்டு பேருந்து நிறுத்தத்தில் ஒட்டி வைத்தும் தொழில் நடத்தி வருகின்றனர்.

இவர்களில் சிலர் இயற்கை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஊசி கொண்டு பச்சைக் குத்தி வருகின்றனர். சிலர் இயந்திர கருவிகளைப் பயன்படுத்தியும் பச்சைக் குத்தி வருகின்றனர். இயந்திர கருவிகளைப் பயன்படுத்துபவர்கள் பல உருவ

வடிவமைப்புகள் நிறைந்த படங்களை வைத்திருக்கின்றனர். அதனைக் காண்பித்து பச்சை குத்திக் கொள்பவரின் விருப்பத்திற்கேற்ப நுணுக்கமாக பச்சை குத்தி வருகின்றனர். இவர்களிடம் பச்சை குத்தியதை அழிக்க முடியுமா என்று கேட்ட போது, அழிப்பதற்கான கருவிகள் ஏதும் எங்களிடம் இல்லை என்கின்றனர். பச்சை குத்தும் தொழிலினை ஆண், பெண் என இருபாலருமே செய்து வருகின்றனர்.

## 4. மருதாணி

பழங்காலத்திலிருந்தே மேனிப்புனைவின் ஒரு வடிவமாய் திகழ்வது மருதாணி ஆகும். இதற்கு அழவணம், மருதோன்றி, ஐவனம் ஆகிய பெயர்களும் உண்டு. கிராமப்புறங்களில் இன்றளவும் அநேக வீடுகளிலும் மருதாணி மரத்தை காண முடிகிறது. பச்சைப் பசேலென்று இருக்கும் மருதாணி இலைகளைப் பரித்து அம்மிக்கல்லில் நன்கு பசைபோல் மசியும் அளவிற்கு அரைத்து வைத்திருந்து, பின்னர் இரவு நேரத்தில் தூங்கும் நேரத்திற்கு முன்பு கைகளில் அழகாக அலங்காரம் பண்ணிக்கொள்கின்றனர். பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் விரும்பி மருதாணியை கைகளில் வைத்து கொள்கின்றனர்.

வீட்டின் முன்பாக ஏன் மருதாணி மரத்தை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்ட போது, வளமையின் அடையாளமாக கருதப்படுவதுடன் மருதாணியில் திருமகளும், திருமாலும் வாசம் செய்கிறார்கள் என்ற நம்பிக்கைக் கருத்தையும் பெரியவர்கள் கூறினார்கள்.

மருதாணி உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத் தருவதோடு சிறந்த கிருமி நாசினியாகவும் உள்ளது. பித்த வெடிப்பு, கால் எரிச்சல், கால் ஆணி, நக சுத்தி போன்றவற்றை தீர்க்கும் அருமருந்தாகவும் பயன்படுகிறது. இளநரையை போக்குவதற்கும் கண் குளிர்ச்சிக்காகவும் மருதாணியை தலையில் தேய்த்து குளிக்கின்றனர். இப்போது அனைத்து கடைகளிலும் ‘ஹென்னா’ என்ற பெயரில் மருதாணிப் பவுடர் கிடைக்கிறது. சிலர் அதை வாங்கியும் பயன்படுத்துகின்றனர். மேலும் ‘கண்ணேறு’ கழிவதற்கும், தீய சக்திகள் அண்டாமல் இருப்பதற்காகவும் மருதாணியை அனைத்து மங்கல நிகழ்வுகளுக்கும் பயன்படுத்துகின்றனர். மேலும் ஒரு பெண்ணின் கையில் இடும் மருதாணியானது நன்றாக சிவந்திருந்தால் அவள் கணவன் அதிக பாசமுடன் இருப்பான் என்ற நம்பிக்கையும் நிலவி வருகிறது.

### 4.1.மெஹந்தி

மெஹந்திகா என்ற சமஸ்கிருத சொல்லிருந்து ‘மெஹந்தி’ என்ற சொல் வந்தது. வடநாடுகளில் திருமணச் சடங்கின் போது மணமகளுக்கு மெஹந்தி வைக்கும் நிகழ்வு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நவீன காலத்தில் பெண்கள் அதிக இரசனையுடன்

பார்ப்பவர் வியக்கும் அதிக கலை நுட்பத்துடன் கூடிய மெஹந்தியை வைத்துக் கொள்கின்றனர். சில பெண்கள் தங்களின் இரு கைகளிலும் உள்ளங்கை, புறங்கை ஆகிய இரு பகுதிகளிலும் மெஹந்தியை வைத்துக் கொள்கின்றனர். இதுமட்டுமல்லாமல் கால்களில் கூட மெஹந்தியால் அலங்காரம் பண்ணிக்கொள்கின்றனர்.

இயற்கையில் கிடைக்கும் மருதாணி உடல் ஆரோக்கியத்திற்கு அருமருந்தாகவும் பயன்படுகின்றது. கையில் வைத்திருக்கும் மருதாணியானது இரண்டு வாரங்களுக்கு மேல் அழியாமல் இருக்கும். அதிலும் நகத்தில் உள்ள மருதாணியோ பல நாட்களுக்கு நீடித்திருக்கும். ஆனால், செயற்கை இரசாயனம் மூலம் தயாரிக்கப்பட்ட மெஹந்தி மூன்று நாட்கள் மட்டுமே நிலைத்திருக்கும். மெஹந்தியில் விரும்பிய பல்வேறு வடிவமைப்புகளைப் போட முடியுமே தவிர அது ஆரோக்கியம் அற்றது எனலாம்.

## 5. சுவரோவியங்கள்

தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு வட்டாரப் பகுதிகளில் ஓவியங்களுக்கென்று தனித்துவமான இடமுண்டு. 'சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்' என்ற பழமொழிக்கேற்ப சுவரில் வரையும் ஓவியங்களே சுவரோவியங்கள் ஆகும். பழங்காலத்தில் களிமண்ணை மட்டுமே வைத்து சுவர் எழுப்பி அதன் மேல் கூரை வேய்ந்து தங்களுக்கான இருப்பிடத்தை கட்டியிருந்தனர். தரைப்பகுதி மட்டுமல்லாது சுவரிலும் மாட்டுச்சாணம் கொண்டு மெழுகி வைத்திருப்பர். கோயில் திருவிழாக்களின் போது தங்கள் வீடுகளின் வெளிப்புற சுவரை நன்கு சாணம் கொண்டு மெழுகி, அச்சுவற்றில் தேர் படத்தை வெள்ளைச் சுண்ணாம்பு கலவையால் அழகிய ஓவியமாய் தீட்டி வைக்கிறார்கள். திண்ணைப் பகுதியிலும் பச்சரிசி மாக்கொண்டு புள்ளி வைத்த கோலங்களை வரைகிறார்கள். இது பற்றி பல ஊர் மக்களிடமும் கேட்ட போது, மகாலெட்சுமியை வீட்டிற்குள் அழைக்கும் நோக்கத்துடன் தான் நாங்கள் இவ்வாறு வீட்டுச் சுவர்களில் தேர் உருவப் படத்தை வரைகிறோம் என்கிறார்கள்

தற்காலத்தில் வீட்டு வெளிப்புற சுவர்களில் கடவுளின் திருவுருவப் படங்கள், நல்வரவு என்ற வாசகத்துடன் பெண்ணின் கைகள் கும்பிடுவது போன்றும், விளக்குகள் ஏந்தி நிற்பது போலவும், மலர்கள், மயில் மற்றும் அன்னம் போன்ற பறவைகள், வண்ணக் கோலங்கள், இயற்கைக் காட்சிகள், திருஷ்டி உருவங்கள் ஆகியவை இடம்பெறுகின்றன. மேலும், இன்று ஓட்டுக் கற்களில் (Tiles) பதிக்கப்பட்ட பல ஓவிய அலங்காரங்களை மக்கள் தங்களது வீடுகளின் உள்புற சுவர்களிலும் வெளிப்புற சுவர்களிலும் இடம் பெற செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் சுவர்களில் தெய்வங்களின் திருவுருவப் படங்கள், புராண இதிகாச விளக்கப் படங்கள், அழகிய மலர்கள், யாழிகளின் உருவங்கள், தெய்வங்களின்

வாகனங்கள், தல விருச்சங்கள், மலர் தூவும் தெய்வ மகளிர், காவல் தெய்வங்கள், தேவதைகள் ஆகியவற்றை காண முடிகின்றது. கோயிலின் மேற்புற விதானப்பகுதியிலும் மிகவும் நுட்பமாய் அழகிய வண்ணக் கலவைக் கொண்டு ஓவியம் தீட்டிருப்பது வியப்பிற்குரியது. விதான ஓவியம் வரையும் கலைஞர்களின் இத்தகைய கலை நுணுக்கம் போற்றுதற்குரியதாகும்.

ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த கோனகர் நாடு என்னும் பகுதியில் பழைய சிவன் கோயிலில் முன்பு அழகிய சுவரோவியங்கள் இடம்பெற்றிருந்தது. தற்போது அந்த ஓவியங்கள் இல்லை. கோயிலை புதுப்பிக்கும் போது அவ்வோவியங்கள் எல்லாம் அழிந்துவிட்டன என்று திரு.செல்லப்பன் என்பவர் கூறினார். தற்போது அக்கோவிலின் சுவரில் தல வரலாற்றுச் செய்திகள், கோயிலுக்கு அளிக்கப்பட்ட நன்கொடை பற்றிய செய்திகள் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

ஒரத்தநாடு வட்டாரத்தில் பொது இடங்களில் அரசுசார் மற்றும் தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை காணும்போது சுவரொட்டி விளம்பரங்களைக் காட்டிலும் ஓவிய விளம்பரங்களே அதிகம் காணப்படுகிறது. திருவள்ளுவர், பெரியார், அம்பேத்கார், அப்துல் கலாம் போன்ற சான்றோர்களின் படங்கள் மற்றும் பல்வேறு கருத்து விளக்கப் படங்கள் ஆகியவை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அழகிய ஓவியமாய் பள்ளிக்கூட சுவரில் தீட்டப்பெற்றிருக்கிறது. சுவரோவியங்கள் வழி மாணவர்கள் பல்வகை அறிவும் விழிப்புணர்வும் பெறுவர் என்று ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு சுவாமிநாதன் கருத்து தெரிவித்தார்.

## 6. கோட்டோவியங்கள்

ஒரு ஓவியம் வரைவதற்கு முக்கியத் தேவை கோடுகளே ஆகும். கோட்டோவியம் என்பது கோடுகள் மட்டுமே இடம்பெருவது ஆகும். காவி மற்றும் வெள்ளை நிறத்தால் வரையப்படும் கோடுகளையே கோட்டோவியங்கள் என்கின்றனர். பழங்கால மனிதர்கள் தாங்கள் வாழ்ந்த குகைகளிலும், பாறைகளிலும் கோடு கோடாய் சில குறியீடுகளை கோட்டோவியமாய் வரைந்துள்ளனர்.

அந்தணர் வாழும் வீடுகளில் இக்கோட்டோவியமானது இன்றளவிலும் உள்ளது. அவர்களின் வீட்டு வெளிப்புறச்சுவர்களில் வெள்ளை நிறக்கோடுகளையும் பக்கத்தில் காவி நிறக்கோடுகளையும் தீட்டியிருப்பதைக் காணமுடிகிறது. ஆரம்ப காலக் கட்டத்திலிருந்தே பல கோயில் சுவர்களிலும் இவ்விரண்டு வண்ணங்கள் கொண்டு வரையப்படும் முறையே பின்பற்றப்பட்டு வந்துள்ளமையை காண முடிகிறது. இதற்கான காரணம் பற்றி கேட்ட போது, வெள்ளை நிறம் மனத்தூய்மையையும் காவி நிறம் ஆன்மிகத்தையும் குறிப்பதாக வடக்கூரைச் சேர்ந்த இராமகிருஷ்ண ஐயர் குறிப்பிடுகிறார்.

கோட்டோவியங்களில் காணப்படும் வெள்ளை மற்றும் காவி நிறங்களின் சிறப்பு பற்றித் தஞ்சாவூரைச் சேர்ந்த ஆன்மிகத் தொண்டர் பாலமுருகன் என்பவர் குறிப்பிடுகையில், வெள்ளை நிறம் மனித உடம்பில் உள்ள இரத்தத்தின் வெள்ளை நிற அணுக்களையும், காவி நிறம் சிவப்பு அணுக்களையும் குறிக்கும் என்கிறார். நமது ஆரோக்கியத்தை குறிப்பிடும் விதமாகவே கோட்டோவியங்களின் நிறங்கள் அமைந்துள்ளன என்பதனை அறிய முடிகிறது. இக்கோட்டோவியங்களை அனைத்து ஆலய சுவர்களிலும், அனைத்து பிராமணர் வீடுகளிலும் காண முடியும். மேலும் வளமையின் அடையாளமாகவே இக்கோட்டோவியங்கள் தீட்டப்பட்டுள்ளது என்பதனையும் கள தகவல்களின் படி அறிய முடிகிறது.

## 7. பாய் ஓவியம்

நாட்டுப்புற ஓவியக்கலைகளில் பாய்களில் புனையப்படும் ஓவியக்கலையும் முக்கியப் பங்கு வகிக்கிறது. 'செய்யும் தொழிலே தெய்வம்' என வாழும் மக்கள் தாம் செய்யும் தொழிலிலும் கலை நுட்பத்துடன் இருக்குமாறு அமையும் வேலைகளையும் விரும்பி செய்கின்றனர். ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த சோழபுரம், ஈச்சங்கோட்டை ஆகிய கிராமங்களில் பாய் பின்னும் தொழில் நடைபெற்று வருகின்றது. இவர்களின் பாய் பின்னும் கலை, பாய் தயாரிக்கும் முறை, சாயம் ஏற்றும் முறை, பாயின் வடிவமைப்பு, பாயின் வகைகள், பாய் தொடர்பான நம்பிக்கைகள் தொடர்பான செய்திகள் இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 7.1 பாய் பின்னும் கலை

நமது வாழ்வாதாரத்திற்கு பெரிதும் துணை புரிவது, இயற்கையே ஆகும். "நீரின்றி அமையாது உலகு"[42] என்னும் வள்ளுவரின் வாக்குப்படி நீர்வளம் இல்லையேல் இவ்வுலகில் எதுவுமே இல்லை. நீர்நிலைகளில் விளையும் கோரைப்புல்லைப் பயன்படுத்தி கைகளாலே பின்னப்பட்டு வந்த பாய்த் தொழில், தற்போது இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி அழகிய வேலைப்பாடுகளுடன் தயாரிக்கும் பாய் தொழிலானது தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது. நிகழ்த்தா கலைகளின் (Non permamonce art) ஓர் அங்கமாய் திகழும் பாய் தொழில் பல்வேறு கலையம்சத்துடன் பல வண்ண வேலைப்பாடுகளுடன் அழகிய பூவேலைப்பாடுகளுடன் காண்பவர்கள் விரும்பும் அளவிற்கு விளங்குகிறது. பாய் தொழிலில் ஓவியத்தை உட்புகுத்தி அழகுணர்வுடன் பாய்களை உற்பத்தி செய்கிறார்கள் அத்தொழிலை செய்பவர்கள்.

தஞ்சாவூரின் தெற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் 'ஈச்சங்கோட்டை' என்னும் கிராமம் உள்ளது. நன்செய் கொஞ்சி விளையாடும் பசுமையான வயல்களும்,

வயலுக்கு வளம் சேர்க்கும் நீர்நிலைகளும் அழகாகக் காட்சியளிக்கும் இக்கிராமத்தில் முதன்மைத் தொழில் விவசாயம், அதற்கடுத்ததாக குறிப்பிட்ட இன மக்கள் பாய் பின்னும் தொழிலை செய்து வருகின்றனர். இவர்கள் காலை நேரங்களில் விவசாயக் கூலி வேலைக்குச் சென்றும், மாலை நேரம் மற்றும் வேலையில்லா நாட்களிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பரம்பரைத் தொழிலாக பாய் பின்னும் தொழிலைச் செய்து வருகின்றனர். எங்களின் பொருளாதார நிலை காரணமாக இத்தொழிலைக் கைவிடாது நாங்கள் மட்டுமல்லாது, எங்களின் பிள்ளைகளுக்கும் இத்தொழிலைப் பயிற்றுவிக்கிறோம் என்கின்றனர்.

## 7.2 பாய் தயாரிக்கும் முறை

பாய் தயாரிக்கும் முறையினை, மூலப்பொருட்கள் சேகரித்தல், வண்ணம் ஏற்றும் முறை, தறி கட்டுதல், வடிவமைத்தல் என நான்கு நிலைகளில் வகைப்படுத்துகின்றனர்.

### 7.2.1 மூலப்பொருட்கள் சேகரித்தல்

நெற்கதிர்களின் ஊடாக இடையை கோரைப்புற்களும் விளைவதுண்டு ஒரு சிலர் நெற்கதிர் அறுவடைக்குப் பின் வயலில் கோரையை மட்டும் விளைவிப்பதுண்டு. இவ்வாறு உற்பத்தியாளர்களிடமிருந்து கோரைகள் விலைக்கு வாங்கப்படுகிறது. சிலர் இயற்கையாக பொது இடங்களில் விளையும் கோரைகளையும் அறுத்து வருவதுண்டு. ஆற்றங்கரை ஓரங்களிலும், ஏரிப்பகுதிகளிலும், வாய்க்கால் வரப்புகளிலும் வளர்ந்துள்ள கோரைகளை முன்பெல்லாம் கறுக்கரிவாள் என்னும் கருவியைக் கொண்டு அறுத்து வந்து பயன்படுத்தினார்கள். தற்போது பாயின் விற்பனை அதிகரிப்பால், கோரைகளை அறுப்பதற்கும் இயந்திரங்கள் வந்துவிட்டது. அதனைப் பயன்படுத்தி கோரைகளை அறுத்தப்பின் சேகரித்தக் கோரைகளை இரண்டாக கிழிப்பதற்காக வெயிலில் காய வைக்கின்றனர். கிழிப்பதற்கென்றெ மிகவும் கூர்மையான முக்கோண வடிவிலான தகரக் கத்தியைப் பயன்படுத்துகின்றனர். கோரைகள் ஓரளவு வதங்கியப் பின் அதில் ஒரு பகுதியை எடுத்து ஐந்தாறாகச் சேர்த்துக் கிழித்துத் திரும்பவும் வெயிலில் உலர்த்தி வைக்கின்றனர்.

### 7.2.2 கோரைகளின் தரம் பிரிக்கும் முறை

வெயிலில் உலர்த்தப்பட்ட கோரைகள் உலர்ந்தப்பின் பாய் பின்னுவதற்கு தேவைப்படும் அளவிற்கு ஏற்றவாறு கோரைகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அதனை தனி தனியாக கட்டி வைக்கின்றனர். முதலில் லேசான கோரைகளைக் கொண்டு வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கட்டுமான பணிக்கான வலிமையான (கான்கிரிட்) பாய்களை தயாரிக்கின்றனர். பிறகு கொஞ்சம் மொத்தமான கோரைகளையும் கொஞ்சம் கருமையான கோரைகளையும் தனித்தனியாகப் பிரித்து ‘மோட்டா’ ரக பாய்களை

தயாரிக்கின்றனர். இதர எஞ்சிய கோரைகளை வீணாக்காமல் கயிறு திரிக்க வைத்து கொள்கின்றனர்.

### 7.2.3 வண்ணம் ஏற்றும் முறை

நீண்ட பெரிய அளவிலான கல்லால் ஆன தொட்டியில் தேவைப்படும் அளவு நீர் ஊற்றி விறகு மூட்டி எரிய விட்டு, நீரை நன்றாக கொதிக்க வைக்கின்றனர். அதில் பச்சை நிறச்சாயம் தேவையென்றால் அந்நிறப்பொடியைக் கலந்து விடுகின்றனர். இதைப்போன்றே மஞ்சள், ஊதா, சிவப்பு, ஆகிய நிறச் சாயப் பொடிகளை தேவையான அளவு அதே முறையிலேயே கலக்குகின்றனர். பாய் பின்னுவதற்குரிய கோரைகள் சாயம் கலந்த கொதித்த நீரில் முக்கி எடுத்து பின்னர், அவற்றை வெளியில் எடுத்துச் சிறு சிறு கட்டுகளாகக் கட்டி விளக்கமாறினைப் பரப்பி வைத்தாற் போல் நிழலில் உலர விடுகின்றனர். உலர்ந்த பின் அதனை இயந்திரத்தில் வைக்கின்றனர்.

### 7.2.4 பருத்தி நூல் மற்றும் நரம்பு

முன்பெல்லாம் பாய்களை இணைப்பதற்கு கற்றாழை நாரையை பயன்படுத்தி வந்தனர். வயிரிலிருந்து எடுக்கப்படும் நரம்புக்கு இணையானதாக கற்றாழை நாரின் தன்மை இருக்கும் என கூறுகின்றனர். இக்கற்றாழை நாரினை பயன்படுத்தி உட்கார்ந்து கொண்டே பின்னி முடிக்கிறார்கள். ஆனால் தற்போது கற்றாழை அந்த அளவிற்கு கிடைப்பதில்லை என்பதால் தான் பருத்தி நூலை பயன்படுத்துகிறோம் என கூறுகின்றனர். கட்டுமானப் பணிக்காக தயாரிக்கப்படும் பாய்களை மட்டும் நரம்பு கொண்டு இணைக்கின்றனர். அப்போது தான் கோரைகள் தனியே பிரிந்து வராமல் இருக்கும் என்கின்றனர்.

### 7.2.5 சரடு முறுக்கும் பணி

உலர்த்தப்பட்ட நார்கள் மிகக் கடினமாக இருக்கும். அவற்றை ‘நார் இழைக்கும் கட்டையில் வைத்து இழுத்து மிருதுவாக்கப்படுகிறது. பின்னர் நாரினைச் சிறிது சிறிதாக எடுத்துச் தரையில் தூற்றி அதனைச் சுருட்டி ஒரு சிறிய துணியில் சுற்றி வைக்கின்றனர். இதனை ஒரு கருது உருளையால் சரடுகளை முறுக்கி சோளச் சக்கையில் சுற்றி வைக்கின்றனர். இதனை ‘சரடு உருண்டை’ என்கின்றனர். ஈச்சங்கோட்டை பகுதி வாழ் பாய் நெய்யும் கலைஞர்கள் சரடிற்குப் பதிலாக பருத்தி நூலைப் பயன்படுத்துகின்றனர். பருத்தி நூலைக் காட்டிலும் சரடு உறுதியானது என்கின்றனர் சோழபுரம் பகுதியினர்.

### 7.2.6 பாய் தறி இழுத்துக் கட்டுதல்

பாய் பின்னுவதற்கென்று ஒதுக்கப்பட்ட இடமுண்டு. வீட்டின் திண்ணைப் பகுதியை அதற்கென்று ஒதுக்கி வைத்திருக்கின்றனர். பதின் மூன்று அடி நீளம் ஐந்தடி அகலம் கொண்ட அளவுகளில் நான்கு மூலைகளிலும் முளைக்கால் அடித்து வைத்துள்ளனர். பாய் பின்னத் தொடங்கும் பக்கத்திலுள்ள இரண்டு பாய் முளைக்கால்களையும் ஒட்டி சிறிய முளைக்கால்கள் அடிக்கப்பட்டு அதன் மேல் ஆறடி நீளமுள்ள மூங்கில் மரத்திலான கட்டு மரம் ஒன்றை வைத்திருக்கின்றனர். அதே அளவில் முன்தண்டில் எதிர்ப்புறமுள்ள முனைகளில் ஒரு அடி இடைவெளி விட்டு வைத்து வரிக்கயிற்றால் இணைக்கப்படுகிறது. ஆறடி நீளத்தில் மூங்கில் பிளாச்சி ஒன்று செய்யப்பட்டு அதன் நுனிப்பகுதியில் துளையிட்டு, அம்பு வடிவில் குத்தளவு என்னும் கருவி மூலம் சரடுகளில் பின்னப்படும் ஒவ்வொரு கோரையையும் அச்சுக் கருவியானது சேர்த்து அணைத்துக்கொள்கிறது. அச்சுக் கருவியின் அளவு ஆறடி நீளத்திலும் அரையடி அகலத்திலும் காணப்படுகிறது. இது கருவேல மரப்பலகையின் நடுவில் சிறிது சிறிது இடைவெளி விட்டு ஐந்தடி அளவு வரையில் சிறு துளைகள் இடப்பட்டது. அச்சின் துளைகளில் சரடுகள் சேர்க்கப்பட்டு முன் தண்டு வழியாக அமைத்துக் கட்டு மரத்தில் இணைக்கப்படுகிறது. அணைத்தண்டு, விழுது, முக்கம்பு, மிதிப்பிளாச்சி என்று அவர்கள் கூறும் கருவிகள் கொண்டு கோரைகள் பின்னுவதற்குச் சரடுகளை மாற்றிக் கொடுக்க தறியில் பொருத்திப் பயன்படுத்தப்படுகின்றன. பாய் பின்னுபவர்கள் அமர்ந்து கொள்ள ஆறடி நீளமுள்ள சதுர வடிவுடைய கட்டையை தறியின் அடியில் பயன்படுத்துகின்றனர். இக்கருவிகள் அனைத்தையும் அவர்களே தயாரித்துக் கொள்வதாகக் கூறுகிறார்கள்.

சோழபுரம் பகுதியில் வசிக்கும் முத்து என்பவர் பாய் தயாரிப்பதற்கென்றே வீட்டின் முன் பகுதியை ஒதுக்கி வைத்திருக்கிறார். பாய் பின்னுவதற்குரிய நவீன இயந்திரத்தை கிட்டத்தட்ட இரண்டரை லட்ச விலையில் வாங்கி வைத்திருக்கிறார். கோரைகளின் அடிப் பகுதி மற்றும் நுனிப் பகுதியை வெட்டுவதற்கென்று ரூபாய் ஐம்பதாயிரமுள்ள இயந்திம் ஒன்றையும் வாங்கி வைத்திருக்கிறார். இக்கருவிகளின் மூலமாக வேலை எளிதாக முடிகிறது என்றும், தான் தனியாளாகவே பணியாற்றி ஒரு நாளைக்கு பத்து பாய்கள் தயாரிப்பதாகவும் கூறுகிறார்.

### 7.2.7 பாயை வடிவமைத்தல்

பின்னப்பட்ட பாய்களை அழகுற வடிவமைப்பதற்கு இரு ஓரங்களிலும் விடப்பட்டிருக்கும் முடிச்சுகளை நீரில் நனைத்து ஊற வைத்து, அடிக்கோரை அமைந்த முடிச்சுகளை மட்டும் கத்தியால் சீவி, பின்னர் கோரை, சரடு கொண்டு சிறு சிறு பின்னல்களாக மடக்கி வைத்து கட்டி அதன் பகுதியை அரிந்து விடுகின்றனர். பாயின்

மேல்புறங்களில் காணப்படும் சிறு சிறு சிலும்பல்களை நீக்கி, பாயின் இரு ஓரங்களையும் துணி கொண்டு அதற்குரிய தையல் இயந்திரத்தில் வைத்து தைத்து விடுகின்றனா். அதன் பின்னா் விற்பனைக்கு கொடுத்து அனுப்புகின்றனா்.

பாய் பின்னும் தொழிலில் உதவிக்காக சிறு சிறு வேலைகளை செய்யச் சிறுவா்கள் செல்கின்றனா். பள்ளியில்லா நாட்களில் மட்டும் சிறுவா்கள் இதனை செய்கிறாா்கள். அதன் மூலம் சிறு வயதிலேயே அவா்களுக்கு அத்தொழிலில் ஈடுபாடும், கற்றுக் கொள்கின்ற ஆா்வமும் ஏற்படுகிறது எனலாம். ஆண், பெண் இருபாலருமே இத்தொழிலைச் செய்து வருகின்றனா். ஒரு நாளைக்கு நான்கு பாய்கள் மட்டுமே பின்ன முடிகின்றது என்கின்றனர்.

## 7.3 பாயின் வகைகள்

ஒரத்தநாடு வட்டாரத்தைச் சாா்ந்த ஈச்சங்கோட்டை, சோழபுரம் ஆகிய கிராமங்களில் பின்னப்படும் பாய்கள் நான்கு விதமாக வகைப்படுத்தி விற்பனை செய்கின்றனா். அவற்றை தடுக்குப்பாய், ஒற்றைப்பாய், இரட்டைப்பாய், பட்டுப்பாய் என்று அழைக்கின்றனா்.

### 7.3.1 தடுக்குப்பாய்

தடுக்குப்பாய் என்பது குறைவான அகலம் கொண்டதாகும். இப்பாயின் நீளம் ஐந்தடி அல்லது பத்து அடியிலும் 3 அடி அகலத்திலும் காணப்படுகிறது. சரடுகளின் ஒற்றைப் பின்னலில் எளிதாக அனைவராலும் பின்னக் கூடியதாக இருக்கின்றது.

ஈச்சங்கோட்டை, சோழபுரம் ஆகிய பகுதிகளில் ‘கள்ளா்’ இன மக்கள் அதிகம் வாழ்கின்றனா். இவ்வின மக்களின் அனைத்து சடங்குகள் மற்றும் சுபகாரியங்கள் அனைத்திற்கும் பாய் தயாரித்து கொடுப்பதனை ஈச்சங்கோட்டை பாய் உற்பத்தியாளா்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனா். பாய் உற்பத்தியாளா்கள் பாயினை தரும்போது கள்ளா் இனமக்கள் இவா்களுக்கு பணம், வேட்டி, சேலை, அரிசி முதலியனவற்றை கொடுத்து அனுப்புகின்றனா். கள்ளா் இன குடும்பத்தில் குழந்தை பிறந்தவுடன் தாய் வீட்டுச் சீதனமாக பெற்றோா்கள் குழந்தைக்கென தடுக்குப் பாய் கொடுத்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனா். இவ்வகைப் பாயை ‘பிள்ளைத் தடுக்கு’ என்று அழைக்கின்றனா். விருந்தினா் உணவு உண்ணும் போது தரைவிரிப்பிற்கு சற்று நீளமான தடுக்குப் பாயைப் பயன்படுத்திகின்றனா். இவ்வகைப் பாயை ‘பந்திப் பாய்’ என்று அழைக்கின்றனா்.

### 7.3.2 ஒற்றைப்பாய்

ஒற்றைப்பாய் என்று இவர்கள் கூறுவது, ஒருவர் மட்டும் படுக்கும் அளவில் பின்னக்கூடிய பாய் ஆகும். இதுவும் சரடுகளின் ஒற்றைப்பின்னலில் பின்னப்படுவதாகும். இதன் அளவு பத்து அடி நீளமும் ஐந்தடி அகலமும் இருக்கும் படி அமைத்து அதன் நான்கு ஓரங்களையும் துணியால் தைத்து விடுகின்றனர்.

### 7.3.3 இரட்டைப்பாய்

ஒற்றைப்பாயைப் போல் அல்லாமல் இரட்டைப்பாயை சரடுகளின் இரட்டைப் பின்னலில் பின்னுகின்றனர். இதற்கு அதிக அளவு கோரையும் நேரமும் செலவாகிறது என்கிறார்கள். இதன் அளவு பத்தரை அடி அகலமும், பதினைந்து அடி நீளமும் இருக்குமாறு அமைந்துள்ளது.

## 7.4 பாய்களை தரம் பிரித்தல்

பாய்களில் சாதாரண பாய் முதல் பட்டுப் பாய் வரை அதன் தன்மைகள் பொருத்துத் தரம் பிரித்து விற்பனை செய்யப்படுகிறது. கோரைகளில் மஞ்சள் நிற சாயம் மட்டும் அமைத்து பின்னப்படும் பாயை, சாதா பாய் என்கின்றனர். சிவப்பு, ஊதா, பச்சை ஆகிய நிறங்களில் பொடிப்பொடிக் கட்டமாக அல்லது நீள கோடாக அமைத்துப் பின்னப்படும் பாய்களை ‘வண்ணப்பாய் (கலர் பாய்)’ என்றும், பெரிய பெரிய கட்டம், முக்கோண வடிவம், வட்ட வடிவம் போல் அமைத்துப் பின்னப்படும் பாய்களை ‘பெட்டிப்பாய்’ என்ற பெயரிலும் விற்பதாக ஜெயராமன் என்பவர் கூறுகிறார்.

### 7.4.1 பட்டுப்பாய்

பட்டுப்பாய் என்பது மிகவும் அழகாக வண்ண மயமான ஓவிய வேலைப்பாடுகளுடன் நுணுக்கமாக பின்னப்படுவதாகும். திருமணம், வளைகாப்பு, பிள்ளைப் பேறு கும்பிடும் நிகழ்வு ஆகிய மங்கல நிகழ்வுக்கு மட்டும் பயன்படுத்தும் பாய் ஆகும். ‘மிகவும் லேசான’ கோரைகளில் பின்னப்படும் இப்பாய்கள் பார்ப்பதற்கு மிகவும் வழவழப்பாக காட்சியளிக்கும். இப்பாய்களை தயாரிப்பதற்கு அதிக அளவு கால நேரம் செலவிடுவதாக கூறுகின்றனர். மணமக்களின் பெயர்கள், திருமண நாள், கிளி உருவங்கள், பூங்கொத்து வடிவங்கள் முதலியவை அச்சிட்டு நெய்யப்படுவது பட்டுப்பாயின் சிறப்பாகும்.

### 7.4.2 ஓவியப் பாய்

ஓவிய பாய்கள் என்பது பல காட்சியமைப்புகளை மிகவும் நுணுக்கமாக வண்ண ஓவியமாக பின்னப்படுவதாகும். இப்பாய்களில் நெய்யப்பட்டிருக்கும் கோலங்களின் வடிவங்கள், இயற்கைக்காட்சிகள், தேவதைகளின் திருவுருவங்கள், இதய வடிவங்கள், சிலுவைப் படம் போன்றவை அழகுபட காட்சியளிப்பவை. இவ்வகைப் பாய்களுக்கு அதிக அளவு நேரம் செலவாகிறது என்றும் கலை நுணுக்கம் வாய்ந்த கலைஞர்களாலேயே பின்னப்படும் என்கிறார் முருகேசன் என்பவர்.

## 7.5 ஒரத்தநாடு வட்டாரத்தில் பாய் தொடர்பான நம்பிக்கைகள்

'கோரையில் படுத்தால் நோய் வராது' என்ற பழமொழிக்கேற்றவாறு கோரைப் பாயில் படுத்துறங்கும் போது தேள், பூரான், அட்டைப் பூச்சிகள் அண்டாது என நம்புகின்றனர். அதன் வாசத்திற்கு எந்த பூச்சினங்களும் கிட்ட வராது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகிறது. தரையில் பாய் விரித்து படுக்கும் சுகம் பஞ்சு மெத்தையில் கூட இருக்காது என்கின்றனர் ஒருசிலர்.

இப்பகுதியில் வீட்டிற்கு சடங்கான பெண்கள் எவ்வளவு வசதி படைத்திருந்தாலும் தரையில் பாய் விரித்தே படுத்துறங்குகிறார்கள். திருமணம் ஆகும் போது மணமகள் வீட்டார் புதுப்பாய் 'பட்டுப்பாய்' வாங்கி மணமகளுக்குச் சீராக கொடுத்து அனுப்புவதை வழக்கமாக கொண்டிருக்கின்றனர். குழந்தை பிறந்து தாய் வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கு செல்லும் போது குழந்தைக்கென 'தடுக்குப் பாய்' வாங்கி கொடுத்து அனுப்புவதை இப்பகுதி மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதன் மூலம் இப்பகுதி மக்களின் பாய் தொடர்பான நம்பிக்கைகளையும் சிறப்புகளையும் அறிய முடிகின்றது.

## 7.6. பாய் பின்னும் தொழிலாளர்களின் பொருளாதார சூழல்

பாய் பின்னும் தொழிலாளர்களின் நிலை உற்பத்தி திறனைப் பொறுத்ததே அமைகிறது என்கின்றனர். இவர்கள் தயாரிக்கும் பாய்களை இடைத்தரகர்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று மக்களிடம் அதிகம் விலை பேசி விற்பனை செய்கின்றனர். இடைத்தரகர்களுக்கே அதிக வாபம் போய்ச் சேருகிறது என்கின்றனர் உற்பத்தியாளர்கள். இவர்களிடம் பாய் தயாரிக்கும் இடத்திற்கே நேரடியாகச் சென்று சென்று வாங்கும் போது ஒரு பாயின் விலை ரூபாய் 100 ஆகும். அதே பாயினை இடைத்தரகர்கள் வாங்கிச் சென்று மக்களிடம் கொடுக்கும் விலை ரூபாய 200 ஆகும். இவ்வாறு எந்த முதலீடும் போடாதவர்கள் அதிகம் லாபம் ஈட்டுகின்றனர். எங்களால் உற்பத்தி செய்வதற்கே முதலீடு பற்றாமல் இருக்கிறது. மேலும் பாயினை நேரடியாக விற்க நேரமும் இல்லை. ஆகவே குறைந்தளவு லாபம் கூட பெற இயலவில்லை என்கின்றனர். இயற்கையாக விளையும் கோரை பாய்களுக்கு மாற்றாக நெகிழி

பாய்கள் வந்துவிட்டன. இத்தகைய வருகைகளும் இவர்களின் பொருளாதாரத்தை பாதிப்படைய செய்யும் காரணியாக அமைகின்றன.

இயற்கையில் கிடைக்கும் கோரையை கொண்டு தயாரிக்கப்படும் பாய் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றது. செயற்கை ரக நெகிழி பாய்கள் உடல் வலியை தருமே தவிர ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்றதல்ல. இதனைக் கவனத்தில் கொண்டு மக்கள் கோரைப் பாய்களை வாங்கிப் பயனடைந்து, பாய் தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு வழிகொடுத்தால் அவர்கள் வாழ்வு சிறக்கும்.

நாட்டுப்புற ஓவியங்கள் தனித்துவமானது. இத்தனித்துவமான நாட்டுப்புற ஓவிய கூறுகளை ஒரத்தநாடு வட்டாரத்தில் பரவலாக காண முடிகின்றது. இப்பகுதி மக்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் நம்பிக்கைகளையும் பறை சாற்றும் வகையில் இங்குள்ள நாட்டுப்புற ஓவியங்கள் அமைந்துள்ளன. நாட்டுப்புற ஓவியங்கள் தொடர்பான வட்டார ஆய்வுகளை மேற்கொள்வதின் வழி ஒருபகுதி மக்களின் பண்பாடு, நாகரீகம், கலாச்சாரம், நம்பிக்கைகள் ஆகியவற்றை கண்டுணர முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# தொகுப்புரை

- ❖ கலைகளில் நாட்டுப்புற மக்களின் கட்புலன் கலையாக விளங்குவது கோலமாகும். தமிழ்நாட்டு மக்களின் பண்பாட்டு மரபாக கோலம் திகழ்கின்றது. கோலம் என்பது வீட்டு வாசல் அல்லது வாயில்களில் அரிசி மாவு அல்லது வேறு பொடிகளைப் பயன்படுத்தி வரையப்படும் வடிவங்களாகும்.

- ❖ கோலமிடுதல் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு விதமான பரிணாம வளர்ச்சியினைப் பெற்று வளர்ந்துள்ளன. வரி வடிவங்களாக இருந்த குறியீடுகளை அழகு, வடிவம், ஒப்பனை செய்தல் போன்ற பொருட்களில் கோலம் என்று வழங்கியுள்ளமை புலானகிறது.

- ❖ தொடக்க காலத்தில் கோலங்கள் தரையில் வரையப்பட்டன. பின்னர் பயிற்சிகளால் பல வடிவங்களாக புனையப்பட்டுள்ளன. புள்ளிகளையும் கோடுகளையும் கொண்டு உருவாக்கப்படும் கோலங்கள் தமிழரின் வாழ்வியலில் நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்ந்துள்ளன. என்றால் மிகையாகாது.

- ❖ பழந்தமிழர்கள் கோலமிடுவதற்கு இயற்கையானப் பொருள்களையே பயன்படுத்தியுள்ளனர். தானியங்கள், பருப்பு வகைகள், மரத்தூள், இலைகள், பூக்கள் போன்றவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் மஞ்சள் தூள், குங்குமம், பல நிறம் கொண்ட மண், செங்கற்பொடி, சுண்ணப்பொடி, உப்பு போன்ற பொருள்களை பயன்படுத்தி கோலங்கள் வரைவதையும் காண முடிகின்றன.

- ❖ பெண்களின் தனிப்பெருமையை அடையாளமிட்டுக் காட்டும் உன்னதக் கலையாக கோலக் கலை விளங்குகின்றது. கோலம் போடுவது ஓர் கலையாக இருப்பினும் இக்கலை உடலுக்கு சிறந்த உடல் பயிற்சியாக விளங்குகின்றது. கோலமிடல் ஒருவகை யோகாசனமும் ஆகும்.

- ❖ உடலை ஆரோக்கியமாக வைக்க கோலமிடல் பயன்படுகிறது. கோலமிடல் உடலை மட்டுமல்லாமல் உள்ளத்தினையும் நலமுடன் வைக்க வழிவகைப் புரிகின்றது. தெளிந்த மற்றும் கூர்மையான சிந்தனைத் திறனை கோலமிடுதல் தூண்டுகிறது. புள்ளிக்கோலம் போடுவது கூர்ந்த கண் பார்வைக்குப் பயிற்சியாக அமைகின்றது.

- ❖ கோலம் புனிதத்தன்மை வாய்ந்ததாக கருதப்படுகின்றன. நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளோடு இணைத்து வழிபாடு நடத்தும் பொழுது கோலம் முதன்மை இடம் பெறுகின்றன. தமிழகத்தில் வழக்கமாக சடங்குகளின் போது தரையில் கோலமிட்டு அதன் மீது விளக்கினை வைப்பது

வழக்கமாக இருந்து வருகின்றது. இச்செயல் கோலம் மனதில் ஒளி கொடுக்கக்கூடிய ஒருயந்திரமாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதவும் வாய்ப்பளிக்கிறது.

- ❖ கோலங்கள் மக்களுக்கு தீய ஆவிகளிடமிருந்து பாதுகாப்பு தருவதாக நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். ஒரு வீட்டின் முன் கோலம் இல்லையெனில் அவ்வீட்டில் அண்மையில் ஏதோ துக்க நிகழ்வு நடந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. மனிதர்களுக்கு மகிழ்ச்சியினைத் தரும் மங்கலச் சின்னமாக கோலங்கள் விளங்கியுள்ளமையினை உய்த்து உணர முடிகிறது.

- ❖ ஒரத்தநாடு வட்டார நாட்டுப்புற மக்கள் தங்கள் வீட்டின் முன் கோலமிடுவதை விருப்பமுடனே செய்து வருகின்றனர். கோலமிடுவது தனி நபர் நலனுக்கும் குடும்ப நலனுக்கும் வழிவகுக்கும் என நம்புகின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையாகக் கோலமிட்டால் செல்வ வளம் பெருகும் என்று எண்ணுகின்ற மனப் போக்கினை காணமுடிகிறது.

- ❖ ஒரத்தநாடு பகுதியில் வாழும் மக்களிடம் கோலமிடுதல் தொடர்பாக பல்வேறு விதமான நம்பிக்கைகள் காணப்படுகின்றன. கோலமிடுதல் குடும்ப மகிழ்ச்சியை வெளிப்படுத்தும், காலை எழுந்து கோலமிடல் மகாலெட்சுமியை வரவேற்கும், மார்கழி மாதம் அதிகாலை எழுந்து கோலமிட்டால் உடல் நலம் சிறக்கும், பெண்களின் கருப்பை கோளாறுகள் நீங்கும் போன்ற பலவகையான நம்பிக்கைகளை கொண்டுள்ளனர் இப்பகுதி மக்கள்.

- ❖ ஒரத்தநாடு வட்டார மக்களிடையே சிக்குக் கோலம் தொடர்பாக இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிக்குக்கோலம் போடுவது சிக்கலைத் தீர்க்கும் என்று ஒருசாரரும், குடும்பத்தில் சண்டைச் சச்சரவுகள் ஏற்படும் என மற்றொரு சாரரும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளமையினை அறிய முடிகிறது.

- ❖ நாட்டுப்புற ஓவியங்களில் கோலங்கள் கண்ணைக் கவரும் அழகு கலையாக மட்டுமல்லாது, நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் குறித்த தத்துவங்களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தும் கலைப் பெட்டமாக திகழ்கின்றன.

- ❖ சுடுமண் ஓவியங்கள் நாட்டுப்புற கலைகளில் ஒன்றாக விளங்குகின்றன. நிலத்தை இறையாக எண்ணி வாழும் கிராமிய மக்கள், அந்நிலத்தில் உள்ள மண்ணினால் இறை வடிவங்களைச் செய்து வணங்கி

வழிபட்டுள்ளனர். சுடுமண் உருவ கலை என்பது பழங்காலம் தொட்டு மக்களிடம் வழக்கத்தில் நிலவி வந்துள்ளமையினை அறிய முடிகின்றன.

- ❖ மட்கலம் என்ற சொல் மண்ணால் உருவாக்கப்படும் பொருட்களை குறிக்கும். இத்தொழிலே மட்பாண்டத் தொழில் அல்லது மட்கலத் தொழில் என்றழைக்கப்படுகிறது. பழங்காலத்தில் இருந்தே மக்கள் உணவுப்பொருட்களை சேமிக்கவும் சமைக்கவும் சாப்பிடவும் மட்பாண்டங்களை பயன்படுத்தியுள்ளனர். நாட்டுப்புற மக்களிடம் இன்றளவும் மட்பாண்டங்கள் பயன்பாட்டில் உள்ளமையைக் காண முடிகின்றன.

- ❖ சுடுமண் பானைகளில் ஓவியங்கள் வரைவது பானை ஓவியங்கள் எனப்படும். ஓவியப் பானை என்பது ஓவியம் மற்றும் எழுத்துக்கள் வரையப் பெற்ற அல்லது வண்ணம் தீட்டப்பட்ட பானை ஆகும். இக்கலை இன்றளவும் தொடர்ந்து வருகின்றது சுடுமண் பானைகள் செய்வதும் அவற்றின் மேற்பரப்பில் ஓவிய அலங்கார வேலைப்பாடுகள் செய்வதும் தொன்மையான நாட்டுப்புறக் கலை வடிவமாகும்.

- ❖ ஒரத்தநாடு பகுதியில் உள்ள மக்கள் விழாக் காலங்களில் பயன்படுத்தும் பானைகளில் பல வண்ண ஓவியம் தீட்டிப் பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலும் பொங்கல் பானைகளிலும், தீச்சட்டி எடுக்கும் பானைகளிலும் ஓவியம் தீட்டும் மரபினைக் கொண்டிருக்கின்றனர்.

- ❖ வாழ்வில் புழங்கும் மண்பானைகள் பெருமளவில் இருப்பினும் பொங்கல் வைக்கும் பானை சிறப்பானது. பொங்கல் வைத்தல் இருநிலைகளில் பிரிக்கப்படுகிறது. ஒன்று தை மாதம் பொங்கல் வைத்தலைக் குறிக்கும். மற்றொன்று சிறு தெய்வங்களுக்கு வைக்கும் பொங்கலாகும். இவ்விரு பொங்கல் வைக்கும் பானைகளிலும் ஓவியம் வரையப்படுகின்றன.

- ❖ திருவிழா காலங்களில் தெய்வங்களுக்கு பொங்கல் வைத்து படையலிடும் பொழுது பொங்கல் பானைகளில் ஓவியம் தீட்டுகின்றனர். பானைகளில் மஞ்சள், பச்சை, சிவப்பு போன்ற நிறங்களால் இலைகள் வடிவில் ஓவியங்கள் தீட்டப்பட்ட பானைகளில் பொங்கல் வைத்து இறைவனுக்கு படையலிடுகின்றனர்.

- ❖ மனிதர்கள் தங்களுக்கு துன்பங்கள் நேரும் பொழுது இறைவனிடம் துன்பங்கள் தீர வேண்டுவர். அத்தருணத்தில் சில வேண்டுதல்களை வைப்பர். அதில் ஒன்று தீச்சட்டி ஏந்துதல் ஆகும். இவ்வகை பானைகளில் ஓவியம் தீட்டப்படுகின்றது. இதில் இறைவனின் முகம் பதிவு

செய்யப்படுகின்றது. வெள்ளை மற்றும் காவி நிறத்தில் இவ்வோவியம் தீட்டப்படுவதைக் காணமுடிகின்றது.

- கிராமத்தில் ஊர் எல்லையில் உள்ள காவல் தெய்வங்கள் ஊரைக் காக்கும் பொருட்டு இரவு நேரங்களில் குதிரையில் பயணித்து ஊரை வலம் வருவதாக நாட்டுப்புற மக்களால் நம்பப்படுகின்றது. நாட்டையும் நாட்டு மக்களையும் காக்கும் இக்காவல் தெய்வங்களுக்கு மண்குதிரை வழங்கும் வழக்கம் இன்றளவும் கிராமங்களில் நிலவி வருகின்றது. இதனைப் புரவி எடுப்பு விழா என்று அழைப்பர்.

- கல்லால் உருவங்களை வடிப்பதற்கும் மண்ணால் உருவங்கள் செய்யப்படுவதற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. கற்சிற்பங்களில் வண்ணங்களைத் தீட்ட இயலாது. மண் சிற்பங்களில் தேவையான வண்ணங்களைத் தீட்டி அதற்கு அழகு சேர்க்கலாம். குதிரை ஓவியம் தீட்ட முதல் நிலையில் வெண்மை நிறம் பயன்படுகிறது. பிறகு காவி, நீலம், மஞ்சள், கருப்பு, சிவப்பு போன்ற வண்ணங்களை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.

- ஒரத்தநாட்டைச் சுற்றியுள்ள கிராமங்களில் புரவி எடுப்பு விழா நடைபெறுகிறது. நாட்டுப்புற காவல் தெய்வங்களாக விளங்கும் அய்யனார், கருப்பண்ணசாமி, உப்பிலியப்பன் போன்ற தெய்வங்களுக்கு விழா எடுக்கும் பொழுது அவர்களின் வாகனமாக விளங்கும் குதிரைகளுக்கும் விழா எடுக்கப்படுகின்றன. குறிப்பாக பங்குனி, சித்திரை மாதங்களில் செல்லம்பட்டி, சோழபுரம், ஆண்டிப்பட்டி, தென்னமநாடு, ஆத்தங்கரைப்பட்டி போன்ற ஊர்களில் புரவி எடுப்பு விழா நடைபெறுகின்றன.

- புரவி எடுப்பு விழா என்பது தமிழரின் வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் பிரிக்க முடியாத கூறாகப் பின்னிப்பிணைந்துள்ளது. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நோய் குணமடைவதற்காக தெய்வத்திடம் வேண்டிக் கொள்கின்றனர். நோய் குணமடைந்தவுடன் பாதிக்கப்பட்ட உடல் உறுப்பினைப் போன்று மண்ணால் செய்து அதனைத் தெய்வங்களுக்கு காணிக்கை ஆக்கும் வழக்கம் தொன்று தொட்டு நிலவி வருவதை ஒரத்தநாடு பகுதியில் வாழும் மக்களிடம் காண முடிகின்றன.

- சுடுமண் கலை வடிவங்களைத் தெய்வங்களுக்கு நேர்த்தி கடனாக வாங்கி வைத்து வழிபடும் வழக்கம் நாட்டுப்புற மக்களிடம் காலம் காலமாய் தொடர்ந்து வருகின்றன. நாகரீக உலகில் மக்கள் பயணித்தாலும் பண்பாட்டினைக் காக்கும் பொருட்டு நாட்டுப்புற கலை வடிவங்களை

அழியாமல் பேணிப் பாதுகாக்கும் மாண்பினை ஓரத்தநாடு வட்டார மக்களிடம் காண முடிகின்றது.

- ❖ நாட்டுப்புற கலைகள் இறைக் குறியீடுகளோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. சமயம் சார்ந்து விளங்குவதால் பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகள் கோயிற் கலையோடு பிணைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் இக்கலைகள் இயக்கம் பெற்று வருகின்றன. இவ்வகை பகுப்பில் பச்சை குத்துதல் கலையும் அடங்கும்.

- ❖ அணிகலன்களுக்கு அடுத்த நிலையில் உடல் மீது வண்ணங்களைப் பூசுவது, ஓவியங்களை வரைவது போன்ற கலைகள் உருவாக்கம் பெறத் துவங்கின. உடலில் சந்தனம் அப்புதல், வண்ணங்களைத் தடவுதல், வண்ணங்களால் வரைதல், மேனியை வடுப்படுத்துதல், தோலில் குத்தி வரைதல் போன்றவைகளும் கலையாக கருதப்பட்டன.

- ❖ நாட்டுப்புறக் கலைகளில் நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுச் சாயாலாக பச்சை குத்தல் கலை விளங்குகிறது. அனைத்துக் கிராமப்புற மக்களிடமும் இன்றளவும் செல்வாக்கு மிகுந்த கலையாகப் பச்சை குத்துதல் உள்ளது.

- ❖ மேனி அலங்காரத்தில் நிலைத்த வகையாக பச்சை குத்துதல் அமைகின்றது. தம் உடல் பார்ப்பவர்களுக்கு அழகுபட இருக்க வேண்டும் என்ற நோக்குடன் உடல்களை அழகுபடுத்தும் பாங்கு தொல் பழங்காலம் தொட்டு இருந்து வருகின்றது எனலாம். பண்பாட்டினையும் கலாச்சாரத்தையும் கையாளத் தொடங்கிய மனிதர்கள் தம் எண்ணங்களை மேனிப் புனைவில் குறியீட்டு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதனை உய்த்துணரலாம்.

- ❖ மனித வரலாறு தொடங்கிய காலத்துக்கு முன்பிருந்தே ஊசியால் துளைத்தல், பச்சை குத்துதல் போன்ற வழக்கங்கள் இருந்து வந்துள்ளன. பழங்காலத்தில் சிறிய கற்களை கூர்மையாக்கி சிறு துளையிட்டு உடலில் பச்சை குத்தும் முறையினை கைக்கொண்டுள்ளனர். கற்கருவிகளை தொடர்ந்து மரக்கட்டைகள், உலோகக் கருவிகள், முற்கள் போன்ற பச்சை குத்தும் கருவிகள் பரிமாண வளர்ச்சிக்கேற்ப மாற்றமடைந்து வந்துள்ளன.

- ❖ ஒவ்வொரு இன மக்களும் பச்சை குத்துலை இறையியல், மருத்துவம், சடங்கு சார்ந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இளமை நிலைக்கவும், பாலின

கவர்ச்சிக்காகவும், தீய சக்திகள் அணுகாமல் இருப்பதற்கும், வலி நீக்கும் வழியாகவும், இனப்பெருக்கச் சடங்காகவும், பாதுகாப்பு உணர்விற்காகவும் மந்திரம், ஊழ் மற்றும் மருத்துவ வழியாகவும் பச்சை குத்துதல் மரபை தொடர்ந்து கொண்டே வந்துள்ளனர்.

❖ ஒரத்தநாடு பகுதியில் பச்சை குத்தும் கலை பெருமளவில் காணப்படுகிறது. இறந்த பிறகும் தன் கூட வருவது பச்சை குத்தும் தழும்பு ஒன்றே என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பச்சை குத்துவதை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இம்மக்களின் சடங்குகள், மருத்துவம், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பச்சை குத்துதல் கலை நிலவி வருவதை காண முடிகின்றன.

❖ ஒரத்தநாடு பகுதி மக்களின் உடல்களில் காணப்படும் பச்சைகளை எழுதுக்களை பதித்தல், பெயர்களை எழுதுதல், உருவங்களை வரைதல், நம்பிக்கை சடங்கு வழிப்படி பச்சை குத்துதல் என்ற வகைகளின் அடிப்படையில் பகுக்கலாம்.

❖ பச்சை குத்துதலில் பெரும்பாலும் எழுத்து வடிவங்களே பதிக்கப்பட்டுள்ளன. காதலன் காதலி பெயரையும், காதலி காதலன் பெயரையும், கணவன் மனைவி பெயரையும், மனைவி கணவன் பெயரையும் பச்சையாகக் குத்திக் கொண்டுள்ளனர். அன்பினை வெளிப்படுத்தும் தாய் தந்தையர் பெயரினை மகன் அல்லது மகளும், தாய் தந்தையர் தனது மகன் அல்லது மகள் பெயரினையும் பச்சையாக பொறித்துள்ளமையைக் காண முடிகின்றன.

❖ சமயக்குறியீடுகள், குலமரபு சின்னங்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள், தமக்குப் பிடித்த உருவங்கள், கட்சிச் சின்னங்கள், கட்சித் தலைவர்கள் ஆகியவற்றின் உருவங்களை தங்களது உடலில் பச்சையாக பதிய வைத்துள்ளனர். பச்சை குத்துதல் ஒரு நாட்டுப்புற கலை வடிவமாக இருந்தாலும் அதனை தங்களது அடையாளமாக கொண்டு இவ்வட்டார மக்கள் இக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

❖ பழங்காலத்திலிருந்தே மேனிப்புனைவின் ஒரு வடிவமாய் திகழ்வது மருதாணி ஆகும். இதற்கு அழவணம், மருதோன்றி, ஐவனம் ஆகிய பெயர்களும் உண்டு. கிராமப்புறங்களில் இன்றளவும் அநேக வீடுகளிலும் மருதாணி மரத்தை காண முடிகிறது. ஒரத்தநாடு பகுதி மக்கள் மரதாணி வைப்பதை பெரும்பாலும் வழக்கமாக கொண்டுள்ளனர். சிலர் கைகளில் மெஹந்திகளையும் வைத்துக்கொள்கின்றனர். ஒரத்தநாடு வட்டார பகுதியில்

மெஹந்திகளை வைத்துக்கொள்ளும் பெண்களைவிட மருதாணி வைத்துக்கொள்ளும் பெண்களே அதிகம் எனலாம்.

- ஒரத்தநாடு வட்டார பகுதியில் பல்வேறு சுவர் ஓவியங்களை காண முடிகின்றது. வீட்டு சுவர்களில் வரைந்தது, கோவில் சுவர்களில் வரைந்தது, பொதுச்சுவர்களில் வரைந்தது என இவர்தம் சுவர் ஓவியங்களை பகுத்துப்பார்க்க முடிகின்றது. சுவர் ஓவியங்கள் இவர்தம் வாழ்வியலோடு கலந்துள்ள போக்கினை காண முடிகின்றது.

- ஒரத்தநாடு வட்டாரத்திலுள்ள வீடுகளின் வெளிப்புற சுவர்களில் கடவுளின் திருவுருவப் படங்கள், நல்வரவு என்ற வாசகத்துடன் பெண்ணின் கைகள் கும்பிடுவது போன்றும், விளக்குகள் ஏந்தி நிற்பது போலவும், மலர்கள், மயில் மற்றும் அன்னம் போன்ற பறவைகள், வண்ணக் கோலங்கள், இயற்கைக் காட்சிகள், திருஷ்டி உருவங்கள் ஆகியவை இடம்பெறுவதை காண முடிகின்றது.

- ஒரத்தநாடு வட்டார பகுதியில் கோயில் திருவிழாக்களின் போது இப்பகுதி மக்கள் தங்கள் வீடுகளின் வெளிப்புற சுவரை நன்கு சாணம் கொண்டு மெழுகி, அச்சுவற்றில் தேர் படத்தை வெள்ளைச் சுண்ணாம்பு கலவையால் அழகிய ஓவியமாய் தீட்டி வைக்கிறார்கள். இச்சுவர் ஓவியங்கள் மகாலெட்சுமியை வீட்டிற்குள் அழைக்கும் என இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

- கோயில் சுவர்களில் தெய்வங்களின் திருவுருவப் படங்கள், புராண இதிகாச விளக்கப் படங்கள், அழகிய மலர்கள், யாழிகளின் உருவங்கள், தெய்வங்களின் வாகனங்கள், தல விருச்சங்கள், மலர் தூவும் தெய்வ மகளிர், காவல் தெய்வங்கள், தேவதைகள் ஆகியவற்றை காண முடிகின்றது.

- ஒரத்தநாடு வட்டாரத்தில் பொது இடங்களில் அரசுசார் மற்றும் தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை காணும்போது சுவரொட்டி விளம்பரங்களைக் காட்டிலும் ஓவிய விளம்பரங்களே அதிகம் காணப்படுகிறது.

- ஒரத்தநாடு வட்டார பள்ளிக்கூட சுவர்களில் திருவள்ளுவர், பெரியார், அம்பேத்கார், அப்துல் கலாம் போன்ற சான்றோர்களின் படங்கள் மற்றும் பல்வேறு கருத்து விளக்கப் படங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. நுண்ணறிவை தூண்டும் பலவிதமான கருத்துக்களை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அழகிய ஓவியமாய் பள்ளிக்கூட சுவரில் தீட்டப்பெற்றிருக்கிறது. சுவரோவியங்கள் வழி மாணவர்கள் பல்வகை அறிவும் விழிப்புணர்வும் பெறுவர் என இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

- ❖ நம் பண்பாட்டு நிகழ்வுகளை காட்சிப்படுத்த சுவர் ஓவியங்கள் சிறப்பான அணுகு முறையாக காணப்படுகிறது. ஒரத்தநாடு வட்டார பகுதிகளில் காணப்படும் சுவர் ஓவியங்கள் இறை தொடர்புடையனவாகவும் நம்பிக்கைகள் தொடர்புடையனவாகவும் காட்சியளிக்கின்றன.

- ❖ ஒரு ஓவியம் வரைவதற்கு முக்கியத் தேவை கோடுகளே ஆகும். கோட்டோவியம் என்பது கோடுகள் மட்டுமே இடம்பெருவது ஆகும். காவி மற்றும் வெள்ளை நிறத்தால் வரையப்படும் கோடுகளையே கோட்டோவியங்கள் என்கின்றனர்.

- ❖ ஒரத்தநாடு வட்டார பகுதியில் பரவலாக கோட்டோவியங்கள் வரைப்பட்டுள்ளன. கோட்டோவியங்களை அனைத்து ஆலய சுவர்களிலும், அனைத்து பிராமணர் வீடுகளிலும் காண முடிகிறது. மேலும் வளமையின் அடையாளமாகவே இக்கோட்டோவியங்கள் தீட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

- ❖ நாட்டுப்புற ஓவியக்கலைகளில் பாய்களில் புனையப்படும் ஓவியக்கலையும் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த சோழபுரம், ஈச்சங்கோட்டை ஆகிய கிராமங்களில் பாய் பின்னும் தொழில் நடைப்பெற்று வருகிறது. இவர்களின் பாய் பின்னும் கலை, பாய் தயாரிக்கும் முறை, சாயம் ஏற்றும் முறை, பாயின் வடிவமைப்பு, பாயின் வகைகள், நம்பிக்கைகள் ஆகியவை பாரம்பரியமாக வந்தமையை காண முடிகின்றது.

- ❖ நீர்நிலைகளில் விளையும் கோரைப்புல், கற்றாழை, நார் ஆகியவற்றைக் கொண்டு கைகளால் பின்னப்படும் பாய்த்தொழில் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது. நிகழ்த்தா கலைகளில் ஓர் அங்கமாய் திகழும் பாய்தொழில் பல்வேறு கலையம்சத்துடன் பல வண்ண வேலைப்பாடுகளுடன் அழகிய பூவேலைப்பாடுகளுடன் காண்பவர்கள் விரும்பும் அளவிற்கு ஓவியமாய் வடிவமைக்கப்படுகின்றன.

- ❖ மூலப்பொருட்களை சேகரித்தல், தறி கட்டுதல், வடிவமைத்தல் என்ற நிலைகளில் பாய் தயாரிக்கும் முறையினை மேற்கொள்கின்றனர். குறிப்பிட்ட இனமக்களே பாய் பின்னும் தொழிலை செய்து வருகின்னறனர். இவர்கள் காலை நேரங்களில் விவசாயக் கூலி வேலைக்குச் சென்றும், மாலை நேரம் மற்றும் வேலையில்லா நாட்களிலும் பரம்பரைத் தொழிலாக பாய்பின்னும் தொழிலை செய்கின்றனர்.

- ❖ ஆற்றங்கரை ஓரங்களிலும், ஏரிப்பகுதிகளிலும், வாய்க்கால் வரப்புகளிலும் வளர்ந்துள்ள கோரைகளை கறுக்கரிவாள் என்னும் கருவியைக் கொண்டு அறுத்து மூலப்பொருளினை சேகரிக்கின்றனர். சேகரித்த கோரைகளை

இரண்டாக கிழித்து வெயிலில் உலர்த்துகின்றனர். உலர்த்தப்பட்ட கோரைகளை பாய் பின்னுவதற்கு தேவைப்படும் அளவிற்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு பாய்கள் பின்னப்படுகின்றன.

❖ விறகு அடுப்பில் நான்கு பெரிய பானைகளில் நீரை நன்றாக கொதிக்க வைத்து அதில் பச்சை, மஞ்சள், ஊதா, சிவப்பு ஆகிய நிறப் பொடிகளை கலந்து சாயம் தயாரிக்கின்றனர். அச்சாயத்தில் கோரைகளை நனைத்து சாய மூட்டுகின்றனர். பாய்களை இணைப்பதற்கு கற்றாழை நாரினை பயன்படுத்துகின்றனர். ஈச்சங்கோட்டை பகுதி பாய் நெய்யும் கலைஞர்கள் கற்றாழை நாருக்கு பதிலாக பருத்தி நூலினைப் பயன்படுத்துகின்றனர்.

❖ பின்னப்பட்ட பாய்களை அழகுற வடிவமைப்பதற்கு இரு ஓரங்களில் காணப்படும் முடிச்சுகளை கத்தியால் சீவி சரடு கொண்டு சிறு சிறு பின்னல்களாக மடக்கி வைத்து கட்டி விற்பனைக்குத் தயார் செய்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் பாய் பின்னும் தொழிலை செய்து வருகின்றனர். ஒரு நாளைக்கு நான்கு பாய்கள் வரை பின்னுகின்றனர்.

❖ ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த பகுதிகளில் பின்னப்படும் பாய்களை தடுக்குப்பாய், ஒற்றைப்பாய், இரட்டைப்பாய், பட்டுப்பாய், என வகைப்படுத்தலாம். பிறந்த குழந்தைகளுக்கான பாயினை ‘பிள்ளைத்தடுக்கு’ என்றும் விருந்தினர் உணவு உண்ணும் போது பயன்படுத்தப்படும் பாயினை ‘பந்திப்பாய்’ என்றும் அழைக்கின்றனர்.

❖ கோரைகளில் மஞ்சள் நிற சாயம் மட்டும் கொண்டு பின்னப்படும் பாயினை ‘சாதாபாய்’ என்றும் சிவப்பு, ஊதா, பச்சை ஆகிய நிறங்களில் பொடிப் பொடிக் கட்டமாக அல்லது நீள கோடாக அமைத்துப் பின்னப்படும் பாய்களை ‘சொக்கட்டான் பாய்’ என்றும் பெரிய கட்டம், முக்கோண வடிவம், வட்ட வடிவம் போன்று பின்னப்படும் பாய்களை ‘பெட்டிப்பாய்’ என்றும் அழைக்கின்றனர்.

❖ பட்டுப்பாய் என்பது மிகவும் அழகாக வண்ணமயமான ஓவிய வேலைப்பாடுகளுடன் நுணுக்கமாக பின்னப்படுவதாகும். மங்கல நிகழ்வுகளுக்கு மட்டும் இதை பயன்படுத்துவர். இவ்வகை பாய்களில் மணமக்கள் பெயர்கள், திருமண நாள் முதலியவை குறிக்கப்படுவது இதன் சிறப்பாகும். பாய்களில் நெய்யப்பட்டிருக்கும் கோலங்களின் வடிவங்கள், இயற்கைக் காட்சிகள், இதய வடிவங்கள், சிலுவைப் படம் போன்ற பலவிதமான காட்சிகளை மிகவும் நுணுக்கமான வண்ண ஓவியங்களாக பின்னப்படும் பாய்களே ‘ஓவியப்பாய்’ ஆகும்.

- கோரைகளில் படுத்தால் நோய் வராது, கோரைப் பாயில் படுத்துறங்கும் போது தேள், பூரான், பூச்சிகள் அண்டாது, வீட்டிற்கு சடங்கான பெண்கள் எவ்வளவு வசதி படைத்திருந்தாலும் தரையில் பாய் விரித்தே உறங்க வேண்டும். திருமணத்தின் போது மணமகளுக்கு பட்டுப்பாயினையும் குழந்தையினை ஈன்ற பெண்ணுக்கு பிள்ளைத்தடுக்குப் பாயினையும் சீராக கொடுத்து கணவன் வீட்டிற்கு அனுப்பும் மரபு போன்ற பாய் தொடர்பான பலவிதமான நம்பிக்கைகளை ஒரத்தநாடு வட்டார மக்களின் வாழ்வியலில் காண முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. Wikipedia - Dr.Gift siromony. "KOLAM" Chennai mathematical Institude, Retrieved 12 January 2012
2. அகநானூறு. பா.162:1
3. க்ரியா - தற்காலத் தமிழகராதி, ப.518
4. இராசு.பவுன்துரை, பண்டைத் தழிழக வரைவுகளும் குறியீடுகளும், ப.57
5. கு.சேதுராமன், தமிழகச் சமுதாய பண்பாட்டுக்கலை வரலாறு, ப.522
6. நாச்சியார் திருமொழி, பா.15:1-3
7. அவள் விகடன், டிசம்பர் - 2016, ப.197
8. ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.634
9. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள். குறள்.131
10. கு.சேதுராமன், தமிழகச் சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, ப.521
11. மேலது, ப.522
12. மேலது, ப.520
13. மேலது, பக்.521-522
14. மேலது, ப.522
15. மேலது, பக்.523
16. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்கள் பண்பாடும், ப.43
17. ஐங்குறுநூறு, பா.303:10
18. புறநானூறு, பா.238:1
19. கு.சேதுராமன், தமிழகச் சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, ப.523
20. மேலது, ப.518
21. புலவர் கா.கோவிந்தன், ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு, ப.92
22. sura's supreme -DICTIONARY, ப.905
23. கா.மீனாட்சிசுந்தரம்,கொங்குநாட்டில் வரைதல் கலை - குறிப்பாக பச்சை குத்துதல், ப.4
24. A S Hornby, Oxfort Advanced Learner's Dictionary of Current English, P.1585
25. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழியகராதி, ப-943
26. ஆ.சிங்கார வேலுமுதலியார், அபிதான சிந்தாமணி. ப.1219).
27. கா.மீனாட்சிசுந்தரம்,கொங்குநாட்டில் வரைதல் கலை - குறிப்பாக பச்சை குத்துதல், ப.7
28. மேலது, பக்.7-8
29. மேலது, ப.8
30. மேலது, ப.8

31. சி.வை.தாமோதரம்பிள்ளை (ப.ஆ),தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் உரை, ப.429
32. வி.நாகராசன் (உ.ஆ), பத்துப்பாட்டு மூலமும் உரையும், மதுரைக்காஞ்சி, பா.283
33. கா.மீனாட்சிசுந்தரம்,கொங்குநாட்டில் வரைதல் கலை - குறிப்பாக பச்சை குத்துதல், ப.40
34. மேலது, ப.41
35. மேலது, ப.56
36. மேலது, ப.58
37. மேலது, ப.47
38. மேலது, ப.44
39. மேலது, ப.45
40. மேலது, ப.45
41. மேலது, ப.53
42. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், குறள்.30

# இயல் - 4

# ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும்

கலைகள் தழைத்தோங்குவதற்கு முக்கிய காரணிகள் கலைஞர்களே. பழங்காலத்தில் கலைஞர்களுக்கு இருந்த மதிப்பும் செல்வாக்கும் இன்று இருக்கிறதா? என்றால் இல்லை என்றே பெரும்பான்மை கலைஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். நவீனத்துவத்தின் காரணமாக, மரபுக் கலையை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் கலைஞர்களின் வாழ்வாதாரம் இன்று கேள்விக் குறியாக மாறியுள்ளது. நவீனத்துவத்தின் பல்வகை காரணிகளால் மரபுக்கலைகளின் நுகர்வு குறைந்துள்ளது. மரபுக்கலையை நம்பி வாழும் கலைஞர்கள் தம் தொழிலை விட்டு வேறு வேலைக்குச் செல்லும் அவலம் ஏற்படுகிறது. மரபுக்கலையைப் பாதுகாப்பதின் வழி நம் பாரம்பரியத்தையும் கலைஞர்களையும் காக்க முடியும்.

## 1. கலைஞர்கள்

மனிதர்களுக்கு உணர்ச்சி என்பது பொதுவானது. ஆனால் கலைஞர்களிடம் உணர்ச்சி என்பது ஆழமும் ஆற்றலும் நுண்மையும் மென்மையும் பெற்று விளங்குகிறது. தான் பெற்ற உணர்வினை இன்னொருவரும் பெறுமாறு செய்வதே கலைஞர்களின் சிறப்பாகும். ஏதேனும் ஒரு கலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பவர் கலைஞன் என்றழைக்கப்படுகிறார். தற்காலத்தில் கலைஞன் என்னும் சொல்லாட்சி கவிதை, நாடகம், இசை, நடனம், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் ஈடுபடுவோரைச் சிறப்பாகக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றமையைக் காணமுடிகிறது.

படைக்கும் ஆற்றல் கொண்ட மனிதனையே கலைஞன் என்று கூறுகிறோம். கலைஞன் காட்டும் கட்புலக் காட்சியும் அதனால் பெறுகின்ற உணர்வும், அந்நிலையினால் கலைஞன் பெறுகின்ற அனுபவ வெளிப்பாடும் அனைத்து கலைஞர்களுக்கும் பொதுவானவையாக அமைகின்றன. இசைக்கு வசமாகாத இதயம் எதுவுமில்லை என்பதைக் கலைஞர்கள் நன்றாக அறிந்தவர்கள். ஆகவே தங்கள் வாழ்வில் இசை கலைக்கு முதலிடம் கொடுத்துள்ளனர். கலைஞர்களுக்கு இசை, கூத்து, நடிப்பு போன்ற கலைகளே குலத்தொழிலாக உள்ளன.

பண்டைய தமிழகத்தில் கலைஞர்கள் கலையாற்றலைப் பிறருக்குப் புலப்படுத்துவதற்காகவும், வறுமை நீங்கி செம்மையான வாழ்வினை நடத்துவதற்காகவும் பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து, நாடோடி வாழ்க்கையினை மேற்கொண்டுள்ளனர். கலைஞர்களின் கலைத்தொண்டு மன்னர்களாலும் மக்களாலும் பெரிதும் மதிக்கப்படுவதைக் கண்டு இத்தகைய வாழ்வியலை மகிழ்ச்சியுடன் வாழ்ந்துள்ளனர். இன்றளவும் திருவிழாக் காலங்களில்

அயல் ஊர்களுக்குச் சென்று கலை நிகழ்வுகளை நடத்தும் வழக்கம் கலைஞர்களிடம் தொடர்வது நினைவில் கொள்ளத்தக்கது.

சங்க காலத்தில் ஓவிய கலைஞர்களை ஓவியர், சித்திரகாரர், ஓவமாக்கள், கண்ணுள் வினைஞர் என்றும், சிலைகளை செதுக்கும் கலைஞர்களை சிற்பக்கலைஞர், தச்சர், கருந்தொழில் வினைஞர், கைவல் கம்மியர் என பல சிறப்பு பெயர்களிட்டு அழைக்கப்பட்டுள்ளமையினை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. தற்காலத்தில் ஓவிய கலைஞர்களை ஓவியர் என்றும், சிற்ப வேலை செய்யும் கலைஞர்களை சிற்பி எனவும் பொதுப்பெயரில் அழைப்பதைக் காண முடிகிறது. இதன் ஊடாகவே தற்காலத்தில் கலைகள் மற்றும் கலைஞர்கள் மீதான மக்களின் ஈடுபாட்டினைப் புரிந்துக் கொள்ளலாம்.

## 2. கலைகள்

தமிழர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதில் கலைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் உதவியால் தான் மனிதன் உலகின் பல இயல்புகளையும் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உணர்கிறான். இவ்வாறு தான் உணர்ந்தவற்றைப் பிறருக்குக் கூறுவதற்கு, மனித மனம் எண்ணம் கொண்ட பொழுது கலைகள் தோற்றம் பெற்றன எனக்கொள்ளலாம். மனிதன் தன்னுடைய அறிவின் திறத்தால் அழகானவற்றைச் சிறப்பித்துப் படைத்துப் பிறர் வியக்கும் வண்ணம் செய்வதே கலையின் அடிப்படையாக அமைகின்றது எனலாம்.

கலையைப் பற்றி கு.வே.பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடுகையில், “கலை என்னும் சொல் ‘கல்’ என்னும் ஏவற் பகுதியிலிருந்து தோன்றியதாகும். கல்வி என்னும் சொல்லுக்கும் இதுவே முதனிலையாகும்”[1] என்கிறார்.

கலை என்பதற்கு “ஆண்மான், ஆண்முசு, சுறாமீன், மகராசி, குதிரைக்கலன், பகுதி, சந்திரனின் பதினாறு பகுதியிலொன்று, கால அளவு, அறுபத்து நான்கு கலை, கல்வி, நூல்”[2] என பல பொருள்களை செந்தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது.

மனித வாழ்வின் அங்கமாகக் கலைகள் திகழ்கின்றன. கலையைப் பற்றி டால்ஸ்டாய் அவர்கள் குறிப்பிடுகையில், “கலை என்பது உணர்வின் வெளிப்பாடு. அது உணர்வை வெளியிடுவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வை ஊட்டும் பெருமையுடையது”[3] என்கிறார்.

கலையைப் பற்றி க.காந்திதாசன் அவர்கள் குறிப்பிடுகையில், “கலை என்பது கண்களையும் காதுகளையும் கவர்ந்து மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செயல்

கலை. கண் வழியாக அழகியல் உணர்வையும், செவி வழியாக ஒலியிசை உணர்வையும், உள்ளத்துள் ஒருசேர உருவாக்கி, சிந்தனையில் கிளர்ச்சியை எழச் செய்யும் தன்மையுடையது”[4] என்கிறார். இவரின் இக்கூற்று வாயிலாக கண்களையும், காதுகளையும், மனதினையும் கவரும் செயல் வடிவமே கலையாக உள்ளன என்பது தெளிவாகிறது.

நாகரீகம், பண்பாடு என்பன கலைகளின் வாயிலாகத் தோற்றம் பெற்றன என்றால் அது மிகையாகாது. முன்னோரின் நுட்பமான அறிவின் வளர்ச்சியால் விளைந்த பல கலைகள் இன்றைய மக்களின் வாழ்வியல் சூழலுக்கேற்ப பல உட்பிரிவுகளையும், புதிய கலை வடிவங்களையும் கொண்டு மாற்றம் பெற்றுள்ளன. மாற்றங்கள் நிகழ்ந்தாலும் இன்றளவும் கலைகள் தனது தனித்துவத்தையும், சிறப்பினையும் இழக்காமல் உயிர்ப்புத் தன்மையோடு விளங்குவதைக் காணமுடிகிறது.

## 2.1. நுண்கலைகள்

கலைகள் மனிதனால் உருவாக்கம் பெறுபவை. மனித வாழ்க்கைக்கு பயன்படுகின்ற எல்லாத் தொழில்களும் கலைகள் ஆகும். மனித சமூக வரலாற்றில் நுண்கலைகள் மிக முக்கியமான இடம் வகிக்கின்றன. நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலைகளாகும். நுண்கலைகள் என்னும் பகுப்பில்,

- ❖ சிற்பக்கலை
- ❖ கட்டிடக்கலை
- ❖ ஓவியக்கலை
- ❖ காவியக்கலை (இலக்கியம்)
- ❖ நடனக்கலை
- ❖ இசைக்கலை
- ❖ திரைப்படம்

உள்ளிட்ட கலைகள் பகுக்கப்படுகின்றன. நுண்கலைகள் உள்ளத்துணர்விற்கும், கற்பனை உணர்விற்கும் தூண்டுகோலாக விளங்குவதாக அமைகின்றன.

### 2.1.1 சிற்பக்கலை

தமிழகத்தின் தொன்மையான கலை வடிவங்களில் சிற்பக்கலையும் ஒன்றாகும். சிற்பக்கலை ஓவியக்கலையோடு பெரிதும் தொடர்புடையது. இவ்விரு கலைகளுக்கு அழகுணர்ச்சியும் கற்பனை வளமும் நிரம்ப வேண்டும். உயர்ந்த இரசனை உள்ளவர்களால் மட்டுமே உணர முடியும். தமிழகத்தில் வரலாற்றுக் காலத்துக்கு

முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. மனித நாகரீகத்தையும் அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலை முதன்மையான சான்றாதாரமாக அமைந்துள்ளது.

மனிதன் படைப்புகளில் காலத்தால் அழியாமல் வாழக்கூடிய கலைப்படைப்பாக சிற்பக்கலை உள்ளது. சிற்பக்கலை பெரும்பாலும் மத வழிபாடுகளை மையமாகக் கொண்டு அதன் அடிப்படையிலேயே உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்களை,

"கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் பண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பக் தொழிற்குறுப் பாவன"[5]

எனத் திவாகர நிகண்டு பட்டியலிடுகிறது.

பண்டைக்காலம் முதற்கொண்டு தமிழரால் சிற்பக்கலை சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. பழந்தமிழரின் சிற்பங்களை முழு உரு சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இருவகைகளாகப் பகுக்கின்றனர். முழு உரு சிற்பங்கள் என்பது பொருளின் முன்னும் பின்னும் தெளிவாகத் தெரியுமாறு அமைக்கப்படும் சிற்பங்கள். புடைப்புச் சிற்பங்கள் என்பது சுவர்கள், தூண்கள், பாறைகள் என பலவற்றின் மீது சிற்பத்தின் ஒரு புறம் மட்டும் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களைக் குறிக்கும். நாட்டுப்புற மக்களின் வழிபாட்டில் கற்சிற்பங்களைவிட சுடுமண் மற்றும் சுதைச் சிற்பங்களே அதிக அளவில் காணக் கிடைக்கின்றன.

தமிழகத்துக் கிராமங்களில் இன்றளவும் சுடுமண்ணால் செய்யப்பட்ட இறை உருவங்களைக் கொண்ட கோயில்களே பெருமளவில் காணப்படுகின்றன. சுடுமண் சிற்பங்கள் என்பது களிமண்ணால் உருவம் செய்து அதனை உலர வைத்துச் செங்கல் சூளையில் சுட்டெடுத்து வடிவமைக்கப்படும் உறுதியான சிற்பங்களாகும். மண்பாண்டங்களும் இம்முறையிலேயே செய்யப்படுகின்றது. அக்கால மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் பொருட்களைச் சுடுமண் பொருட்களாகவே உருவாக்கியுள்ளனர். இவை பல்லாயிரம் ஆண்டுகளானாலும் மழை,வெயில் போன்ற இயற்கை காரணிகளால் எளிதில் சிதைக்க இயலாது.

சுண்ணாம்பினால் உருவாக்கப்படும் சிற்பங்கள் சுதைச் சிற்பங்கள் ஆகும். சுதைச் சிற்பங்கள் சுண்ணாம்பு மற்றும் மரக்குச்சிகள் கொண்டு வடிவமைக்கப்படுகின்றது. தற்காலத்தில் சுண்ணாம்புக்குப் பதிலாக சிமெண்ட் கலவையும், மரக்குச்சிகளுக்குப் பதிலாக இரும்புக் கம்பிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இக்கலையே

அழியும் சூழலுக்கு வழிகோலியுள்ளது. பண்டைக் காலந்தொட்டு தமிழர் வாழ்வியலில் சுதைச் சிற்பங்களின் பயன்பாடு வழக்கில் இருந்தமையை இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த மாளிகைகளில் சுதையினால் செய்யப்பட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டிருந்ததை,

“வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்

சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்

மையறு படிவத்து வானவர் முதலா

எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி

வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய.”[6]

என்னும் மணிமேகலைப் பாடலடிகள் சுட்டுகின்றன.

சுதைச்சிற்பங்கள் கோயில்களிலும் கோபுரங்களிலும் நிரந்தரமாக செய்து வைப்பதற்கும், திருவிழாக்களுக்காகத் தற்காலிகமாகச் செய்து திருவிழா முடிந்தவுடன் உடைத்தோ அல்லது நீரில் கரைத்தோ விடுவதற்கும் என இரண்டு வகையான பயன்பாட்டிற்காக உருவாக்கப்படுகின்றன. கிராமத் தெய்வங்களான ஐயனார், மதுரை வீரன், சுடலைமாடன், முத்தாலம்மன், கருப்பசாமி போன்ற பல தெய்வ உருவங்களும், அவர்களின் வாகனமாகிய குதிரை, யானை, நாய் போன்ற உருவங்களும் செய்யப்பட்டு அவற்றிற்கு வண்ணம் தீட்டும் மரபு தமிழகத்து கிராமங்களில் இன்றளவும் வழக்கத்தில் உள்ளது. ஓர் இனத்தின் தொன்மை வரலாற்றினை அறிய அம்மக்களால் வளர்க்கப்பட்ட சிற்பக்கலை பெரிதும் துணைபுரிகின்றது என்றால் அது மிகையாகாது எனலாம்.

### 2.1.2 கட்டிடக்கலை

மனிதனது வாழ்வியலுடன் ஒட்டி வளர்ந்த தொன்மையான கலையாகக் கட்டிடக்கலைப் போற்றப்படுகின்றது. கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும். தமிழகத்தில் பழைய கற்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்தமைக்கான தரவுகள் கிடைக்கின்றன. காடு, மலைகளில் நாடோடியாக அலைந்து திரிந்த மனிதன் பாறையிடுக்குகள், குகைகள் போன்ற இயற்கைக் கட்டுமானங்களில் வாழத் தலைப்பட்டான். பின்னர் நிலையான ஓரிடத்தில் நிரந்தரமாக வாழத் தொடங்கிய பொழுது தான் தங்குவதற்குரிய இருப்பிடம் குறித்து எண்ணத் தொடங்கியதன் விளைவே கட்டிடக்கலையின் தோற்றுவாய் எனக் கொள்ளலாம்.

இயற்கைச் சீற்றங்களுடன் போராடிய மனிதன் தன் பாதுகாப்பிற்காக என்ன செய்யலாம் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இயற்கையில் கிடைத்த இலைகள், தினைத்தாள், வரகுத்தாள், பனை, தென்னை மற்றும் ஈத்தம் ஓலை, புல், வைக்கோல் போன்ற பொருட்களைக் கொண்டு இருப்பிடங்களை உருவாக்கும் கட்டுமான நுட்பமாக உருவாக்கம் பெற்றது எனக் கருதலாம். இயற்கையில் கிடைத்த பொருட்களையும், தான் விளைவித்த பயிர்களில் இருந்து கிடைத்தப் பொருட்களையும் கொண்டு குடில்கள் அமைத்து வாழ்ந்தமையை,

"புதுவை வேய்ந்த கவிகுழல்"[7]

"ஈத்தலை வேய்ந்த வெய்புரக் கரம்பை"[8]

"குரம்பை நம் மனைவயின் புகுதரும்"[9]

பெரும்பாணாற்றுப்படை, அகநானூறு போன்ற இலக்கியச் சான்றுகள் இதனை நிறுவுகின்றன.

சங்கக் காலத்தில் மாட மாளிகைகளும், கோட்டைகளும் இருந்தமைப் பற்றி சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் சான்றுகள் பகர்கின்றன. பழந்தமிழகத்தின் கட்டிடக்கலையினைப் பறைசாற்றும் வகையில் பல்லவர், சோழர், பாண்டியர் முதலியோர் கட்டிய ஆலயங்கள் இன்றளவும் சாட்சியமாகக் காணக் கிடைக்கின்றன. தமிழகத்தில் மன்னர்கள் நீர்பாசனத்திற்காக வெட்டிய ஏரிகளும், குளங்களும் பலவாக இருந்தன. நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தின் விளைவாக எண்ணற்ற அணைகளையும் கட்டியுள்ளமையினைக் காணமுடிகிறது.

நாட்டுப்புறக் கட்டிடக்கலையில் மரபுவழி மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானத்தில் கட்டுபவரே வீட்டின் அமைப்பைத் தீர்மானிக்கிறார். அவ்வீட்டின் அமைப்பு பெரும்பாலும் அப்பகுதியிலுள்ள மற்ற வீடுகளின் அமைப்பை ஒத்தே காணப்படுகின்றன. கிராமப்புற வீடுகளின் அமைப்பைப் பொறுத்து குடிசை வீடு, கூரை வீடு, ஓட்டு வீடு, காரை வீடு, கல்லு வீடு, மாடி வீடு என்று வகைப்படுத்தப்பட்டு பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. அந்தக் காலங்களில் வீட்டின் முற்றத்தில் திண்ணை அமைக்கும் வழக்கம் இருந்து வந்தது. கிராமப்புறங்களில் இன்று புதியதாக வடிவமைக்கப்படும் இல்லங்களில் திண்ணை அமைத்தல் என்னும் மரபு வழக்கொழிந்து போய்விட்டதைக் காணமுடிகிறது.

கிராமங்களில் ஆற்றங்கரையோரங்களிலும், குளக்கரைகளிலும், ஏரிக்கரை ஓரங்களிலும், வேப்ப மரம், அரச மரம் போன்ற மரங்களின் அடியிலும், மரங்களடர்ந்த பகுதிகளிலும் கிராம தெய்வங்களுக்குக் கல், சுதைப் போன்ற பொருட்களால் வடிவமைக்கப்பட்ட சிலைகளை வெட்டவெளியில் வைத்து வணங்கும் வழக்கம்

காணப்படுகிறது. காற்று, மழை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து சிலைகளைப் பாதுகாக்க கோயில் கட்டுமானங்களை அமைக்கின்றனர். இவை அச்சமூகத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்ப சிறிய குடில் முதல் பெரிய கோபுரங்களைக் கொண்ட கட்டுமானங்களாக கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

### 2.1.3 ஓவியக்கலை

மனிதன் அக உணர்வில் எழும் அழகுணர்ச்சியின் விளைவாகப் பிறப்பது ஓவியமாகும். இயற்கை மீதான ஈர்ப்பும் கற்பனை வளமும் ஓவியக்கலைக்கு முக்கியமானதாகும். ஓவியக்கலை கண்களால் நுகரப்படும் கலையாகும். ஒரு பொருளையோ அல்லது காட்சியையோ மிகுந்த விருப்பத்துடன் காணும் பொழுது அது மனதில் பதிகிறது. அக்காட்சித் தொடர்பாக உள்ளம் தொடர்ந்து கற்பனையைத் தூண்ட அக்காட்சியினை ஓலை, துணி, சுவர், மட்பாண்டம், பாறை போன்ற இடங்களில் எழுதப்படுகிறது. அவ்வாறு எழுதப்படும் அவ்வடிவம் ஓவியம் என்னும் சிறப்பினை அடைகிறது.

இசை, நாடகக் கலைகளை வெறுத்த சமண, பௌத்த சமயத்தவரும் கூட ஓவியங்களைப் போற்றியுள்ளனர் என்பதனை "தமிழ்நாட்டுச் சித்தன்னவாசல் ஓவியங்களும்(சமணர்), மகாராட்டிர மாநில அஜந்தா மலைக்குகை ஓவியங்களும்(பௌத்தர்) சான்றுகளாய் அமைகின்றன. அஜந்தா குகை ஓவியங்கள் புத்த ஜாதகக் கதை நிகழ்வுகளைச் சுட்டுபவை. ஓவியக்கலை பெரும்பான்மைச் சமய சார்பாகக் கையாளப்பட்டதை இது காட்டுகிறது."[10] என்னும் கு.வெ.பாலசுப்பிரமணியனின் கூற்று நிறுவுகின்றது.

நாட்டுப்புற மக்களிடம் ஓவியக்கலை பெரும்பங்கினை வகிக்கிறது. அன்றாட வாழ்வியலில் காலை எழுந்தவுடன் மகளிர் கோலமிடுதல் என்பது இன்றளவும் நாட்டுப்புற மக்களிடம் நம்பிக்கை மற்றும் சடங்கு சார்ந்த நிகழ்வாக நடைபெற்று கொண்டுள்ளது. உடலில் பச்சைக்குத்துதல் மற்றும் மருதாணி இடுதல் போன்ற நிகழ்வுகள் தொடர்கின்றன. திருவிழாக்களின் பொழுது பொங்கல் பானைகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. மேலும், கோயில் மற்றும் கோபுரங்கள், குதிரை, யானை போன்ற கடவுளர் வாகனங்களுக்கு பல வண்ணக் கலவைகள் கொண்டு ஓவியங்கள் எழுதப்படுகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஓவியக்கலை என்பது வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள்ளமையைக் காணமுடிகிறது.

## 3. ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும்

கலையைத் தொழிலாக கொண்டுள்ள ஐவினை கலைஞர்களை விஸ்வகர்மா என்று அழைப்பர். விஸ்வகர்மா இனத்தவரின் வாழ்வியலில் ஓவியக் கலை நீங்கா இடம் பெற்றுள்ளது. விஸ்வகர்மா இனத்தவரின் தொழிலில் வரைதல் கலை அடிப்படைப் பண்பாகத் திகழ்கின்றது. ஓவியக்கலையை இன்றளவும் தங்களது தொழிலில் பயன்படுத்தும் கலைசார் மக்களாக இவர்கள் திகழ்கின்றனர்.

மும்மூர்த்திகள் மூன்று தொழில்களை செய்வது போல் ஐவினை கலைஞர்களான விஸ்வகர்மாக்கள் ஐந்து தொழில்களைச் செய்கின்றார்கள். இவர்களில் ஐந்து பிரிவினர் உண்டு. அதாவது கொல்லர், தச்சர், கண்ணார், சிற்பி, பத்தர் என்று அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஐவரையும் சேர்த்து ஐவினை கலைஞர்கள் என்று கூறுவார்கள்.

கொல்லர் இரும்பினால் ஆன வேலைகளையும், தச்சர் மரத்தினால் ஆன வேலைகளையும், கண்ணார் பாத்திர வேலைகளையும், சிற்பி தெய்வ உருவங்களையும் மற்ற சிற்பங்களையும், பத்தர் இனத்தவர் பொன் அணிகலன்களையும் செய்கின்றனர். ஆக இவர்கள் ஐவரும் கைவினை கலைஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்த ஐவரும் மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பெரிதும் ஊன்றுக் கோலாய் இருந்திருக்கின்றனர் என்பதை அறியலாகிறது.

### 3.1. கொல்லர்

இவர்கள் மக்களுக்குத் தேவையான வேளாண்மைக் கருவிகள் மற்றும் இரும்பினால் ஆன இதர கருவிகளையும் செய்கின்றனர். உழுவதற்கு கலப்பையின் கொழு, மண்வெட்டி, அரிவாள், கலைக்கொத்து, கடப்பாறை, மாட்டு வண்டிகளுக்கு தேவைப்படும் அச்சாணி, கடைச்சாவி, உள்ளாலி, பூண், வண்டி சக்கரத்தின் கட்டு ஆகியவற்றைத் தயார் செய்கின்றனர்.

#### 3.1.1. ஓவியத்தில் கொல்லர்களின் பங்கு

ஒவ்வொரு வேலை நுட்பத்திலும் ஓவியமானது இடம்பெற்றுள்ளது. செய்யும் தொழிலுக்கு முன்பு அதன் வடிவங்களை ஒரு அட்டையில் பென்சிலால் வரைந்து வைத்துக் கொண்டு அதன் பின்னரே கருவிகளைத் தயார் செய்கின்றனர். உதாரணத்திற்கு வெட்டரிவாள் செய்ய வேண்டுமென்றால் முதலில் ஒரு காகித அட்டையை எடுத்துக் கொண்டு அந்த அட்டையில் அரிவாளின் வடிவத்தை வரைந்துக் கொண்டு பின்னர் தேவையில்லாதப் பக்கங்களை வெட்டி எடுத்து விட்டு அந்த அரிவாளின் வரைபடத்தை இரும்பினால் ஆன தகட்டில் வைத்து வரைந்து பின்னர் வெட்டு இரும்பு எனப்படும் உளியால் அதை அரிவாளின் வடிவத்தில் வெட்டிப் பின்னர் உலையில் வைத்துக் காய்ச்சித் தட்டி, அரிவாளின் வடிவமாக செய்வார்கள். இதே போல் ஒவ்வொரு வேலைக்கும் ஓவியத்தை வரைந்து வைத்து கொண்டுதான்

கருவிகளைத் தயாரிக்கின்றனர். இவர்கள் செய்யும் ஒவ்வொரு கருவிகளுக்கும் வரைபடமாகிய ஓவியம் மிகவும் பயனுள்ளதாகிறது.

## 3.2. தச்சர்

விஸ்வகர்மா இனத்தவரிலே தச்சர் பிரிவினர் மிகவும் முக்கியமானவர் ஆவார். இவர்களை 'ஆசாரி' என்றும் 'மரவேலை செய்பவர்' என்றும் ஆங்கிலத்தில் 'carpender' என்றும் அழைப்பர். மக்களுக்கு இன்றியமையா தேவைகளில் மிகவும் முக்கியமானது வீடு ஆகும். வீடு கட்டுவதற்கு மனை முகூர்த்தம் (பூமி பூஜை) செய்வதற்கு ஆசாரி இனத்தவரை அழைப்பர். பின்னர் வீட்டிற்குத் தேவையான நிலை, சன்னல், கதவு முதலியவற்றையும் வீட்டிற்குத் தேவையான மர அலமாரி, மேஜை, நாற்காலி, விவசாயிகளுக்குத் தேவையான ஏர் உழும் கலப்பை, மண்வெட்டி, பிடி அரிவாள், கலைக்கொத்தின் பிடி, கட்டை வண்டி ஆகியனவற்றைச் செய்கின்றனர்.

### 3.2.1. ஓவியத்தில் தச்சர் இனத்தவரின் பங்கு

வீடு கட்டுவதற்கு எவ்வளவு நீளம் அகலம் இருக்க வேண்டும், எந்தெந்த இடத்தில் நிலை சன்னல் வைக்க வேண்டும் என்று ஒரு வரைபடத்தை தாளில் வரைந்து கொள்வார்கள், பின்னர் அந்த வரைபடத்தை வைத்துக் கொண்டு கொத்தனார் சுவரைக் கட்டுவார், பின்னர் தச்சர் தேவையான அளவுக்கேற்ப நிலை சன்னல் செய்து கொடுப்பார்கள், அவற்றைக் கட்டிடத்தில் வைத்துக் கட்டி வீடாக உருவாக்குவார்கள், பின்னர் அந்த நிலைச் சன்னலுக்கு கதவு போடுவார்கள்.

### 3.2.2. பலகை ஓவியம்

கதவுகளில் பல வகை உண்டு. அவைகள், பூ வேலைப்பாடுடைய கதவு, சாதாரணக் கதவு, கண்ணாடிக் கதவு, பலகைக் கதவு போன்றனவாகும். இவற்றில் பூ வேலைப்பாடுடைய கதவு வீட்டின் தலை வாசலிலும் அலமாரியின் முன் பக்கத்திலும், பீரோ கதவிலும், கட்டிலிலும் செய்யப்படுவதாகும். பூ வேலைப்பாடுடைய கதவுகளின் ஓவியம் அழகு நிறைந்ததாக காணப்படும்.

பூ வேலைப்பாடுடைய கதவில் பல வகை உண்டு அதாவது கொடி, பறவை, தெய்வ உருவங்கள், பாவை விளக்கு, குத்து விளக்கு என்று பல வகை உண்டு. எந்த பூ வேலை செய்தாலும் முதலில் ஒரு தாளில் அதன் ஓவியத்தை வரைந்து கொண்டு, பின்னர் பலகையின் மேல் ஒரு கார்பன் தாளை வைத்து அதன் மேல் தாளில் வரைந்த ஓவியத்தை வைத்து ஓவியத்தில் உள்ள கோடுகளை பென்சிலால் வரைகின்றனர், அவ்வாறு வரையும் போது அந்த ஓவியத்தின் வரைபடம் பலகையில் அச்சாக விழும், பின்னர் காகித தாளையும் கார்பன் தாளையும் எடுத்துவிட்டு பார்க்கும் போது தாளில் வரைந்த ஓவியத்தின் உருவம் பலகையில் தெளிவாகத் தெரியும்,

பின்னர் உளிக் கருவியைக் கொண்டு அந்த ஓவியத்தைச் செதுக்கி எடுப்பார்கள். இதே போல் ஒவ்வொரு ஓவியத்தையும் தாளில் வரைந்து கொண்டு பலகையில் அச்சு எடுத்துக் கொண்டு பின்னர் செதுக்கி எடுக்கின்றனர். ஆகவே தச்சு வேலையின் நுட்பத்திற்கு வரைபட ஓவியமானது மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## 3.3. கன்னார்

கன்னார் என்றழைக்கப்படும் சமூகத்தினர் மக்களுக்குத் தேவையான பாத்திரங்களாகிய தவளை, குடம், தட்டு, குண்டான், தேசா, டம்ளர், கரண்டி, குவளை, மரக்கால், படி முதலிய இன்றியமையாப் பொருட்களைச் செய்து கொடுக்கின்றார்கள். பின்னர் கோயில்களின் கதவுகளுக்கு ஓவியமாகத் திகழக்கூடிய கலைநுணுக்கத்துடன் கூடிய செதுக்கப்பட்ட பித்தளை, தங்க தகடுகள், கொடி மரத்தில் பொருத்தக்கூடிய அழகிய செதுக்கப்பட்ட ஓவியத் தகடுகள் ஆகியவற்றையும் செய்கின்றார்கள்.

கன்னார் இனத்தார் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரங்களின் மேல் தேவையான ஓவியங்களை வடிவமைக்கின்றார்கள். இந்த ஓவியங்களை 'நகாஸ்' வேலை என்று அழைக்கின்றார்கள். பாத்திரங்களின் வெளிப்புறத்தில் பெயர் மற்றும் வாங்குபவர்களின் விருப்பத்திற்கேற்ப வடிவங்களை இயந்திர கருவிகளின் மூலம் பதிவு செய்து கொடுக்கிறார்கள்.

## 3.4. சிற்பி

சிலைகளை நுணுக்கமாக வடிவமைக்கும் கலைஞர்களை சிற்பி என்றழைக்கின்றனர். இவர்களில் கல் சிற்பி, ஸ்தபதி, உலோக சிற்பி ஆகிய பிரிவினர் உண்டு.

### 3.4.1. கல் சிற்பி

கல் சிற்பி என்றழைக்கப்படுபவர் கருங்கல்லினால் ஆன உருவங்களைச் செதுக்குபவர்கள் ஆவர். இவர்கள் கோயில்களின் தூண்கள், தெய்வங்களின் உருவங்கள் மற்றும் வீட்டிற்குத் தேவையான அம்மி, ஆட்டுக்கல், திருவை போன்றவற்றைச் செய்கின்றார்கள்.

ஒரு கோவிலில் அம்மன் சிலையோ, அய்யன் சிலையோ வடிவமைக்கும் போது ஓவியரைக் கொண்டு ஒரு காகிதத்தில் உருவங்களை வரைந்து கொண்டு, அதற்கு ஏற்றார் போல் கல்லை உடைத்தும் அடித்தும் குடைந்தும் அழகான உருவங்களை வடிக்கின்றார்கள். கோவிலை வடிவமைக்கும் போது முதலில் ஒரு தாளில் கோவிலின் வரைபடத்தை வரைந்து கொள்வார்கள். கோவிலின் ஆகம விதிப்படி கோயில் மூலஸ்தானம் எவ்வளவு அளவு, அதன் மேல் வடிவமைக்கும் கோபுரத்தின் அளவு,

ராஜ கோபுரத்தின் அளவு, எந்தெந்தச் சிற்பங்கள் எங்கெங்கு வடிவமைக்க வேண்டும் என்று தெளிவாக வரைந்து கொள்வார்கள். பின்னர் அதன்படி கோவிலை வடிவமைப்பார்கள். சிமெண்ட், சுண்ணாம்பு கொண்டு வடிவமைக்கும் உருவங்களைச் சுதைச் சிற்பம் என்று சொல்வார்கள். கோயில்களில் இவர்களின் பங்கே மகத்தானதாகும். எவ்வளவு பெரிய கோயிலையும் வடிவமைத்து கொடுக்கும் வல்லமை படைத்த சிற்பக்கலைஞர்களின் திறமை போற்றுதற்குரியதாகும்.

### 3.4.2. ஸ்தபதி

இவர்கள் கோயில் கோபுரங்களையும் மூல விக்ரமாகிய சாமி சிலைகளையும் கோபுர மதில் மேல் வடிவமைக்கும் உருவச் சிற்பங்களையும், பூ வேலைப்பாடுகளையும் அலங்கார வளைவுகளையும் வடிவமைக்கின்றார்கள்.

இவர்களுக்குப் பயன்படும் மூலப்பொருள் சிமெண்ட், சுண்ணாம்பு, ஜல்லி, செங்கல், கம்பி, மணல், கல் ஆகியவை ஆகும். இதனைக் கொண்டு கோயிலுக்குத் தேவையான அனைத்து சிலைகளையும் நுட்பமாக வடிவமைத்துக் கொடுக்கின்றனர்.

### 3.4.3. உலோகச் சிற்பி

உலோகச் சிற்பிகள் என்பவர் உலோகத்திலானச் சிற்பங்களை உருவாக்குபவர்கள் ஆவார். கோவிலின் ஆகம விதிப்படி கூடிய உலோகச் சிலைகளை தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, ஐம்பொன் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி உருவாக்குகிறார்கள். மேலும், உலோகங்களினால் ஆன பல்வகைக் கலைப் பொருட்களையும் கலை நுட்பத்துடன் செய்கிறார்கள்.

## 3.5.பத்தர்

இவர்கள் பத்தர் என்றும் பொற்கொல்லர் என்றும் தட்டார் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் தொழில் ‘நகை செய்தல்’ ஆகும். தெய்வ உருவங்களுக்குத் தேவையான காற்சிலம்பு, தண்டை, ஒட்டியாணம், கழுத்து மாலை, தாலி, தலைகிரீடம் ஆகிய அனைத்தையும் பொன், வெள்ளி, ஐம்பொன், செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களைக் கொண்டு செய்கின்றார்கள். மேலும் மனிதர்களுக்குத் தேவையான அனைத்து அணிகலன்களையும் செய்கின்றார்கள். அழகுக்கு அழகு சேர்க்கும் வண்ணம் பல்வேறு விதமான அணிகலன்களைத் தங்கம், வெள்ளி, செம்பு, ஐம்பொன் ஆகிய உலோகங்களில் செய்து கொடுக்கின்றனர்.

### 3.5.1. ஓவியத்தில் பத்தர் இனத்தவரின் பங்கு

இவர்கள் நெக்லஸ், ஒட்டியாணம், தோடு முதலிய ஆபரணங்களை செய்யும் போது முதலில் ஒரு தாளில் வடிவங்களை என்ன மாதிரி, என்ன அளவுகளில் செய்ய வேண்டும் என்று வரைந்து கொள்வார்கள். பிறகு அதற்கு ஏற்றார் போல், பொன், வெள்ளி ஆகிய உலோகத் தகடுகளையும், கம்பிகளையும் செய்து வடிவத்திற்கு ஏற்றார் போல் தகடையும் கம்பியையும் வளைத்தும் வெட்டியும் வைத்துக்கொண்டு, பற்ற வைத்து பிசிறுகளை அரத்தால் ராவி எடுத்துப் பிறகு மெருகுப் போட்டு விற்பனையாளருக்கு கொடுக்கின்றார்கள்.

இப்பொழுது நகைகளின் வடிவங்கள் புத்தக வடிவில் ஆல்பமாக போட்டு வைத்திருக்கிறார்கள். அவற்றில் தேவையான வடிவங்களைத் தேர்ந்தெடுத்து அதன்படி அணிகலன்களைச் செய்து கொடுக்கும் படி வாங்கிக் கொள்கின்றார்கள்.

## 4.ஐவினை கலைஞர்களின் பொருளாதார சூழல்

கலையை நம்பி வாழும் ஐவினை கலைஞர்களின் வாழ்வாதாரம் பின்னடைந்து காணப்படுகிறது. பொருளாதார ரீதியாக இவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் குறைவு என்பதனால் குறைந்த வருமானத்தையே ஈட்டுகின்றனர்.

### 4.1. கொல்லர்

பழங்காலத்தில் மக்கள் கட்டை வண்டி, ஏர் உழும் கலப்பை ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். ஆனால் தற்காலத்தில் டிராக்டர் கொண்டு உழுகின்றனர். தானியங்களை டிராக்டர் மீது ஏற்றி வீட்டிற்கு கொண்டு வருகின்றார்கள். ஆகவே கொல்லர்களால் உருவாக்கப்படும் உழவுக்குத் தேவையான மரத்தில் பொருத்தக்கூடிய இரும்பு பாகங்களான கட்டை வண்டியின் உதிரி பாகங்கள் ஆகிய மரபுசார் நுகர்வு குறைந்து இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

### 4.2. தச்சர்

முற்காலத்தில் மக்கள் வசிப்பதற்கு ஓட்டு வீடு கட்டிக்கொள்வார்கள். இதனால் தச்சர்களுக்கு அதிகளவில் வேலையும் வருமானமும் கிடைக்கும். மக்கள் கட்டை வண்டிகளைப் பயன்படுத்தி வந்தனர். வீட்டிற்குத் தேவையான அலமாரி, கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவற்றைச் செய்து கொடுத்து வருமானத்தை ஈட்டி வந்தனர். ஆனால் இப்பொழுது கான்கிரீட் வீடுகளாக ஆகிவிட்டது. ஏர் உழுவதற்கும் சுமை ஏற்றுவதற்கும் டிராக்டர் வந்துவிட்டது. வீட்டு உபயோகப் பொருட்களுக்கு பிளாஸ்டிக், இரும்பு சாமான்கள் ஆகியவை வந்துவிட்டது. முன்பு போல் மரங்களும் அதிக அளவில் கிடைக்காமல் விலை தாறுமாறாக ஏறிவிட்டது. ஆகவே தற்காலத்தில்

மரவேலை செய்யும் ஆசாரிகள் போதிய வருமானம் இல்லாமையால், தங்கள் பிள்ளைகளுக்கும் பொருளாதாரச் சிக்கல் ஏற்படக் கூடாதென்று தொழிலை கற்றுக் கொடுக்காமல் கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைக்கின்றனர். பலர் வேலை தேடி அயல் நாடுகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

### 4.3. கன்னார்

ஆதிகாலத்தில் வீடுகளுக்குத் தேவையான புழங்குப் பொருட்களை வெண்கலத்திலும், பித்தளையிலும் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இயந்திரங்களில் தயாரிக்கப்படும் சில்வர் சாமான்களும், பிளாஸ்டிக் சாமான்களும் அதிக அளவில் கிடைப்பதால் மக்கள் இதையே விரும்பி வாங்குகின்றார்கள். ஆகவே செம்பு, பித்தளை சாமான்கள் தயாரிப்புக் குறைந்து விட்டதால் இவர்களின் வாழ்வியலிலும் வறுமைச் சூழலே நிலவுகின்றது.

### 4.4. சிற்பி

சிற்பிகள் முதலில் கருங்கல்லில் சிலைகளையும் வீட்டிற்குத் தேவையான ஆட்டுக்கல், அம்மிக்கல், திருவை முதலியவற்றைத் தயார் செய்து வருமானத்தை ஈட்டி வந்தார்கள். இப்பொழுது சிலை செய்வதற்கு இயந்திரங்களை பயன்படுத்துகின்றார்கள். மிக்ஸி, கிரைண்டர் என்று மின்சாதனங்களின் வருகையால் இவர்களின் வாழ்வாதாரமும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

### 4.5. பத்தர்

முற்காலத்தில் அணிகலன் செய்வதற்கு கைவேலையாக தகடு தட்டியும், கம்பி இழுத்தும் பற்ற வைத்து அணிகலன்களை வடிவமைப்பார்கள். இப்பொழுது எல்லாவற்றிற்கும் இயந்திரம் வந்துவிட்டது. ஆகவே இயந்திரத்தைக் கொண்டு அணிகலன்களை செய்து கொடுக்கின்றார்கள். முன்பு போல் இல்லாமல் பொன், வெள்ளி விலை நாளுக்கு நாள் அதிகரிப்பதால் வசதி படைத்தவர்கள் மட்டுமே அணிகலன்களை வாங்க முடிகிறது. இதனால் இவர்களின் தொழிற் வாய்ப்புகள் குறைந்துள்ளது. ஆகவே இவர்களின் வாழ்வாதாரமும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

## 5. கலைகளின் இன்றைய நிலை

நாட்டுப்புறக் கலைகள் கிராம மக்கள் தங்கள் உழைப்பின் களைப்பிலிருந்து விடுபட நிகழ்த்தப்பட்டன. தமிழகம் கிராமிய கலைகளின் களஞ்சியம் என்றால் அது மிகையாகாது. மக்களின் இன்ப துன்பங்களைச் சொல்வதே கிராமியக் கலைகள். இக்கலைகள் ஒரு காலத்தில் மிகவும் மதித்துப் போற்றப்பட்டன. இன்று

மலிவானவையாகப் பார்க்கப்படுகின்ற அவல நிலைக்கு உள்ளாகியுள்ளது மிகுந்த வேதனைக்குரிய நிலையாகும்.

தமிழகத்தின் கிராமியக் கோயில்களின் வழிபாடு, விழாக்கள், சடங்குகள் போன்றவற்றில் நிகழும் மாற்றங்கள் பெருமளவில் கலைகளையும் பாதித்திருக்கிறது. தமிழகக் கிராமியக் கலைகள் தெருக்களிலும் சடங்கு நிகழ்ச்சிகளிலும் ஆடப்படும் அவல நிலைக்குப் பொருளாதாரமும், சாதிய அடக்கு முறையும் காரணமாக அமைகின்றன. இன்றைய தலைமுறையினர் பலருக்கு நாட்டுப்புறக் கலைகள் பற்றி தெரியவில்லை. அவர்கள் கலைகளை பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை எனும் பொழுது எவ்வாறு ஈடுபாடு ஏற்படும். திரைப்பாடல்கள், ஆடல் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் நாட்டுப்புறக் கலைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

நாட்டுப்புற நிகழ்கலைகளில் பெண்களுக்கான கலைகளில் பெண்களின் பங்கேற்பும் மிகவும் குறைவு. பெண்களின் உடற்கூறு, வேலைப்பளு, ஊர்விட்டு ஊர் சென்று வர வேண்டிய நிலை, பாதுகாப்பு முதலியவை பெண் கலைஞர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளாக உள்ளன. இருப்பினும் தற்காலத்தில் பெண்கள் நாட்டுப்புறக் கலைகளில் ஆர்வமாக செயல்படுவது ஆறுதலாக உள்ளது. கால மாற்றத்தாலும், நவீன கருவிகளின் வருகையாலும் கலை வடிவங்கள் தங்களது தனித்துவமான தன்மையினையும், சிறப்பினையும் இழக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன.

## 6. கலைகளின் மரபுத் தொடர்ச்சிகள்

ஓர் குறிப்பிட்ட இனத்தில் அல்லது பரம்பரையில் பிறக்கும் மனித உடல் தொடர்பான செய்திகள் மரபணுக்கள் மூலம் தலைமுறை தலைமுறையாக தொடர்வதைப் போன்றே அக்குறிப்பிட்ட இனத்தின் அல்லது பரம்பரையின் வாழ்க்கை முறை தொடர்பான செய்திகளும் தொடர்கின்றன. இவையே பாரம்பரியம் என்றும், பண்பாடென்றும், நாட்டுப்புற மரபென்றும் குறிப்பிடப்படுகின்றது. அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும். இதனை,

> “எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
>
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே”[11]

என நன்னூல் சுட்டுகிறது. இதன் வழி சொல்லையும் பொருளையும் மட்டுமல்லாது முன்னோர்கள் படைத்தக் கலைகளையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபாகும் என்பது தெளிவாகிறது.

மரபின் முக்கிய அம்சமே பழமையைப் போற்றுவதாகும். மக்களின் சமய நம்பிக்கைகள், சடங்குகள், வாழ்க்கை முறைகள், தொழில்கள், சேமித்தல், உபசரித்தல், தற்காப்பு, பொழுதுபோக்குகள் போன்ற அத்தனைச் செய்திகளும் தலைமுறைகளிடையே கடத்தப்படுகின்றன. முன்னோர்களால் உருவாக்கப்பட்ட கருவிகளையே நாம் இன்று கலைகள் என்று போற்றுகிறோம். கலை, கலாச்சார மரபுகளின் மாற்றத்திற்கு புதிய கண்டுபிடிப்புகள், நவீனமயமாதல், தொழில்மயமாதல், நகரமயமாதல், கலாச்சாரப் புரட்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி, மேற்கு நாடுகளின் காலனித்துவ ஆட்சி மற்றும் மேற்கத்திய கலாச்சாரக் கலப்பு போன்ற பல்வேறு காரணிகள் காரணமாக அமைகின்றன.

இன்றைய வாழ்வியல் சூழலில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் வியக்கத்தக்க வகையில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், கலைகளில் ஒரு வகையான மரபுத்தொடர்ச்சி தொடரவே செய்கின்றன. கலைகள் நிகழ்த்துமிடங்கள், ஒலி-ஒளி அமைப்பு முறை, கலைஞர்களின் உடைகள் மற்றும் ஒப்பனைகளில் மாற்றங்கள் இடம்பெற்றாலும், கரகாட்டத்தில் கரகமும், காவடியாட்டத்தில் காவடியும், சிலம்பாட்டத்தில் சிலம்பும் இன்றி கலைகளை நிகழ்த்துதல் என்பது சாத்தியமாகுமா? எனவே தான் இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும் கலைகளிலும், கலைஞர்களிடமும் மரபு வழித் தொடர்ச்சி என்பது மாற்ற முடியாத மாற்றமாக இருக்கும் என்பது திண்ணம். கலைகளில் மரபைப் பேணுதல் என்பது அக்கலையில் ஈடுபடும் ஒவ்வொரு கலைஞனின் கடமையாகும்.

## 7. கலைகளில் நவீன நுட்பங்கள்

நவீன தொழில் நுட்பங்களையும், கருவிகளையும், கணினிப் பயன்பாடுகளையும், சமூக வலைத்தளங்களையும் ஒதுக்கி விட்டு கலைகளை வளர்ப்பதென்பது இனிவரும் காலங்களில் இயலாத ஒன்றாகும். இசையும், நாடகமும் ஒலி-ஒளி வடிவங்களாகப் பதிவு செய்யப்பட்டு கணினி மூலம் தொகுக்கப்பட்டு சமூக வலைதளங்களில் வெளியிடும் பொழுது கூடுதல் வரவேற்பினைப் பெறுகின்றன. நவீன தொழில்நுட்ப வசதிகள் பாரம்பரியக் கலைகளைப் பழகுவதிலும், அரங்கேற்றுவதிலும் மாத்திரம் கைகொடுக்கவில்லை. மாறாகக் கலைகளை ஆவணப்படுத்துவதிலும், பிற நாடுகள் மற்றும் பல சமூகத்தினருக்குக் கலைகளின் சிறப்புகளை எடுத்தியம்பவும் துணைபுரிகின்றன.

கலை நிகழ்வுகளில் ஒலிவாங்கி மற்றும் ஒலி பெருக்கிகள் மேடை நிகழ்வுகளுக்கு கூடுதல் சிறப்பினைச் சேர்க்கின்றன. ஒலி பெருக்கும் சாதனங்களின் வருகை மேடையில் கலைஞன் சாதாரண குரலில் பேசுவதையோ அல்லது

பாடுவதையோ அரங்கின் பின் வரிசை பார்வையாளர்கள் வரை கொண்டு சேர்க்கின்றன. இதனால் கலைஞனின் பணி இலகுப் படுத்தப்படுகின்றன.

கலைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதில் நவீன தொழில் நுட்பங்கள் பெரும் பங்கினை வகிக்கிறது. ஓர் குறிப்பிட்ட இனமக்களின் கலை வடிவம் உலகம் முழுவதும் சென்றடைய துணைபுரிகின்றன. கலைகளில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் பொழுது மிகுந்த கவனம் தேவைப்படுகிறது. ஏனெனில் நவீனம் என்ற பெயரில் கலைகளை சீர்குலைக்கும் அளவிற்கு அதன் செயல்பாடு அமைந்து விடுதல் கூடாது. நவீன யுகத்தில் கலைகளில் நவீன நுட்பங்கள் என்பது தவிர்க்க இயலாத காரணியாக அமைந்துள்ளது.

## 8. நாட்டுப்புறக் கலைகள்

மனித வாழ்வின் தொடக்க கால கலைகள் காடுகளிலும் மலைகளிலும் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாகரீகம் அற்ற நிலையில் அலைவதாக இருந்தது. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளாக இருந்த உணவு, உடை, மருத்துவம், வாணிபம் ஆகிய தொழில்கள் யாவும் கலைகள் என்றே கொள்ள வேண்டியுள்ளது. மக்கள் வாழ்கின்ற நாட்டினுடைய இயற்கை அமைப்பு, அங்கு நிலவும் தட்பவெப்ப சூழ்நிலை, மக்களுடைய பழக்க வழக்கங்கள் இவற்றிற்கு ஏற்ப கலைகள் வெவ்வேறு விதமாக வளர்ச்சி அடைந்துள்ளன.

கிராமியக் கலைகள் ஒவ்வொன்றும் பல நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்றினைக் கொண்டவை. இக்கலைகள் தனக்கே உரித்தான தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் கொண்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகள் கோயில்களில் நடைபெறும் சடங்குகள், விழாக்களிலும், திருமணம், இறப்பு, கலாச்சார விழாக்கள், பிரச்சார நிகழ்ச்சிகள், இரத்தல் அல்லது யாசித்தல் போன்ற ஏதாவது ஒரு சூழலுக்காக நிகழ்த்தப்படுகின்றன. நாட்டுப்புறக் கலைகளின் சிறப்பினை மக்கள் உணர்ந்திருந்தால் அவர்களின் வாழ்வியலில் ஒரு அங்கமாகவே கலைகள் இருந்திருக்கும்.

நாட்டுப்புறக் கலைகள் பெரும்பாலானவை வட்டாரத் தன்மை கொண்டவையாகும். வட்டாரத் தன்மை என்பது குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே அந்தக் கலைகள் வழக்கில் இருக்கும். ஒரு கலை தமிழகம் முழுவதும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது என்றோ, நிகழ்த்தப்படுகின்றது என்றோ, கூறிவிட முடியாது. குறிப்பிட்ட கலைகள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளைப் பொறுத்தவரை ஆட்டங்கள் பலவாகவும் ஆடப்படும் களங்கள் வேறு வேறாகவும் இருந்தாலும் அவற்றுள் சில பொதுக் கூறுகள் காணப்படுகின்றன.

## 8.1. நாட்டுப்புற கலைகளின் வகைகள்

நாட்டுப்புறங்களில் காணலாகும் கலைகளை நிகழ்த்தப்படும் சூழல், பாடுபொருட்கள் போன்ற அடிப்படையில் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் பலவாகப் பகுக்கின்றனர். நாட்டுப்புறக் கலைகள் என்ற பொது நிலையில் "நாட்டார் கலைகளை நிகழ்த்துக் கலைகள் என்றும் கைவினைக் கலைகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்."[12] என தே.லூர்து அவர்கள் வகைப்படுத்துகிறார். அதனடிப்படையில்,

1. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள்(Folk performing Arts)
2. நாட்டுப்புற கைவினைக் கலைகள்( Folk material Arts)

என இரு வகைகளாக பகுக்கப்படுகிறது.

### 8.1.1. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள்

நிகழ்த்திக் காட்டப்படுவதால் இவை நிகழ்த்துக் கலைகள் என்றழைக்கப்படுகின்றன. இக்கலைகள் ஆடலாகவோ, பாடலாகவோ அல்லது ஆடலும் பாடலும் கலந்ததாகவோ நிகழ்த்தப்பெறும். இந்நிகழ்வில் ஒரு கலைஞரோ அல்லது பல கலைஞர்களோ பங்குப் பெற்று கதையோ, கருத்தையோ ஆடல்பாடல்களின் வழி பார்வையாளர்களின் முன் நிகழ்த்திக் காட்டுவார்கள். நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளை நிகழ்த்துவதற்கென்று தனிப்பட்ட இடமோ, களமோ, அரங்கமோ கிடையாது. மக்கள் கூடும் இடங்களான கோயில்கள், ஊர் மந்தை, தெருக்கள் என அனைத்து இடங்களும் கலைகள் நிகழ்த்துவதற்குரிய களமாகக் கொள்ளப்படும். நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுக்கென உறுதியான இலக்கண வரையறைகள் கிடையாது.

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுக்குச் சடங்குகளும், வழிபாடுகளும் வாழ்க்கை நிகழ்வுகளும் பண்பாட்டுச் சூழல்களும் களம் அமைத்துக் கொடுக்கின்றன. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளின் தன்மையினை தே.லூர்து அவர்கள் குறிப்பிடுகையில், "நிகழ்த்துதலில் தான் அர்த்தமும் கலைத்திறமும் வெளிப்படும்; வெறும் சொற்களுக்கு மட்டும் இங்கு முக்கியத்துவமளிக்கப்படுவதில்லை. அவை எவ்வாறு மக்கள் முன் வழங்கப்படுகின்றன என்ற வினைத்திறத்தினும் கவனம் செலுத்தப்படும். இன்னிசை, வேகம், சந்தம், குரல், நாடகப்பண்பு, புலப்படுத்தும் வழிமுறைகள், நிகழ்த்தும் உத்திகள் ஆகியன நிகழ்த்துக் கலைகளை அறிய உதவும்."[13] என குறிப்பிடுகிறார்.

தமிழக கிராமங்களில் இன்றளவும் நாட்டுப்புறக் கலைஞர்களால் நிகழ்த்தப்பெறும் நிகழ்த்து கலைகளாக,

- ❖ தெருக்கூத்து
- ❖ பாவைக்கூத்து
- ❖ பொம்மலாட்டம் உடுக்கைப்பாட்டு
- ❖ சேவையாட்டம்
- ❖ ஒயிலாட்டம்
- ❖ கணியான்கூத்து
- ❖ வில்லுப்பாட்டு
- ❖ கரகாட்டம்
- ❖ காவடியாட்டம்
- ❖ பொய்க்கால் குதிரையாட்டம்
- ❖ தேவராட்டம்
- ❖ கோலாட்டம்
- ❖ மயிலாட்டம்
- ❖ காளையாட்டம்
- ❖ குறவன் குறத்தி ஆட்டம்
- ❖ சிலம்பாட்டம்
- ❖ சக்கையாட்டம்
- ❖ தப்பாட்டம்
- ❖ புலியாட்டம்
- ❖ இராஜா ராணி ஆட்டம்
- ❖ ஆலியாட்டம்
- ❖ இலாவணி
- ❖ துடும்பாட்டம்
- ❖ கும்மி

என்று பல்வேறு நாட்டார் கலை வடிவங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இக்கலைகள் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி மனதிற்கும் உடலுக்கும் வளம் சேர்ப்பனவாக உள்ளன. தமிழக நாட்டுப்புறக் கலைகள் அனைத்தும் தன்னேரில்லாத தனித்த கலைகளாகும். இவை நாட்டுப்புற மக்களின் உள்ளத்தை உணர்த்தக் கூடியதாய் அமைகின்றன.

## 8.1.2. நாட்டுப்புற கைவினைக் கலைகள்

நாட்டுப்புற மக்களின் கைவினையின் ஆற்றல் திறத்தால் உருவாகும் பொருட்கள் தனித்துவமானச் சிறப்பினைக் கொண்டுள்ளன. இயற்கையாக கிடைக்கும்

மூலப்பொருட்களைக் கொண்டு கலைஞர்களின் கைத்திறனால் புழங்கு பொருட்களாக அழகியல் தன்மையோடு உருவாக்கும் கலையே கைவினைக் கலையாகும். இக்கலைகள் கல்வியறிவு இல்லாத நாட்டுப்புற மக்களின் கை வண்ணத்தில் ஆக்கம் பெறுவன.

நாட்டுப்புற கைவினைக் கலைகளாவன,

- ❖ மட்பாண்டக் கலை
- ❖ கோலமிடுதல்
- ❖ பாய் பின்னுதல்
- ❖ பச்சை குத்துதல்
- ❖ பொம்மைகள் செய்தல்
- ❖ மர வேலைப்பாடு
- ❖ சிற்பக்கலை
- ❖ ஓவியக்கலை

போன்றவைகளாகும்.

## 8.1.3. நாட்டுப்புற கலைஞர்களின் பொருளாதாரம்

கலைஞர்கள் கலைகளை நிகழ்த்தும் சூழலில் தங்களது சுக துக்கங்களை மறந்து நிகழ்த்துதலில் முழுக்கவனம் செலுத்திக் கலைகளுக்கு பெருமை சேர்க்கின்றனர். இன்றைய சூழலில் மக்களிடம் நாட்டுப்புற கலை நிகழ்வுகளுக்கு பெரும் வரவேற்பு இல்லை எனவே கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் இல்லை. போதிய வருமானம் இல்லை என்பதால் இக்கலைஞர்கள் வேறு தொழில்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் தொண்ணூறு விழுக்காடு கலைகள் ஆண் கலைஞர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. நிகழ்த்துக் கலைகள் வலுவான அதிவேகமான ஆட்டமுறைகளையும் உரக்கப் பாடும் இசைத் தன்மையும் கொண்டவையாக உள்ளதால் ஆண் கலைஞர்களை நம்பியிருக்கும் குடும்பத்தின் பொருளாதார நிலை என்பது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது.

கலைகளைத் தொழிலாகக் கொண்ட ஏராளமான கலைஞர்கள் கட்டிட வேலை, ஆடை உற்பத்தித் தொழிற்சாலை என மாற்று வேலைகளுக்குச் சென்று விட்டனர். இதனால் தமிழகத்தில் குறைந்த அளவிலேயே முழு நேர நாட்டுப்புற கலைஞர்கள் உள்ளனர். நிரந்தரமான வருமானம் கிடைக்கும் சூழலில் கலைஞர்கள் தங்களது கலையினைப் புறக்கணிப்பதில் தயக்கம் காட்டாத சூழலே நிலவுகின்றது.

அன்றைய உணவிற்கு அதே நாள் வருமானத்தை மட்டும் நம்பிருக்கும் பொருளாதார ரீதியில் மிகவும் நலிந்த நிலையிலுள்ள கிராமப்புற கலைஞர்கள் தங்களது பயிற்சியின் போது ஏற்படும் தினசரி செலவுகளுக்கேத் திண்டாடும் நிலையில் உள்ளனர். இச்சூழலில் கலைகளை மேடையேற்றும் செலவுகள் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பொருளாதார நிலை காரணமாக கவர்ச்சி நடனம் ஆடும் நிலைக்கு பெண் கலைஞர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டுப்புறக் கலைஞர்களில் சிலர் தான் இறந்தாலும் தனது கலைகளை விட்டு விடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் வறுமைச் சூழலில் வாடும் அவல நிலையில் உள்ளனர். பெரும்பான்மையான கலைஞர்களிடம் கலைத் தொழிலை விட்டால் வேறு ஒரு தொழில் தெரியாது என்ற நிலையே காணப்படுகிறது. கிராமியக் கலைஞர்களின் வாழ்வில் இடைத்தரகர்கள் ஊடுருவி இருப்பது முக்கியமான சிக்கலாக உள்ளது. இதனால் பொருளாதார அடிப்படையில் கலைஞர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.

## 9. மரபு கலைகள் அழிவதற்கான காரணங்கள்

இன்றைய உலகமயமாக்கல் என்ற நிலையில் பழைய மரபுகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள் போன்றவைகளும், நாட்டுப்புறக்கதைகள், விடுகதைகள், தெம்மாங்குப் பாடல்கள், கலைகள் நாளுக்கு நாள் மறைந்து கொண்டு வருகின்றன. தமிழர்களின் பாரம்பரிய நாட்டுப்புறக்கலைகள் தற்பொழுது அழிந்து கொண்டு வருகின்றன என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

நாட்டுப்புறக்கலைகளை பயில வேண்டிய இளம் தலைமுறையின் இரசனையும் ஆர்வமும் வேறு தளத்தில் காணப்படுவது மிகப்பெரும் சவாலாக உள்ளது. இளம் தலைமுறையினருக்குத் திரைப்படங்கள், தொலைக்காட்சி, நாடகங்கள், முகப்புத்தகம், சமூக வலைத்தளங்கள், மட்டைப் பந்தாட்டம் போன்றவைகள் அவர்களின் முதன்மையான ஆர்வமாகக் காணப்படுகிறது.

தமிழக கிராமியக் கலைகள் நலிவுக்கு அக்கலைகள் நிகழும் வட்டாரங்களின் சமூகச் சூழல், மக்களின் வளர்ச்சி, நகரத் தாக்கம், கல்வியறிவு போன்ற பல விதமான காரணிகளையும் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. கலைஞர்கள் தமது பிள்ளைகளின் எதிர்கால நிரந்தர வருமான நோக்கில், பிள்ளைகள் கலைகள் பக்கம் ஈர்க்கப்பட்டாலும் கூட அவர்களின் கலையார்வத்தைக் கலைத்துவிடும் நிலையுள்ளது.

அறிவியல் மாற்றத்தாலும் நவீன கருவிகளின் வருகையாலும் கலை வடிவங்கள் தங்களது சுய தன்மையினை இழக்க வேண்டிய சூழல் உள்ளது. சித்திரப்பிரதிமை (portrait) என்பது ஓவியக் கலையின் ஓர் உன்னத வடிவம். ஒரு நபரின் முகத்தை அப்படியே அவரின் மனநிலையைப் பிரதிபலிப்பதாக வரைவது சித்திரப்பிரதிமை

எனப்படும். நாட்கணக்கில் வரையப்படும் இக்கலை வடிவத்தில் நவீன ஒளிப்படக்கருவிகள் (camera) வருகை மிகப்பெரும் தாக்கத்தினை செலுத்தியிருக்கிறது.

ஓவியக் கலைஞர்கள் பல நாட்கள் கடின உழைப்பினைச் செலுத்தி வரையப்படும் பெரிய அளவிலான விளம்பர ஓவியங்களும், திரைப்பட பதாகைகளும் கணினியின் துணையுடன் சில மணிநேரங்களில் சாத்தியமாகின்றன. சமூக வலைத்தளங்களில் தமிழா் குறித்த போதிய விழிப்புணா்வு இன்மையும் மரபு கலைகள் அழிவதற்கான ஒரு காரணமாக உள்ளது எனலாம்.

நாட்டுப்புறக்கலைகளை சமூக ரீதியாக அணுகுவதும் அதன் வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன. பறை அடிப்பவா்கள் தீண்டத்தகாதவா்கள் என்ற மனப்பாங்கு உள்ள இச்சமூகத்தில் பறைமேளக் கூத்து போன்றவற்றைப் பழகுவதை புதிய தலைமுறையினா் தவிா்க்க தான் செய்வாா்கள் என்பது மிகுந்த வேதனைக்குரியதாக அமைந்துள்ளது.

கிராமியக் கலைகள் கருவிகள் அல்லது உபகரணங்கள் அடிப்படையில் மட்டும் நிகழும் கலைகளாகும். அக்கலைகள் அழிவதற்குரிய அனைத்துச் சூழ்நிலைகளும் உருவாகிவிட்டன என்றால் மிகையாகாது. சான்றாக, பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்குரிய குதிரைக் கூடு செய்தற்குரிய தொகை உயிருள்ள சாதாரணக் குதிரையின் விலையை விட அதிகம் என்பது நோக்கத்தக்கதாகும்.

## 10. மரபு கலையை மீட்டெடுக்கும் வழிமுறைகள்

பண்பாட்டு அடையாளங்களான கலைகள் அழிந்துவிடாமல் பாதுகாத்து வரும் பெருமைக்குரியவா்கள் கலைஞா்கள் ஆவாா். கலைஞா்கள் இன்றி கலைகள் இல்லை. கலைஞா்களை இழந்ததால் தான் பல கலைகள் கால வெள்ளத்தில் அழிந்துப் போய்விட்டன. இன்னும் அழிந்து கொண்டு வருகின்றன. கலைகளை மீட்டெடுக்க வேண்டுமானால் முதலில் கலைஞா்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியச் சூழல் அவசியமாகின்றது.

நாட்டுப்புறக்கலையின் அவசியத்தையும், அவற்றின் தேவைக் குறித்தும் இளைய தலைமுறையினா் அறிந்து கொள்ளும் வகையில் பள்ளிப் பாடங்களில் இடம் பெறச் செய்தல் வேண்டும். நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் தொடா்பான பட்டய மற்றும் பட்டப் படிப்புகளைப் புதியதாக ஏற்படுத்துதல் வேண்டும். விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோா்க்கு அளிக்கப்படுவது போன்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் நாட்டுப்புறக் கலைஞா்களுக்கு இட ஒதுக்கீடு முறை அமல்படுத்துதல் வேண்டும். இது போன்ற முன்னெடுப்புகளை எடுக்கும் பொழுது தான் இளம்தலைமுறையினரைக் கலைகளில் ஈடுபடுத்தி அவற்றை மீட்டெடுக்க முடியும்.

மண்ணின் அடையாளங்களாகப் போற்றப்படும் நாட்டுப்புறக்கலைகள் மீது அக்கறைக் கொண்டு, தற்கால தொழில்நுட்ப ஊடகங்களின் மூலம் உலகம் முழுவதும் பரப்ப முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். நாட்டுப்புறக்கலைஞர்களும் தற்கால சூழலுக்கேற்ப தங்களது கலைகளை உலகம் ரசிப்பதற்கு ஏதுவாக தொழில்நுட்ப உதவியுடன் மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் இன்றியமையாமையாகும்

வழிபாட்டு நிகழ்வுகளில் நிகழ்த்தப்பட்டு வந்த கலைகள் தொழில்முறைக் கலைகளாக மாற்றம் பெற்று வரும் இன்றைய நிலையில் கலைகளில் பெண்களின் பங்கேற்புச் சற்று அதிகரித்து வருகின்றது. ஆண்களால் மட்டும் ஆடப்பட்டு வந்த தப்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், தெருக்கூத்து போன்ற கலைகளில் பெண்களும் பயிற்சிப் பெற்று திறமையாக நிகழ்த்தி வருகின்றனர். பெண்கள் பங்கு பெறும் கலைகள் மக்களிடம் அதிக வரவேற்பினைப் பெற்று வருகின்றது. நாட்டுப்புறக் கலைகளில் பெண்களை ஊக்குவிப்பதன் வழி கலைகளை மக்களிடம் கொண்டு சேர்த்து அழிவிலிருந்து மீட்கலாம்.

இன்றைய சூழலுக்கேற்ப உள்ளடக்கத்தை மாற்றியமைத்து வடிவத்தை வளர்த்தெடுத்தால் மட்டுமே நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் எடுக்கக்கூடிய மிக முக்கியமான முன்னெடுப்பாக அமையும்.

அழிந்து கொண்டிருக்கும் நாட்டுப்புறக் கலைகளையும் கலைஞர்களையும் காப்பது நமது கடமையாகும். அப்பொழுது தான் அடுத்த தலைமுறைக்கு இதன் ஆழமும் அழகும் தெரிய வரும் இல்லையெனில் ஏட்டில் மட்டும் தான் படித்துக் கொள்ள முடியும். இக்கலைகள் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனைக் கூட செய்து பார்க்க இயலாத சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.

## 11. நாட்டுப்புறக் கலைகளின் முக்கியத்துவம்

முன்னோர்களின் உண்மையான நாடித்துடிப்பு தான் நாட்டுப்புறக் கலைகள். தமிழ்நாட்டு கிராமங்களின் உயிர்நாடியாகத் திகழ்வன. கலை என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், கலாச்சார பாதுகாவலனாகவும், மன உணர்வுகளின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது. நாட்டுப்புறக் கலைகள் முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள் ஆகியவற்றை அறிய துணைபுரிகின்றன. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. நாட்டுப்புறக் கலைகளைப் புறக்கணித்து அம்மக்களின் வரலாற்றை எழுதுதல் என்பது இயலாத செயலாகும்.

தமிழ் சமூகம் உலக அளவில் உச்சத்தைத் தொட்டதற்கு தமிழ்ப் பண்பாட்டின், கலாச்சாரத்தின் அடிப்படை ஆணி வேராகத் திகழ்வன தமிழர் கலைகளாகும்.

பழந்தமிழரின் வாழ்வியலில் ஒவ்வொரு நிலையிலும் கலைகள் இடம் பெற்றுள்ளன. தமிழர்கள் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும், தாம் வணங்கும் தெய்வத்தையும் மகிழ்ச்சிப்படுத்த கலைகளைப் பயன்படுத்தியுள்ளனர். நாட்டுப்புறக் கலைகள் பண்டைய வாழ்க்கை முறை, போரியல் முறை, சமூக, பொருளாதாரச் சூழல், விழாக்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை எடுத்தியம்புகின்றன. நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடும் உணர்வோடும் தொடர்புடையது.

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் போர் தொடுத்து அழிக்க வேண்டும் என்பதில்லை. அவர்களது தாய் மொழியினை அழித்தால் கலை, பண்பாடு அழிந்து விடும். இதுதான் உலகம் முழுவதும் நிகழும் செயல்பாடாகும். ஒரு கலை அழியும் போது அந்த இனத்தின் அடையாளத்திலேயே அழித்து விடுகிறது என்பார்கள். நமது முன்னோர்கள் பயன்படுத்திய கருவிகள், பொருட்கள் அவர்களின் அறிவாற்றலின் சான்றாக உருவாக்கப்பட்ட கலைகள் அழியும் பொழுது அந்த வட்டாரத்து அறிவு, வழக்கு, இயற்கை குறித்த அனைத்தையும் இழக்கிறோம்.

இன்று தமிழர் அடையாளங்கள் மற்றும் வரலாறுகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றது. இந்த நிலை தொடருமானால் எதிர்கால தலைமுறையினர் தமிழர் வரலாறு என்ன என்பதே அறியாத இழிநிலைக்கு தள்ளப்படுவார்கள். எனவே நாட்டுப்புறக் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழர் பண்பாட்டுடன் கூடிய கலைகளைப் பாதுகாக்க வேண்டியப் பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உரிய கடமையாகும்.

# தொகுப்புரை

- தமிழர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதில் கலைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. மனிதன் தன்னுடைய அறிவின் திறத்தால் அழகானவற்றைச் சிறப்பித்துப் படைத்து, பிறர் வியக்கும் வண்ணம் அளிப்பதே கலையின் அடிப்படையாக அமைகிறது. இன்றைய வாழ்வியல் சூழலுக்கேற்ப கலைகள் பல புதிய பரிணாம வளர்ச்சியினைப் பெற்று தனது தனித்துவத்தையும் சிறப்பினையும் இழக்காமல் உயிர்ப்புத் தன்மையோடு விளங்குகின்றன.

- கலைஞன் தான் பெற்ற உணர்வினை மற்றொருவரும் பெறுமாறு செய்வதே கலைஞனின் சிறப்பாகும். ஏதேனும் ஒரு கலையில் சிறப்புப் பெற்றிருப்பவர் கலைஞன் என்றழைக்கப்படுகிறார். கலைஞர்களுக்கு இசை, கூத்து, நடிப்பு போன்ற கலைகளே குலத்தொழிலாக உள்ளன. கலைஞர்கள் தங்களிடம் இருக்கும் கலையாற்றலைப் பலருக்கும் வெளிப்படுத்தி மகிழ்வூட்டுதலையே வாழ்வியல் நெறியாகக் கொண்டுள்ளனர்.

- நுண்கலைகள் மனித வாழ்வியலில் மிகவும் முக்கியமான பங்கினைப் பெறுகின்றன. நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலைகளாகும். நுண்கலைகள் உள்ளத்துணர்விற்கும், கற்பனை உணர்விற்கும் தூண்டுகோலாக அமைகின்றன.

- சிற்பக்கலை ஓவியக்கலையோடு பெரிதும் தொடர்புடையது. மனித நாகரீகத்தையும், அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் முதன்மையான சான்றாதாரமாக சிற்பக்கலை திகழ்கின்றது. ஓர் இனத்தின் தொன்மை வரலாற்றினை அறிய அம்மக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட சிற்பக்கலையே பெரிதும் துணைபுரிகின்றன. நாட்டுப்புற மக்களின் வழிபாட்டில் கற்சிற்பங்களை விட சுடுமண் மற்றும் சுதைச் சிற்பங்கள் அதிகளவில் பயன்பாட்டில் உள்ளன.

- கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகள் வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடுதல் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற கட்டிடக் கலையில் மரபுவழி கட்டுமானத்தை கட்டுபவரே வீட்டின் அமைப்பை தீர்மானிக்கிறார். மனிதனது வாழ்வியலுடன் ஒட்டி வளர்ந்த தொன்மையான கலையாக கட்டிடக்கலைப் போற்றப்படுகிறது.

- மனிதன் அக உணர்வில் எழும் அழகுணர்ச்சியின் விளைவாக பிறப்பது ஓவியமாகும். இயற்கை மீதான காதலும் கற்பனை வளமும் ஓவியக்கலைக்கு மூலமாக அமைகின்றன. நாட்டுப்புற மக்களிடம் ஓவியக்கலை பெரும்பங்கினை

வகிக்கிறது. நாட்டுப்புற மக்களிடம் நம்பிக்கை மற்றும் சடங்கு சார்ந்த நிகழ்வுகளோடு தொடர்புடையதாக ஓவியக்கலை திகழ்கிறது.

- ❖ தமிழக கிராமியக் கலைகள் தெருக்களிலும் சடங்கு நிகழ்ச்சிகளிலும் மட்டும் ஆடப்படும் அவல நிலைக்குப் பொருளாதாராமும், சாதிய அடக்குமுறையும் காரணமாக அமைகின்றன. திரைப்படங்கள் மற்றும் ஆடல் நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் நாட்டுப்புறக் கலைகளுக்கு அளிக்கப்படுவதில்லை. கால மாற்றத்தாலும் நவீனக் கருவிகளின் வருகையாலும் கலை வடிவங்கள் தங்களது தனித்துவமானச் சிறப்பினை இழக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன.

- ❖ முன்னோர்கள் வழங்கிய சொல்லையும் பொருளையும் மட்டுமல்லாது அவர்கள் படைத்த கலைகளையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபாகும். இன்றைய வாழ்வியல் சூழலில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றத்தைக் கண்டாலும் பழம் மரபுகள் பற்றிய சிந்தனைகளும் ஆக்கங்களும் மரபுத்தொடர்ச்சியானது தொடரவே செய்கிறது.

- ❖ நவீனத் தொழில்நுட்பங்களையும், கணினிப் பயன்பாடுகளையும், சமூக வலைதளங்களையும் ஒதுக்கிவிட்டு கலைகளை வளர்ப்பதென்பது இனிவரும் காலங்களில் இயலாத ஒன்றாகும். நவீன தொழில்நுட்பங்கள் கலைகளை ஆவணப்படுத்துவதிலும், பிற நாடுகளுக்கும் மற்றும் பல சமூகத்தவரிடம் கலைகளைக் கொண்டு சேர்ப்பதிலும் பெரிதும் துணைநிற்கின்றன.

- ❖ கிராமியக்கலைகள் ஒவ்வொன்றும் பல நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்டவை. நாட்டுப்புறக் கலைகள் பெரும்பான்மை வட்டாரத் தன்மை கொண்டவையாகும். குறிப்பிட்ட கலைகளை குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காண முடியும். நாட்டுப்புறக்கலைகள் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி மனதிற்கும் உடலுக்கும் வளம் சேர்ப்பனவாக உள்ளன. நாட்டுப்புற மக்களின் உள்ளத்தை உணர்த்தக் கூடியதாய் அமைகின்றன.

- ❖ கலைகளைத் தொழிலாகக் கொண்ட ஏராளமான கலைஞர்கள் மாற்று வேலைகளுக்குச் சென்றுவிட்டனர். நிரந்தரமான வருமானம் கிடைக்கும் சூழலில் கலைஞர்கள் தங்களது கலைகளைப் புறக்கணிப்பதில் தயக்கம் காட்டாத சூழல் நிலவுகின்றது. பொருளாதார நிலை காரணமாக பெண் கலைஞர்கள் கவர்ச்சி நடனமாடும் அவல நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். கலைஞர்கள் பொருளாதார அடிப்படையில் பல வாழ்வியல் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

- ❖ இளம் தலைமுறையினர் இரசனையும் ஆர்வமும் வேறு தளத்தில் காணப்படுகிறது. தமிழக கிராமியக் கலைகள் நலிவுக்கு அக்கலைகள் நிகழும் வட்டாரங்கள், சமூக சூழல், நகரத் தாக்கம், கல்வியறிவு போன்ற பலவிதமான காரணிகள் காரணமாக அமைகின்றன. அறிவியல் மாற்றத்தாலும், நவீனக் கருவிகளின் வருகையாலும் கலை வடிவங்கள் தங்களது மரபார்ந்த சுய தன்மையினை இழக்க வேண்டியுள்ளது.

- ❖ நாட்டுப்புறக்கலைகளின் சிறப்பினை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பள்ளி பாடங்களில் இடம்பெற செய்தல் வேண்டும். நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு அளிக்கப்படுவது போன்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டு முறை அமல்படுத்த வேண்டும். இன்றைய சூழலுக்கேற்ப நாடடுப்புறக்கலைகளின் உள்ளடக்கத்தினை மாற்றியமைத்து வடிவத்தை வளர்த்தெடுத்தால் மட்டுமே நாட்டுப்புறக்கலைகளை பாதுகாக்கவும் மீட்டெடுக்கவும் முடியும்.

- ❖ தமிழ்ச் சமூகம் உலக அளவில் உச்சத்தை தொட்டதற்கு, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படை ஆணிவேராகத் திகழ்வன தமிழரின் கலைகளாகும். நாட்டுப்புறக்கலைகள் மண்ணோடும் உணர்வோடும் தொடர்புடையன. ஓர் கலை அழியும் பொழுது அந்த இனத்தின் அடையாளமே அழிக்கப்படுகின்றது. நாட்டுப்புறக் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழர் பண்பாட்டுடன் கூடிய கலைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவசியமாகின்றது.

# அடிக்குறிப்புகள்

1. கு.வே.பாலசுப்பிரமணியன்,சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும், ப.11
2. ந.சி.கந்தையா பிள்ளை, செந்தமிழ் அகராதி, ப.145
3. க.காந்திதாசன், சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல், ப.4
4. மேலது, ப.8
5. மயிலை.சீனி.வேங்கடசாமி, நுண்கலைகள் ப.20
6. ந.மு.வேங்கடசாமிநாட்டார், ஔவை.ச.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), மணிமேகலை, மலர்வனம் புக்க காதை வரி.126-130
7. பெரும்பாணாற்றுப்படை, பா.225
8. மேலது, பா.83
9. அகநானூறு, பா.272:11
10. கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும், ப.138
11. அ.திருஞானசம்பந்தர் (உ.ஆ), நன்னூல் -சொல்லதிகாரம் - காண்டிகையுரை, நூ.388
12. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் - சில அடிப்படைகள், ப.283
13. மேலது, ப.284

# முடிவுரை

ஓவியங்கள் ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடி ஆகும். ஆதி தமிழ் சமூகத்தின் பழம் மரபுகளை நாம் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் கடைப்பிடிக்க வேண்டிய நல்லறங்களை நினைவூட்டும் பாடச் சாலையாகவும் ஓவியங்கள் திகழ்கின்றன. ஒவ்வொரு கலைக்கென்றும் ஒரு தனித்துவம் இருக்கும். ஓவியக்கலையின் தனித்துவம் காட்சிப்படுத்தலும் கருத்து ஊட்டலும் ஆகும்.

ஓவிய மரபினை அதிகம் போற்றும் சமூகமாக நம் தமிழ் சமூகம் திகழ்கின்றது. நம் ஓவியங்கள் நம் பழம் சமூகத்தை தத்துருபமாக காட்சிப்படுத்துகிறது. காட்சிப்படுத்தலின் உள்ளீடாக கருத்து பதிவுகளை உள்ளடக்குகிறது. இப்படிப்பட்ட ஓவிய கலைகளின் வழி கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய பண்பாட்டு பதிவுகளை உருவாக்குவது என்பது பல வழியில் நலம் பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகியவற்றை கட்டிக்காப்பதில் மொழிக்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளதோ, அதே அளவு அந்நாட்டின் கலைக்கும் முக்கியத்துவம் உள்ளது. கலைகளை விடுத்து நாம் காட்சிப்படுத்தலோ கருத்து பதிவுகளை உருவாக்குவது என்பதோ ஆழமான உத்தியாக அமையாது. ஓவியங்கள் பண்முகத் தன்மை கொண்டவை. ஓவியங்கள் உயிர்ப்பு உள்ளவை. ஓவியங்கள் மனித உணர்வோடு ஒன்றிணைந்தவை.

ஓவிய அறிவு இல்லாத ஒருவன் கூட ஓவியப் பிழையை அறிவான். ஆகவே ஓவியம் என்பது உள்ளார்ந்த நிகழ்வு. மனித உணர்வுகளை பல பக்கங்களில் விவரிக்க முடியாதவற்றைக் கூட ஒரு ஓவியத்தில் காட்டி விட முடியம். ஓவிய மரபுகளை கட்டிக்காத்தல் என்பது நம் உறவுகளைக் கட்டிக்காத்தலுக்கு சமமானது.

ஓவியங்கள் தமிழ்நாட்டின் வரலாற்று பின்னணி மற்றும் கலை இலக்கிய பின்னணி ஆகியவைப் பற்றி விவரித்து செல்வது மட்டுமல்லாமல், நமக்கான மரபுத்தொடர்ச்சி போக்கையும் உருவாக்குகிறது. தமிழ்நாட்டின் ஓவிய பின்னணியை பறைசாற்றுவதில் தஞ்சை மாவட்டம் முக்கிய களமாக திகழ்கின்றது. தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு களத்தின் வாயிலாக ஓவியக்கலையின் மரபுத்தொடர்ச்சிப் போக்கை தெளிவாக காண முடிகிறது.

தஞ்சையை ஆட்சிப்புரிந்த முத்தரையர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள் ஆகிய வம்சா வழிகளின் காரணமாக பல கலைகளின் முக்கிய நிகழ்விடமாக தஞ்சை திகழ்ந்துள்ளது. வரலாற்று புகழ்மிக்க தஞ்சையில் இன்றளவும் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவை சிறப்பாக உள்ளது.

ஓவியக்கலையின் மரபுத்தொடர்ச்சியை இம்மாவட்டத்தில் உள்ள நாட்டுப்புற மக்களின் இயல்பு வாழ்க்கையில் காண முடிகிறது.

ஓவியம் கலையறிவை உண்டாக்குவது, எழுப்புவது, அறிவைத் தூண்டி போதிப்பது ஒப்பற்ற பயனை விளைவிப்பது போன்ற பயன்பாடுகளைத் தரவல்லது என்பதை ஓவிய வரலாற்றின் மூலமாக அறிய முடிகிறது.

தொல்காப்பியம், எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள், காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை, நாச்சியார் திருமொழி போன்ற இலக்கியங்கள் தமிழர்களின் ஓவிய வரலாற்றைச் சிறப்பாக எடுத்தியம்பியுள்ளன. இத்தகைய நூல்களின் வழி நம் கலை அறிவையும் படைப்புகளையும் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

ஓவியங்கள் காலத்திற்கு கேற்ற வகையில் தம் தன்மையும் இயல்பும் மாற்றம் பெற்று வந்துள்ளன. வரலாற்று முன்பு உள்ள ஓவியங்கள் பெரும்பான்மை விலங்குகளின் சண்டைக் காட்சிகளும், வேட்டைக்காட்சிகளும் இடம் பெற்றிருப்பது தெளிவாக புலனாகிறது. வரலாற்றுக்கு பின்பு வந்த காலங்களில் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, மக்கள் பண்பாடு, பழக்கவழக்கம், போர்க் காட்சி போன்றவைகள் சித்தரிக்கப்பட்டுள்ளமையை பல்வேறு இலக்கிய குறிப்புகளின் வழி தெரிந்துக் கொள்ள முடிகின்றது.

தமிழகத்தில் சித்தன்னவாசல், தஞ்சாவூர், காஞ்சிபுரம், மாமண்டூர் போன்ற இடங்களில் ஓவியங்கள் சிறந்த முறையில் வளர்ச்சிப் பெற்று வந்துள்ளமையை காண முடிகின்றது. ஓவிய ஆர்வலராகவும், உறுதுணையாளரர்களாகவும் சேர, சோழர், பாண்டியர்கள் விளங்கினார்கள். குப்தர்கள், சாதாவாகனர்கள், சாளுக்கியர்கள், பல்லவர்கள் போன்ற மன்னர்கள் ஓவியக் கலையை வளர்ப்பதில் முழு முனைப்போடு செயல்பட்டு வந்துள்ளனர் என்பதை வரலாற்று சான்றுகள் வழியே நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஓவியக் கலையின் உயிர் நாடியாக விளங்குபவர்கள் ஓவியர்கள் ஆவார். எனவே ஓவியர்கள் அக்காலத்தில் போற்றுதலுக்குரிய தகுதியைப் பெற்றிருந்தனர். மன்னர்கள் ஓவியர்களை தங்கள் அரண்மனைகளிலேயே வைத்து சிறப்பு செய்து வந்துள்ளனர்.. ஓவியர்கள் ஓவியக் கலையில் தம்மை முழுவதுமாக இணைத்துக் கொண்டு கலையை வளர்த்தனர் என்பதை பல்வகை இலக்கியங்களின் வழி உணர முடிகின்றது.

நம் முன்னோர்கள் ஓவியம் வரைவதற்குரிய கருவிகளை முறையாக இனங்கண்டுடிருந்தனர். தூரிகை, வண்ணங்கள், வட்டப்பலகை போன்றவற்றை

முதன்மைக் கருவிகளாகக் கொண்டு ஓவியம் தீட்டினர் என்பதை இலக்கிய குறிப்புகளின் வழி தெளிவாக காண முடிகின்றது.

பழம் தமிழகத்தில் ஓவியம் தீட்டப்படுவதற்கு என்று தனியாக சித்திரமாடங்கள், ஓவியக் கூடங்கள் இருந்துள்ளமையை இலக்கிய குறிப்புகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய மாடங்கள், கூடங்கள் அமைத்து நம் முன்னோர்கள் ஓவிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளனர். இன்றளவும் ஓவியக் கூடங்கள் சென்னை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், ஈரோடு போன்ற இடங்களில் அரசின் முழு முனைப்போடு ஓவியக் கூடம் செயல்படுவதை காண முடிகின்றது.

கண்ணையும், கருத்தையும் கவரும் தன்மை கொண்ட ஓவியம் பதினைந்துக்கும் மேற்பட்ட வகைகளில் காணப்படுகிறது. அத்தகைய சிறப்புமிக்க ஓவியங்கள் அன்று முதல் இன்று வரையிலும் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. நம் முன்னோர்கள் அரும்பாடுபட்டு வளர்த்து வந்த ஓவியக் கலையின் சிறப்பையும், பெருமையையும் நாம் பெருமளவில் உணர்ந்து கொண்டு ஓவியக் கலையை வளர்க்கவும், பாதுகாக்கவும் வேண்டும்.

நாட்டுப்புற மக்களின் கலை வெளிப்பாடு மரபுத்தொடச்சியால் நிகழ்பவை. அத்தகைய மரபுத்தொடச்சி போக்கினை உடைய ஓவியங்களை தம் வாழ்வின் பல நிகழ்வுகளோடும் நடத்தைகளோடும் இணைத்து கொண்டவர்கள் நம் நாட்டுப்புற மக்கள். நாட்டுப்புற மக்களின் வாழ்வியவில் ஓவியக்கலை பின்னிப்பிணைந்துள்ளது என்பதை ஒரத்தநாடு வட்டார களத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. இம்மக்களின் கோலங்கள், பானை ஓவியங்கள், பச்சை குத்தும் மரபு, மருதாணி, கோட்டோவியங்கள், சுவரோவியங்கள், பாய் ஓவியங்கள் ஆகியவை இவர்களின் ஓவியப் பின்னணியை எடுத்து இயம்புகிறது.

கோலங்கள் தமிழரின் வாழ்வியலில் நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்ந்துள்ளன என்றால் அது மிகையாகாது. அத்தகைய கோலமிடுதல் மரபு பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு விதமான பரிணாம வளர்ச்சியினைப் பெற்று வளர்ந்துள்ளன. வரி வடிவங்களாக இருந்த குறியீடுகளை அழகு, வடிவம், ஒப்பனை செய்தல் போன்ற பொருட்களில் கோலம் என்று வழங்கியுள்ளமை புலனாகிறது. வரைதல் காட்சிப்படுத்துதல் என்ற அடிப்படையில் கோலங்கள் ஓவியங்களாகவே பார்க்கப்படுகிறது.

நம் பழந்தமிழர்கள் கோலமிடுவதற்கு இயற்கையானப் பொருள்களையே பயன்படுத்தியுள்ளனர். தானியங்கள், பருப்பு வகைகள், மரத்தூள், இலைகள், பூக்கள் போன்றவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய சூழலில் மஞ்சள் தூள், குங்குமம், பல நிறம் கொண்ட மண், செங்கற்பொடி, சுண்ணப்பொடி, உப்பு போன்ற பொருள்களை பயன்படுத்தி கோலங்கள் வரைவதையும் காண முடிகின்றன.

கோலம் புனிதத்தன்மை வாய்ந்ததாக கருதப்படுகின்றன. நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளோடு இணைத்து வழிபாடு நடத்தும் பொழுது கோலம் முதன்மை இடம் பெறுகின்றன. ஒரத்தநாடு வட்டார நாட்டுப்புற மக்கள் தங்கள் வீட்டின் முன் கோலமிடுவதை விருப்பமுடனே செய்துவருகின்றனர். கோலமிடுவது தனிநபர் நலனுக்கும் குடும்பநலனுக்கும் வழிவகுக்கும் என நம்புகின்றனர். ஒவ்வொருநாளும் ஒவ்வொருவகையாகக் கோலமிட்டால் செல்வ வளம் பெருகும் என்று எண்ணுகின்ற மனப்போக்கினைக் காண முடிகின்றது.

நாட்டுப்புற ஓவியங்களில் கோலங்கள் கண்ணைக் கவரும் அழகுகலையாக மட்டுமல்லாது, நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் குறித்த தத்துவங்களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தும் கலைப்பெட்டமாக திகழ்கின்றன என்பதை ஒரத்தநாடு வட்டார களத்தின் வாயிலாக அறிந்துக் கொள்ளலாம்.

சுடுமண் ஓவியங்கள் நாட்டுப்புற கலைகளில் ஒன்றாக விளங்குகின்றன. நிலத்தை இறையாக எண்ணி வாழும் கிராமிய மக்கள் அந்நிலத்தில் உள்ள மண்ணினால் இறை வடிவங்களைச் செய்து வணங்கி வழிபட்டுள்ளனர். சுடுமண் உருவ கலை என்பது பழங்காலம் தொட்டு மக்களிடம் வழக்கத்தில் நிலவி வந்துள்ளமையினை அறிய முடிகின்றன. சுடுமண் பானைகளில் ஓவியங்கள் வரைவது பானை ஓவியங்கள் எனப்படும். ஓவியப் பானை என்பது ஓவியம் மற்றும் எழுத்துக்கள் வரையப் பெற்ற அல்லது வண்ணம் தீட்டப்பட்ட பானை ஆகும். இக்கலை இன்றளவும் தொடர்ந்து வருகின்றது. சுடுமண் பானைகள் செய்வதும் அவற்றின் மேற்பரப்பில் ஓவிய அலங்கார வேலைப்பாடுகள் செய்வதும் தொன்மையான நாட்டுப்புறக் கலை வடிவமாகும்.

தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு பகுதியில் உள்ள மக்கள் விழாக் காலங்களில் பயன்படுத்தும் பானைகளில் பல வண்ண ஓவியம் தீட்டி பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலும் பொங்கல் பானைகளிலும், தீச்சட்டி எடுக்கும் பானைகளிலும் ஓவியம் தீட்டும் மரபினைக் கொண்டிருக்கின்றனர்.

பொதுவாக நாட்டுப்புறக் கலைகள் இறைக் குறியீடுகளோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. சமயம் சார்ந்து விளங்குவதால் பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகள் கோயிற் கலையோடு பிணைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் இக்கலைகள் இயக்கம் பெற்று வருகின்றன. இவ்வகை பகுப்பில் பச்சை குத்துதல் கலையும் அடங்கும். ஒவ்வொரு இன மக்களும் பச்சை குத்துதலை இறையியல், மருத்துவம், சடங்கு சார்ந்த நம்பிக்கைகளின் அடிப்படையிலும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இளமை நிலைக்கவும், பாலின கவர்ச்சிக்காகவும், தீய சக்திகள் அணுகாமல்

இருப்பதற்கும், வலி நீக்கும் வழியாகவும், இனப்பெருக்கச் சடங்காகவும், பாதுகாப்பு உணர்விற்காகவும் மந்திரம், ஊழ் மற்றும் மருத்துவ வழியாகவும் பச்சை குத்துதல் மரபை தொடர்ந்து கொண்டே வந்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு பகுதியில் பச்சை குத்தும் கலை பெருமளவில் காணப்படுகிறது. இறந்த பிறகும் தன் கூட வருவது பச்சை குத்தும் தழும்பு ஒன்றே என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பச்சை குத்துவதை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இம்மக்களின் சடங்குகள், மருத்துவம், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பச்சை குத்துதல் கலை நிலவி வருவதை காண முடிகின்றன.

தஞ்சை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரத்தநாடு பகுதி மக்களின் உடல்களில் காணப்படும் பச்சைகளை எழுத்துக்களை பதித்தல், பெயர்களை எழுதுதல், உருவங்களை வரைதல், நம்பிக்கைச் சடங்கு வழிப்படி பச்சை குத்துதல் என்ற வகைகளின் அடிப்படையில் பகுக்கலாம்.

ஒரத்தநாடு பகுதி மக்கள் பொதுவாக சமயக்குறியீடுகள், குலமரபு சின்னங்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள், தமக்குப் பிடித்த உருவங்கள், கட்சி சின்னங்கள், கட்சித் தலைவர்கள் ஆகியவற்றின் உருவங்களை தங்களது உடலில் பச்சையாக பதிய வைத்துள்ளனர். பச்சை குத்துதல் ஒரு நாட்டுப்புற கலை வடிவமாக இருந்தாலும் அதனை தங்களது அடையாளமாக கொண்டு இவ்வட்டார மக்கள் இக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

நம் நாட்டுப்புற ஓவியக் கலைகளில் பாய்களில் புனையப்படும் ஓவியக்கலையும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரத்தநாடு வட்டாரத்தைச் சார்ந்த சோழபுரம்,ஈச்சங்கோட்டை ஆகிய கிராமங்களில் பாய் பின்னும் தொழில் நடைபெற்று வருகிறது. இவர்களின் பாய் பின்னும் கலை, பாய் தயாரிக்கும் முறை, சாயம் ஏற்றும் முறை, பாயின் வடிவமைப்பு, பாயின் வகைகள், நம்பிக்கைகள் ஆகியவை பாரம்பரியமாக வந்தமையை காண முடிகின்றது.

ஒரத்தநாடு வட்டார பகுதிகளில் கோரைகளில் மஞ்சள் நிற சாயம் மட்டும் கொண்டு பின்னப்படும் பாயினை ‘சாதாபாய்’ என்றும் சிவப்பு, ஊதா, பச்சை ஆகிய நிறங்களில் பொடிப் பொடிக் கட்டமாக அல்லது நீள கோடாக அமைத்துப் பின்னப்படும் பாய்களை ‘சொக்கட்டான் பாய்’ என்றும் பெரிய கட்டம், முக்கோண வடிவம், வட்ட வடிவம் போன்று பின்னப்படும் பாய்களை ‘பெட்டிப்பாய்’ என்றும் அழைக்கின்றனர். இப்பாய்களில் உள்ள ஓவிய அமைப்புகள் அழகாக காட்சியளிக்கின்றன.

இப்பகுதிகளில் பின்னப்படும் பாய்களில் பட்டுப்பாய் சிறப்பாக சொல்லப்படுகிறது. பட்டுப்பாய் என்பது மிகவும் அழகாக வண்ணமயமான ஓவிய வேலைப்பாடுகளுடன் நுணுக்கமாக பின்னப்படுவதாகும். மங்கல நிகழ்வுகளுக்கு மட்டும் இதை பயன்படுத்துவர். இவ்வகை பாய்களில் மணமக்கள் பெயர்கள், திருமண நாள் முதலியவைக் குறிக்கப்படுவது இதன் சிறப்பாகும். பாய்களில் நெய்யப்பட்டிருக்கும் கோலங்களின் வடிவங்கள், இயற்கைக் காட்சிகள், இதய வடிவங்கள், சிலுவைப் படம் போன்ற பலவிதமான காட்சிகளை மிகவும் நுணுக்கமான வண்ண ஓவியங்களாக பின்னப்படும் பாய்களே 'ஓவியப்பாய்' ஆகும்.

பாய்கள் தொடர்பான பல்வேறு நம்பிக்கைகள் இப்பகுதிகளில் நிலவுகின்றன. கோரைகளில் படுத்தால் நோய் வராது, கோரைப் பாயில் படுத்துறங்கும் போது தேள், பூரான், பூச்சிகள் அண்டாது, வீட்டிற்கு சடங்கான பெண்கள் எவ்வளவு வசதி படைத்திருந்தாலும் தரையில் பாய் விரித்தே உறங்க வேண்டும். திருமணத்தின் போது மணமகளுக்கு பட்டுப்பாயினையும் குழந்தையினை ஈன்ற பெண்ணுக்கு பிள்ளைத்தட்டுப் பாயினையும் சீராக கொடுத்து கணவன் வீட்டிற்கு அனுப்பும் மரபு இது போன்ற பாய் தொடர்பான பலவிதமான நம்பிக்கைகளை ஒரத்தநாடு வட்டார பகுதி மக்களின் வாழ்வியலில் காண முடிகின்றது.

நம் பண்பாட்டு நிகழ்வுகளை காட்சிப்படுத்த சுவர் ஓவியங்கள் சிறப்பான அணுகு முறையாக காணப்படுகிறது. ஒரத்தநாடு வட்டார பகுதிகளில் காணப்படும் சுவர் ஓவியங்கள் இறை தொடர்புடையனவாகவும் நம்பிக்கைகள் தொடர்புடையனவாகவும் காட்சியளிக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு வட்டாரப் பகுதி மக்கள் தங்களது வீடுகளின் உட்ப்புற சுவர்களிலும் வெளிப்புற சுவர்களிலும் பலவகை ஓவியங்களை இடம் பெற செய்கின்றனர். தெய்வங்களின் திருவுருவப் படங்கள், மலர்கள், மயில் மற்றும் அன்னம் போன்ற பறவைகள், வண்ணக் கோலங்கள், இயற்கைக் காட்சிகள், திருஷ்டி உருவங்கள் ஆகியவற்றை தங்களின் வீட்டுச் சுவர்களில் வரைந்து வைத்துள்ளதைக் காண முடிகின்றது.

கலைகளில் ஓவியக் கலையே அனைத்து கலைகளுக்கும் அடிப்படையாக விளங்கி வருகின்றது. ஓவியக் கலை கற்பவர்கள் அனைத்துக் கலையும் அறிந்தவர்களாகின்றனர் என்பதை உறுதிப்பட அறிய முடிகின்றது. பல கலைகளில் வரைதல் என்ற ஓவியப் பண்பு அடிப்படையாக இருப்பதை அறிய முடிகிறது. மனிதர்களின் நாகரீக வளர்ச்சியினை அறிந்து கொள்ளுவதற்கு ஓவியக் கலையே உறுதுணையாக விளங்குகின்றது. அக உணர்ச்சியையும், புற உலக உணர்ச்சியையும் அழகுபட உணர்ந்து கொள்ளுவதற்கு ஓவியமே வழி காட்டுகின்றது என்பதை ஒரத்தநாடு வட்டார மக்களின் வாழ்வியல் மூலமாக அறிய முடிகிறது.

பொதுவாக நுண்கலைகள் மனித வாழ்வியலில் மிகவும் முக்கியமான பங்கினை பெறுகின்றன. நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலைகளாகும். நுண்கலைகள் உள்ளத்துணர்விற்கும் கற்பனை உணர்விற்கும் தூண்டுகோலாக அமைகின்றன.

முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற பழம் மரபுகளை நாம் பேணி காத்தல் வேண்டும். முன்னோர்கள் வழங்கிய சொல்லையும் பொருளையும் மட்டுமல்லாது அவர்கள் படைத்த கலைகளையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபாகும். இன்றைய வாழ்வியல் சூழலில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றத்தைக் கண்டாலும் பழம் மரபுகள் பற்றிய சிந்தனைகளும் ஆக்கங்களும் மரபுத்தொடர்ச்சியாக நம்மை தொடரவே செய்கின்றன.

நமது கிராமியக் கலைகள் ஒவ்வொன்றும் பல நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்டவை. நாட்டுப்புறக் கலைகள் பெரும்பான்மை வட்டாரத் தன்மை கொண்டவையாகும். குறிப்பிட்ட கலைகளை குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காண முடியும். நாட்டுப்புறக்கலைகள் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி மனதிற்கும் உடலுக்கும் வளம் சேர்ப்பனவாக உள்ளன. நாட்டுப்புற மக்களின் உள்ளத்தை உணர்த்த கூடியதாய் அமைகின்றன.

கலைகளைக் காப்பதற்கு கலைஞர்களைக் காப்பது அவசியமாகும். கலைகளைத் தொழிலாகக் கொண்ட ஏராளமான கலைஞர்கள் இன்று மாற்று வேலைகளுக்கு செல்லும் நிலை ஏற்படுகிறது. கலைஞர்கள் பொருளாதார அடிப்படையில் பல வாழ்வியல் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதனை கருத்தில் கொண்டு நாம் கலைஞர்களுக்கு பொருளாார வாய்ப்பினை தந்திடல் வேண்டும். நிரந்தரமான வருமானம் கிடைக்கும் நல்லதொரு சூழ்நிலையை கலைஞர்களுக்காக நாம் உருவாக்க வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினரின் இரசனையும் ஆர்வமும் வேறு தளத்தில் காணப்படுகிறது. தமிழக கிராமியக் கலைகள் அக்கலைகள் நிகழும் வட்டாரங்கள், சமூக சூழல், நகர தாக்கம், கல்வியறிவு போன்ற பலவிதமான காரணிகள் காரணமாக அமைகின்றன. அறிவியல் மாற்றத்தாலும், நவீன கருவிகளின் வருகையாலும் கலை வடிவங்கள் தங்களது மரபார்ந்த சுய தன்மையினை இழக்க வேண்டியுள்ளது.

நம் தமிழ் சமூகம் உலக அளவில் உச்சத்தைத் தொட்டதற்கு, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படை ஆணிவேராக திகழ்ந்த தமிழரின் கலைகளே காரணமாகும். நாட்டுப்புறக்கலைகள் மண்ணோடும் உணர்வோடும் தொடர்புடையன. ஓர் கலை அழியும் பொழுது அந்த இனத்தின் அடையாளமே அழிக்கப்படுகின்றது. நாட்டுப்புறக்

கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழர் பண்பாட்டுடன் கூடிய கலைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவசியமாகின்றது.

நாட்டுப்புற ஓவியக்கலை மண்ணோடும் உணர்வுகளோடும் பின்னிப்பிணைந்தது. இக்கலையை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு நமக்குள்ளது. தமிழகத்தின் கலை வடிவங்களைச் சுமக்கும் ஓவிய மரபினை ஆவணப்படுத்துதல் என்பது இன்றைய நிலையில் அவசியமாகிறது. தமிழகத்தின் பல்வேறு வட்டார பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்துள்ள ஓவிய மரபினைப் பற்றி ஆய்வுகள் வலுக்குமானால் இக்கலை அறிவு அடுத்தத் தலைமுறையினருக்கு நல்ல கொடையாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# துணைநூற் பட்டியல்

## நூல்கள்


| | | |
|---|---|---|
| அரவக்கோன் | 2019 | **இந்திய ஓவியம் - ஓர் அறிமுகம்**<br>கிழக்கு பதிப்பகம், 16,<br>கற்பகாம்பாள் நகர்,<br>மயிலாப்பூர், சென்னை – 600004 |
| அறிவுடை நம்பி.ம.சா. | 2003 | **உள்ளங்கவர் ஓவியம்**<br>கருமணி பதிப்பகம்,<br>மதுரை |
| ஆலிஸ்.அ (உ.ஆ) | 2007 | **பதிற்றுப்பத்து - மூலமும் உரையும்**<br>நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,<br>41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை – 600 098 |
| இராசு பவுன்துரை | 1987 | **தமிழகப் பாறை ஓவியங்கள்**<br>மெய்யப்பன் பதிப்பகம்,<br>53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001 |
| இராசு பவுன்துரை | 2004 | **தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்**<br>மெய்யப்பன் பதிப்பகம்,<br>53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001 |
| கதிர் முருகு (உ.ஆ) | 2012 | **நாச்சியார் திருமொழி**<br>சாரதா பதிப்பகம்.<br>ஜீ-4 சாந்தி அடுக்ககம்,<br>3, கிருஷ்ணபுரம் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-600014. |

கோதண்டராமன்.பி 2012 **இந்திய கலைகள்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

கோவிந்தன்.கா.புலவர் 2011 **ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு,**
ராமையா பதிப்பகம்,
ஜீ-4 சாந்தி அடுக்ககம்,
3ஸ்ரீ கிருஷ்ணபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600014.

சக்திவேல்.சு 1997 **நாட்டுப்புற இயல் ஆய்வு**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.

சண்முகசுந்தரம்.சு 1988 **நாட்டுப்புற இலக்கிய வரலாறு**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.

சண்முகம்.ஆ 2003 **களப்பணி அடிப்படைகள்**
நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள்,
தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல்
கழகம்,
திருவனந்தபுரம்.

சத்தியமூர்த்தி.அ.ம. 1997 **தமிழ் நாட்டுப்புறக் கதைகள் - ஓர் ஆய்வு**
மகேந்திரன் பதிப்பகம்,
அம்மாசமுத்திரம்.

சாமிநாதையர்.வே. (உ.ஆ) 1978 **சிலப்பதிகாரம் அரும்பத உரையும்**
(அடியார்க்கு நல்லார் உரையும்)
உ.வே.சா. நூலகம், சென்னை.3

சிவசுப்பிரமணியன்.ஆ. 1988 **மந்திரம் சடங்குகள்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

சுப்பிரமணியன்.பெ (உ.ஆ) 2004 **பரிபாடல் - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

சிங்காரவேலு முதலியார்.ஆ 2009 **அபிதான சிந்தாமணி**
சாரதா பதிப்பகம், ஜீ-4 சாந்தி அடுக்ககம்,
3, கிருஷ்ணபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600014.

செயபால்.இரா (உ.ஆ) 2007 **அகநானூறு - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

சேதுராமன்.கு 2017 **தமிழகச் சமுதாய பண்பாட்டு கலை வரலாறு**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

சோமசுந்தரனார்.பொ.வே (உ.ஆ) 1971 **பத்துப்பாட்டு - மூலமும் உரையும்**
(தொகுதி-1 மற்றும் தொகுதி-2)
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-18

ஞானசேகரன்.தே. 2000 **மந்திரம் சடங்குகள் சமயம்**
பார்த்திபன் பதிப்பகம்,
திருச்சி.

தவசு.மா 2015 **ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரம் - வரலாறு**
அரங்கநாதன் பதிப்பகம்,
கண்ணந்தங்குடி மேலையூர்,
ஒரத்தநாடு வட்டம் - 614 625,
தஞ்சாவூர் மாவட்டம்.

தாமோதரம் பிள்ளை.சி.வை(ப.ஆ) 1885 **தொல்காப்பியம்-பொருளதிகாரம்,**
நச்சினார்க்கினியர் உரை,
The Scottish Press, Madras.

துரைசாமிப்பிள்ளை.சு (ஔவை) 1962 **புறநானூறு - மூலமும் உரையும்**
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-18

நாகராசன்.வி (உ.ஆ) 2004 **குறுந்தொகை - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

பரிமேலழகர் (உ.ஆ) 1970 **திருக்குறள் - மூலமும் உரையும்**
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-18

பவுன்துரை.இராசு 2012 **பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில் நுட்ப பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-600113.

பாலசுப்பிரமணியன்.கு.வே. 2001 **ஆய்வியல் நெறிகள்**
உமா நூல் வெளியீட்டகம், தஞ்சாவூர்.

பாலசுப்பிரமணியன்.கு.வெ (உ.ஆ) 2004 **நற்றிணை - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

பாலசுப்பிரமணியன்.கு.வெ (உ.ஆ) 2004 **புறநானூறு - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

பாலசுப்பிரமணியன்.கு.வே (உ.ஆ) 2007 **நற்றிணை - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

பிலவேந்திரன்.ச. 2003 **ஆய்வுக்களமும் தரவுகளும்**
நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள்,
தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல்
கழகம்,
திருவனந்தபுரம்.

பிள்ளை.கே.கே 2008 **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில் நுட்ப பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-600113.

மயிலை.சீனி.வேங்கடசாமி 2001 **நுண்கலைகள்**
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை – 600 108

மாத்தளை சோமு 2005 **வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்**
உதயம் வெளியீடு,
பி.15 ஐந்தாவது முதன்மை சாலை,
இராமலிங்க நகர், உறையூர்,
திருச்சி-620003

மீனாட்சிசுந்தரம்.கா. 2009 **கொங்கு நாட்டில் வரைதல் கலை, குறிப்பாக பச்சை குத்துதல்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

முத்துசாமிக் கோனார்.தி.அ 2004 **கொங்கு நாடு**
புதுமலர் பதிப்பகம், கோயம்புத்தூர்.

மோகன்.இரா (உ.ஆ) 2004 **பத்துப்பாட்டு - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098.

லூர்து.தே 1986 **நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு**
பாரிவேள் பதிப்பகம்,
திருநெல்வேலி, சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை.

வரதராசன்.மு 1949 **திருக்குறள் - தெளிவுரை**
பாரிவேள் பதிப்பகம்,
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை.

விசுவநாதன்.அ (உ.ஆ) 2007 **கலித்தொகை - மூலமும் உரையும்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 098

**அகராதி - கலைக்களஞ்சியம்**

ஆசிரியர் குழு 2008 **க்ரியா தற்காலத் தமிழ் அகராதி**
முதல் தளம், 17வது கிழக்குத்தெரு,
காமராஜர் நகர், திருவான்மியூர்,
சென்னை – 600041

கதிரைவேற்பிள்ளை.நா. 1981 **தமிழ்மொழியகராதி,**
ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ்,

1955 **கலைக்களஞ்சியம் - தொகுதி – 2**
தமிழ் வளர்ச்சித் துறை,
சென்னை.

1956 **கலைக்களஞ்சியம் - தொகுதி – 4**
தமிழ் வளர்ச்சித் துறை,
சென்னை.

1982 **தமிழ் பேரகராதி**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

**Lexicon**

1982 **Tamil Lexicon, (Vol. VII)**
University of Madras,
Madras.

2011 **Sura’s supreme Dictionary,**
Sura Book pvt Ltd,
1620.J.Block,
16. Main road,
Anna nagar,
Chennai-600 040.

# தகவலாளர் பட்டியல்

| வ. எண் | பெயர் | ஊர் | வயது | பால் | சாதி | கல்வி | தொழில் | கள ஆய்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நடராஜன்.கு | வடக்கூர் | 60 | ஆண் | கம்மாளர் | பி.யு.சி | தச்சுத்தொழில் | 27-01-2015 |
| 2 | ரெங்கசாமி.கு | வடக்கூர் | 66 | ஆண் | கம்மாளர் | 8 ஆம் வகுப்பு | தச்சுத்தொழில் | 14-02-2015 |
| 3 | முருகேசன்.க | ஈச்சங்கோட்டை | 54 | ஆண் | பறையன் | 5 ஆம் வகுப்பு | பாய் பின்னுதல் | 30-03-2015 |
| 4 | ஜெயராமன்.அ | ஈச்சங்கோட்டை | 56 | ஆண் | பறையன் | 9.ஆம் வகுப்பு | பாய் பின்னுதல் | 1-04-2015 |
| 5 | காளியப்பன்.து | குலாளர் தெரு | 49 | ஆண் | குயவர் | இல்லை | மண்குதிரை செய்தல் | 21-05-2016 |
| 6 | பழனிசாமி.வே | குலாளர் தெரு | 53 | ஆண் | குயவர் | 7 ஆம் வகுப்பு | மட்பாண்டம் செய்தல் | 07-08-2016 |
| 7 | குப்பம்மாள்.ப | குலாளர் தெரு | 47 | பெண் | குயவர் | இல்லை | மட்பாண்டம் செய்தல் | 22-08-2016 |
| 8 | காமராசு.ப | கருக்காடிப்பட்டி | 42 | ஆண் | கள்ளர் | 8 ஆம் வகுப்பு | விவசாயி | 2-09-2016 |
| 9 | மோகன்.ச | கருக்காடிப்பட்டி | 51 | ஆண் | கள்ளர் | இல்லை | விவசாயி | 12-09-2016 |
| 10 | கலையரசி.வ | செல்லம்பட்டி | 48 | பெண் | கள்ளர் | 8 ஆம் வகுப்பு | விவசாயி | 23-09-2016 |
| 11 | யோகேஸ்வரன்.ர | ஈச்சங்கோட்டை | 36 | ஆண் | கள்ளர் | 3 ஆம் வகுப்பு | விவசாயி | 04-10-2016 |
| 12 | கபிலன்.அ | நாட்டரசன் கோட்டை | 33 | ஆண் | கம்மாளர் | 10 ஆம் வகுப்பு | தச்சுத்தொழில் | 21-11-2016 |
| 13 | கண்ணன்.பா | நாட்டரசன் கோட்டை | 51 | ஆண் | கம்மாளர் | 8 ஆம் வகுப்பு | தச்சுத்தொழில் | 03-01-2017 |
| 14 | தாமரைச்செல்வி.ந | வடக்கூர் | 42 | பெண் | கம்மாளர் | 5 ஆம் வகுப்பு | வீட்டுப்பணி | 28-01-2017 |

| வ. எண் | பெயர் | ஊர் | வயது | பால் | சாதி | கல்வி | தொழில் | கள ஆய்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | வசந்தா.ஜெ | வடக்கூர் | 45 | பெண் | கம்மாளர் | 3 ஆம் வகுப்பு | வீட்டுப்பணி | 28-01-2017 |
| 16 | வசந்தா.ச | வடக்கூர் | 52 | பெண் | கம்மாளர் | 6 ஆம் வகுப்பு | வீட்டுப்பணி | 29-01-2017 |
| 17 | அம்சவள்ளி.ரெ | வடக்கூர் | 55 | பெண் | கம்மாளர் | 5 ஆம் வகுப்பு | வீட்டுப்பணி | 29-01-2017 |
| 18 | கோவிந்தசாமி.செ | பொய்யுண்டார் கோட்டை | 60 | ஆண் | அம்பலகாரர் | இல்லை | விவசாயக்கூலி | 01-02-2017 |
| 19 | பழனிவேலு.ந | பொய்யுண்டார் கோட்டை | 52 | ஆண் | பறையர் | 10 ஆம் வகுப்பு | அரசு ஊழியர் | 06-03-2017 |
| 20 | தண்டாயுதபாணி.கோ | பொய்யுண்டார் கோட்டை | 63 | ஆண் | செட்டியார் | இல்லை | சந்தைவியாபாரி | 08-04-2017 |
| 21 | செல்லப்பன்.த | ஆழியவாய்க்கால் | 42 | ஆண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 22-08-2017 |
| 22 | சுரேஷ்.த | ஆழியவாய்க்கால் | 60 | ஆண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 28-11-2017 |
| 23 | முத்து | ஆழியவாய்க்கால் | 55 | ஆண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 07.12.2017 |
| 24 | மலையப்பன்.செ | ஆழியவாய்க்கால் | 67 | ஆண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 08-12-2017 |
| 25 | பாப்பாத்தி.ம | ஆழியவாய்க்கால் | 60 | பெண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 08-12-2017 |
| 26 | தவசி.ச | ஆழியவாய்க்கால் | 35 | ஆண் | நரிக்குறவர் | இல்லை | பச்சைகுத்துதல் | 05-01-2018 |
| 27 | த.நாராயணன் | கருக்காடிப்பட்டி | 67 | ஆண் | முதலியார் | இல்லை | மளிகை கடைக்காரர் | 24-04-2018 |
| 28 | அ.கணேசன் | கோனகர் நாடு | 32 | ஆண் | பறையர் | இல்லை | விவசாயக்கூலி | 25-04-2018 |
| 29 | க.ஜெயந்திரன் | செல்லம்பட்டி | 52 | ஆண் | பறையர் | 8 ஆம் வகுப்பு | விவசாயி | 28-05-2018 |

| வ. எண் | பெயர் | ஊர் | வயது | பால் | சாதி | கல்வி | தொழில் | கள ஆய்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30 | ப.மணிமாறன் | நாட்டரசன் கோட்டை | 53 | ஆண் | கம்மாளர் | 2 ஆம் வகுப்பு | தச்சு தொழில் | 04-06-2018 |
| 31 | த.முத்துசாமி | தஞ்சாவூர் | 54 | ஆண் | பறையர் | 12 ஆம் வகுப்பு | கிராம நிர்வாக அதிகாரி (வடக்கூர்) | 07-02-2019 |
| 32 | கு.செல்லப்பன் | கோனகர் நாடு | 37 | ஆண் | பறையர் | 10 ஆம் வகுப்பு | சுப்பந்தி (பஞ்சாயத்து அலுவலகம்) | 08-02-2019 |
| 33 | ச.சோமு | வடக்கூர் | 61 | ஆண் | பத்தர் | 5 ஆம் வகுப்பு | நகை செய்தல் | 09-06-2019 |
| 34 | ரெ.தங்கராசு | பாச்சூர் | 47 | ஆண் | ஸ்தபதியார் | 10ஆம் வகுப்பு | சிலை செய்தல் | 10-07-2019 |
| 35 | க.முருகேசன் | தஞ்சாவூர் | 63 | ஆண் | கன்னார் | 5 ஆம் வகுப்பு | பாத்திரம் செய்தல் | 10-08-2019 |
| 36 | த.நடராஜன் | வேங்கராயன் குடிக்காடு | 58 | ஆண் | கொல்லர் | இல்லை | கொல்லுப்பட்டறை- இரும்பு கருவிகள் | 05-09-2019 |
| 37 | ச.கோவிந்தராஜ் | செல்லம்பட்டி | 59 | ஆண் | கம்மாளர் | 8 ஆம் வகுப்பு | விஸ்வகர்மா சங்கத்தலைவர் | 11-10-2019 |
| 38 | ப.முருகானந்தம் | ஒரத்தநாடு | 47 | ஆண் | கொல்லர் | இல்லை | பாத்திரக்கடை | 13-11-2019 |
| 39 | சு.சண்முகப்பிரியன் | ஒரத்தநாடு | 33 | ஆண் | கம்மாளர் | ஐடி (தொழிற்படிப்பு) | கதவு,ஜன்னல் வியாபாரி | 13-11-2019 |
| 40 | முனைவர் ம.தவசு | ஒரத்தநாடு | 39 | ஆண் | கள்ளர் | முனைவர் | உதவிப்பேராசிரியர் | 14-11-2019 |
| 41 | கோ.பாண்டியன் | வடக்கூர் | 48 | ஆண் | கள்ளர் | பிஏ | ஊராட்சிமன்றத் தலைவர் | 15-12-2020 |
| 42 | செல்வி | வடக்கூர் | 47 | பெண் | பத்தர் | இல்லை | விவசாயக்கூலி | 16.11.2020 |

| வ. எண் | பெயர் | ஊர் | வயது | பால் | சாதி | கல்வி | தொழில் | கள ஆய்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 43 | வனசா | வடக்கூர் | 38 | பெண் | கள்ளர் | இல்லை | விவசாயக்கூலி | 16.11.2020 |
| 44 | கந்தவேல் | வடக்கூர் | 45 | ஆண் | கம்மாளர் | 8 ஆம் வகுப்பு | ஓட்டுனர் | 17.11.2020 |
| 45 | சுவாமிநாதன் | ஈச்சங்கோட்டை | 57 | ஆண் | செட்டியார் | M.A., M.Ed | தலைமையாசிரியர், ஈச்சங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி | 19.11.2020 |
| 46 | இராமகிருஷ்ண ஐயர் | வடக்கூர் | 44 | ஆண் | பிராமணர் | பத்தாம் வகுப்பு | கோயில் அர்ச்சகர் | 19.11.2020 |
| 47 | முத்து | சோழபுரம் | 48 | ஆண் | பறையர் | இல்லை | பாய் பின்னுதல் | 21.11.2020 |

# வினாநிரல்

1. தகவலாளியின் பெயர் :
2. முகவரி :

3. வயது :
4. சாதி :
5. படிப்பு :
6. தொழில் :
7. சந்தித்த நாள் :

## 1.கோலங்கள்

1. நீங்கள் எங்கெங்கு கோலமிடுவீர்கள்? ஏதேனும் விதிமுறைகள் உள்ளதா.
2. உங்களுடைய கோலம் சார்ந்த நம்பிக்கைகள் யாது?
3. நீங்கள் எத்தனை விதமான கோலங்களைப் போடுவீர்கள்.
4. உங்கள் கோலங்களுக்கென்று தனிச்சிறப்புகள் ஏதேனும் உண்டா.
5. கோலமிட நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் யாது?
6. பண்டிகைக் காலங்களில் எவ்விதமான கோலங்களை இடுவீர்கள்.
7. பொங்கல் பண்டிகையென்று இடும் கோலங்களில் என்னென்ன இயற்கைச் சார்ந்த உருவங்கள் வரையப்படும்.
8. கோலமிடுவதற்குரிய விதிமுறைகள் ஏதேனும் உண்டா?
9. புள்ளி கோலங்கள் அல்லது ரங்கோலி கோலங்கள் அதில் எதை நீங்கள் அதிகம் பயன்படுத்துவீர்கள்
10. கோலம் போடுவதால் உங்களின் உடல் சார்ந்த அல்லது மனம் சார்ந்த பலன்கள் ஏதேனும் ஏற்படுகிறதா.
11. இயற்கை சார்ந்த வண்ணங்களைப் பயன்படுத்துவது உண்டா.
12. வண்ணப்பொடிகள் பயன்படுத்துகிறீர்கள் என்றால் எவ்விதமான பொடிகளை பயன்படுத்துகிறீர்கள்.
13. கோலம் போடுவதற்கான கால நேரங்கள் உண்டா.
14. மங்கல நிகழ்வுகள் மற்றும் அமங்கல நிகழ்வுகளுக்கென்று தனித்தனியான கோலங்கள் உண்டா.
15. வாசலில் தெய்வ உருவங்களை இடும் வழக்கம் இருக்கிறதா.
16. எவ்விரல்களை பயன்படுத்தி கோலமிட வேண்டும்.
17. கோலம் போடுவதன் மூலம் கற்பனைச் சக்தி மற்றும் ஞாபகசக்தி மேம்படுகிறதா.
18. மார்கழி மாதங்களில் சிறப்பு கோலங்கள் இடும் வழக்கம் உண்டா.
19. கோலங்களில் பூக்கள், இலைகள், விளக்கு, சாணம், ஆகியவை பயன்படுத்தபடுமா.

20. உயிரினங்கள் உணவு அருந்த வேண்டி கோலங்களில் அரிசி, தானியம், விதைகள் ஆகியவை பயன்படுத்தும் வழக்கம் உண்டா.
21. உங்கள் குழந்தைகளுக்கு புள்ளிகளை இணைத்தல் போன்ற பயிற்சிகள் தருவீர்களா.
22. பூஜை அறைகளில் இடம் பெறும் கோலங்களுக்கென்று தனிச்சிறப்புகள் ஏதேனும் உண்டா.
23. எண்ணுப் பயிற்சி ஏற்படுகிறதா.
24. கோலம் போடுவதற்கென்று பயிற்சி எடுத்தீர்களா?
25. கையேடுகளில் வரைந்து கொண்டு அதனைப் பார்த்து பார்த்து வாசலில் கோலம் போடுவீர்களா.
26. நவின யுகத்தில் அலைபேசியை பார்த்து கோலம் போடும் பழக்கம் தங்களுக்கு உண்டா.
27. எந்த மாதிரியான கோலம் இடுவது என்று முன்கூட்டியே திட்டமிடல் இருக்கிறதா.
28. ஓவியம் வரையும் பழக்கம் உங்களுக்கு உள்ளதா.
29. தங்கள் பகுதிக்கென்று தனித்த கோல மரபுகள் ஏதேனும் உள்ளதா.
30. கோலங்களில் உருவங்கள், ஏழுத்துக்கள், குறியீடுகள் வரைவீர்களா.

## 2.சுடுமண் உருவ ஓவியங்கள்

1. திருமண சடங்கில் பானை வைக்கும் முறை எதனின் குறியீடாகக் கருதுகிறீர்கள்.
2. ஓவியப் பானையின் சிறப்பினைக் கூறுங்கள்.
3. மண்பானையின் சிறப்புகளாக தாங்கள் நினைவு கூறுவது என்னென்ன.
4. மட்பாண்டம் செய்யப் பயன்படும் மூலப்பொருட்களைக் கூறுங்கள்.
5. மட்கலம் செய்யவதற்கென்று எத்தனை பேர் தங்கள் வீட்டில் இருக்கிறார்கள்.
6. நீங்கள் எவ்வாறு பானையை வடிவமைக்கிறீர்? ஏதேனும் கருவி உள்ளதா.
7. மட்கலத்தை சுடும் போது ஏற்படும் நிற மாற்றங்களைக் கூறுங்கள்.
8. எந்த மாதிரியான களிமண்ணை உபயோகப்படுத்துகிறீர்கள்.
9. பானைகளை எவ்வாறெல்லாம் வகைப்படுத்துகிறீர்கள்.
10. உங்களுக்கு தெரிந்த பானையின் வகைகளைக் கூறுங்கள்.
11. மொட்டைப் பானை எனக் கூறக் காரணம் என்ன?
12. விழாக்காலங்களில் எவ்வகைப் பானைகளை பயன்படுத்துவீர்கள்?
13. சடங்குகளுக்கென நீங்கள் உபயோகிக்கும் பானைகள் பற்றிக் கூறுங்கள்.
14. ஓவியப் பானைகளை அதிகம் விரும்பி வாங்குகிறார்களா?
15. பானைகளின் வடிவமைப்பில் உள்ள மாற்றங்களைக் விளக்குங்கள்.
16. மண்பானையின் பயன்கள் பற்றி கூறுங்கள்.
17. பானைகளின் விலையை எவ்வாறு நிர்ணயம் செய்கீறிர்கள்.
18. எக்காலக்களில் பானைகள் அதிகம் விற்பனையாகின்றன.

19. எவ்வகை பானைகளை மக்கள் விரும்புகிறார்கள், அதன் கொள்ளளவு எவ்வளவு இருக்கும்படி வாங்குகிறார்கள்.
20. நமது ஆரோக்கியத்திற்கு மண்பானை சமையல் சிறந்தது என நம்புகிறிர்களா?
21. பொங்கல் பானை ஓவியம் குறித்து எடுத்துரைங்கள்.
22. அக்னிச்சட்டி ஓவியத்தின் சிறப்பை கூறுங்கள்.
23. முகூர்த்தப் பானை ஓவியம் பற்றி கூறுங்கள்.

## 3.மண்குதிரை ஓவியங்கள்

1. குதிரை வாகனத்தின் சிறப்பை கூறுங்கள்.
2. காவல் தெய்வத்தின் வாகனமாக குதிரை திகழ்வதை எடுத்துக் கூறுங்கள்.
3. புரவி எடுப்பு விழா என்று கூறக் காரணம் பற்றி தாங்கள் அறிவீர்களா?
4. புரவி என்ற சொல் எதனைக் குறிக்கும் என்பது பற்றி தெரியுமா?
5. நேர்த்திக் கடனாக நீங்கள் மண்குதிரைகள் செய்து வழிபட்டிற்களா?
6. மண் குதிரை செய்ய நீங்கள் பயன்படுத்தும் மூலப்பொருட்கள் என்னென்ன?
7. எவ்வகை மண்ணினால் மண் குதிரைகளை தயாரிக்கிறீர்கள்?
8. மண் குதிரை தயாரிக்க உங்களுக்கு ஆகும் காலம் எவ்வளவு?
9. எந்தெந்த காவல் தெய்வத்திற்கு குதிரை வாகனமாக இருக்கிறது.
10. மண் குதிரை வாகனம் பற்றிய தங்களின் நம்பிக்கை யாது?
11. புரவி எடுப்பு விழா பற்றி கூறுங்கள்?
12. குதிரை வாகனங்கள் ஆண் கடவுள்களுக்கு மட்டும் அமைக்கப்பெறுவது ஏன்?
13. எந்த மாதத்தில் புரவி எடுப்பு விழா நடைபெறுகிறது.
14. மண் குதிரை வரையப் பயன்படுத்தும் நிறங்கள் என்னென்ன?
15. உங்கள் பகுதியில் எவ்வகை குதிரை உருவங்கள் அதிகம் விற்பனையாகின்றன?

## 4.பச்சைக் குத்தல்

1. நீங்கள் எவ்வகை வடிவங்களை அதிகம் பச்சை குத்துவதற்கு பயன்படுத்துகின்றனர். 2. பச்சை குத்துவதற்கு பயன்படுத்தும் மூலப்பொருட்கள் பற்றி கூறுங்கள்?

3. நீங்கள் பச்சை குத்திக் கொண்ட போது உடலில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்ததா?

4. பச்சை குத்தல் சார்ந்த நம்பிக்கை யாது?

5. எழுத்துக்களைப் பச்சை குத்தக் காரணம் யாது?
6. பச்சை குத்துவதற்கு சடங்குகள் ஏதேனும் உண்டா?
7. ஒரு எழுத்து மட்டும் பச்சை குத்துவதற்கு எவ்வளவு வாங்குகிறிர்கள்?
8. பச்சை குத்தியதை அழிக்க முடியுமா?
9. பச்சையை அழிப்பதற்கென்று கருவிகள் ஏதேனும் தங்களிடம் உள்ளதா?
10. திரைப்பட நாயகன், நாயகிகளின் பெயர்களை அதிகம் பச்சை குத்துகிறாரா?

11. நெற்றியில் பொட்டு வடிவ பச்சையினை குத்திருக்கிறிர்கள் அதற்கான காரணம் யாது?

12. உங்கள் கணவா் பெயரையும் சேர்த்து கையில் பச்சை குத்திக் கொண்டதற்கான காரணம் பற்றி கூறுங்கள்?

13. உங்கள் கையில் தேள் உருவத்தினை பச்சை குத்திக் கொண்டதற்கான காரணம் என்ன?

14. சிங்க உருவத்தினை பச்சை குத்திக் கொண்டதற்கான காரணம் என்ன?

15. பச்சை குத்தல் சாா்ந்த உங்கள் நம்பிக்கை என்ன?

### 5.மருதாணி

1. நீங்கள் மருதாணியை எதற்காக அதிகம் பயன்படுத்கிறிர்கள்?
2. மருதாணியின் சிறப்புகள் மருத்துவக் குறிப்புகள் பற்றி கூறுங்கள்?
3. மருதாணி செடியை வீட்டு வாசலில் வளா்க்க காரணம் என்ன?
4. மருதாணி கையில் சிவக்கின்ற முறையில் ஏதேனும் நம்பிக்கை உள்ளதா?
5. மருதாணி இலையின் தற்போதைய மாற்று நிலை என்ன?
6. திருமண நிகழ்வின் ஓா் அங்கமாய் மெஹந்தி வைத்தல் நிகழ்வு உங்களிடைய நிலவி வருகின்றதா?

### 6.சுவரோவியங்கள்

1. எவ்வகை விளக்கப் படங்கள் பள்ளிச் சுவரில் வரைய அனுமதிக்கப்படுகிறிர்கள்?
2. கோயில் சுவரில் தல வரலாற்றுச் செய்திகளை ஓவியமாய் வரைந்துள்ளனரா?
3. கோயிலில் வரையப்படும் சுவரோவியங்கள் ஆரம்ப காலத்தில் எவ்வாறு இருந்தது.
4. சுவரோவியங்கள் தற்காலத்தில் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது.
5. தற்கால சுவரோவியங்களின் நுணுக்கங்கள் என்ன?
6. காலத்தால் மாறுபாடு இருப்பின் மாறுபாட்டிற்று காரணங்கள் என்னென்ன?
7. புதிய நுணுக்கங்களினால் பழைய நுணுக்கள் மறைந்து விட்டனவா?

### 7.கோட்டோவியங்கள்

1. உங்கள் வீட்டில் உள்ள சுவரில் வெள்ளை மற்றும் சிவப்பு வண்ணக் கோடுகள் அடிப்பதன் காரணம் என்ன?
2. கோட்டோவியங்கள் பற்றி தங்களின் கருத்து என்ன?
3. கோட்டோவியங்கள் பற்றிய நம்பிக்கை யாது
4. கோட்டோவியங்களை வேறு இனத்தாரும் வரைந்துள்ளனரா?
5. தற்காத்திலும் கோட்டோவியங்கள் உங்கள் இல்லத்தில் தொடர காரணம் என்ன?

### 8.பாய் ஓவியம்

1. பாய் பின்னுவதற்கு தேவைப்படும் மூலப்பொருட்களை பற்றி கூறுங்கள்?
2. கோரைகளை எவ்வாறு சேகரிக்கிறிர்கள்?

3. கோரைகளை எவ்வாறு தரம் பிரிக்கிறீர்கள்?
4. பாய்களுக்கு வண்ணம் ஏற்றும் முறை பற்றி கூறுங்கள்?
5. எத்தனை வண்ணங்களை பயன்படுத்துகிறீர்கள்?
6. பாய்களை இணைப்பதற்கு பருத்தி நூலினை மட்டும் பயன்படுத்துவதற்கு காரணம் என்ன?
7. சரடு என்பது என்ன? அதனை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?
8. பாய் பின்னுவதற்கென்று ஆகும் கால நேரம் எவ்வளவு?
9. பாய் தறி தயாரிப்பதற்கான கருவிகளை எங்கு வாங்குறிங்க?
10. பாயின் வகைகளைக் கூறுங்கள்?
11. பாய்களை எவ்வாறு தரம் பிரித்து விற்பனை செய்கிறீர்கள்?
12. ஓவியப் பாய் என்பதன் தரம் பற்றி கூறுங்கள்?
13. பாய் தொடர்பான நம்பிக்கைச் செய்திகள் பற்றி கூறுங்கள்?

## 9.ஐவினை கலைஞர்களும் ஓவியங்களும்

1. தச்சுத் தொழில் உங்கள் பரம்பரைத் தொழிலா?
2. ஓவியக் கலையில் உங்கள் பங்கு என்ன?
3. வரைபடம் வரைந்து கொண்டு தான் மரப்பலகையில் செதுக்கிறீர்களா?
4. தச்சுத்தொழிலில் மாற்றங்கள் ஏதேனும் உண்டா? பழைய தொழில் முறையை கையாண்டு வருகிறீர்களா?
5. உங்கள் பிள்ளைகளுக்கும் தச்சுத்தொழிலினைக் கற்று தருகிறீர்களா?
6. பொன் நகை செய்யும் தொழில் எக்காலத்திலிருந்து செய்து வருகிறீர்கள்?
7. ஓவியக் கலையில் உங்கள் பங்கு என்ன?
8. மாதிரிப் படங்களை வரைந்து வைத்துக் கொண்டு தான் நகை செய்ய தொடங்குவீர்களா?
9. உங்கள் பிள்ளைகளும் இத்தொழிலினை விரும்பி ஏற்கின்றனரா?
10. பொருளாதார சூழல் பற்றி கூறுங்கள்?
11. பாத்திரங்களில் வரையப்படும் அலங்கார வேலைபாடுகள் பற்றி கூறுங்கள்
12. ஓவியக் கலையில் உங்கள் இனத்தாரின் பங்கு என்ன?
13. கோயில் சிலைகள் செய்வது மட்டுமல்லாமல் வேறு ஏதேனும் தொழில் மேற்கொண்டு வருகிறீர்களா?
14. சிலை செய்வதற்கு உரிய மூலப்பொருட்கள் யாது?
15. பழங்கால தொழில் உத்திகள் இன்று எவ்வாறு மாறியுள்ளது.
16. பொருளதார நிலைப் பற்றி கூறுங்கள்?
17. நவினத்துவத்தால் உங்கள் தொழிலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?
18. தொழில் கற்றல் பரம்பரையாக தொடர்ந்து வருகின்றதா?
19. வேறு இனத்தார்கள் உங்கள் தொழிலைச் செய்து வருகிறார்களா?
20. உங்கள் தொழிலில் ஏற்பட்டுள்ள புதுமை மாற்றங்கள் அதிக லாபத்தை தருகிறதா?